
# காந்தளூர் வசந்தகுமாரன் கதை



சுஜாதா





## காந்தளூர் வசந்தகுமாரன் கதை

சுஜாதா எழுதிய
இரண்டாவது சரித்திர நாவல்.
ரத்தம் ஒரே நிறம்
நாவலை அவர் 14ம்
நூற்றாண்டுச் சிப்பாய் கலகத்தின்
பின்னணியில் எழுதினார்.
இது சோழப் பேரரசர்களின்
காலத்தைச் சார்ந்தது.
இதில் வரும் கணேசபட்டரும்
வசந்தகுமாரனும் சுஜாதாவின்
பிரபல நவீன பாத்திரங்களான
கணேஷ்-வசந்த் சாயலில்
இருப்பதை சிலர் கவனித்து
குறிப்பிட்டுள்ளனர். இது
முழுமையாக ஆராயப்பட்ட
சரித்திர சம்பவங்களைச்
சார்ந்து எழுதப்பட்ட
சுவையான நாவல்.



– பதிப்பகத்தார்

**விலை : ரூ. 120.00**

• KANTHALUR VASANTHAKUMAARAN KATHAI • Historical Novel by SUJATHA • First Edition : December, 1995 • Second Edition : December 2004 • Price Rs. 120-00 • Published by BHAARATHE PATHIPPAHAM, 126/108, Usman Road, T.Nagar, Chennai - 600 017. Phone : 24340205 • Printed at Sivakami Printo Graphics, 160, Big Street, Triplicane, Chennai- 600005. • Phone : 28445051•

# முன்னுரை

தமிழில் சரித்திர நாவல்களுக்கு உண்டான சம்பிரதாயத்தை வகுத்தவர்கள் கல்கியும், சாண்டில்யனும். தற்போது எழுதப்படும் சரித்திர நாவல்கள் அனைத்தும் இவ்விருவர் பாணியில் தான் எழுதப்படுகின்றன. லேசான சரித்திர ஆதாரங்கள்; நிறைய சரடு; நீண்ட வாக்கியங்கள் - இவைகளின் உள்ளே ஒரு நவீனக் கதைதான் மறைந்திருக்கும். குஞ்சரமல்லர்கள், கத்திச் சண்டைகள், சல்லாத் துணித் திரைகளுக்குப் பின் கரிய கண்கள் கொண்ட பெண்கள். - இவைகள் எல்லாம் சரித்திர நாவலுக்கு உண்டான 'பார்முலா'க்களாக இன்றும் இருக்கின்றன. இவைகளிலிருந்து விலகிச் செல்லும் ஆசையுடன் கருப்பு, வெளுப்பு, சிவப்பு என்னும் நாவலை குமுதத்தில் துவங்கினேன். சாதிக்கலவரம் எழுந்து அதை நிறுத்த வேண்டியிருந்தது. ஒரு விதத்தில் சமரசம் பண்ணிக் கொண்டு அதை 'ரத்தம் ஒரே நிறம்' என்று சில தினங்கள் விட்டு துவங்கி முடிக்க முடிந்தது.

'காந்தளூர் வசந்தகுமாரன் கதை' நான் எழுதும் இரண்டாவது சரித்திர நாவல். 'குமுதம்'

பத்திரிகையில் ஆசிரியராக இருந்தபோது எழுதியது. வழக்கம்போல் ராஜராஜ சோழனின் காலக்கட்டத்தில் கதையை எடுத்துக் கொண்டாலும், கதை மாந்தர்களை 'கட் அவுட்' பாத்திரங்களாக அமைக்காமல் சற்றே நம்பக்கூடிய பாத்திரங்களாக படைக்க முயற்சி செய்துள்ளேன்; இதில் தெரியும் சரித்திர சம்பவங்கள் அனைத்தும் ஆதாரமுள்ளவை. நீலகண்ட சாஸ்திரி, பர்ட்டன் ஸ்டைன், சதாசிவப்பண்டாரத்தார் போன்றவர்கள் விஸ்தாரமாக எழுதியிருக்கும் சரித்திரக் குறிப்புகளை ஆதரித்தவை. எந்தக் காலக்கட்டத்திலும் முதிர்ந்த அனுபவமுள்ள ஒருவரும், விளையாட்டுப் போக்கான ஓர் இளைஞனும் இருப்பார்கள. எந்தக் காலத்திலும் பொறாமை, சதி, அரசியல் ஆதாயங்களுக்காக திருமணங்கள் எல்லாம் இருக்கும். இந்த நாவலில் கணேசபட்டர் என்னும் பிரம்மதேயக்காரரும், வசந்த குமாரன் என்னும் இளைஞனும் அந்தப் பெயரில் இல்லாவிட்டாலும் வேறு பெயரில் வாழ்ந்திருக்கலாம். அது போலத்தான் அபிமதி. அரசவையில் எத்தனையோ ராணிகளில் ஒருத்தியின் மகளாக இருந்திருக்கலாம்.

'காந்தளூர்ச்சாலை' என்னும் இடத்தில் சோழர்களுக்கும் சேர - பாண்டிய மன்னர்களுக்கும் நடந்த நில-கடல் போரின் ஆதாரக் காரணம் தூதனை அவமதித்தது என்பதில் கருத்து வேறுபாடில்லை. அதனால் வசந்தகுமாரன் சோழநாட்டு தூதுவனாகச் சென்றிருக்க முடியும்.

இந்தக் கதையின் தொடர்ச்சியாக காந்தளூர்ச் சாலையில் நடந்த போரின் விவரங்களை கொஞ்சம் படித்து ஆராய்ந்துவிட்டு எழுத உத்தேசித்திருக்கிறேன்.

இக்கதைக்கு பல புத்தகங்கள் எனக்குப் பயன்பட்டன. புரலவர் பொன் முகிலன் அவர்கள் எனக்கு சில சோழர்காலத்துச் சொற்களை குறிப்பிட்டுத் தொடர்ந்து கடிதம் எழுதிக்கொண்டிருந்தார். அவருக்கு நன்றி. அந்தக் காலத்து நிகண்டுகளும் பயன்பட்டன.

இந்தப் புத்தகத்தைச் சிறப்பாக குறுகிய காலத்தில் வெளியிடும் பாரதி பதிப்பக சித. ராஜேந்திரன், சித. மணி சகோதரர்களுக்கும் இதை தொடர்கதையாக வெளியிட்ட குமுதம் நிறுவனத்துக்கும் நன்றி.

22-12-95

சென்னை - 4

சுஜாதா

# காந்தளூர் வசந்தகுமாரன் கதை



## 1

கடற்கரையில் அந்தக் குதிரை வணிகனைச் சந்திக்கச் சென்ற வசந்தகுமாரன், அன்றைய இரவின் நிகழ்ச்சியின் அதிர்ச்சியை எதிர்பார்க்க வில்லை. கடல் கடந்து குதிரை விற்க வந்திருக் கிறான் பச்சைக்கண்ணன். வாணிபத் திறமையின் ஓர் அங்கமாகத் தமிழும்பேசுகிறான். அவன் கொண்டு வந்திருக்கும் உதாரணக் குதிரை வெளுத்த மேகம் போல் வெண் மணற்பரப்பில் நின்றது. என்ன விலை வேண்டும் என்ற போது, பச்சைக்கண்ணன் தன் கையில் இருந்த மஞ்சாடி களைக்[1] காட்டி, 'இதில் பத்து போதும்' என்றான். வசந்தகுமாரனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அவனுக்கு நம்பிக்கையில்லை. சுலபமாக அந்தக் குதிரைக்கு நான்கு கழஞ்சு கொடுப்பார்கள் என்று ஒரு இவுளி[2] மறவரிடம் கேள்விப்பட்டிருக்கிறான்.

---

1. ஒரு மஞ்சாடி = 2 குன்றிமணிகள்
   20 மஞ்சாடி = 1 கழஞ்சு (மாடை)
   1 காசு = ½ கழஞ்சு
2. இவுளி - குதிரை

வசந்த குமாரனுக்கு மகிழ்ச்சி பொங்கியது. "என் இருணமெல்லாம் தீர்ந்தது, எனக்கு நல்ல காலம் பிறந்து விட்டது'. தன்னிடம் இருந்த கடைசி மாடையை எடுத்துக் காட்டினான். "இதன் மதிப்பு இருபது மஞ்சாடி. நீ காட்டுவது பத்து மஞ்சாடி!"

"எனக்கு ஒரு குதிரைக்கு பத்து மஞ்சாடி போதும்," என்றான் யவனன்.

"வேறு என்ன வேண்டும்?"

"பெண்கள். சோழ தேசப் பெண்கள்."

"அதற்குத் தஞ்சைக்குப் போக வேண்டும். தளிச்சேரிப் பெண்டுகள், கதியிலார், கோயிற்பிணாக்கள்[3] என்ற நானூறு பேர் உள்ளனர். ஒவ்வொருத்திக்கும் கூலி, ஒரு வேலி நிலம்! அரண்மனை நடனிகள் வேண்டுமா? கோயில்களில் ஆடுவோர் வேண்டுமா?"

"தனிப்பட்ட சில இல்லங்கள் உள்ளதாமே, இவ்வூரிலேயே!"

குமாரன் அவனை ஆச்சரியமாகப் பார்த்து, "யவனனே, நீ நிறையவே அறிந்திருக்கிறாய். இதற்கு முன் குதிரை விற்க வந்திருக்கிறாயா?"

"ஆம். என்னை ஒரு குடுமிக்காரன் ஏமாற்றி விட்டான். அவனைத் தேடிக் கண்டுபிடித்துக் கொன்றுவிட வேண்டும்" என்ற அவன் முகம், சற்று இறுகியது.

தொடர்ந்து "உனக்கு எப்படிப் பெண்களின் எண்ணிக்கை கூடத் தெரிந்திருக்கிறதே? அவர்கள் யாவரும் உடன் பிறவாச் சகோதரிகள்." என்ற வசந்தகுமாரன், யவனனைப் பார்த்துக் கண் சிமிட்டினான்.

"நானும் நீயும் தோழர்கள். உடன் பிறவா சகோதரர்கள். வா தன்பனே, இருவரும் சோழப் பேரரசுக்குக் குதிரைகள் விற்போம். எதிர்காலத்தில் எத்தனையோ போர்கள் காத்திருக்கின்றன."

வசந்தகுமாரனை அவன் புகார்க் கடற்கரைக்கு அழைத்துச் சென்று பரிசலில் வந்து காத்திருந்த அந்த அபார மிருகத்தைக் காட்டினான். "யூப்ரிட்டிஸ் நதி தீர்த்தத்திலிருந்து வந்த சரக்கு. சுவபத்தில் பழகாது!"

3. தளிச்சேரிப் பெண்டுகள், பதியிலார், கோயிற் பிணாக்கள் : நடனியர்



வசந்தகுமாரன் அதனருகில் சென்றபோது, தன் மூக்கை ஒருவிதமாகப் பிரித்துப் பிரித்துக் காட்டியது. நல்ல உயரமிருந்தது. ஆரோக்கியமான பற்களைக் கவனித்தான். "எச்சரிக்கையாக இரு, குமாரா! இதை அடக்குவது எளிதல்ல."

வசந்தகுமாரன் அதன் பிடரித் தலையில் பிடித்து, முதுகின் மேல் ஏறிக்கொள்ள, குதிரை அன்னியனை விரும்பாமல் அவனை உதிர்க்க முயன்றது. பத்துச் சுழிகளும் குறையாதிருந்த குதிரை, முதலில் ஸ்வரிதக நடை நடந்தது. மீண்டும் மீண்டும் குதித்தது. கால்களால் அதன் இருபுறத்தையும், மாற்றி மாற்றித் தட்டி, கழுத்துப் பாகத்தில் கொத்தாக அள்ளிப் பிடித்து, அதன் காதருகில் சப்தம் செய்து தட்டிக் கொடுத்தான். யவனன் வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். அவனைச் சுற்றிச் சுழற்றி முதுகிலிருந்து நீக்க மிகவும் முயன்று தோற்றது குதிரை.

சற்று நேரத்தில் அந்த முரட்டுக் குதிரை வழிக்கு வந்து வல்கித நடையுடன் வசந்தகுமாரனை அனுமதித்துக் கட்டுப்பட்டது. வசந்தகுமாரன் அதை இப்போது துரிதப்படுத்த, அது கடற்கரையில் மின்னல்கீற்றுப்போல் சென்றது. வாயில், கடலலை போல நுரை பொங்கியது.

"நீ ஒரு இவுளி மறவனா?"

"இல்லை. எனக்கு ஒரு ஆசானிருக்கிறார். அவருக்குத் தெரியா சாஸ்திரம் இல்லை யவனனே. உன் குதிரைகளை நான் இங்கே விற்றுக் கொடுக்கிறேன் சம்மதமா?"

"குமார வசந்தா, உன்னை எனக்குப் பிடித்துப்போய் விட்டது."

"என் பெயர் வசந்தகுமாரன், பச்சைக் கண்ணா, எனக்கும் உன்னைப் பிடித்துப்போய்விட்டது. நாமிருவரும் சேர்ந்து ஒரு சாம்ராஜ்யம் பண்ண முடியும்."

"ஏதோ குமாரா ! வா, எனக்கு எங்கள் நாட்டுக் கன்னியரின் மெலிதான மார்பகங்கள் அலுத்துவிட்டன. உங்கள் ஊர்த் தேவதைகளை, ததும்பும் நிறைகுடங்களை எனக்குக் காட்டு."

"வா பச்சைக்கண்ணனே, உன் அழகுணர்ச்சியை நான் மிகவும் ஆதரிக்கிறேன். வா, இரவு.... நீண்ட இரவு மிச்சமிருக்கிறது.

[illegible] கொங்கைகளில் மச்சமிருக்கிறது. கால்களில் [illegible]மிருக்கிறது. கண்களில் அச்சம், கன்னங்களில் ஒச்சம்..."

"ஒச்சமென்றால்...?"

"வெட்கம்."

"நீ கவிஞனோ?"

"எல்லாம் ஆசான் உபயம்."

"யாரிந்த ஆசான், அடிக்கடி சொல்கிறாய்?"

"கணேசபட்டன்."

"பச்சைக் கண்ணனுடன் குதிரை வாணிபம் என் வாழ்வை திசை திருப்பட்டும்" எனறான் வசந்தகுமாரன் அவனைப் பிடித்துப்போய்விட்டது.

அங்கங்கே சில இலக்கணப் பிழைகளை மழலை பேசும் குழந்தையைப்போல் மன்னிக்கலாம். ஆனால் கெட்டிக்காரன். ரோமாபுரிக் காசுகளும், சோழ தேசக் காசுகளும் அவனுக்குக் குழப்பம். கழஞ்சு என்றால் என்ன என்று கேட்ட போதே வசந்தன் அவனை எடைபோட்டு விட்டான்.

'இதோ, எனக்கு விடிவுகாலம் ஒரு யவனன் மூலம் வந்து விட்டது' என்று மகிழ்ந்தான். வசந்தகுமாரனுக்குச் சென்ற திங்களில் அமிதமான பொருட்சேதம் ஏற்பட்டுவிட்டது. அத்தாணி மண்டபத்திலிருந்து பட்டி மண்டபத்துக்குப் போகும் வழியில் நிழலில் பொதிந்த இடத்தில் இருந்தது அந்த அங்காடி. அங்கே ஏழு சோழிக் கொள்ளைக்காரன் உட்கார்ந்திருக்கிறான். சோழிகளை உருட்டுவான். எண்ணிக்கை நான்குக்குக் கீழ் வந்தால், கொடுத்த காசு இரட்டிப்பாகும். நான்கு என்றால் கொடுத்த காசு திரும்ப வரும். ஐந்து, ஆறு, ஏழு மட்டும் காசு சீரணமாகும். திரும்ப வராது. மிக எளிய ஆட்டம். வசந்தகுமாரன் அதில்போய் மொத்தம் நூறு மாடை இழந்ததும்தான் சோழிகள் தனிப்பட்டுத் தயாரிக்கப்பட்டவை என்று அறிந்து, "அடேய்! அந்தச் சோழிகளை எடு" என்றபோது, சோழியன் எண்ணெய் போட்ட மின்னல் போல மறைந்து விட்டான். வசந்த குமாரனுக்குக் கைவசம் ஒரு மஞ்சாடி தான். அத்தனை காசுகளையும் இழந்த வருத்தத்தில் மது அருந்தி



அங்கே கடன் சொல்லிவிட்டு, மது சாலையைச் சார்ந்த புங்கனூர் வியாபாரியிடம் அகப்பட்டுக் கொண்டு, பட்டரிடம் கடன் கேட்கப் போனபோது அவர் "காசில்லை, வா குமாரா, தகடூர் யாத்திரை பற்றிப் பேசுகிறேன்" என்று சொல்ல, வெறுப்பில் வெளிவந்து விட்டான்.

இப்போது குதிரை வியாபாரி சிக்கிக் கொண்டான்.

பட்டர் சொல்வார் அடிக்கடி:

"குமாரா! எப்போது நீ வாழ்க்கையில் கபட சூதாடத் துவங்கினாயோ, அப்போதே பேரிழப்பு."

இன்று வாணிபம் முடிந்ததும் லீலாசதியரும், மோகமயரும் வாழும் தெருவுக்கு அழைத்துச் செல்வதாக வசந்த குமாரன் சொன்னான் யவனனிடம்.

"சென்றமுறை அழைத்துச் சென்றான் ஒருவன். அது வேண்டாம். எந்தப் பெண்ணைப் பார்த்தாலும் என் தாயின் நினைவு வந்தது. முகத்தில் அது என்ன எழும்புகள்?"

"தழும்புகள். என் அருமை யவனக் குதிரை வணிகனே. தமிழை முதலில கற்றுக்கொள்."

"நான் கற்றுக்கொள்ள வேண்டிய இரண்டு வார்த்தைகள் "விளக்கை ஊது" என்று தான். பெரிய பற்கள். அடர்த்தியாக முகத்தை ஏறத்தாழ மறைத்த உரோமங்கள். பெரிய உடல். அசுரனை விட சுத்தமாக ஒரு சாண் அதிக உயரமான களத்துக்கோல் போல இருந்தாலும் அவனைப் பார்த்து குமாரனுக்கு அச்சம் ஏற்படவில்லை. "உன் பெயர் என்ன?"

"அரேனியஸ்! எங்கே சொல்லு பார்க்கலாம் !"

வசந்தனுக்கு எரிச்சலாக இருந்தது. "இந்தப் பெயரெல்லாம் என் வாயில் நுழையாது. நான் உனக்குப் பேர் வைத்திருக்கிறேன். 'பச்சைக் கண்ணன்' என்று. பச்சைக் கண்ணா என்றால், ஏன் என்று கேட்பாயா?"

"சரி, என்னை நடனப் பெண்களிடம் அழைத்துச் செல்வதானால், எந்தப் பெயரிலும் வருகிறேன்" என்றான். "பல திங்கள்களாயின, ஒரு தகதகப்பைப் பார்த்து."

"அதற்கு முன் மற்ற குதிரைகளைப் பார்க்க விருப்பம்" என்றான் வசந்தன்.

அதற்கு முன் அந்த யவனன் இறந்து போய் விடுவான் என்பது வசந்தகுமாரனுக்குத் தெரிந்திருக்கவில்லை.



## 2

"குதிரைகள் மரக்கலத்தில் இருக்கின்றன. பேச்சு வார்த்தை முடிந்ததும் படகிலிட்டு வருவோம்" என்றான் யவனன்.

இருவரும் புகாரின் கடற்கரையை விட்டு வெளியே வந்தனர். வெண்குதிரையை யவனனின் அடிமை கட்டிப் பிடித்துக் கொள்ள, இருவரும் தெருக்களில் நடந்தார்கள். படகு நாவாய்கள் பிணைக்கும் பக்கம் இளமரக்கா, படப்பை உத்தியயனம், ஏரி, நாற்குலத்தார் இருக்கைகளைக் கடந்து ஆயுதசாலைக்குச் செல்லும்போது கொஞ்சம் திசை மாறி முடிநாகரின் மகள் பதுமையைச் சந்திக்கச் சென்றான். பதுமைக்கு பதின்மூன்று வயது இருந்தாலும் உடல் அமைப்பு பதினெட்டுக்கு உரியதாக இருந்தது. "பதுமை! பந்தாடுவதை நீ இன்னும் நிறுத்த வில்லையா?

கன்னத்தில் என்ன கறுப்பாக ? நீ என்ன குழந்தையா? தந்தையார் எங்கே? முடிநாகரே, முடிநாகரே!"

"கோயிலுக்குச் சென்றிருக்கிறார் குமாராசானே"

"தாய்?"

"புறக்கடையில் இருக்கிறாள். அழைக்கவா?"

"வேண்டாம்."

அவள் பூக்கொய்யத் துவங்கினாள்.

"நான் எடுத்துத் தரவா? அதோ தெரிகிறதே. அந்தப் பூவா?" தக்க சமயத்தில் தாயார் அலர்மேல்மங்கை வந்து, "பதுமை, நீ இன்னும் குழந்தை அல்ல. வசந்தகுமாரரே! பதுமையின் தந்தை இல்லாதபோது இங்கு வந்து பூப் பறிக்க வேண்டாம்" என்றாள் கோபத்துடன்.

வசந்தகுமாரன், "பதுமை என் தங்கைபோல்" என்றான்.

"உங்களுக்குப் பந்தாட்டம் வேண்டுமென்றால், இவள் தந்தை இப்போது வருவார். அவருடன் ஆடலாமே!"

வசந்தகுமாரன், "அது நல்ல யோசனைதான். வரும் வெள்ளிக் கிழமை வருகிறேன்" என்று சொல்லிச் சடுதியில் விலகினான். "கொஞ்சம் நின்றால் மூதாட்டியுடன் ஆட வேண்டிவரும்."

இருள் பரவியதும் செஞ்சாலியிலும், தூயவெள்ளரிசியிலும் சமைத்த பலவித உணவுப் பண்டங்கள் கொண்ட உணவங் காடிகளில் நெய் மணம் பரவியிருந்த ஆட்டிறைச்சியில் தயிர்ச் சோறு கலந்து விரைவாக சாப்பிட்டுக் கொண்டிருந்தவனிடம் வசந்தகுமாரன் சென்று, "நண்பனே, இவர் நம் நடனக்கலை பயில விரும்புகிறார்."

அவன் உண்பதை நிறுத்தாமல், "காசைச் காட்டு!" என்றான்.

குமாரன் யவனனைப் பார்க்க, அவன் தன் மஞ்சாடிகளைக் காட்ட —

"போதாது."

யவனன், தன் இடுப்பிலிருந்து, முடிந்து வைத்திருந்த தங்கக் காசைக் காட்டினான்.

"இது என்ன மாடையா?"



"இல்லை, இவன் ஊர்க்காசு."

"பொன்னா?"

"ஆமாம்."

அவன் அதை வாங்கி, மெல்லத் தேய்த்துப் பார்த்த போது, "சொக்கத் தங்கம். இம்மாதிரி எத்தனை காசு வைத்திருக்கிறாய்?"

வசந்தகுமாரன் "உனக்கு என்ன கவலை? நம் கழஞ்சுகள் பத்துக்குச் சமானம். ஒவ்வொன்றும் நூறு குன்றிமணிகள் இருக்கும்."

அவன் தன் வாயைத் துடைத்துக்கொண்டு குடுமியை முடிந்து கொண்டு, "வா!" என்றான்.

அங்கிருந்து இருண்ட ஒரு வீட்டுக்குச் சென்று, கதவைத் தட்டிய போது, 'யார்' என்றபின், மெல்லிய சலங்கை ஒலி கேட்டது உள்ளே, "யாரது?"

"மங்களபுரத்தான்" என்றான்.

கதவு திறந்தபோது, உள்ளே மிகவும் இருளாக இருந்தது. தூரத்திலிருந்து ஒரு விளக்கொளி அவர்களை நோக்கி நடந்து வர-

"யாரது?"

"வசந்தகுமாரன்"

"வாரும் வசந்தகுமாரரே." என்றபோது பச்சைக் கண்ணன் பின்தங்க - "ஏன் நின்று விட்டீர்?" என்றான்.

"இம்மாதிரியும் பெண்கள் இருக்கின்றார்களா?"

கதவு திறந்ததும் தெரிந்த பெண்ணை வசந்தகுமாரன் தேவதை வகையில் சேர்க்க மாட்டான். யவன வியாபாரி இரண்டு திங்களாகக் கடற்பயணம் வந்து பெண் வாசனையே இல்லமல் உலர்ந்து போயிருந்தான். அதனால் தான் அந்தப் பச்சைக்கண்ணன், "சோழ நாட்டில் இத்தனை அழகான பெண்ணா குமாரவசந்தா?" என்றான். மேலும் அவன் நாட்டில் பெண்களுக்கு கரிய விழிகள் இல்லை.

"இந்தப் பெண் ஒரு தோழி. இவள் தலைவியை நீ பார்க்க வேண்டும். மேலும் என்னைக் 'குமார வசந்தன்' என்று அழைப்பதை உடனே நிறுத்து. தலைகீழாகத் தொங்குவது போல உணர்கிறேன்."

"வாரும் வசந்தகுமாரரே. நீண்ட நாட்களாக உங்களைக் காணவில்லை!" என்ற குரல் எங்கிருந்து வந்தது என்று வசந்தன் கண்களைக் குறுக்கிக் கொண்டு கவனித்தான்.

"நான் இங்கே வந்ததே இல்லையே தாயே!" என்றான் அந்த மூதாட்டியைப் பார்த்து. வயசு அறுபதுக்கு அருகில் இருந்தாலும் அகிற்கட்டையும் புனுகுசட்டமும் கஸ்தூரி மஞ்சளும் அவளை இளம்பெண் போல் தோற்றமளிக்க வைத்திருந்தன. திண்டுகளைத் திருத்தி அமைத்து விட்டு பதின் மூன்று வயசுக்குரிய பெதும்பைப் பெண் உள்ளே ஓடினாள். அவள் சிரிப்பும் உடன் ஓடியது. "இவர் பெயர் பச்சைக் கண்ணர். யவன தேசத்தைச் சேர்ந்த அசுவ வியாபாரி. சோழ நாட்டின் கலாசாரத்தில் மிகுந்த ஈடுபாடுடைய வர்."

"என்னையா சொல்கிறாய்? அதெல்லாம் இல்லை! என் கலாசாரம் குதிரை, பொன் கலாசாரம். பெண்ணைக் காட்டு" என்றான் பச்சைக்கண்ணன்.

"பொறு யவனா. இந்த வகை இடங்களில் தக்கவாறு நடந்து கொள்ள முறையிருக்கிறது."

"எந்த முறையும் இதற்கு அடிபணியும். ஏய், உனக்கு என்ன வயசு? இதைப் பார்..." என்று பொற்காசுகளைப் பட்டுப் பையிலிருந்து விடுவித்து உதிர்த்து "தங்கம்," என்றான்.

விளக்கின் ஒளியில் கிளிச்சிறைப் பொற்காசுகள் சற்றே பசுமையுடன் ஒளிருவதை அந்தப் பெண்ணின் விரிந்த கண்கள் பரிந்து பார்க்க, அந்த இடத்தில் லேசாக வியப்யோசை பரவியது.

"எனக்கு கலைக்கெல்லாம் நேரமில்லை. குதிரை விற்றுவிட்டு யவனம் திரும்ப வேண்டும். கொண்டு வா சிங்காரிகளை..." என்று கை தட்டினான்.

"வசந்தகுமாரரே, இது அப்படிப்பட்ட இடமில்லையென்று யவனரிடம் சொல்லும்," என்றாள் மூதாட்டி.

"பேரிளம் பெண்ணே, உன் பெயர் என்ன?"

"என் பெயர் பாமகள்."

"இது எப்படிப்பட்ட இடம்?"

"பதியிலார் நானூறு பேர்கள். புகாரிலும் தஞ்சையிலும் இருக்கிறோம். கோயிலிலும் அரண்மனையிலும் ஆடுகிறோம்.



எங்களுக்குக் கூலியாக ஒரு வேலி, ஆளுக்குக் கிடைக்கிறது. நட்டுவ ஆசான் கம்மடியர்களையும், நிருத்தப் பேரரையர்களையும் வைத்துத் திருத்தமாக கற்பிக்கிறோம். ஒவ்வொருத்தி யும் ஓவியம் எடுத்தியம்பும் உடைக்காரி. இடை துள்ளும். இதழ்களும், எட்பூ வெட்கும் நாசியும் உள்ள அவர்களின் நடனத்தை மட்டுமே பார்க்க அனுமதி உண்டு" என்று மட்டுமே என்பதை, அழுத்தந்திருத்தமாகச் சொன்னாள்.

"வசந்தகுமாரா, இந்த மூதாட்டி பேசிக்கொண்டே இருக்கிறாளே தவிர பெண்களைக் கண்ணில் காட்ட மாட்டாளா?"

அப்போது இசைக் கருவியாளர்கள் ஒருவரொருவராக வந்து அமர்ந்து தம் கருவிகளை நிரடியும் ஊதியும் சுருதி சேர்த்தார்கள்.

"எந்தப் பண் வேண்டும் காந்தாரமா?"

"பண் வேண்டாம். பெண் வேண்டும் குமாரா" என்றான் அதட்டலாக. "நான் இங்கே காந்தாரப் பண் கேட்க வரவில்லை."

"யவனா!" என்று அவசரத்தில் கோபத்தில் அதட்டினான் வசந்தகுமாரன்.

"இந்தக் காசு எத்தனை மாடையிருக்கும் என்று அறிவாயா சுந்தரி!"

"வசந்தகுமாரரே, உடனே இந்த இடத்தைவிட்டு விலக வேண்டுகிறேன். இது மிகவும் பெருமைக்குரிய மாண்புக்குரிய இல்லம்."

"இதைப்போல் பத்துக் காசுகள் வைத்திருக்கிறான். வாரி இறைக்கிறான் பாமகளே."

"வசந்தகுமாரா, நேர விரயம் செய்யாதே."

"பத்துக் காசா சொன்னீர்கள்?"

"ஆம். அத்தனையும் ஆடகம், சாம்பூநதம் என்கிறார்களே அந்த வகைப் பொன்."

"அப்படியெனில் இல்லத்து விதிகளைச் சற்றே தளர்த்தச் சித்தமாக இருக்கிறோம் வசந்தகுமாரரே!" என்றாள் அவள் சிரித்து.

"நன்று பாமகளே. எதையேனும் தளர்த்தினால் நன்று."

"எங்களுக்கு நாட்டியம் தேவையில்லை. வேண்டு மட்டும் நாட்டியம் பார்த்தாகிவிட்டது."

இதற்குள் இசைக்கலைஞர்கள் இசைத்து-

"அறைகழல் அரசர் அப்போது
அடிமிசை அறுகு எடுத்திட..."

- எனத் துவங்கினார்கள்.

யவனன் "ஐயவோ! என்ன பாடலப்பா இது!"

ஆனால் எல்லாவற்றையும் அடுத்த கணம் மறந்து விட்டான். அந்தச் சல்லாப சுந்தரி சலசலவென்று தென்றலுடன் வந்து செம்பஞ்சு பாதத்தை எடுத்து வைத்த மறுகணம், அந்த மண்டபத்தின் மெல்லிய திரைகள் அவர்களைச் சூழ்ந்தன. ஓர் இன்பமான சதிக்குக் கட்டியம் கூறின. யவனன் முன் அவள் அமர்ந்து தங்கக் கோப்பையில் கரு நீல நிறத்தில் பானத்தை அவனுக்கு ஊற்றிக் கொடுத்தபோது யவனன் அவளைத் தன்பால் இழுத்துக் கன்னத்தில் முத்தமிட்டபோது வசந்தகுமாரனைப் பார்த்தான்.

"நீயும் முத்தமிடு" என்றான்.

"எனக்கு அவசரம் இல்லை," என்றான் வசந்தகுமாரன்.

"உங்களுக்குத் தமிழ் வருமா காதலரே!" என்றாள் அவள்.

"நன்றாய் வரும். குறிப்பாக, அது என்ன வசந்தனே?"

"விளக்கை ஊது என்னும் வாக்கியம் தெரியும்."

"விளக்கை ஊதிடவா?"

"இப்போதேவா?"

"அதற்கெல்லாம் தாமதம் கூடாது. நாளை இவனிடம் என் குதிரைகளை விற்றுவிட்டு எங்கள் ஊருக்குப் புறப்பட வேண்டும்."

"உங்கள் ஊர் எது?"

"அக்ராபொலிஸ், சொல்லு?"

"அக்கரைப் பால்," என்று சிரித்தாள்.



"தங்கக்காசுகள் குலுங்குவது கேட்டிருக்கிறாயே, யவனா, இவள் சிரிப்பைப் பார்."

"உலகிலேயே அழகான பெண்கள் சோழநாட்டுப் பெண்கள் தான்," என்றான்.

"சோனகனே, எப்படிச் சொல்கிறாய்?"

"நான் பார்க்காத பெண்ணில்லை. அருணம், அவந்தி, ஆந்திரம், இலாடம், ஒட்டியம், கருசம், கலிங்கம்..." அந்த பானத்தை பருகியதில் நிலையிழந்து "இது என்ன சோம பானமா?" என்றான். வார்த்தை பிழறி "சோழபானமா?" என்றது.

"வலுவான சரக்கு. பார்த்து அருந்து," என்றான் வசந்தகுமாரன்.

"நான் பார்க்காத பானமா, இன்னும் ஊற்று பெண்ணே."

பெரிய பாத்திரம் கொண்டுவந்து அதிலிருந்து சிறிய பாத்திரத்தில் மாற்றி அதிலிருந்து தங்கக் கோப்பைக்கு மாற்றி, இசைக்கலைஞர்கள் பாடுவதை நிறுத்த அந்த நடனப்பெண் சல்சல் என எழுந்து சென்ற போது, யவனன் அவளைப் பிடித்து இழுத்து "நடனமும் வேண்டாம். நாட்டியமும் வேண்டாம். உன் அருகே இருந்தால் போதும். வசந்தகுமாரா என்ன சொல்கிறாய், கொஞ்சம் விளக்கை அருகில் கொண்டுவா."

- என்று அவள் மார்பின் மத்தியிலிருந்த முடிச்சை நீக்க முயற்சி செய்தான்.

அந்தப் பெண், "இங்கே வேண்டாம், வாருங்கள் மேலே போகலாம். இல்லை நிலா முற்றத்திற்குச் செல்லலாம். இல்லை தேரடிக்குப் போய்விடலாம். அழகுமிக்க சிறந்த குதிரைகளை யுடைய அரசனுடைய தேர் இருக்கிறது. அங்கே செல்லலாம்" என்றாள்.

அவளைப் பற்றி இழுத்து வெறித்தனமாக முத்தமிட அவன் முயன்றபோது, அந்தப் பெண் வேதனையும் அதிர்ச்சியுமுற்று, கூச்சலிட்டு விலகிக் கொண்டாள்.

வசந்தகுமாரன் அவர்களைப் பிரிக்கும் நோக்கத்தில் "பச்சைக் கண்ணா , எதற்கும் காலதேசவர்த்தமானம் உண்டு. நாம் இவளை அழைத்துக்கொண்டு செல்லலாம். உன் குதிரை போல் பறக்காதே, யவனா? பச்சைக் கண்ணா?"

வசந்தகுமாரனுக்கு ஏதோ தவறு நேர்ந்து விட்டது என்பதை உணரச் சற்று நேரமாயிற்று.

யவனன் அவனைப் பார்த்த விழி சரியில்லை. கண்கள் செருகின. வாயோரம் பச்சை வண்ணத்தில் ஏதோ வழிந்து தொடர்ந்து, கொஞ்சம், அவன் விற்கும் குதிரையைப் போல் நுரை தள்ளியது.



## 3

யவனன் வசந்தகுமாரன் மார்பின் மேல் சாய்ந்து விழுந்ததில் மிகவும் பாரமாக இருந்தான்.

வசந்தகுமாரனுக்கு வயிற்றில் அச்சம் பரவியது. "பாவி யவனனே, காரியத்தைக் கெடுத்தாயே!" என்று அவனை நாடி பிடித்துப் பார்த்தான்.

கணேச பட்டர், வசந்தகுமாரனுக்குச் சொன்னது நினைவு வந்தது.

"உடம்பிலுள்ள நிலையினை நாடுதலால் நாடி என்று பெயர். இவை தேக முழுவதும் எழுபத்திரண்டாயிரம் என்று தமிழ் நூல்கள் சொல்லும்" என்றிருக்கிறார்.

அதில் ஒரு நாடி கூடப் பேசவில்லை. இடைகலை, பிங்கலை, சுழிமுனை எதையும் காணவில்லை.

"தாகமா, மயக்கமா, ஏன் விழுந்துவிட்டான்?" என்றாள் அந்தப் பெண்.

"இறந்துபோய்விட்டார். அவ்வளவுதான். மரணம் மதோன் மத்தம். ஸ்மரணை இல்லை, விறைப்பு தமிர்ப்பு."

"அய்யோ!"

"பார்த்தால், விடம் உண்டவன்போல் தோற்றமளிக்கிறான். எதைக் கலந்து கொடுத்தீர் பெண்களே!"

அவள் பதறிப்போய் "நாங்கள் எதுவும் கொடுக்கவில்லை வசந்தகுமாரரே!"

"இது என்ன திராட்சை ரசமா?"

"ஆம். கொஞ்சம் புளிக்க வைத்தது."

"நானும்தானே அருந்தினேன்!" என்று வசந்தகுமாரன் வியந்து, கோப்பையின் விளிம்பை முகர்ந்து பார்த்தான். "ஏதோ இவனுக்கு ஒத்துப்போகவில்லை."

இப்போது யவனன் முழுவதும் இறந்திருந்தான்.

"யாராவது நாடுகாவல் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்." என்றான் வசந்தகுமாரன்.

பதற்றத்துடன் "வசந்தகுமாரரே, இந்த இல்லத்தில் இதுவரை இவ்வகையில் துர்ச்சம்பவங்கள் எதுவும் நிகழ்ந்ததில்லை.

இப்போது நாடுகாவல் அதிகாரி வந்தால் எங்கள் வீட்டைப் பூட்டிவிட்டு எல்லோரையும் தஞ்சைக்குத் துரத்தி விடுவார். புகாரில் இருப்பதுதான் எங்களுக்குப் பயனளிக்கும், மாலுமிகளும் வாணிபர்களும் வருவதால், இப்போதே அவருக்கு இந்த வீட்டில் நடைபெற்ற சூழ்ச்சிகளைப் பற்றி ஐயப்பாடுள்ளது."

"இப்போது என்ன செய்யச் சொல்கிறாய்?"

"எப்படியாவது இவன் சடலத்தை வெளியே கொண்டு போய் கடற்கரையில் போட்டுவிடுங்கள். எங்களைக் காப்பாற்றுங்கள். வேண்டுமட்டும் பொன் தருகிறோம். விதவிதமான நாடுகளின் காசுகள்."

வசந்தகுமாரன் காலைப் பற்றிக் கொண்டுவிட்டாள் மூதாட்டி.

வசந்தகுமாரன் யோசித்தான்.



"பல்லக்கு உள்ளதா?"

"இருக்கிறது"

"பல்லக்குத் தூக்கிகள்?"

"இருக்கிறார்கள்."

"தீப்பந்தங்கள்"

"உள்ளன வசந்தகுமாரரே!"

"யவனனிடமிருந்து எடுத்த காசுகளையெல்லாம் திருப்பு முதலில்."

அவள் தன் கூந்தலை அவிழ்க்க, காசுகள் கொட்டின. நான்கு பல்லக்குத் தூக்கிகள் உள்ளே வந்து யவனின் துவண்ட உடலைத் தூக்கியபோது தலை தொங்கியது. பதற்றத்துடன் 'இரவிற்குள் உடலை நீக்கிவிட வேண்டும்' என்கிற விரைவுடன் அவர்கள் செயல்பட்டார்கள்.

நாழிகை வட்டில் ஒன்றில் வசந்தகுமாரன் சமயம் பார்த்தான். நீர் நிரம்பி மூழ்கியிருந்தது. வசந்தகுமாரன் சமயம், ஏழு சாமம் இருக்ககும் என்று அனுமானித்தான்.

"இந்த இரவில் கடற்கரையருகில் பிசாசுகள் உலவும்," என்றான். பெண்கள் அனைவரும் அச்சத்தில் பதறிப்போய் இருளில் கரைந்திருந்தார்கள்.

அமைதியாக இருந்தது. சவுக்குக் காட்டில் ஓநாய்கள் ஊளையிடுவதும் காற்றில் யவனன் மரக்கலம் உராயும் போது முனகல் போல் சப்தமும் கேட்டது.

வசந்தகுமாரன் அந்த இல்லத்தைவிட்டு வெளியே வந்தபோது அவன் தோளில் ஒரு கை விழுந்தது. துணுக்குற்றுத் தன் கைப் பந்தத்தை உயர்த்தினான்.

"கணேச பட்டரே, என் ஆசானே! இங்கே எங்கே வந்தீர்" என்றான்.

கணேசபட்டரை வசந்தகுமாரன் எதிர்பார்க்கவில்லை. பிரம்மதேய விஷயங்களுக்காக தலை நகரான ராஜராஜேச்சரம் சென்றிருப்பதாகத் தான் எண்ணியிருந்தான். இப்போது தர்மசங்கடமான நிலையில் தோளில் ஓர் இறந்த யவனனுடன் அவனைப் பார்த்து அவர் எந்த விதத்திலும் ஆச்சரியப்பட வில்லை. கணேசபட்டர் அப்படிப்பட்டவர். அவரை ஆச்சரியப்படுத்துவது

அத்தனை எளிதல்ல. நீண்ட கருகிய முடியும், கூர்மையான நாசியும், கண்களும், பார்த்தால் முப்பத்தைந்து வயது சொல்ல முடியாவிட்டாலும், புஜ வலிமையும் பார்வையின் தீட்சண்யமும் கண்ட உடனே மரியாதை கொடுத்து ஒதுங்கும்படியான தோற்றமும் ஏதோ ஒரு சிற்றரசன் போலத்தான் இருந்தார். அதற்கேற்ப தனிப்பட்ட தொய்யான்* மூலம் அமைக்கப்பட்ட பருத்தியும் பட்டும் கலந்த புடவை அவருக்கு அழகூட்டியது. எலி மயிரினால் ஆன சிறிய போர்வை அவர் கழுத்துக்கு அழகு சேர்த்தது. பிரம்மதேயத்துக்காரரான கணேசபட்டருக்குத் தெரியாதது இவ்வுலகில் ஏதும் இல்லை என்று வசந்தகுமாரன் அடிக்கடி சொல்வான். "வசந்தகுமாரா! யார் இவன்?" என்றார்.

"ஆசானே, இவன் ஒரு யவன வணிகன். இவனிடம் குதிரைகள் வாங்கி, விற்று என் பொலிசையை** நீக்கலாம் என்றிருந்தேன். இக்கட்டில் அகப்பட்டேன்."

"உயிரிருக்கிறதோ? கீழே வை பார்க்கலாம்."

அந்தப் பரந்து விரிந்த யவனனை வசந்தகுமாரன் இல்லத்தின் முன்றலில் சாய்த்தான். கணேசபட்டர் அவன் நாடி பிடித்துப் பார்த்து, "சப்த நாடியும் அடங்கி விட்டது."

"இந்த மூதாட்டி கொணர்ந்த பானத்தை அருந்தினான். இறந்தான்" என்றான்.

பாமகள் என்று அழைக்கப்பட்ட அந்தப் பேரிளம்பெண் பயத்துடன் - கண்ணீருடன், "அய்யனே, நான் ஏதும் அறியாதவள். எல்லாருக்கும் அருந்த இதே பழரசம் தான் கொடுத்தேன்."

கணேசபட்டர், யவனின் அருகில் சென்று அவன் முகத்தருகில் நாசியால் மோப்பம் பிடித்துப் பார்த்தார். கைகளை உயர்த்திப் பார்த்தார். மடக்கிப் பார்த்தார். "உடல் இன்னும் இளகவில்லை. கைகள் துவள்கின்றன. இறந்து அதிக நேரமாகியிருக்காது. மூக்கருகே வீசும் துர்மணம் கருப்பூர வழுதலை போல் தெரிகிறது. உடன் கொஞ்சம் தேனகமும் கரைத்திருப்பதாகத் தெரிகிறது. எங்கே, இவன் அருந்திய கலத்தைக் கொண்டுவா!"

"ஆசானே, இந்த ஆராய்ச்சியெல்லாம் வேண்டாம். விரைவில் இவன் உடலைக் கடலருகில் புதைத்தால் தான் என் இதயத் துடிப்பு குறையும்.

"வசந்தகுமாரா, அது குற்றம். இவனைக் கொன்றது யார் என்று தெரியாதவரை, உடலை மறைப்பது குற்றம். குமாரா, உன்

* துணி நைப்பவன்

** கடன்



உரிமைகளை இழந்துவிடுவாய். பெருங்குற்றம். மேலும், உடல் கண்டு கொள்ளப்பட்டால், உன் மேல் தான் ஐயப்பாடு எழும்."

"இப்போது என்ன செய்வது?"

இதனிடையில் அவன் பழரசம் அருந்திய கிண்ணத்தைக் கொண்டு வந்தார்கள். கணேசபட்டர் அதை மூக்கருகில் வைத்துப் பார்த்தார்.

"இதில் விஷம் இல்லை"

"எப்படிச் சொல்கிறீர்?"

கணேசபடட்ர் அதில் மிச்சமிருந்த திரவத்தைச் சட்டெனப் பருகிவிட்டு, அதரங்களைத் தடவிக் கொண்டார். வசந்தகுமாரன் அதிர்ந்து, "ஆசானே, அதில் விஷம் இருக்கலாம்."

"இவன் விஷம் உண்டது இந்த இல்லத்தில் இல்லை வசந்தகுமாரா. காலையிலிருந்து எங்கெல்லாம் சென்றீர்கள்?"

"அங்காடியிலிருந்து ஓர் உணவகத்துக்குச் சென்று, இந்த இல்லத்தின் இருப்பிடத்தைக் கேட்டோம்."

"இங்கே எதற்கு வந்தீர்கள்?"

"யவனனுக்குச் சோழப் பெண்கள் என்றால் கொஞ்சம் பலவீனமாம்."

"வழியில் ஏதாவது உணவு உண்டீர்களா?"

"இல்லை"

கணேசபட்டர் விளக்கொளியில் யவனனின் உடலைப் பார்த்தார். "விடத்தால் இறந்திருக்கிறான். சரியாக ஒரு சாமம் கூட ஆகவில்லை. இன்னும் வெப்பம் இருக்கிறது. உடல் இன்னும் சற்று நேரம் பொறுத்து கை மடக்கினால் மூங்கில் உடைவது போல் ஒலிவரும்."

ஒரு பெண் பயத்தில் கிறீச்சிட்டாள்.

"நீங்கள் அனைவரும் உள்ளே செல்லுங்கள்," என்று மூதாட்டி ஆணையிட, தீப்பந்த ஒளியில் தளிச்சேரிப் பெண்டுகள் தங்கள் தண்டைகள் ஒலியிட உள்ளே சென்று இருளில் கரைந்தார்கள்.

"கணேசபட்டரே, எனக்கே அச்சமாக இருக்கிறது."

"வசந்தகுமாரா, நீ இவனைக் கொல்லவில்லையே?"

"என்ன அப்படிக் கேட்டுவிட்டீர்கள் ஆசானே!" என்றான் திகைத்து.

"குதிரைக்காகவும், பொன்னுக்காகவும் ஆசைப்பட்டு இவ்வாறு செய்தாயா? என்னிடம் உண்மையைச் சொல்லிவிடு."

"ஆசானே! நான் காசில்லாதவன் தான். சூதாடுபவன் தான். கொலை செய்பவன் என்று நீங்கள் உண்மையாகவே எண்ணுகிறீர்களா?"

"அப்படி ஏதாவது தற்செயலாக நிகழ்ந்திருந்தால் முன்னமேயே சொல்லிவிடுவது நன்று. தெரியாமல் செய்துவிட்ட குற்றங்களுக்குச் சோழநாட்டில் தண்டனை அதிகமில்லை. அருகில் உள்ள கோயிலுக்கு இரண்டு நந்தா விளக்கு கொடுக்கும்படியாக தண்டனை சொல்வார்கள்."

"ஆசானே, நான் இவனைக் கொல்லவில்லை. இவனைக் கொன்றால் எனக்குப் எந்தப் பயனும் இல்லை. இவனை உயிருடன் வைத்து, இவன் குதிரைகளை சோழ நாட்டில் விற்கலாமென்று மாலைதான் கனவுகண்டேன்."

யவனின் உடலைப் புரட்டிப் பார்த்தார். கணேசபட்டர். "எத்தனை பாரமான இளைஞன்! வசந்தகுமாரா, ஏன் எப்போதும் வீண் வம்பில் அகப்படுகிறாய்?"

"ஆசானே, தங்களுக்குத் தெரியாதா. இந்த வசந்தகுமாரனின் தலையெழுத்து இது. என் கையைப் பார்த்து ஒரு ஜோதிடன் சொன்னான்: சந்தன தீபிகையில் எழுதியுள்ளபடி இன்னும் இரண்டு திங்களில் என்னை ஒரு பேராபத்து சூழவிருப்பதாகவும், அதற்கென பரிகாரமாக பொன்னை உருக்கி ஒரு பதுமை செய்ய வேண்டும் என்றான். பேராபத்து இப்போதே வந்து விட்டது ஆசானே."

கணேசபட்டர் அவன் சொன்னதைக் கவனிக்காமல், "ஆஹா, இப்போது தெளிவாகிறது."

"என்ன ஆசானே?"

"இவன் நடனசாலையில் மதுவருந்திச் சாகவில்லை. இவன் முதுகைப் பார்!"



## 4

முதுகில் மிக லேசாக வெம்பி இருந்தாற் போல் ஒரு காயம் இருந்தது. அதன் நடுவில் கருரத்தம் கட்டியிருந்தது.

"இவன் ஒரு சிற்றம்பால் தாக்கப்பட்டிருக் கிறான்."

"சிற்றெறும்பு இங்கே ஏதும் இருக்காதே. செவ்வனே பெருக்குகிறோமே" என்றாள் அந்தப் பணிப்பெண்.

"சிற்றெறும்பில்லை பேதைப் பெண்ணே! சிற்றம்பு! சுண்டுவிரல் பரிமாணத்துக்கு இருக்கும் விடம் தோய்ந்த சிறிய மொட்டம்பு! 'உதனம்' என்று பெயர். இது உள்ளே பதிந்து ஒரு சாமத்துக்குள் கடவுள் இருப்பது போல் அத்தனை சத்தியமாகக் கொன்று விடும். வசந்தகுமாரா, நீ

கவலைப்படாதே. யவனனைக் கொன்றவனைக் கண்டு விடிப்பது மிகவும் சுலபம்."

"எப்படிச் சொல்கிறீர்கள் கணேசாசானே?"

"இவ்வகை மொட்டம்புகள் செய்வினை தெரிந்தவர்கள் சோழ நாட்டிலேயே இருவர்தான் உள்ர்."

"ஆசானே, இவன் எப்படி இறந்தான் என்பதைப் பற்றி நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும்?"

"பெண்ணே, அகத்தே சென்று, எனக்கு ஒரு மிடறு குடிநீர் கொண்டு வா. வசந்தகுமாரா, உனக்கு அதிகம் வாய்ப்பில்லை. அதோ பார்..." என்று காட்டினார்.

கணேசபட்டர் காட்டிய திசையில் இரவின் இருளில் இரண்டு குதிரைகளின் குளம்பொலி கேட்க, அந்த வீட்டை நோக்கி ஒருவன் வந்து, "ஒரு யவன வணிகன் வந்தானா?" என்றான்.

"வந்தான்."

"அவன் எங்கே?"

"இதோ."

"படுத்திருக்கிறானா?"

"இறந்திருக்கிறான்."

திடுக்கிட்டு அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்ள கணேசபட்டர், "நீங்கள் யார்? யார் உங்களை அனுப்பியது?"

"நாடு காவலதிகாரி. அரண்மனையில் விடியல திகாரியிலிருந்து காவலதிகாரிக்குச் செய்தி வந்து இங்கே யவன வணிகனை அழைத்துவரச் சொன்னார்கள்."

"அவன் தங்களுடன் கூட வரும் நிலையில் இல்லை."

"இறந்துவிட்டானா?" என்ற அவன், இறங்கி யவனனின் உடலைச் சுற்றி வந்தான். "சோதமா, நீ போய் ஆணத்தியிடம் சொல்லிவிடு! அய்யா தங்கள் பெயர்?"

"கணேசபட்டன். இவன் வசந்தகுமாரன், இவள் பெயர் பாமகள்-மூதாட்டி."



"அதிகாரியிடமிருந்து செய்தி வரும் வரை யாரும் விலகாமல் இருப்பது நல்லது. எப்படி இறந்து போனான்.?"

"விடமருந்தி."

"யார் விடம் கொடுத்தது?"

"அதை உங்கள் அதிகாரியல்லவா கண்டுபிடிக்க வேண்டும்."

"அதுவும் சரிதான். பெண்ணே, குடிநீர் இருக்குமா? அது என்ன தேறலா?"

"ஆம். அதில்தான் விடம் கலந்திருக்கலாமென்கிற ஐயப்பாடு."

அவன் அருந்த இருந்த கிண்ணத்தை வைத்து விட்டான்.

"ஏதும் அபாயமில்லை. அருந்துங்கள்."

"இல்லை, நான் பணியில் மது அருந்துவதில்லை."

"இது மது இல்லை."

"இன்று நான் விரதம்."

இதனிடையே மற்றொரு குதிரை வெகு வேகமாக வந்தது. குதிரையுடன் அல்லங்காடிக்காரன் வேகமாக ஓடி வந்தான். வசந்தகுமாரனுக்கு அவனைப் பார்த்த நினைவு வந்தது உணவங்காடியில் இந்த இல்லத்தை, பொன் வாங்கிக்கொண்டு அடையாளம் காட்டியவன்.

தூயவெள்ளரிசிச் சோறும் இறைச்சியும் தின்று கொண்டிருந்தவன் "இவர் தான்" என்றான் வசந்தகுமாரனை வந்து அருகில் பார்த்து.

குதிரை மேலிருந்தவன் கூற்ற அதிகாரிபோல உடையணிந்து பளபளப்பாக வேல் வைத்திருந்தான்.

"பெயர் என்ன?"

"வசந்தகுமாரன்-"

"வசந்தகுமாரரே, என்னுடன் வாரும்."

"எங்கே வரவேண்டும்.?"

"எதிர் பேசாமல் வாரும். உம்மைச் சிறைப்படுத்த உத்தரவு."

"என்ன குற்றம்?" என்று கேட்டார் கணேசபட்டர்.

"சோழப் பேரரசுடன் வாணிபம் செய்ய வந்திருந்த அயல் நாட்டு யவனனைக் கொன்றுவிட்ட குற்றத்துக்காக, தப்பிக்க முயற்சிக்காதீர்கள்; இந்த வேலை வீசினால் நாற்பது தோரைகள் செல்வதற்குள் உம் முதுகில் பாயும்."

"ஆசானே!" என்று வசந்தன் கணேசபட்டரைப் பார்க்க-

கணேசபட்டர் சற்றும் எதிர்பார்த்திராத வகையில் "வசந்தகுமாரா! ஓடிப்போய் விடு" என்றார்.

வசந்தகுமாரன் ஓட்டத்தில் வல்லவன். வாழ்க்கையில் பல்வேறு தருணங்களில் அவன் சட்டென்று காட்சியிலிருந்து விலகி மின்னல்போல் மறைந்திருக்கிறான். இப்படித்தான் சதயநாள் விழாவின்போது விக்கிரமசிங்க வேளாண்மனைக்கு கொடும்பாளூர் சென்றிருந்தபோது அங்கே அம்மங்கை என்ற அழகான பெயர்கொண்ட (பெயர் மட்டும் அழகு) ஏதோ ஒரு மாலை மங்கல் நேரத்தில் அந்தப்பெண்ணைப் பார்த்து, அடுத்த நொடியில் காதல் கொண்டு ஏறத்தாழ அவளைத் திருமணம் செய்ய அழைத்து வந்து விட்ட நிலையில் அம்மங்கையின் முறை மாமன் கம்பன் மணியன் என்பவன் கூர்மையான வேல்கள் கொண்ட பத்துப் பேருடன்கொடும்பாளூர் எல்லைவரை துரத்த ஓடியது நினைவுக்கு வந்தது. வசந்தகுமாரனின் பலவீனங்கள் இவ்வாறு திருநாவலூர், உத்திரமேரூர், தக்கோலம் என்று எல்லா ஊர்களிலும் பரவி, கண்டதும் காதல் வயப்பட்டு வெவ்வேறு சிக்கல்களிலிருந்து ஓடிவர வேண்டிய கட்டாயங்கள் ஏற்பட்டிருந்தன. ஆனால் இந்தத் தருணங்கள் எதிலும் உயிர் தப்பி ஓட வேண்டிய கட்டாயம் இல்லை. அந்தக் கன்னியரின் முறை மாமன்களும் தந்தையரும் துரத்த, ஊராரின் கோபத்திலிருந்து தான் தப்பி ஓடி வந்திருக்கிறான்.

இதுவேறு-அரசு அதிகாரத்தின் பரதிநிதியான காவற் படையினன் குற்றம் சாட்டி சிறைப்படுத்த அழைத்துச் செல்லும்போது தப்பித்து ஓடிப் பழக்கமில்லை. கூடவே ஒரு யவன வணிகனின் இறந்த உடல்வேறு! சிக்கல்!

கணேசபட்டர் சொன்னதால் ஓடுவதில் வசந்தகுமாரனுக்குத் தயக்கமும் இல்லை. பட்டர் நல்லதுக்குத்தான் சொல்வார். ஓடு என்றால் ஓட வேண்டும்.



வசந்தகுமாரன், குதிரைமேல் இருந்தவனைச் சற்றும் எதிர்பாரா நிலையில் காலைப் பிடித்து இழுத்து வீழ்த்தி குதிரை மீது ஊர்ந்தபோது, அது பழக்கமில்லாதவனை உதறிவிடும் நோக்கத்தில் சுற்றிச் சுற்றி வர, அதற்குள் மற்றவன் தன் கை வாளால் வசந்தகுமாரனை ஓடிவந்து தாக்க முயற்சிக்க, தக்க தருணத்தில் பட்டர் அருகே இருந்து கனமான வெண்கல விளக்கை எடுத்துத் தலையில் சிதற அவன் அடுத்த கணம் துவண்டு வீழ்ந்தான். பல்லக்குத் தூக்கிகள் ஓடிப்போனார்கள்.

"வசந்தகுமாரா, உனக்காக நான் என்னவெல்லாம் துன்பங்களை இழைக்க வேண்டி இருக்கிறது பார். ஓடிப் போ. இரவு என்னை இல்லத்தில் வந்து பார், ஊராளிகள் உறங்கிய பின்." என்றார்.

குமாரன் குதிரையை முடுக்கினான். குமாரனுக்கு அந்தப் புரவியின் நெளிவுகள் புரிய கொஞ்ச நேரமாயிற்றெனினும் விரைவிலேயே அது பழகிவிட்டது. குமாரனின் பாதச் செய்திகளுக்கு ஏற்ப அது விரைந்தது. கணேசபட்டரை அந்த இக்கட்டான நிலையில் விட்டு வந்ததைப் பற்றிய வருத்தம் இருந்தது. ஆனால் அவர் பிரம்மதேய அதிகாரியாக இருப்பதால் காவலரைச் சமாளித்து விடுவார் என்கிற நம்பிக்கையும் இருந்தது.

வசந்தகுமாரன் தன் விதியை நொந்து கொண்டான். என்இருணம் தீர வழி பிறந்தது என்று எண்ணி அந்த யவனக் குதிரை வியாபாரியைச் சந்தித்தேன். இத்துணை விரைவில் இறந்து போவான் என்று எதிர்பார்க்கவே இல்லை. என் ராசி இப்படி. இருளில் விளக்குகள் அங்கங்கே மின்னிக் கொண்டிருக்க, அல்லங்காடியில் ஆரவாரம் அடங்கிக் கொண்டிருந்தது.

வசந்தகுமாரன் ஊருக்கு வெளியே துறைமுகத்தை நோக்கி குதிரையைச் செலுத்தினான். யவனன் காட்டிய மரக்கலம் தூரத்தில் கரிய பிசாசுபோல் அலையாடிக் கொண்டிருந்தது. அதன் மேற்தளத்தில் எத்தனை குதிரைகள் இருக்கும் என்று வசந்தகுமாரன் வியந்தான். தப்பிப் போன வாய்ப்பை இப்படியாவது திரும்பிப் பெறலாம். மீகாமர்கள் சிலரைக் கொண்டு குதிரைகளைக் கரையேற்றி இரவோடு இரவாக ஒற்றியூருக்கு நடத்திச் சென்றுவிட வேண்டும். அதற்கான தங்கக் காசுகள் இவனிடம் இருந்தன.

அங்கே விக்கிரமன் என்றொரு நண்பன் உள்ளான். அவன் சோலையில் தற்காலத்துக்கு குதிரைகளை வைத்துக் கொள்ளலாம். எத்தனை துரகங்கள் இருக்கும்-இவ்வாறு வசந்த குமாரன் எண்ணிக்கொண்டு செல்ல, மேலே வானம் மின்வெட்டியது.

இருள், வசந்தனைக் கவ்விக் கொள்ள, ஒருமுறை வானமே உடைந்துவிடும்போல வெடித்து உடனே மழை சோவெனப் பெய்தது.

குதிரை மழையில் செல்ல முடியாமல் சகதியில் அதன் கால்கள் தடுமாற மெல்லத்தான் நகர்ந்தது. குமாரனுக்கு கோரமான பசி வேறு. யவனனுடன் அங்காடியில் உண்டிருக்கலாம். வேண்டாமென்று பெண்களைத் தேடி வந்தது தவறு. எப்படி அந்தச் சோனக யவனன் இறந்திருப்பான்? கணேசபட்டர் சொன்னதுபோல் அவன் இறந்தது அந்தப்பெண் தந்த பானத்தால்அல்ல. அந்தச் சிற்றம்பால்.

"இடிமழையின்போது மைதானத்தில் இரு. மரத்தின் கீழ் நிற்காதே" என்று கணேசபட்டர் அவனுக்குச் சொல்லி யிருக்கிறார். ஒருமுறை கீழ் வானத்திலிருந்து உச்சிவரை வெள்ளிக் கிறுக்கல் மின்னலை அடுத்து இடியின் துடிதுடிப்பில் குதிரை அரண்டு பின்வாங்கி பின்னங்கால்களில் நின்றது. அஞ்சன வானம் உடைந்து இன்னும் கொட்டியது.

அந்தக் கலம் நங்கூரத்தை மீறி அலைகளில் நடனமிட வசந்தகுமாரன் துறைமுகத்துக்கு வந்தபோது மழையில் அந்தக் கரிய உருவங்களைக் கண்டான். அருகே போய் உற்று நோக்கினபோது வசந்தகுமாரனை அடுத்த அதிர்ச்சி, மின்னலைவிட அதிகமாகத் தாக்கியது.

மரக்கலத்திலிருந்து குதிரைகளைத் திருட்டுத்தனமாக இறக்கிக்கொண்டிருந்தார்கள்.



## 5

வசந்தகுமாரன் அருகே சென்று பார்க்க விரும்பினாலும் அண்மையில் நிகழ்ந்த சிக்கலினால் நெருங்கவில்லை. குதிரைகளை யவனன் இன்னும் விற்கவில்லையே, வேறு யாரேனும் குதிரைகளைக் கவர்வதற்கு என்னை முந்திக் கொண்டுவிட்டார்களா? வசந்தனே, இதுதான் ஊழ் என்பது. இன்று பிற்பகல் என்னவெல்லாம் எதிர்நோக்கினாய். சூரியன் மறைந்ததும் உன் கனவுகளும் மறைந்து போய், இப்போது அரசின் பார்வையிலிருந்து தப்பித்து நிழலை நாடும் கோழையாகி விட்டாயே! ஐயோ, என்ன விதி இது! கணேசபட்டர் சொல்வார்: 'பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச் சொரியினும் போகா தம' என்று.

ஊழ் அல்லாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் நில்லாது. இந்தப் பரிகள் எனக்கு வாய்க்காத பரிகள்.

வசந்தகுமாரன், கவர்ந்து வந்த குதிரை மீதிருந்து இறங்கி மெல்ல நடந்தான். கட்டவிழ்ந்த குதிரை இருளில் ஓடியது. மழை நின்று நிலா, நாணம் நீங்கி மேகத்திலிருந்து வெளி வந்திருந்தது. பௌர்ணமி கடந்து இரண்டு மூன்று தினங்கள் ஆகியிருக்க வேண்டும். கொஞ்சம் சேதப்பட்ட நிலா, மேகத்தில் மீண்டும் மறைந்து கொண்டது. வசந்தகுமாரனுக்குச் சற்றுமுன் அச்சப்பட்டு மறைந்த கணிகையின் நினைவு வந்தது. அப்போது ஒரு சாளரத்தில் விளக்கு வெளிச்சத்தைப் பார்த்தான். சுவரில் ஓவியங்கள் வரையப் பட்டிருந்ததில் செல்வந்தனின் இல்லம் போலத் தோன்றியது. எட்டிப் பார்த்தபோது இருவர் கையசைத்து பேசிக்கொண் டிருப்பதைக் கண்டான். கைகளை அசைக்கும் போது வாகுவலயம்* சப்தமிடுவது கேட்டது. அவர்கள் தாழ் வாகப்பேசிக் கொண்டிருந்தார்கள். உன்னிப்பாகக் கேட்டதில் -

"ஸ்ரீபலிக்குள் காரியம் முடிந்துவிட வேண்டும். இந்த இலச்சினையைப் பார். இதேபோல் செய்து தர வேண்டும்."

"திரிபுவனாங்குச என்பது சக்கரவர்த்தியின் சிறப்புப் பெயர்."

"அது என்ன பெயரோ? இலச்சினை இருந்தால் தான் அரண்மனையின் உள் சுற்றில் அனுமதி கிடைக்கும்."

"ஆம், சந்திரன், விண்மீன், சாமரம், புலி இவை கட்டாயம் இருக்க வேண்டும். இவ்விலச்சினை செய்வது மிகவும் கடினம். எத்தனை மாடை வேண்டுமோ எடுத்துக் கொள். யவனர்களின் பொற்காசுகளும் உள்ளன."

"எனக்கு யவனர்களின் காசு வேண்டாம், அகப்பட்டுக் கொள்வேன்."

"காரியத்தை முடித்துக் கொடுத்தால்... சொல், உனக்கு எத்தனை வேலி நிலம் வேண்டும்?"

"நிலம் வேண்டாம். சேர நாட்டிற்குச் செல்ல ஒரு குதிரையும் வழித்துணையும் வேண்டும். கணக்கற்ற குதிரைகள் கரவடம்** பண்ணியிருக்கிறீர்களே, எங்கே அவைகள்?"

"நீ அதிகம் பேசுகிறாய். கரவடம் என்கிற வார்த்தையைக் கேட்டிருந்தால் மற்றொரு சூழ்நிலையில் நாக்கை

* தோளணி
** திருட்டு



வெட்டியிருப்போம். உன் வேலை இலச்சினையைப் படியெடுப் பது."

வசந்தகுமாரனுக்கு அவர்கள் எதைப்பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள், 'காரியம்' என்று எதைச் சொல்கிறார்கள் எனபது புரியவில்லை. யோசிப்பதற்குள் அவன் கழுத்தில் ஒரு கை அழுந்தியது. உடனே அவன் வலது கரம் முதுகில் அழுத்தப்பட்டு, கழுத்தில் கத்தியும் வைக்கப்பட்டது.

"யார் நீ?"

வசந்தகுமாரன் யோசிக்க நேரமின்றி, "நான் ஒரு... நான் ஒரு.. திருவாய்க் கேள்வி. இங்கே அனந்தாழ்வான் என்பவனைப் பார்க்க வந்தேன்," என்றான்.

கத்தி இன்னும் அவன் கழுத்தில் அழுத்த, "பொய். இங்கு யாரும் அனந்தாழ்வான் இல்லை."

"பொற்கொல்லன். நகை தைக்க வந்தேன். அன்பனே, இந்தக் கத்தியை இன்னும் நெருக்கினால் என் கழுத்தின் ரத்த நாளங்கள் வெட்டுப்பட்டு உதிரம் உதிரும்."

"அதுதான் உத்தேசம். சொல், எதற்காக வந்தாய், எதற்காக எட்டிப் பார்த்து ஒட்டுக் கேட்கிறாய்? உன்னைப் பார்த்தால் போர் வீரன் போலத் தெரிகிறது."

"இல்லை, இல்லை. நான் வெறும் விளக்குத் தூக்குவோன்!"

"ஒரு நொடியில் வேலை மாறிவிட்டாயா? இப்போது தான் திருவாய்க் கேள்வி என்றாய்?"

"அது என் தகப்பன். நான் விளக்குத் தூக்குவோன்"

"அப்படியா?" என்று வசந்தகுமாரனின் முதுகுப் பக்கத்தி லிருந்து கேலிக் குரல் வந்தது. திரும்பிப் பார்க்க இயலாதபடி இருவர் அவனைப் பிடித்துக் கொண்டிருக்க "பெரிய தேவரிடம் இவனைக் கொண்டு போகலாம்," என்றான்.

வசந்தகுமாரன், "இல்லை, இல்லை," என்றான்.

"கொன்று விடு!" அதற்கு ஆயத்தமாகக் கத்தியைக் கொடுத் தான் அந்த வலியோன்.

"இரு. இரு. நான் யவனக் குதிரை வணிகனிடம் வாணிபம் செய்ய வந்தேன்," என்றான் வசந்தகுமாரன் பதற்றத்துடன்.

"கொன்று விடு! மேலும் பொய்களைக் கேட்காதே, தயங்காதே."

வசந்தகுமாரன் மிகவும் பிரயாசையுடன் தன்னை விடுவிக்க முயன்றும், நான்கு வலக்கரங்கள் அவனைக் கட்டிப் பிடித்திருந்தன. "என்னைக் கொல்வதால் உங்களுக்கு என்ன பயன்? இப்போதுதான் யவனன் இறந்து போய் அங்கே உடல் கிடக்கிறது. அவன் உடை முழுவதும் தங்கக் காசுகள் கேட்பாரற்று மறைந்திருக்கின்றன. யவனக் காசுகள் சொலிக்கும் கிளிச் சிறைப் பொற்காசுகள்." வசந்தகுமாரன் கழுத்தை மிரட்டிய கத்தி சற்றே தளர்ந்தது.

"எங்கே உடல்?"

"பதியிலாப் பெண்களின் தெருவிற்கு அவனை நான் தான் அழைத்துச் சென்றேன். இன்னேரம் காவலர் வந்திருக்கலாம்."

"எங்கே?" என்றான்,

"அவனுடன் என்ன பேச்சு. கொல்!" என்றது இருட்டுக்குரல்.

வசந்தகுமாரன் தீர்மானித்து விட்டான்.

"சரி, நான் சொல்வதை நம்பவில்லையெனில் நானே அழைத்துச் செல்கிறேன்."

இதனிடையில் உள்ளேயிருந்த அவ்விருவரும் வெளி வந்து, "என்ன இங்கே அரவம்?"

"சாளரத்திலிருந்து, பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான் இவன். ஒற்றன்போல் இருக்கிறான். வினவினால் திருவாய்க் கேள்வி என்கிறான். விழியே சரியில்லை."

"அப்படியா?" இப்போது தீப்பந்தத்தை வசந்தகுமாரன் அருகில் காட்டி ஆராய்ந்தான், "இவனை நான் பார்த்திருக்கிறேன். நீ தானே மாலை யவனனின் குதிரை மீது ஏறி அதை அடக்கினாய்?"

"அது நான் இல்லை. என் இரட்டைச் சகோதரன் இவுளி மறவன். அவன் பெயர் சந்திரகுமாரன்."

"மின்னல் போல பேச்சை மாற்றுகிறான். இவனைக் கொல்."

"எங்கே அந்த யவனன்?"

"செப்பினேனே. பதியிலார் தெருவில் கதியிலாமல் கிடக்கிறான்."



"தங்கக்காசுகள் உள்ளனவாம். ஏராளம்."

வசந்தகுமாரனை இப்போது அவர்கள் நிச்சயம் கொல்ல எண்ணி கழுத்தில் இருந்த கத்தியை எடுத்துப் பின்வாங்கி வயிற்றில் குத்தும்நோக்கத்துடன் வலக்கரத்தை வீச, வசந்தகுமாரன் ஒரு கணத்தின் பிரிவில் அவனை முழுந்தாளால் மருமத்தில் உதைத்தான். கத்திக்காரன் சுருண்டு, "தாயே" என்று அழைத்து விழ, மற்றவன், வசந்தகுமாரனை விட்டுவிடச் சற்று அயர்ந்து மறந்த சூழ்நிலையில் தன்னை விடுவித்துக்கொண்டு இருளில் ஓடினான்.

இரைக்க இரைக்க ஓடும்போது அவன் முதுகில் சுள்ளென்று முள்போலப் பட்டது. அதை வசந்தகுமாரன் பொருட் படுத்தாமல் நேராகக் கணேசபட்டரின் சதுர்வேதி மங்கல இல்லத்தை நோக்கி ஓடினான்.

பட்டர் வீட்டுக் கதவை தட்டும்போதே வசந்குமாரனுக்கு மயக்கம் வந்தது. பட்டர் கதவைத் திறந்ததும் கண்கள் செருகின. கால்கள் தொய்ந்தன. பட்டரின் மார்பில் சாய்ந்து விழுந்தான்.

"வசந்தகுமாரா! உன்னை அரச காவலர்கள் தேடுகிறார்கள். இங்கே வந்தது ஆபத்து. காத்துக்கொண்டிருப்பார்கள். குமாரா? குமாரா?"

கணேசபட்டரின் மேல் அவன் சாய, கணேசபட்டர் அவன் முதுகில் இருந்த மெலிய ரத்தக் காயத்தை அகல் விளக்கில் பார்த்தார்.

உள்ளே தன் பணிப் பெண்ணை அழைத்தார். "மோகநி! விரைவில் வா!" என்றார்.

வசந்தகுமாரனை முதுகு தெரியப் படுக்க வைத்து, அவன் வலது தோளில் பாய்ந்திருந்த சிற்றம்பை ஆராய்ந்தார்.

"என்ன ஆயிற்று இவருக்கு?" என்றாள் மோகநி.

"விட அம்பு பாய்ந்திருக்கிறது. உடனே வைத்தியரை வரச் சொல்!"

இப்போது வசந்தகுமாரன் வாயோரத்திலிருந்து நுரை தப்ப, "அதே நஞ்சு," என்றார் கணேசபட்டர்.

"இறந்து விடுவாரா?" என்று மோகநி கேட்க-

"இப்போது அழாதே. பிழைத்துவிடுவான். சூடான நீர் கொடு. நஞ்சு பரவாமல் தீய்க்க வேண்டும் காயத்தை."

வசந்தகுமாரன் முழு மயக்கத்தில் இருக்க, அந்தப் பெண் பக்கத்திலிருந்த வைத்தியரை வரவழைக்க, அவர் வசந்தகுமாரனைப் பார்த்து அச்சப்படாமல், முதலில் தன் குருவை மானசீகமாக வணங்கிவிட்டு நாடி பிடித்துப் பார்த்தார். "இடைபிங்களை இரண்டும் கத்திரிகைக்கால்போல் பின் தங்கி நிற்கிறது."

"அதெல்லாம் இருக்கட்டும். உயிர் இருக்கிறதல்லவா?"

"உயிர் பிரிந்து கொண்டிருக்கிறது."

"ஏதாவது செய்யும்!"

"அறுத்து உதிரம் ஊற்றி சுடலுறச் சுட்டு மருந்திட வேண்டும். இவனை உடன் ஆதுரச் சாலைக்கு கொண்டு செல்ல வேண்டும். அங்கே சல்லியக் கிரியை பண்ணுவான். இவன் தோளில் புதைந்த அம்பை நீக்கி விடுவான். முதலில் களைந்து அறுத்துச் சுடவேண்டும்."

"சுடும்"

வசந்தகுமாரன் முதுகில் அந்த அம்பு பட்ட இடத்தில் ஒரு சிறு கத்தியால் கீறி, மேலும் உதிரம் வடியச் செய்து, பழுக்கக் காய்ச்சின இரும்பால் அவ்விடத்தில் சுட்டார் வைத்தியர். ரத்தம் தீய்ந்து கருத்து லேசாக ஆவி பறக்க, வசந்தகுமாரனை அந்த வலி எங்கோ மயக்கத்தில் உறுத்தியிருக்க வேண்டும். லேசாக வாய் திறந்து, "வலி." என்றான்.

"ஆம். முயல் வலி எனப் பெயர். எழும்புதல், வாயில் நுரை தள்ளல் எல்லாம் நிகழும். பிழைத்து விடுவான். என் குரு நாபியறைந்து குய்யம் பற்றி ஒரு நாடி இருக்கிறது. நாழிகை ஒன்றுக்கு முன்னூற்று நாற்பது சுவாசமாக அங்குலப் பிராணம் ஓட வேண்டும்."

"வைத்தியரே! நீர் சொல்வது வாத நாடி" என்றார் கணேசபட்டர். "பேச அழைக்கவில்லை உம்மை. இவன் பிழைக்க வழி செய்யும்!"



"பிழைத்துவிட்டான். இன்னும் இரண்டரை நாழிகையில் எழுந்து விடுவான். இதென்ன விடம்! ஆலகால நஞ்சையே நான் நீக்குவேன். நரசிம்ம பண்டிதன் என்றால்...."

"சரி, சரி."

அவர் தன் பல்வேறு பைகளின் ஆழத்திலிருந்து ஒரு பச்சிலைக் கொத்தை எடுத்து, "பெண்ணே, இதை அரைத்து புண்ணின் மேல் தடவு. காலை பட்டுப்போகும். வேது வைக்க நீர் கொண்டு வா. அதில் இந்த இலைகளைப் போட்டு வா. யார் இந்த இளைஞன்?"

"பெயர் வசந்தகுமாரன். ஊரில் உள்ள அத்தனை வம்பு தும்புகளையும் விலை கொடுக்காமல் வாங்குபவன். இவனை அரசு காவலர்களிடமிருந்து தப்ப வைத்து, ஒரு சாமமாகவில்லை இன்னும்."

வசந்தகுமாரன் கண்விழித்தபோது-

அவர்கள் வாயிற்கதவு இடிக்கும் சப்தம் கேட்டது.



## 6

வசந்தகுமாரனுக்கு நூலிழை போல நினைவு திரும்பிக் கொண்டிருந்தபோது கணேசபட்டர் அவனைக் கவலையுடன் பார்த்துக் கொண்டிருக்க, அந்த மருத்துவர் அவனுடைய ஆரையென்பின் மேல் மூன்று விரலால் சமமாக அழுத்திப் பரீட்சித்து விரல்களை அழுத்தியும் தளர்த்தியும் மாறி மாறி நாடியின் நடையை சோதித்தார். "மாத்திரை சுழிமுனை இரண்டிலும் பகிர்ந் தோடும் சிலேத்மநாடி பேசுகிறது."

"அவனை உயிர்ப்பிக்கும் ஆற்றலைப் பாரும்."

"பிழைத்து விடுவான். கதவை யாரோ தட்டுகிறார்கள். யாரென்று கேள் பெண்ணே. இந்த யாமத்தில் நம்மை வந்து வருத்தாமல் இருக்கும் படிச் சொல்."

கணேசபட்டர் கைவிளக்கை எடுத்துக் கொண்டு கதவருகே சென்று மெல்லத் திறந்து "யார் இந்த வேளையில்?"



"கணேசபட்டரின் மனை இது தானோ?"

"ஆம்."

"பிரம்மதேயத்துக்காரர்."

"ஆம்."

"இங்கு வசந்தகுமாரன் என்ற இளைஞன் ஒரு யவனனைக் கொன்றுவிட்டு அவன் புரவிகளையெல்லாம் களவு கொண்டு, அரசு காவலர்களைத் தாக்கிவிட்டு ஓடி வந்திருக்கிறான் என்கிற செய்தி தஞ்சை விடையில் அதிகாரியிடமிருந்து கிடைத்தது. இங்கு வந்தானா தெரிய வேண்டும்."

"என்ன பெயர்?"

"வசந்தகுமாரன். உம் நண்பனாமே?"

"அடையாளம் ஏதாவது உண்டா?"

"பெயர்தான் தெரியும்."

"இங்கு யாரும் வரவில்லை."

அவன் உள்ளே பார்த்து தன் தலைச் சீலையை நீக்கிவிட்டு ஏறக்குறைய வழுக்கையாக இருந்த தலையைத் துடைத்துக் கொண்டான். வசந்தகுமாரன் கிடப்பதைப் பார்த்தான்.

"படுத்திருப்பது யார்?"

"என் தம்பி"

"என்ன அவருக்கு?"

"எதையோ உண்டு சீரணமாகவில்லை."

"பக்கத்தில் யார்?"

"மருத்துவர். அவர் பக்கத்தில் இருப்பது பணிப்பெண். பின் கட்டில் இருப்பது பசு. வசந்தகுமாரன் என்று யாரும் இங்கு வரவில்லை."

மருத்துவர் கணேசபட்டரை வினோதமாகப் பார்க்க அவர் கண்களால் "சும்மா இரும்" என்று சைகை சொன்னார். வந்திருந்த அரசுக் காவலன் கணேசபட்டர் வழி மறித்து மூடியிருந்த கதவைத் தள்ளித் திறக்க முயற்சிக்க, "என்ன வேண்டும்?" என்றார் பட்டர்.

"உள்ளே வந்து சோதித்துப் பார்க்க வேண்டும். அரசு காவலன் கடமை இது. உமக்கு மறுக்க உரிமை இல்லை."

கணேசபட்டரைத் தள்ளிக்கொண்டு மருத்துவனிடத்தில் வந்து கீழே கிடந்த வசந்தகுமாரனை உற்றுப் பார்த்தான். "இவனுக்கு என்ன நோய்?" என்றான் காவலன்.

"முதுகிலே சிற்ற..." என்று துவங்கிய மருத்துவரைத் தடுத்து கணேசபட்டர், "முதுகிலே ஒருவிதமான மேக ரோகம் இவனுக்கு" என்றார்.

காவலன் மெல்ல மருத்துவரிடம் சென்று தன்மேலங்கியை நீக்கி, "பண்டிதரே, இது என்ன பாரும்" என்றான். பட்டர் பெருமூச்சுவிட்டார்.

வைத்தியர், "எத்தனை தினங்களாக இப்படி இருக்கிறது?"

"ஏறத்தாழ ஒரு திங்களாக."

"இதைச் சரியாக நோக்காமல் விட்டது தப்பு. இப்போதாவது காட்டினாயே? நியமித்த மாதருடன் தானே புலவி?"

"ஆம்."

"வாரத்துக்கிருமுறை?"

"ஆம்."

"உருக்குநெய், புளித்த தயிர் இவைகளைத் தவிர்ப்பது நன்று. அரை வயிறு உண்ண வேண்டும். கால் வயிறு உண்டபின் வென்னீர் உட்கொண்டு ஜீரணமாகாத பொருள்களை விலக்கினால் போதும். எட்டுத் தினங்களில் போய்விடும்" என்று அவன் நாடியைப் பட்டுத் துணியால் தொட்டுப் பார்த்தார். "காலை இல்லத்துக்கு வந்தால் சூரணம் தருகிறேன். அல்லங்காடிக்கருகே உள்ளது வீடு. நரசிம்ம மருத்துவ சிகாமணி நரசிம்ம பண்டிதர் என்றால் சிறாரும் வழி காட்டுவர்."

அரசு காவலன் தன் அங்கியை மீண்டும் அணிந்து தலைப்பாகையைச் சரிசெய்து கொண்டு அங்கே தெரிந்த உலோகக் கண்ணாடியில் ஒருமுறை தன்னைப் பார்த்துக் கொண்டு, "இனி நான் செல்கிறேன். வசந்தகுமாரன் வந்தால் செய்தி சொல்லும். என்ன ஒரு கழஞ்சு பொன் பரிசாகக் கிடைக்கும்" என்றான்.

மருத்துவரின் கண்கள் சற்று வரிந்தன.



"அவசியம்," என்றார் கணேசபட்டர்.

அவன் சென்றதும் பண்டிதர் "என்ன விந்தை ! இவன் தானே வசந்தகுமாரன்."

"பேசாமல் இரும்," என்று அவரைக் கடிந்து கொண்டு வசந்தகுமாரனை மெல்ல எழுப்பி உட்கார வைத்தார். "உம் கடமை முடிந்து விட்டது. நீங்கள் இனிமேல் தங்கள் இல்லம் திரும்பலாம். பண்டிதரே நாளை சந்திப்போம்."

பண்டிதர் சென்றதும், "குமாரனே, எப்படி இருக்கிறது உடல் நிலை?"

வசந்தகுமாரன் கண்ணைக் குறுக்கிக் கொண்டு "தோளில் தாங்கொணாத வலி."

"உயிர் தப்பித்தாய். நஞ்சம்பால் இறந்து போயிருப்பாய். வைத்தியர் தான் காப்பாற்றினார். என்ன நேர்ந்தது சொல், வசந்தகுமாரா?"

"ஆசானே..." வசந்தகுமாரன் தன் தோளை மற்றொரு புஜத்தால் தாங்கிக்கொண்டு, "மது இருக்குமா மோகதி?" என்றான் பணிப் பெண்ணிடம்.

"நான் மது அருந்துவதில்லை" என்றார் பட்டர்.

"அறிவேன். இல்லத்திற்கு வரும் என் போன்ற பாபாத்மாக்களுக்காக மது வைத்திருக்கக்கூடாதா ஆசானே?"

"நடந்தது என்ன சொல். சோழப் பேரரசின் காவலதிகாரிகள் அனைவரும் உன்னைத் தேடுகின்றனர்."

"நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை ஆசானே. யவனனைப் பதியிலார் தெருவுக்கு அழைத்துச் சென்றேன். அங்கிருந்து துவங்கியது வினை."

வசந்தகுமாரன் மெல்ல மெல்ல அதிக ஆசுவாசத்துடனும் பெருமூச்சுடனும் அந்த வினோத இரவில் நடந்ததை விரிவாக கணேசபட்டரிடம் சொன்னான்.

"குதிரைகளை ஓட்டிச் சென்றவர்கள் யார் என்பதைப் பார்க்க முடிந்ததா? ஒருவகையான படகு போன்ற தலைச் சீலை அணிந்திருந்தார்களா?"

"இருளில் தெரியவில்லை ஆசானே. அதைவிட வியப்புக் குரியது, அந்த இல்லத்தில் அவர்கள் தாழ்வாகப் பேசிக்

கொண்டிருந்தது. 'ஸ்ரீபலிக்குள் காரியம் முடிந்தாக வேண்டும்' என்றான் ஒருவன்."

"என்ன காரியம்?"

"அரச இலச்சினையைப் படியெடுக்கும்படி ஒருவனிடம் காசு கொடுத்தார்கள்."

"அவர்களை விளக்கொளியில் பார்த்தாயா?"

"பார்த்தேன். சேர நாட்டுக்காரர்கள் போலத் தெரிந்தார்கள். ஆசானே, ஏதோ நடக்கப்போகிறது எனத் தெரிகிறது."

"அந்த இல்லம் எங்கிருக்கிறது? சொல்ல முடியுமா?"

"இருளில் கவனிக்கவில்லை ஆசானே. மழைக்கு ஒதுங்கினேன்."

"குதிரைகளை நீ தான் திருடிவிட்டதாகச் சொல்கிறார். விடையில் அதிகாரியிடமிருந்து ஓலை வந்திருக்கிறது."

"இது என்ன விந்தை?"

"ம். இரு. என்னைக் கொஞ்சம் யோசிக்க விடு. உன்னை ஒரு கருவியாகப் பயன்படுத்தப் போகிறார்கள் என்று தோன்றுகிறது."

"யார்?"

"யாரென்று சொல்வதற்கு உனக்கு சோழப் பேரரசின் சரித்திரம் கொஞ்சம் தெரிய வேண்டும் குமாரா. ஆதித்த கரிகாலரைப் பற்றித் தெரியுமா உனக்கு?"

"அறிவேன். நம் சக்கரவர்த்தியின் மூத்த சகோதரர். நான்காமாண்டில் உயிர் துறந்தவர்."

"ஆம். அவர் கொல்லப்பட்டார். ரேவதாசக் கிரமவித்தன் என்கிற பெயரைக் கேட்டிருக்கிறாயா?"

"இல்லை."

"அவனுடைய நான்கு சகோதரர்களைப் பற்றியும் நீ அறிய வேண்டும். அப்போதுதான் நீ இன்று குதிரைகளை இழந்ததன் காரணம் புரியும்?" என்றார் கணேசபட்டர்.



"புதிராய்ப் பேசுகிறீர்கள்."

"வசந்தகுமாரா, இப்போது உன்னை நீ காப்பாற்றிக் கொள்வதுதான் முக்கியம். சில நாட்களுக்கு நீ கண்மறைவாக இருப்பது நல்லது. அறிந்தோ அறியாமலோ ஒரு பெரிய சதியின் ஒரு பகுதியைப் பார்த்துவிட்டாய். இனி அவர்கள் உன்னை விட மாட்டார்கள்."

"அவர்கள் என்பது யார் ஆசானே?"

"அதைத்தான் தேடிக் கொண்டிருக்கிறேன் வசந்தகுமாரா."

"ஆசானே, நீங்கள் சொல்வது ஏதும் விளங்கவில்லை."

"விளக்கமாகச் சொல்வதற்கு இது நேரமல்ல, மோகதி, வசந்தகுமாரனுக்கு ஒரு பட்டாடை கொடு. குமாரா இங்கிருந்து காவிரிக்கு வடகரையில் திருவேட்களம் என்கிற சிற்றூர் உள்ளது. மூங்கில் காடுகள் உள்ள பத்திரமான ஊர். நாரதர் பூசித்த தலம். பாசுபதேசுரர் நல்ல நாயகி இதற்கு ஒரு கடிகையில்..."

"ஆசானே, என்னை புகாரிலிருந்து துரத்துகிறீர்களா?"

"ஆம். ஒரு திங்களுக்கு கண் மறைவாக இருப்பது தான் நல்லது. அங்கே என் நெடுநாள் நண்பன் உலகநாதனும் அவன் மகள் அங்கமோகினியும் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஓலை தருகிறேன். விடிவதற்குள் புறப்படு. நான் உன்னை பிறகு சந்திக்கிறேன்" என்றார்.

வசந்தகுமாரன் தன் பயணத்துக்குச் சித்தமாகும்போது நரசிம்ம பண்டிதர் வீட்டின் கதவைத் தட்டினார்.



# 7

நரசிம்ம பண்டிதர் வைத்திய சிரோமணி மட்டும் இல்லை. ஏதாவது மடிப்புக்கு* வாய்ப்பென்றால் விடமாட்டார். வசந்த குமாரனை அந்த அரசுக் காவலன் தேடி வந்ததும், கணேசப்பட்டர் சைகையில் சும்மா இரும் என்று அவரிடம் சொல்ல, வசந்தகுமாரன் என்று யாரும் இல்லை என்று பொய் சொன்னதும் நரசிம்ம பண்டிதரின் மூலிகை நாசிக்கு புதிய மோப்பாக** இருந்தது. அந்தச் செய்தியை யாரிடமாவது சொல்லாவிட்டால் அவருக்குத் தலை வெடித்து விடும். அதனால் அல்லங்காடியில் தன் இல்லத்துக்குச் செல்லாமல் வில்வலன் என்பவன் இருந்த அரசப்பட்டோலைக்கு அதை சொல்லச் சென்று கதவைத் தட்டினார்.

* வம்பு
** மோப்பம்



"வாரும் பண்டிதரே! என்ன இந்த அர்த்தசாமத்தில்?" என்றான் வில்வலன்.

"வில்வலா, நம் பிரம்மதேயத்துக்காரர் கணேசபட்டரைத் தெரியுமல்லவா? அவர் ஒரு ராஜத் துரோகிக்குப் புகலிடம் அளித்திருக்கிறார். அரசு விடையில் அதிகாரியிடமிருந்து அவனைத் தேடி வந்தபோது - இந்த இளைஞன் பெயர் வசந்தகுமாரன் - அவன் நடுக்கூடத்தில் படுத்திருக்கிறான். நான்தான் அவனுக்கு வைத்தியம் செய்தேன். பட்டர் 'இவ்வாறு ஒருவன் இல்லை' எனச் சாதித்து அந்த மூடனை அனுப்பிவிட்டார்!"

"எந்த மூடனை? வைத்தியரே உமக்கு வைத்தியம் தேவை என எண்ணுகிறேன். சொல்வதைச் சற்று விளக்கமாகச் சொல்லும்."

வைத்தியர் மாலை மாட்டுச் சாணத்திலிருந்து ஓர் அபூர்வ குளிகை செய்வதிலிருந்து துவங்கி அவருக்கு அவசரமாக அழைப்பு வந்து வசந்தகுமாரன் சிற்றம்பால் தாக்கப்பட்டு நஞ்சை நீக்கியது ஆதியோடந்தமாகச் சொன்னார். வில்வலன் முகம் அப்போது சற்று வெளிறிப் போனது. "இந்தச் செய்தியை வேறு யாரிடமும் சொல்லவில்லையே இதுவரை?"

"இல்லை."

"கணேசபட்டரை நான் சந்தித்திருக்கிறேனா?"

"சந்தித்திருப்பாய். மிகவும் பிரதானமான பிரம்மதேய அதிகாரி. எல்லாருக்கும் உதவி செய்வார். இடங்கை வலங்கை வேறுபாடு பாராட்டாதவர். மிகவும் மரியாதைக்குரிய மகான். நாடி பிடிப்பது பற்றி என்னையே திருத்தும் அளவுக்கு ஞானம் உள்ளவர்."

"வசந்தகுமாரன்? விடலையாக ஓர் இளைஞன். கருத்த முடியும், நெருக்கமான புருவமும்?"

"ஆம். அவனேதான். பலகைபோல் மார்பு, தடந்தோள்."

"வைத்தியரே, நீர் சொல்வது உண்மையெனில் நான் தீவிரமாக இதைப்பற்றிச் செயல்பட வேண்டும், கற்பனை இல்லையே?"

"இப்போதுதான் அங்கிருந்து வருகிறேன். வில்வலா!"

"அவர்கள் சொல்வதெல்லாம் உண்மைதான்!"

"எவர்!"

எவர் என்று வில்வலன் சொல்லவில்லை. இருளாக இருந்த அறையை நோக்கித் தன் பத்தினியிடம் "நான் அரசகாரியமாகப்

புறப்பட்டுச் செல்கிறேன். வரும்வரை காத்திருக்க வேண்டாம் நீ உறங்கி விடு" என்று சொல்லி விட்டு வீட்டை விட்டு வெளியே வந்தான்.

"வில்வலா, நான் சொன்னதாகக் கணேசபட்டரிடம் சொல்லாதே. கோபித்துக் கொள்வார்."

"நான் இப்போது கணேசபட்டரிடம் செல்லவில்லை. புரவுவரித் திணைக்கள நாயகரைப் பார்க்கச் செல்கிறேன்."

"இந்நேரத்திலா?"

"ஆம். அவர்தான் சேண்மையில் உள்ள அதிகாரி. அவர் மூலம் தான் நாடு காவலதிகாரியை அணுக இயலும்."

"வில்வலா, ஏதாவது ஆபத்தா?"

"ஆம்., நரசிம்ம பண்டிதரே. இந்த நாட்டில் ஒரு சதி அமைப்பு உருவாகிக் கொண்டிருக்கிறது என வதந்தி."

"எதற்குச் சதி?"

அவன் சுற்றுமுற்றும் அச்சத்துடன் பார்த்து தாழ்ந்த குரலில் சொன்னான்.

"ஆதித்த கரிகாலரைக் கொன்றதுபோல் நம் சக்கரவர்த்தி யையும் கொல்லத் திட்டமிட்டிருக்கிறார்கள்."

"யார்?"

"பாண்டியர்களும் சேர மன்னர்களும் இணைந்திருக் கிறார்கள். நாம் எதற்கும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். யவனர் கொண்டு வந்த குதிரைகள் அனைத்தையும் காணவில்லை. மாயமாய் மறைந்திருக்கின்றன. அவைகளைக் களவாடியவர்கள் யார்? எதற்காக? நூறு குதிரைகளை மறைத்து வைக்க ஏற்ற இடம் எது?"

"கணேசபட்டருக்கு ஏதாவது ஆபத்தா இதில்?"

"அவர் இதனுடன் தொடர்பு கொண்டிருந்தால் ராஜத்துரோகக் குற்றம்தான்"

"அய்யவோ!" என்றார் நரசிம்ம பண்டிதர். "கணேசபட்டர் அப்படிப்பட்டவரல்ல வில்வலா."



"நீர் எல்லோரையும் நம்புகிறவர். இனி ஏதும் யோசிக்க வேண்டாம். நாளை அரசு அதிகாரியிடமிருந்து அழைப்பு வந்தால் நடந்து முடிந்த சம்பவங்களைப் பற்றித் தெளிவாகச் சொல்லும்."

நரசிம்ம பண்டிதர் மிகுந்த அச்சத்துடன் "வில்வலா, நான் உன்னிடம் வந்து சொன்னது ஒருவேளை தவறோ?"

"அதெல்லாம் ஆராய்ச்சி செய்வது முறையல்ல பண்டிதரே, வாரும் என்னுடன்."

அதே சமயத்தில் வசந்தகுமாரன் திருவேட்களம் செல்வதற்கு நாவலூர் செல்லும் பாதை பிரியும் இடத்தில் நின்று கொண்டிருந்தான். திருவேட்களம் எங்கிருக்கிறது, எத்தனை தூரமிருக்கிறது என்றும் சரவரத் தெரியவில்லை. யாரேனும் வண்டி கட்டிக்கொண்டு இந்த வழி செல்வார்களோ என்று ஒரு சுமை தாங்கிக் கல்லருகில் காத்திருந்தான். அவனுக்குக் குளிர் சுரமாக இருந்தது. கணேசபட்டரின் பணிப்பெண் மோகதி கொடுத்த பட்டாடையைப் போர்த்தியிருந்தாலும் நடுக்கிய சுரவேகம் இருந்தும் வசந்தகுமாரனுக்குப் புகாரைவிட்டு உடனே அகல வேண்டிய அவசியத்தையும், இப்போது கண்மறைவாக இருப்பது தான் நல்லது என்பதையும் பட்டர் அவனுக்கு திரும்பத் திரும்பச் சொல்லிவிட்டார். தூரத்தில் தீப்பந்தங்கள் தெரிந்து நடுங்கிக் கொண்டே அவனை நோக்கி வந்தன. லேசான முரசொலி கேட்டது. கொம்பொலியும் கேட்டது அவ்வப்போது. ஏதோ அரச பரிவாரம் என்பது தெளிவாயிற்று.

குமாரன் சாலையின் நடுவில் படுத்துக் கொண்டான். வெளிச்சம் அவனை அணுகும்போது "வீரபத்திரா, நிறுத்து பல்லக்கை. யாரோ கீழே கிடக்கிறார்கள்."

அவன் முகத்தில் வெளிச்சம் விழ வசந்தகுமாரன் எழுந்தான். "அய்யா, தாங்கள் எங்கே செல்கிறீர்கள்?"

"அடுத்த ஊருக்கு. விக்கரமேசுவரம் சென்று அங்கிருந்து பழையாறைக்கு. நீ யார்?"

"அய்யா, நான் வசந்தகுமாரன்" என்றவாறு தன் உடல் புழுதியைத் தட்டிக் கொண்டு, "நான் ஒரு அரசகுமாரன். யவனனிடம் புகாருக்கு அசுவங்கள் வாங்க வந்திருந்தபோது கொள்ளைக்காரரால் தாக்கப்பட்டேன்."

"சோழநாட்டில் கொள்ளைக்காரரா? எந்த தேசத்து அரசகுமாரன் நீ?"

வசந்தகுமாரன் யோசிக்காமல், "தெற்கே காந்தளூர் என்று இருக்கிறது."

"சேர நாட்டைச் சேர்ந்ததா?"

"இல்லை. தனிப்பட்ட நாடு."

"உன்னைப் பார்த்தால் அரசகுமாரன் போல் தோன்றவில்லையே!"

"பின் எப்படித் தோன்றுகிறது?"

"இலச்சினை எங்கே? ஏதாவது அடையாளம் வைத்திருக்கிறாயா? எப்படி நம்புவது? நீயே கொள்ளைக் காரனில்லை என்று?"

இப்போது "வீரபத்திரா, ஏன் சிவிகை நின்று விட்டது?" என்று ஒரு சலங்கைக்குரல் கேட்டது.

அப்போதுதான் வசந்தகுமாரன், பல்லக்கின் உள்ளிருந்த லேசான சலனத்தை இரவின் தீப்பந்த வெளிச்சத்தின் சாகச நிழலில் அந்தப் பெண்ணுருவின் வெளி வரிவடிவத்தைக் கண்டான் அவள் சதங்கையோ அல்லால் ஏதோ உபரியான ஆபரணம் புலம்பியது கேட்டது.

"அது யார்?"

"இளவரசி அபிமதி"

"ஓ அவரா! என் தந்தையார் சொல்லியிருக்கிறார். தெரியுமே! அபிமதி நலமா? என்ன அழகான பெயர் அபிமதி!"

"பத்திரா, யார் இது?"

"இளவரசி, யாரோ காந்தளூர்..."

"என்ன பெயர் சொன்னாய்?"

"காந்தளூர் வசந்தகுமாரன். இளவரசி இதுவரை நான் சுரமும் உடல் நடுக்கமுமாக இருந்தேன். தங்கள் குரலைக் கேட்டதுமே உடல் நடுக்கம் நிவர்த்தியாகி விட்டது. சுரமும் குறைந்து விட்டது."

அந்தத் திரை திறந்தது.

இளவரசி அபிமதி, வசந்தகுமாரன் எதிர்பார்த்ததற்குச் சற்று அதிகமாகவே இளமையாக இருந்தாள். "ப்ருகதீசா" என்றாள்.



அந்தப் பெண் மெலிய கொடிபோல் இருந்தாள். முகத்தின் பெரும்பான்மையைக் கண்களே ஆக்கிரமிக்க, அதிகம் அணிகலன்கள் அணிந்திராவிடினும், மதாணி என்னும் பேராபரணமும் பூணாகக் கட்டும் சிலம்புரியும் காழ்மணிக் கோவையும் சவிமணிக்கோவையும் அணிந்திருந்தது அவள் மெல்லிய மார்பை மறைத்திருந்தன. செவியில் மஞ்சிகை அணிந்திருந்தாள். வசந்தகுமாரன் அந்தப் பேரழகிய பெண்ணின் முன் சுப்பரயோகத்தில் ஆழ்ந்ததுபோல் சற்று நேரம் பேசாமல் அந்தப் பெண்ணையே பார்த்துக் கொணடிருந்தவனை, அவள் ஒரே ஒரு முறை ஏறிட்டு, "வீரபத்திரா, இவருக்கு என்ன வேண்டும் கேள்?"

"எனக்கு வேண்டியது ஒரு பரி. இரவில் படுக்க ஓர் இடம். காலை வழிச்செலவுக்கு உங்கள் குரலில் இரண்டு மூன்று சொற்கள். அல்லது ஒரு புன்னகை."

வசந்தகுமாரன் அந்தக் குழுவினரை நோக்கினான். மூன்று பல்லக்குகளில் பெண்கள். உடன் நடப்பதற்கு வேலும் கம்பும் தாங்கிய காவலர்கள்.

இளவரசியின் சிவிகை மட்டும் முத்துவேய்ந்து மெத்தென்ற பஞ்சுப் பாயுடன் இருந்தது. எடுத்த பல்லக்கின் திரையை அவர்கள் மூடிட, வசந்தகுமாரன் உடன் நடந்து கொண்டே வந்தான்.

மாலையிலிருந்து எத்தனை இன்னல்கள் வந்தன எனக்கு! ஒரு யவனன் மரணத்துக்குக் காரணமானேன். குதிரைகளை இழந்தேன். நஞ்சு தோய் அம்பால் தாக்குண்டு தோளெல்லாம் எரிக்கப் பட்டேன். இறுதியில் இந்தக் காட்சிக்குத்தான் இத்தனை இன்னல்களும்; என்று தெரிந்ததும் சூரியனைக் கண்ட பனி இதழின் ஈரம்போல மறைந்துவிட்டன. "இளவரசி உங்களை ஒன்று கேட்க விருப்பம். இத்தனை அழகாக இருப்பதைத் தவிர வேறு என்ன உங்கள் பணி!" என்றான் வசந்தகுமாரன்.

"வீரபத்திரா, இவருக்கு ஒரு குதிரை கொடுத்து வரிசைக்குப் பின் வரச்சொல்."

வீரபத்திரன் முரட்டு மீசையும் வட்டுடையுமாக இருந்தவன் பெரிய கண்களால் அவனை அதட்டி, "நீர் எந்த தேயத்து இளவரசாக இருந்தாலும் இளவரசியின் உடன் நடப்பதற்கு அனுமதி இல்லை. பேசாமல் பின்னால் வாரும்" என்று அவன் புஜத்தைப் பிடிக்க-

"அய்யவோ வலி! வீரபத்திரரே, இப்போதுதான் மரணத்தின் பிடியிலிருந்து தப்பி வந்தேன். அய்யோ அய்யவோ" என்று

வசந்தகுமாரன் சாய்ந்து விழுந்து, பல்லக்கில் இளவரசியின் மடிமீது விழுந்தான்.

இளவரசி மெல்லிய குரலில் ஆனைச்சாத்தான் போல் கூச்சிட்டாள்.

"இறந்து விட்டானா?" என்றான் ஒருவன்.

வசந்தகுமாரனுக்கு இளவரசியின் மேல் வீசிய பரிமளம் இச்சிலிக்கிழங்கும் கஸ்தூரியும் கலந்ததாக இருந்த கிறக்கத்தில், தூரத்தில் அவசரமாக வந்த குதிரைக் குளம்பொலி கேட்கவில்லை



# 8

குளம்பொலி கேட்டதும் வசந்தகுமாரன் பதற்ற மடைந்து இளவரசி அபிமதியின் பார்வைப் புலத்திலிருந்து விலகிவிட்டான்.

யார் இவன் என்று அவள் வியப்புடனும் குறுகுறுப்புடனும் சிந்திக்க, பல்லக்கின் திரை மூடப்பட்டது. வெளியே "இவ்வழியே ஓர் இளைஞன் வந்தானா தெரிய வேண்டும்," என்று புதிய குரல் கேட்டது.

வசந்தகுமாரன் இருளின் போர்வையில் மெல்ல நழுவி பல்லக்கின் மறுபக்கத்துக்கு வந்தான்.

"ஆம்," என்று வீரபத்திரனின் குரல் பதிலளித்தது. "யாரோ காந்தளூர் இளவரசனாம்."

"இளவரசனா? அவன் இளவரசன் என்றால் நான் சோழச் சக்கரவர்த்தி! காந்தளூர் என்றா சொன்னான்?"

"ஆம்."

"அது சேர நாட்டில் அல்லவா இருக்கிறது. நிச்சயம் அவன் சதிகாரன் தான். சேர நாட்டிலிருந்து அனுப்பப் பட்ட வஞ்சகன் தான். ஐயமே இல்லை."

"இங்குதான் இருந்தான்."

"அவன் ஒரு துரோகி. யவன வணிகனைக் கொன்று தம் சதிக்குப் பரிசுகள் சேர்க்க உதவியிருக்கிறான். குதிரைகளைக் கடத்திச் சென்றவன். அரசு காவலனை வன்முறையில் தாக்குதல் செய்தவன். சிறைப்பிடிக்க வேண்டும். எங்கே எங்கே?"

"குரலைத் தாழ்த்திப் பேசும்," என்று வீரபத்திரன் பல்லக்கைக் காட்ட-

"பல்லக்கில் யார்?"

"இளவரசி அபிமதி"

"ஓ! மன்னிக்கவும் இளவரசி. இவ்வழியே ஒரு தேசத் துரோகி வந்திருக்கிறான். பெயர் வசந்தகுமாரன். உங்களிடம் தான் ஓர் அரசகுமாரன் என்று கைதவம்* பகர்ந்திருக்கிறான். அவன் அபாயன்."

இளவரசி பல்லக்கின் திரைச் சீலையை மறுபுறத்தில் விலக்கிப் பார்த்தபோது வசந்தகுமாரன் இருளில் தெரிந்தான். சொல்லாதே என்று கையால் வாய் பொத்தி ஒருமுறை அவளை வணங்கினான்.

இளவரசி, "அவன் இன்னேரம் காத தூரம் சென்றிருப்பான். நன்றாகத் தேடிப்பாருங்கள்," என்றாள் - வசந்தகுமாரனைப் பார்த்துக் கொண்டே.

குமாரன் மெல்லப் புன்னகைத்தான். நன்றியுடன் இருளில் மறைந்தான்.

"இளவரசி, என் பெயர் வில்வலன். தாங்கள் இரவில் பயணம் செய்வது நல்லதல்ல. புகாரில் அரசு அரண்மனையில் இரவு தாமதித்து விட்டுச் செல்வது உசிதம்."

"அங்கேதானே நாம் போகிறோம் வீரபத்திரா," என்றாள் இளவரசி. வசந்தகுமாரனைக் கண்களால் தேடிப் பார்த்தாள். காணவில்லை என்பதில் சற்றே ஏமாற்றம் ஏற்பட்டது.

அபிமதி, ராஜராஜ சக்கரவர்த்தியின் முதல் மனைவியான லோக மகாதேவியின் தங்கை மகள். பல ஆண்டுகளாக அபிமதிக்குத் தன்

* பொய்



தந்தையும் சக்கரவர்த்திதான் என்பது தெரியாது. குந்தவையுடன் திருமுக்கூடல் மண்டபத்தில் பார்த்த மாதேவடிகள்தான் சக்கரவர்த்தியின் மகள் என்று அவளுக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவள் அழகைக் கண்டு வியந்திருக்கிறாள்.

லோகமாதேவி அவளை அழைத்திருப்பதன் காரணமும் தெரியாது. பழையாறை அரண்மனைக்கு ஏன் போக வேண்டும் என்பதும் தெரியாது. ஏதோ சாளுக்கிய மன்னனைப் பற்றிய பேச்சு வந்தது. அபிமதி பெரும்பாலும் திருவிசலூரிலேயே தன் தாய்மாமனிடம் வளர்ந்தவள்.

கோயிலை அடுத்த பள்ளியில் பிரபாகரமீமாம்சமும் வ்யாகர்ணமும் ஒவ்வொரு மாணவர்க்கும் அரைக்கழஞ்சு என பெற்று கற்றுத்தந்த சிம்மாச்சாரி வாத்தியின் மூக்கை மட்டும் கவனித்தவள்.

மீமாம்சத்துக்கும் மனுசாத்திரத்துக்கும் வேற்றுமை தெரியாமல் பள்ளியிலிருந்து தப்பித்துத் தாய் மாமனிடம் வந்துவிட்டாள், உடல் நிலை சரியில்லை என்று.

அபிமதிக்கு விளையாட்டுக்கள் பிடிக்கும். அவளுடைய மாமன் எண்ணாயிரம் அல்லது திரிபுவனிக்கு அனுப்ப எண்ணம் கொண்டிருக்க, அபிமதி கோழிச் சண்டையை ரசிப்பதிலும், பந்தாடுவதிலும், இசைக் கருவிகளை மீட்டுவதிலும், நீர்விளையாட்டிலும், நாடகம் காணுதலிலும் ஈடுபாடுடையவளாக இருந்தாள்.

இப்போது அவளை அவசர காரியத்துக்காக அரண்மனைக்கு அழைத்திருக்கிறாள் குந்தவை அத்தை.

அபிமதிக்கு வசந்தகுமாரனை நினைத்து பயப்படத் தோன்றவில்லை. அது ஏன் என்பதும் புரியவில்லை.

முகத்தைப் பார்த்தால் துரோகி என்று சொல்ல முடியவில்லை.

துரோகியின் கண்களில் அத்தனை குறும்பு இருக்குமா என்ன? தன் மார்பில் அவன் மயக்கம் போல் சாய்ந்தாலும் வேண்டுமென்றே செய்திருக்கிறான் என்று தோன்றியது. நான் என்ன அத்தனை அழகா? என்ன சொன்னான், 'வழிச் செலவுக்கு ஒரு புன்னகை!'

அபிமதி புன்னகைத்தாள். வெளியே வீரபத்திரன் அந்த வில்வலனிடம் வழி கேட்டுக்கொண்டிருந்தான். இரவு தாமதிப்பதுதான் உத்தமம்.

தப்பித்துச் சென்ற வசந்தகுமாரன் சற்று தூரம் சென்றதும் நின்றான்.

வசந்தகுமாரன் எப்போதும் அபாயத்துடன் விளையாடு பவன். கணேசபட்டர் சொன்னதுபோல் அவன் ஊரை விட்டு விலகி குறிப்பிட்ட அமைதியான சிவாலயத்தில் போய்த் தங்குவதுதான் முறை என்று மனம் எச்சரித்தாலும் அபிமதி என்கிற பெயர் அவன் மனதை என்னவோ செய்தது.

மற்றும் ஒருமுறை போய்ப் பார்த்துவிட்டு, 'என் இருப்பிடத்தை சொல்லாமல் காப்பாற்றினாள். அதற்கு ஏதாவது காரணம் இருந்துதான் ஆகவேண்டும். அது என்ன என்று தெரிந்து கொள்ள ஆவலாக இருக்கிறது. இன்னேரம் காவலர்கள் போயிருப்பார்கள். மீண்டும் இளவரசியை ஒருமுறை சந்திக்கலாம். விடியும்வரை இருள் போர்வை இருக்கிறதே.'

வந்த வழியே திரும்பினான். இருளில் சரியாகப் பாதை தெரியவில்லை. தூரத்தில் மண்டபத்தின் பந்த வெளிச்சம் தெரிந்தது.

கொம்பொலியும் முரசொலியும் கேட்டதும் இளவரசி தான் என்று குத்துமதிப்பிட்டு அவ்வழியே சென்றான்.

குதிரைகளைக் கண்டதும் "வீரபத்திரரே!" என்று விளித்தான்.

"யாரது?"

"வசந்தகுமாரன்."

"ஓ, அப்படியா?"

"இளவரசியைச் சந்தித்து ஒரு வார்த்தை பேச விருப்பம்."

"பேசலாமே, வாருங்கள்."

"நன்றி, வீரபத்திரரே."

"வாரும் காந்தளூர் வசந்தகுமாரரே. இளவரசி அழைக்கிறார்," என்ற குரல் கேட்டு அந்த மண்டபத்தை அணுகினான்.

வசந்தகுமாரன் மேல் நால்வர் பாய்ந்து அவன் முகத்தை இறுக்க மூடினார்கள். வலுவான கயிற்றால் அவன் கைகளை முதுகில் வைத்துக் கட்டினார்கள்.



வில்வலன், "இளவரசியைச் சந்திக்க வந்தாயா? சதிகாரா, வஞ்சகா எப்படியெல்லாம் தப்பித்தாய் நீ?" என்று வசந்தகுமாரனை இழுத்துச் சென்றார்கள்.

"எங்கே அழைத்துச் செல்கிறீர்கள்? இயல்பாகவே வருவேனே. எதற்குக் கயிறும் முடிச்சும்?"

"உங்கள் மூதாதையரைச் சந்திக்க."

"என் மூதாதையர் இவ்வுலகில் இல்லையே."

"அவர்கள் உலகுக்கு அனுப்புவது தான் குறிக்கோள். குதிரைகள் எங்கே? சொல். யவனனை ஏன் கொன்றாய்? தெரிய வேண்டும். காந்தளூர் தான் சொந்த ஊரா?"

"இல்லையே. ஒரு பேச்சுக்கு காந்தளூர் இளவரசன் என்று சொன்னேன்."

"காந்தளூர் எங்கே உள்ளது தெரியுமா? தெற்கு தேசத்தில்."

வசந்தகுமாரனை கயிற்றால் பிணைத்து அந்த அசுவத்தோடு இணைத்து கடுகிச் செல்லுமாறு கால்களால் பணிக்க விழுந்தும் எழுந்தும் இழுத்துச் செல்லப்பட்டான்.

விடிந்தது.

கணேசபட்டர் எழுந்து காலைக் கடன்களை முடித்து விட்டு "திங்கள் முடிபொறுத்த பொன்மலை அருவி கருக மணி கொழித்த தோற்றம்போல," என்று பாடத் துவங்கிய போது அவருடைய சீடன் பெருந்தனக்காரரின் மகன் உத்தம நம்பி ஓடோடி வந்தான்.

"ஆசானே! ஆபத்து. நம் வசந்தகுமாரன் பிடிபட்டான். அவனைக் காவலர்கள் கட்டி இழுத்துச் செல்வதை பலர் கண்டார்கள். ஏதோ பெரிய குற்றம் செய்து விட்டானாம். சிரச்சேதம் செய்யப் போகிறார்களாம்."

கணேசபட்டர் தன் தலைப்பாகையை உடனே எடுத்து வந்து காலணியைப் பொருத்திக் கொண்டு தெருவில் இறங்கினார்.

"பட்டரே, அதிகாலையில் எங்கே புறப்பட்டீர்?" என்ற பிரம்மதேயக் குரல்களைப் புறக்கணித்து, அரசு புரவரித் திணைக்களத்தார் அலுவலகத்தை நோக்கி நடந்தார்.



# 9

கணேசபட்டருக்கு வசந்தகுமாரன் மேல் ஓர் ஈடுபாடு எப்போதும் உண்டு. அவன் செய்யும் பல காரியங்களில் உடன்பாடு இல்லையெனினும் குமாரன் மேல் வாத்ஸல்யம் நேசம், பரிவு, பாசம் எல்லாமே உண்டு. செய்யாத குற்றத்துக்குச் சிறைப்படப் போகிறவனை மீட்க வேண்டும் எனத் தன்னுடைய சாதுரிய நரம்புகளை ஒருமுறை நெற்றியில் தடவிக்கொண்டு பட்டுச் சால்வையைத் தோளில் சரி பார்த்துக் கொண்டு திணைக்களத்தார் இல்லத்தை நோக்கி நடந்தார்.

போகிற வழியில் "பட்டரே இத்தனை விரைவாக எங்கே செல்கிறீர்? பட்டரே நலம்தானே?" என்று பலர் வினவ, "நலந்தான் நீ," "நலந்தான் மதிசாரா," "நலந்தான் சகதேவ மல்லா," என்று எல்லோர் பெயரையும் குறிப்பிட்டுப் பதிலளித்துக் கொண்டே சென்றார்.



அந்த விரைவிலும் அவர் புன்னகை மாறாமல் நாமம் மறக்காமல் உத்தரமளித்தது அவர்மேல் மதிப்பையும் மரியாதையையும் அதிகரித்தது. இடங்கைக்காரர், வலங்கைக்காரர் என்று வித்தியாசம் பாராட்டாததால் மக்கள் அவரைக் கண்டு ஒதுங்காமல் அருகே வந்து நலம் விசாரித்தார்கள். இதனால் பல அரண்மனை அதிகாரிகளுக்கு அவர்மேல் அழுக்காறு உண்டு. 'பட்டர் வந்து கெட்டவர்கள்,' என்று ஒரு மக்கள் குழுவையே அவர்கள் பழித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆயுதசாலையையும் அறச்சாலையையும் கடந்து நாற்குலத்தார் இருக்கைக்கு வந்து அதன் இறுதியில் இருந்த திணைக்களத்தார் இல்லத்தை அடைந்தார். சிற்பநூற்படி இல்லத்தலைவனால் அமைக்கப்பட்ட அந்தப் பெரிய இல்லத்தில் அதிகாலையிலேயே பலர் காத்திருந்தனர். அனைவரும் புறவு வரி அதிகாரியைப் பார்க்கத்தான் காத்திருந்தார்கள். வரி செலுத்தவில்லையெனில் அரசு, நிலத்தை உடமையாக்கிவிடும் என்கிற அச்சம்.

கணேசபட்டர் சென்றபோது காத்திருந்தவர்கள் வழிவிட "கண்டிதேவர் உள்ளாரா மனையில்?" என்று வினவிக் கொண்டு அகத்தே சென்றார். "வாரும் கணேசபட்டரே, என்ன இத்துணைக் காலையில் வேகமாய் வந்திருக்கிறீர்?"

"கண்டியத்தேவரே, நான் விடையில் அதிகாரியைச் சந்திக்க வேண்டும்."

"அவர் தலைநகருக்குச் சென்றிருக்கிறார். என்ன வேண்டும்?"

"என் இனிய தோழனைக் காவலதிகாரிகள் சிறைப்படுத்தி அழைத்துச் சென்றிருக்கிறார்கள். அவன் குற்றமற்றவன். விடுவிக்க வேண்டும்."

"என்ன குற்றம்?"

"சதிக் குற்றமாம். சதி என்கிற சொல்லுக்கே அவனுக்குத் தெரிந்த ஒரே பொருள் மனைவி என்பதே. முதலில் அவனை எங்கே கொண்டு சென்றார்கள் என்பது தெரிய வேண்டும்."

"பட்டரே, நான் அரசுக்கு இறையும் காணமும் ஆறு பங்கு புரவு வரியும் கொள்பவன். பொழுது போக்குக்காக வெண்பாக்கள் எழுதுபவன். பட்டரே எதுகை இடறுகிறது. வண்டுக்கு வேறு பெயர்கள் சில சொல்லும்!"

கணேசபட்டர் ஆயாசத்துடன் "வரி, அளி, தேன், மா, மதுகரம், தும்பி, அரி, அறுகால், கழுகு, பிரமரம், சாரங்கம், ஞிமிறு, சுரும்பு

போதுமா? வசந்தகுமாரனை எங்கே வைத்திருக்கிறார்கள். கேட்டுச் சொல்லும்."

"பட்டரே, உமக்கு உதவாவிட்டால் எப்படி? கல்லும் காவிரியும் புல்லும் உள்ளவரை நீர் எமக்குச் செய்த உதவியை மறக்க இயலுமோ?" பட்டர் ஒருமுறை கண்டியத் தேவரை இக்கட்டிலிருந்து காப்பாற்றியிருக்கிறார். தத்தங்காணியாக விளைந்த தானியத்தை ஆறு கூறாக்காமல் பத்துக் கூறாக்கி அரசுக்குச் சேரவேண்டிய புறவரியைத் திசை திருப்பிய குற்றத்தினால் எல்லாவற்றையும் அரசுரிமையாக இழக்க இருந்தவர், பட்டர் சொன்னதால் ஒருமுறை மன்னிக்கப்பட்டார்.

"அதெல்லாம் இருக்கட்டும். வசந்தகுமாரனை எங்கே வைத்திருக்கிறார்கள்? இந்த விவரம் கேட்டுச் சொல்லும்."

"வசந்தகுமாரன், அதுதான் பெயரா?"

கணேசபட்டர் பெருமூச்சு விட்டார். "உம்மிடம் செய்தி கிடைக்காது. போய் வருகிறேன்."

"இரும்! இரும்! யாரங்கே! ஓர் ஓலை எடுத்து வா. இலேகினியை எடுத்து வா."

கண்டியத்தேவர் பனை ஓலையில் ஓலை தீட்டும் படையை வைத்து எழுதிக் கொடுத்து, "இதை நாளங்காடி கடந்து அறவோர் பள்ளி, பகக் கொட்டம் இவைகளைக் கடந்து முன்றிலில் சதுர்வத போகசங்கரர் இல்லம் என்று கேளும். அங்கே கனகமாலை என்கிற பெண்ணைக் கண்டு பேசினால்..."

"பேசினால்?"

"உமக்குத் தெரியாதா? இளவரசி அபிமதி அத்தாணி மண்டபத்தே தங்கியிருக்கிறார். பழையாறை செல்லும் வழியில் அவர் ஒரு வார்த்தை, ஏன் ஒரு கடைக்கண் பார்வை போதும், வேனில் குமாரனை விடுவிப்பதற்கு!"

"வேனில் குமாரனில்லை; வசந்தகுமாரன்."

"யாரோ சேர நாட்டு ஒற்றனைப் பிடித்திருப்பதாக அல்லவா சொன்னார்கள்."

"என் நண்பனுக்குச் சேரநாட்டு மங்கைகளைத் தவிர வேறு ஈடுபாடில்லை."

"இதுதான் வழி கணேசபட்டரே. இளவரசியைக் கனகமாலை மூலம் பார்க்க முடியும்."



"கனகமாலை என்பது?"

"என் தங்கை மகள்."

கணேசபட்டர் இவ்வாறு வசந்தகுமாரனைத் தேடிக் கொண்டு கனகமாலை என்கிற பெண்ணைச் சந்திக்கச் சென்றபோது வசந்தகுமாரன் புகாரை விட்டுப் பல காதங்கள் இழுத்துச் செல்லப்பட்டான். அவன் கண்களைக் கட்டி எருது வண்டியில் அழைத்துச் சென்றார்கள். உண்ணும் சோறு, பருகும் நீர் எதுவும் தரவில்லை. கரங்களைப் பின் புறத்தில் கட்டியிருந்தார்கள்.' "அய்யா, எங்கே அழைத்துச் செல்கிறீர்கள் என்று செப்பினால் உபகாரமாக இருக்கும்" என்றான் வசந்தகுமாரன்.

யாரும் பேசவில்லை.

"யாருமே காவலர் இல்லையா. நான் வண்டிக்காளைகளுடன் பேசிக்கொண்டிருக்கிறேனா?"

"பேசாமல் வா, தேசத்துரோகியே!"

"என் ஆசான் கணேசபட்டருக்கு ஒரு செய்தி அனுப்ப வேண்டும்."

"நீ அனுப்ப வேண்டிய செய்தி எம பட்டினத்துக்கு" என்று சொல்லிவிட்டு அவன் சிரித்தான்.

"தாங்கள் இப்போது செய்யும் காரியம் சிரிப்பா? ஏதோ முழவோசைபோல் இருக்கிறதே! தோழரே உமக்குக் கார்த்தவீரியன் கதை தெரியுமோ? சூரிய குலத்து ஹேஹய நாட்டு கிருதவீரியனுக்கும் சுநந்தைக்கும் பிறந்தவன். இவன் பிறந்த காலத்தில் கால் இல்லாதிருக்க, பன்னிரண்டு வயதுக்குமேல் தாத்தாத்ரேயரிடம் உபதேசம் பெற்று ஆயிரம் கைகளும் இரண்டு கால்களும் பெற்றனன். அதுபோல் உங்களுக்கும் தாத்தாத்ரேய உபதேசம் பெற்று எந்த உறுப்பு வேண்டுமானாலும் ஆயிரம் பெறலாம்" என்றான் வசந்தகுமாரன்.

"அப்படியா?" என்றான் வண்டிக்காரன்.

"நீர் என் கண்களைக் கட்டித்தானே இருக்கிறீர்? உங்கள் தோற்றத்தை என்னால் பார்க்க முடிகிறது."

"எப்படி?" என்றான் அவன், புல்லை உருவிக் கடித்துக் கொண்டே.

"வீரியன் குமாரர் பரசுராமர் இல்லாத காலத்தில் சமதக்கி முனிவரைக் கொலை புரிந்தனர்."

"நீ என்ன என்னவோ பகருகிறாய். எனக்கு விளங்குவதில்லை"

வசந்தகுமாரன், "என் கண்களைப் பாரும்" என்றான். "தெரிகிறதா?"

அவன் கைகளைப் பார்த்து, "ஏதும் தெரியவில்லை."

"சூரிய சக்கரம் தெரியவில்லை? வியப்பாக இருக்கிறதே தோழனே உன் பெயர் என்ன?"

"அங்குராமன்."

"என்ன அதிசயமான பெயர். இந்தப் பெயரில் உள்ளவர், அடுத்த சதயநாள் விழாவுக்குள் உங்களுக்கு பதவி ஏற்றம் வரப்போகிறது, அங்கு!"

"அப்படியா?"

"எங்கே கையைக் காட்டும்."

"கண்ணைக் கட்டியிருக்கிறதே, கையை எப்படிப் பார்ப்பாய்?"

"கண் கட்டை அவிழ்த்து விடும். அப்போதுதான்...."

"தப்பிக்க முயற்சிப்பாயா?"

"தோழரே, தப்பிப்பது என்பது எங்கள் குலவழக்கத்தில் இல்லை. என் ஆசான் கணேசபட்டர் சொல்லியிருக்கிறார். 'வசந்தகுமாரா, தப்பிக்க முயற்சி செய்யவே செய்யாதே. காவலர்கள் மிக்க நல்லவர்கள் என்று."

வசந்தகுமாரனின் கண்கட்டை விடுவிக்க, குமாரன் கண்ணைக் குறுக்கிக் கொண்டு சூழ்நிலையைப் பார்த்தான். 'விலைமகள் புத்திரர்களே, இன்னும் ஒரு கண்ணிமைக்குள் நான் இங்கிருந்து தப்பவில்லையெனின் என் பெயர் வசந்தகுமாரன் இல்லை' என்று எண்ணினான்.



## 10

களைத்த குதிரையின் மேல் களைத்த காவலன் பின்னால் வர, தன் கைகளைப் பிணைத்திருந்த கயிற்றின் முடிச்சும், வலுவில்லாதிருப்பதைப் பார்த்தான்.

வண்டிக்காரன் கையைக் காட்டியதில் "கணிதஸ் கந்தம், சங்கிதாஸ் கந்தம், காதகஸ்கந்தம் என்னும் மூவகை கணிப்புகளும் நான் அறிவேன். வடமொழியில் பார்க்கவம் காக்கியம் முதலிய பலவும் கற்றவன். எங்கே, அருகே வாரும்!"

அவன் சற்று இடையூறாக இருந்த வண்டிக் குள் அருகே வர, வசந்தகுமாரன் சட்டென்று, தன் கை முடிச்சை விடுவித்துக் கொண்டு விட்டான். சற்றும் எதிர்பாராத முறையில் கணநேரத்தில் வண்டிக்காரன் இடையில் செருகியிருந்த வாளை உருவிக்கொண்டு, அவன் கழுத்தின் மேல் வைத்து,

"வண்டியை நிறுத்து!" என்றான். இதனிடையே குதிரை மீது இரு காவலதிகாரி விழித்தெழுந்து, வசந்தகுமாரனைத் தாக்குமுன் கொம்பை எடுத்து பெரிதாக ஊதத் துவங்க, குமாரனை நானாபக்கமும் வீரர்கள் சூழ்ந்து கொண்டார்கள். "நாம் இரு மட்டும் தனியாகச் செல்லவில்லையா, எதற்கு இவ்வளவு பே என்று வசந்தகுமாரன் மீண்டும் வண்டியில் ஏறிக்கொண்டு, 'ஏதே முயன்று பார்த்தேன்' என முணுமுணுத்துக் கொண்டு வாளை கீழே போட்டு விட்டு, மீண்டும் கைகளைக் காட்டி, "கட்டுங்கள் என்றான்.

"மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும் இவனிடம் சேரநாட் ஒற்றன் இவன்."

"இப்படி ஒரு பட்டமா? எனக்கு இதுதான் தேவை."

"ஒற்றப்பதரே, தப்பிக்க இயலாது. நீ முயலுவது சோழ பேரரசின் படையின் ஒரு சேனாமுகம். அதாவது மூன்று பதாதிகள் இருக்கிறோம், தெரியுமா?"

"அப்படியா? யானை இருக்கிறதா?"

"யானை கொண்டு வரவில்லை. தேர், குதிரை, காவலாள் தப்பிக்கும் எண்ணத்தைக் கைவிடு."

"அப்படியானால் பொழுது போவதற்காக ஒரு பகடையாட்டம் ஆடலாமா?" என்றான்.

"இவனை கண்ணைக் கட்டுங்கள் முதலில். விழித்திருந்தால் குதிரையைக் கூட ஏமாற்றிவிடுவான்."

"எனக்குக் குதிரையேற்றம் தெரியும்"

"குதிரைகளைக் களவாடத் தெரியும் என்பது யாம் அறிவோம். ஒற்றனே, எங்கே அந்த யவனக் குதிரைகள்?"

"சொன்னால் விடுவிப்பீர்களா? ஒவ்வொன்றும் துடிப்புள்ள கரிய நிற மின்னல்கள்."

"எங்கே மறைத்து வைத்திருக்கிறாய்?"

"விடுவித்தால் சொல்கிறேனே."

"அச்சுதராசனே, இவன் பேச்சைக் கேட்காதே. இவன் தந்திர வித்தை தெரிந்தவன்."



அச்சுதராசன், வசந்தகுமாரன் அருகில் வந்து அவனை முகத்தில் அடிக்க, "எதற்காக என்னைத் தேவையின்றித் தாக்குகிறாய். இது கோழைத்தனம்," என்றான் வசந்தகுமாரன்.

இவர்கள் இளைப்பாற ஒரு மண்டபத்தின் அருகில் சென்றபோது, வசந்தகுமாரனை இரு காவலர்களை கண்காணிக்க வைத்தபோது, அச்சுதராசன்அருகே நிற்க, "அற்ப சங்கையா!" என்றான் வசந்தகுமாரன்.

காவலனை அவனுடன் அனுப்பியபோது, வசந்தகுமாரன் நீண்டநேரம் சிறுநீர் கழிப்பதில் செலவிட, பாடத் துவங்கினான்.

"குருவியும் குன்றும் குறும்பையும் வெறுத்த நின்
பெருமுறை மூழ்க என் உளத்தினில் தொடாமுன்"

"பாட்டு வேண்டாம்," என்றான் அச்சுதராசன்.

மண்டபம் பாழடைந்திருக்க, இருள் பொந்துகளுக்குள் வெளவால்கள் கிறீச்சிட அவ்வப்போது ஆந்தை கூப்பிட்டது.

"ஆந்ததைக் காதல் என்பது தெரியுமா? ஒருரை என்றால் சாவு சொல்லும். ஈருரை என்றால் எண்ணிய கருமம் கைகூடும்." ஆந்தை கிறீச், கிறீச்சென்று மும்முறை ஒலித்தது.

வசந்தகுமாரன், "ஆந்தையின் மூவுரை எமனின் மோகமாய் ஒரு மங்கை வந்து சேர்வாள் என்று பொருள். என் நிலையில் என்னை வந்து சேரக்கூடிய மங்கை எப்படி சாத்தியமென்பது தெரியவில்லை."

அடுத்தமுறை ஆந்தை கூப்பிட அவன் காத்திருந்தான். "கூப்பிடும்போது எண்ணிக்கையைச் சொன்னால் பலன் சொல்வேன்" என்றான். இடுப்புக் கச்சையை இறுக்கிக் கொண்டு திரும்புவதற்குள் வசந்தகுமாரனை ஒரு கரிய உருவம் அணுகி இருளில் இழுத்துக் கொள்ள, காவலன் எச்சரிக்கையாகி "அகம்பனா, வீரபத்திரா, நீலா," என்று கூக்குரலிட, வசந்தகுமாரன், தன்னை எவரோ இழுத்துச் செல்வதுபோல உணர்ந்தான்.

இழுத்துச் செல்பவர்கள் அவனுக்கு ஏதும் ஊறு விளைவிக்க விரும்பவில்லை என்பதும் தெரிந்தது. வசந்தகுமாரன் தனக்கு, இன்று காலையிலிருந்து நிகழும் நிகழ்ச்சிகள் அனைத்தும் தன்னை மீறித்தான் நிகழ்வதால், என்னதான் ஆகிறது என்று அவர்கள் இழுத்த வழியே சென்றான்.

இதற்குள் காவல் படையினர் அவனை மீட்க வந்து தாக்க இருளில் குழப்பமாக வாள் வீசும் ஓசையும், அவ்வப்போது பெருமூச்சும், வெட்டுப்பட்டதால் வலி ஓசையும், தீப்பந்த தீற்றல்களும் தான் தெரிந்தன. வசந்தகுமாரனை இறுக பிடித்திருந்த கரத்தின் அருகே மூச்சை உணர்ந்து, "ஏடா, யார் நீ என்னைக் காப்பாற்றுகிறாயோ, கொல்கிறாயோ?" என்றான்.

"வா, பேசாமல் வா!" என்று குரல் கேட்க, வசந்தகுமாரனின் புதிய எசமானர்கள் மற்றவர்களை வென்றிருக்க வேண்டும் என்பது தெரிந்தது. இருளில் அழைத்துச் செல்லப்பட்டான் என்பதைவிட விரைவாக இழுத்துச் செல்லப்பட்டான் என்பதே சாலது.

"என்ன ஆயிற்று, மீட்டாயா?"

"மீட்டு விட்டோம்."

'இந்தக்குரலை எங்கோ கேட்டிருக்கிறோமே!'

"உயிருடன்தான் இருக்கிறானா?"

"ஆம் பிரபு."

அந்தக் குரலை அங்கே எதிர்பார்க்கவில்லையாதலால், கணேசபட்டரின் கனமான குரலை அடையாளம் கண்டுகொள்ள குமாரனுக்கு நேரமாயிற்று.

"பட்டரே, தாங்களா? தாங்களா?"

"ஆம் குமாரா. உன்னை என்ன சொல்லி வழி அனுப்பி வைத்தேன்?"

"போகும் வழியில் அபிமதி என்கிற இளவரசியைச் சந்தித்தேன் பட்டரே. அவர்கள்தான் கொஞ்ச நேரமிருந்துவிட்டு செல் என்று வருந்தி..."

"எல்லாத் தருணங்களிலும் பொய் பேசுகிறாய். இளவரசி அபிமதியைச் சந்தித்துவிட்டுத்தான் வருகிறேன். அவர்கள், அரண்மனை இல்லத்தில் தங்கியுள்ளார்கள். உன்னை சந்தித்ததையும், தப்ப வைத்ததையும் சொன்னார். எப்படி மீண்டும் அகப்பட்டுக் கொண்டாய்?"

"அபிமதியை மீண்டும் சந்தித்து வந்தனம் சொல்லலாமென்று"

"திரும்ப வந்தாயா? குமாரா! உன்போன்ற சிதடன், முழுமான், மூடன் இருக்க முடியாது. நான் உன்னை திருவேட்களத்திற்குச் செல்லுமாறுதானே பணித்தேன்!"



"தெரியும், தெரியும் ஆசானே. அங்கே உலகநாதர் என்பவரைச் சந்திக்க, அங்கே போனபோது உலகநாதர் இல்லை."

"பொய். திருவேட்களத்திற்கு நீ செல்லவே இல்லை. வழியில் இளவரசியைக் கண்டதும் திசை திரும்பி விட்டாய்."

"அப்படி இல்லை... செய்த உதவிக்கு நன்றி கூறும் வகையில்..."

"குமாரா, நீ பேராபத்தில் இருக்கிறாய். உனக்கு ஏன் இந்த எளிய உண்மை புரியவில்லை? சோழப்பேரரசில் சதிக்குற்றம் பெரிய குற்றம். உன்னை சிரச்சேதம் செய்து விடுவார்கள். உன்னைச் சேர நாட்டு ஒற்றன் என்று நாமமிட்டுத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தக் குதிரைகள் எங்கே?"

"குதிரைகள்? எந்தக் குதிரைகள்?"

"யவனக் குதிரைகள்"

"பட்டரே, அது எப்பேர்ப்பட்ட சோகம் அறிவீரா... அந்தக் குதிரைகளைக் கவரத்தான் திரும்பவந்து குதிரைகளையும் பறிகொடுத்து.... சதிக் குற்றத்தையும் ஏற்று..."

"எத்தனை பேரைக் கொன்றாய்?"

"யாரையும் வேண்டுமென்று கொல்லவில்லை. தப்பிக்கும் முயற்சியில் யாருக்காவது எசகேடாக அடிபட்டு விழுந்திருக்கலாம். யாரையோ மருமத்தில் உதைத்தேன். இறந்து விட்டானா?"

"வசந்தகுமாரா, உன்னை என்ன செய்வது என்று எனக்கு வியப்பாக இருக்கிறது. உனக்கு அடைக்கலம் தந்ததால், நான் ராஜ குற்றத்திற்கு உடந்தையானவனாகிறேன்."

"பட்டரே, நான் துரோகம் செய்வேனோ? உமக்குத் தெரியாதா என்னை?"

"எனக்குத் தெரியும். மற்ற பேருக்கு? பெற்ற தாயையே ஏமாற்றும் பெண்ணாசை பிடித்த கயவனாகத் தானே உன்னைச் சொல்கிறார்கள்."

"உண்மையிலேயே நான் அப்படியா ஆசானே?"

கணேசபட்டர் குதிரைக் குளம்பொலி கேட்டு, அவன் வாயைப்பொத்தி தீப்பந்தங்களை அணைக்கச் சொன்னார். இருளில்

அவர் மூச்சின் கிராம்பின் மணம் மட்டும் தான் தெரிந்தது. அ ஆந்தை இன்னமும் கூப்பிட்டுக் கொண்டுதான் இருந்தது.

கொம்பொலி, சாலையில் அவர்களிருவரையும் தேடி கொண்டி ருக்கும் அரவம் கேட்டது. அது மறைந்த பின் கணேசபட்டர், "உன்னைக் காப்பாற்ற அந்த இளவரசியால் தா முடியும். குதிரைகள் எங்கே என்று சத்தியமாக உனக்கு தெரியாதா?"

"பட்டரே, என் தாயின் மேலும், தந்தையின் மேலும், அவ தங்கை மகள் மேலும் ஆணையாகச் சொல்கிறேன். குதிரை எங் என்று தெரிந்திருந்தால் இப்படி நடுக்காட்டில் அல்லாடுவேனா நாம் எங்கே இருக்கிறோம்.?"

"இப்போது நாவலூர் விக்ரமேசுவரம் பாதையில் மண்டபத்தில். காலை இருள் விலகியதும் நிச்சயம் அகப்படுவாய். தப்பிக்காமல் அரசு காவலதிகாரிகள் பின்வே சென்றிருந்தால், நான் அரண்மனைக்கு வந்து அதிகாரிகளிடம் மேலிடத்தில் பேசி உன்னை விடுவிக்க அரசரிடம சொல்லுமாறு செய்திருப்பேன். இப்போது வந்தது உன் குற்றத்தை மறைமுகமா ஒப்புக்கொண்டது போலாகி விட்டது. விடையில் அதிகாரிக் அரசு அதிகாரியிடமிருந்து ஓலை வந்து விட்டது. உன்னை உயிருடனோ தலை மட்டுமோ கொண்டு வருமாறு."

"காரணம்?"

"நீ சேர நாட்டு ஒற்றனாம். ஆதித்த கரிகாலரைக் கொன்றது போல் சக்கரவர்த்தியையும் கொல்ல ஒரு சதித் திட்டம் இருக்கிறதாக அரசின் அந்தரங்க அதிகாரிகளுக்கும் குந்தவைப் பிராட்டியாருக்கும் செய்தி வந்திருக்கிறதாம். யவனர்கள் கொண்டு வந்த நூறு குதிரைகள் மாயமாக மறைந்திருக்கின்றன. ஏதோ ஒ அச்சம் பரவியிருக்கிறது. ஏதோ ஒரு படையெடுப்பை எதி நோக்குகிறார்கள். அதில் பாண்டிய மன்னனும் சேரனுடன் சேர்ந்திருப்பதாகப் பேச்சு வருகிறது. இந்தச் சூழ்நிலையில் உன்போன்ற இளைஞன் சிறுபிள்ளைத்தனமான காரியம் செய்ய உன் தலைக்கே ஆபத்து வந்திருக்கிறது வசந்தகுமாரா."

வசந்தகுமாரன், "இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?"

"எப்படியும் கொஞ்ச காலம் தலைமறைவாக இருந்தே ஆகவேண்டும். முதலில் என் இல்லத்துக்குள் வந்தால் தெ



குதிருக்குள் மறைந்து கொள். இருட்டு விலகுவதற்குள் சென்று விடலாம்," என்றார்.

வசந்தகுமாரனும் பட்டரும் இவ்வாறு கணேசபட்டரின் பிரம்மதேய இல்லத்துக்குச் செல்லும்போது, நம் கதை இடம் பெயர்ந்து சோழப் பேரரசின் தஞ்சைத் தலைநகரில் ராஜ ராஜ சக்கரவர்த்தியின் அரண்மனைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது.

இளவரசி அபிமதி தன் அத்தையார் குந்தவைப் பிராட்டியாரால் வரவேற்கப்பட்டு, "அபிமதி, ஏன் இளைத்திருக்கிறாய்? சரியாக உணவு கொள்ளுவதில்லையா?"

"என்ன விந்தை? இப்போதெல்லாம் அதிகமாக உண்டு, அதிகமாக உறங்கிக்கொண்டிருக்கிறேன்."

"வரும் வழியில் ஓர் ஒற்றன் வழிமறித்தானாமே சேரநாட்டு ஒற்றன்?"

"இல்லை இறைவி, பெருமாட்டி."

"இப்படியெல்லாம் என்னை விளிக்காதே குந்தவை. அத்தை என்று சொல் போதும்."

"இல்லை தலைவி. தங்களைப் போன்ற அருந்தவப் பெண்களை..."

"அபிமதி மிகையாகப் பேசினால், நான் உன்னுடன் உரையாடேன்."

"அத்தை... அந்த ஒற்றன் என்ன ஆனான்?"

"அவனைப் பிடித்து விடுவார்கள். அதன்பின் அவன் துரோகம் உணரப்பட்டால் சிரச்சேதம்தான்," என்றார் குந்தவைப் பிராட்டியார்.

"ஆசானே, இறைவி! அவ்விளைஞனை எண்ணிப் பார்த்தால் வருத்தம் பெருகுகிறது. குற்றமற்றவன் போலத் தெரிகிறது."

"பெரிய தாயைச் சந்தித்தாயோ?"

"இனிமேல் தான்," என்றாள் அபிமதி.

"லோகமாதேவியை முதலில் காணவேண்டும்."

"ஏதோ கோவில் கட்டுவதாக அருண்மொழி சொல்லிக் கொண்டிருந்தான். அதோ அவர்கள் வந்துவிட்டார்கள்."

லோகமாதேவியும் சக்கரவர்த்தி மகள் மாதேவடிகளும் "குந்தவை, அபிமதி வந்தாள் என்பதை அறிந்து கொண்டேன். பாதையில் ஏதோ கொள்ளை நடந்ததாமே? உனக்கு ஏதும் ஆபத்து இல்லைதானே?" என அபிமதியை லோகமாதேவி அணைத்துக் கொண்டாள்.

லோகமாதேவி, அபிமதியின் பெரிய தாயாராக இருந்தாலும் மிகுந்த சிவபக்தியும், சிக்கலான அரசதிகார சூழ்நிலையில் ஒரு சக்கரவர்த்தியின் பதினைந்து பெண்டுகளில் பட்டத்தரசியாக வாழ்தலில் உள்ள இன்ப துன்பங்களும் அவள் நெற்றியில் கோடிட்டிருந்தன. பழுத்த சிவபக்தியைக் காட்டும் திருநீற்றுக் கோடும், அதில் துலங்கிய குங்குமமும், கலவைச் சேறும் காலேக வண்ணமும், கனகமும் வரைகலையும் வாசனைப் புழுகும், மயிர்ச்சாந்தும் பூகனையும் செஞ்சாந்தும் பட்டத்தரசி என்பதற்கு, நுதலணியும் தலைக்கோலமும், பாதகிண்கிணியும், கனையும் ஒலிக்க, அபிமதியை தழுவிக் கொண்டு கண்ணீர் விட்டாள்.

குந்தவை இருவரையும் அன்புடன் பார்த்துக் கொண்டிருக்க, "குந்தவை, சேதி கேட்டீரோ?" என்றாள்.

"கேட்டேன்."

"சேரநாட்டைச் சேர்ந்த ஒற்றன் இவளை வழி மறித்திருக்கிறான். என் கணவரின் உயிருக்கு ஊறு விளையுமா. அமரபுசங்கனும் பாஸ்கர ரவிவர்மனும் இணைந்து நம் மேல் படையெடுக்கப் போகிறார்களாம் போருக்கு. ஆதித்த கரிகாலரைக் கொன்றதுபோல். உம் இளையவரையும் கொல்ல அனுப்பப்பட்ட ஒற்றனாம்."

"சக்கரவர்த்தியைக் கொல்லமுடியுமா என்ன? கொன்றால் விதவைக்கோலம் பூணப் போகிறவர்கள் எத்தனை பேர் தெரியுமா அக்கா? பதினைந்து."

அபிமதி, தன் பெரிய தாயார் சொன்னதில் வெறுப்பு இருந்ததைக் கவனித்தாள்.



## 11

அபிமதிக்கு லோகமாதேவியின் முகத்தில் தெரிந்த ஆயாசம் வியப்பளித்தது. என்ன இது, சோழப் பேரரசின் பட்டத்தரசி! என்னதான் அரசருக்குப்பதினைந்து "பெண்டுகள்" உண்டென்றாலும் அதிகாரபூர்வமாகப் பட்டத்தரசி என்று மதிக்கப் படுகிறவருக்கு எப்படிக் குறையிருக்கலாம்?

ராஜராஜ சக்கரவர்த்தி துலாபாரம் புக்கபோது திருவிச நல்லூர் பெருமானுக்கு சர்க்கரைப் பொங்கல் செய்யவே நாற்பத்தைந்து பொற்காசுகள் தானமளித்தவர். திருவையாற்றில் கற்றளி எடுத்து உலகமகாதேவீச்சரம் என்று பெயரிட்ட தந்திசக்திவிடங்கியரான மகாதேவியாரா கலங்குகிறார்?

"குந்தவை அத்தை, ஏன் அரசியார் கலக்கமாக இருக்கிறார்கள்?"

"அருண்மொழியின் உயிருக்கு ஊறு விளையலாம் என் செய்தியில் கலக்கமுற்றிருக்கிறாயா? தேவி, ஏதும் நே அச்சப்படாதே." என்றார் குந்தவை.

"தாங்கள் செய்த தெய்வ காரியத்துக்கு அருண் மொழி தேவருக்கு ஏதாவது நிகழ்ந்தால் சிவபெருமான் நமக்கெல்ல மோசம் செய்ததாக ஆகும்" என்று ஆறுதல் சொன்ன அபிம "என்னை எதற்கு விரைவாக அரண்மனைக்கு வரும்ப அழைத்தீர்கள்?" என்று கேட்டாள்.

லோகமகாதேவி அவளை அன்புடன் தலையை வருடி கொடுத்து, "அபி, உன் வதுவைக்கு வயதாகி விட்டதல்லவா அதனால் சாளுக்கிய விமலாதித்தனை மணம் புரியுமா சக்கரவர்த்தி சொல்லிவிட்டார்."

அபிமதியின் முகம் சுருங்கியது. "சாளுக்கிய விமலாதித்தர அவர் மணமானவர் அல்லவா?"

"ஆம். சிறிய குந்தவையின் கணவர். அதனால் என்ன?"

"மீண்டும் மணம் முடிக்கப் போகிறாரா?"

"ஆம். இதெல்லாம் அரச பரம்பரையில் இயல்பே சக்ரவர்த்திக்கு எத்தனை பெண்டுகள் தெரியுமா? சோழ மாதேவி அபிமானவல்லி, பிருதிவிமாதேவி, இலாடமா தேவி, மீனவ மாதேவி, நக்கன்தல்லை அழகி, காடன் தொங்கி - எனக்கே கணக் மறந்து போயிற்று, குந்தவை அக்கா."

"இருந்தும் முதற்பெருந்ததேவி நீ தானே?"

அபிமதிக்கு இவர்கள் தன் திருமணத்தைப் பற்றி அவ்வள அசிரத்தையாகப் பேசுவது பிடிக்கவில்லை. "அத்தை, இதில் என் சம்மதம் என்று ஏதும் இல்லையா?"

குந்தவை அபிமதியை நோக்கி, "பெண்ணே, நம் போன்ற சோணாட்டு அரசகுலப் பெண்களுக்கு அந்த உரிமைகள் இல்லை சாளுக்கிய மன்னர்களோடு சமாதானமாகப் போவதற்கு இவ்வகை அரசியல் திருமணங்கள் தவிர்க்க இயலாதவை அபிப்பெண்ணே!

"நீ யாரையாவது மனதில் நினைத்திருக்கிறாயா, அபிமதி?" என்று தேவியார் கேட்டார்.

அபிமதிக்கு மனதில் வசந்தகுமாரனின் உருவம் ஒரு முறை தோன்றி மறைந்தது.



"சொல் அபிமதி"

"இல்லை! யாரையும் நான் எண்ணவில்லை."

"நீ சாளுக்கிய விமலாதித்தனைப் பார்த்திருக்கிறாயா? மிக்க எழிலுடையவன். உன்னை விரும்பிக் கேட்டிருக்கிறான். சாளுக்கியருடன் நட்பு இந்தக் காலத்தில் மிக முக்கியம். வடக்கே தொல்லையில்லாமல் இருந்தால் தான் தெற்கே பாண்டியர்களும் சேரர்களும் சேர்ந்து நம் பேரரசைக் கவிழக்கச் சதி செய்து கொண்டிருப்பதைத் தடுக்க முடியும். இன்று கூட ஓர் ஒற்றனை நீ வரும் வழியில் தான் பிடித்தார்களாம். அறிவாயோ?"

"பிடித்து நழுவ விட்டார்களாம்!" என்றார் குந்தவை. அபிமதியின் வயிரஉழுத்தை விரல்களால் நெருடிப் பார்த்து, "புதிதாகச் செய்து கொண்டாயா?" என்றார்.

"அவன் ஒற்றனில்லை" என்றாள் அபிமதி.

"எப்படிச் சொல்கிறாய்?"

"அவனைப் பார்த்தால் ஒற்றனைப் போல் இல்லை."

இரு மூத்த பெண்டிரும் இதைக் கேட்டதும் கை கொட்டிச் சிரித்தார்கள்.

"இருந்தும் எனக்கு இந்தக் கலியாணத்தில் சம்மதமில்லை என்று சொல்ல முடியுமா அத்தை?"

"சொல். அதற்கு உரிமை உள்ளது. ஆனால் திருமணத்தைத் தடுக்க முடியாது."

"விந்தையாக இருக்கிறது. என் வதுவைபற்றி என்னைக் கேட்க வேண்டாமா?"

"கேட்கிறோமே. அதற்குத்தானே பழையாறை சென்றவளை வழிமாற்றி இங்கு கொண்டு வந்திருக்கிறோம்."

அபிமதியின் உதடுகள் துடிக்க, "நான் பெரிய தந்தையைப் பார்க்க வேண்டும்."

"பார்க்கலாம். அதற்கென்ன!"

"என் தாயையும் கேட்டு முடிவு செய்ய வேண்டும்."

"உன்தாய், என் தங்கை. மறுக்கமாட்டாள்."

"என் தந்தை மறுப்பார்."

"உன் தந்தையா? உன் தந்தை யார் தெரியுமா?" இரு... அவளை ஆச்சரியமாகப் பார்த்து குறுநகை பரிமாறிக் கொண்ட... அபிமதிக்கு விளங்கவில்லை.

"அபிமதி, நீ பேசுவது பெண்ணுக்கு ஏற்ற பேச்சில்லை."

"என்னை சக்கரவர்த்தியைச் சந்திக்க விடுங்களேன்."

"அதற்கென்ன, மாலை மண்டலிகளின் கூட்டம் முடிந்த... சந்திக்கலாம்."

அபிமதி மிகவும் மன வருத்தத்துடன் தன் அத்தை குந்தவ... பிராட்டியுடன் செல்ல, அதே நேரத்தில் வசந்தகுமாரனு... கணேசபட்டரும் தஞ்சையின் வீரசோழப் பெரிய தெருவில் மெல்... நடந்து வந்து கொண்டிருந்தார்கள். வசந்தகுமாரன் மை தீட்டி ... பெண்ணைப் போல் வேஷம் மாறியிருந்தா... திருபுவனமாதேவியார், பெருநாளங்காடியில் மக்கட் தொகை... வசந்தகுமாரனின் விசித்திரமான தோற்றத்தை அவ்வப்போது சி... திரும்ப நோக்கினார்கள்.

"பட்டரே என்ன இது? ஆணல்லன் பெண்ணல்லன் அல்ல... அலியுமல்லன் என்கிறது போல்."

"இது தான் உன்னை அவர்கள் அதிகம் கவனிக்காம... இருக்கவழி. அருவெறுப்பில் அவரவர் சட்டென முகத்தை... திருப்பிக் கொள்கிறார்கள் பார். இல்லையேல் முகத்தைக் கூர்ந்... கவனித்தால் அடையாளம் கண்டுகொள்ளப் படுவாய்... தனங்களைச் சரியாக மூடிக்கொள்."

"இப்போது என்ன செய்ய வேண்டும்?"

"யவனக் குதிரைகளை கடத்திப் போனவர்கள் தஞ்சைக்கு... வணிகம் பேச வந்திருப்பார்கள். உன்னை ராஜகாவலர்கள்... கண்டுகொள்ளுமுன் திருமந்திர ஓலை நாயகத்தை நாம் சந்தித்தே... ஆக வேண்டும்."

"இந்த வேஷத்திலா?"

"வசந்தகுமாரா, வேஷத்தை எப்போது கலைப்பது என்று நான் சொல்கிறேன், வா. நீ இருக்கும் ஆபத்தில் உன்னைப்பற்றிய அங்க அடையாளங்கள் தலைநகரம் முழுவதும் பரவியிருக்கும் நிலையில் உன்னை அங்கங்கே தேடிக்கொண்டிருப்பார்கள்.



உன்னைத் தனியே விடவும் எனக்குத் தயக்கம். இளவரசியைக் காண புறப்பட்டு விடுவாய்."

"அபிமதி இங்கே வந்திருக்கிறதாக நாளங்காடியில் அறிந்து கொண்டேன்."

"இவ்வகையான செய்திகளையெல்லாம் தவறாமல் கேட்பாயே. அவளை அரண்மனையில் போய் சந்தித்து விட்டு அப்படியே நான்தான் சேர தேசத்து ஒற்றன். என்னைச் சிறைக்கு அழைத்துச் செல்லுங்கள் என்று சரணம் அடைந்து சிறைக்குத் திறவுகோல் வாங்கிவிட்டால் என்பாடு கலபமாகிறது" என்றார் கணேசபட்டர் கோபத்துடன்.

"எதற்குக் கோபம் ஆசானே! உங்கள் ஆணையை நான் எப்போதாவது மீறியிருக்கிறேனா?"

"எப்போதும் மீறியிருக்கிறாய். திருவேட்களத்திற்கு நேராகச் சென்றிருந்தால் இத்தனை சிக்கல்கள் ஏற்பட்டிருக்காது. அங்கமோகினி என்று உலகநாதனுக்கு ஒரு மகள் உண்டு என்றும் சொல்லிப் பார்த்தேன். இடையிலே ஓர் அபிமதியைப் பார்த்து மோகித்து விட்டாய்."

"மோகமில்லை பட்டரே! தூய காதல்!! 'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று." என்றான்.

"முப்பாலில் முதல் இருபால்களில் ஏதாவது மேற்கோள் தெரியுமா குமாரா உனக்கு?"

"வினைசெய்வார் தம் சுற்றம் வேண்டாதார் என்றாங்கு அனைவரையும் ஆராய்வது ஒற்று" என்றான் வசந்தகுமாரன்.

கணேசபட்டர் வியந்து "நன்று. உன் நிலைக்கு ஏற்ற குறள்."

கணேசபட்டர் முதலில் வசந்தகுமாரனை நகரத்தின் புறம்பாடிக்கு அழைத்துச் சென்றார். அங்கே கிழக்கு மேற்காக நீண் சாலைகளில் மெல்ல மெல்ல சாரம் அமைத்துக் கொண்டிருந்தார்கள். "பேரரசர் உலகமே வியக்குமளவுக்கு ஆலயம் ஒன்று கட்டப் போகிறாராம். தளிச்சேரிகளுக்கென்று இடம் ஒதுக்கப்பட்டுள்ளது."

சுந்தரசோழ விண்ணகர ஆதுர சாலையில் அரசவையில் திருமெய்க்காப்பாளர் ஒருவரைச் சந்திக்கச் சென்றார்.

வசந்தகுமாரன் அந்தப் பெரிய மருத்துவ இல்லத்தில் வந்துபோகும் மக்களை நோக்கிக் கொண்டே, அவர்கள் அவனைத்

திரும்ப நோக்கும்போது மெல்லப் புன்னகைத்து கண்[illegible] கொட்ட, அவர்கள் விரைவில் இடம்விட்டு நீங்கினர்.

இளங்கோன் என்னும் திருமெய்க்காப்பாளன் சில[illegible] பேசிக்கொண்டிருக்க, வசந்தகுமாரன் தன்னை ஒருவன் வெறித்[illegible] பார்ப்பதை உணர்ந்தான்.

"பட்டரே, அரசவையில் யாரும் குதிரைகளை விற்ப[illegible] வரவில்லை. அது மட்டும் எனக்குத் தெரியும். அந்தக் குதிரை[illegible] எங்கே என்றுதான் அனைவரும் தேடிக்கொண்டிருக்கிறார்கள். [illegible] ஒற்றன் ஒருவன் ஊடே புகுந்திருப்பது தெரிகிறது. எல்[illegible] காவலதிகாரிகளும் ஒற்றர்களும் எச்சரிக்கப்பட்டிருக்கின்ற[illegible] அவனை இன்று மாலைக்குள் பிடித்து விடுவார்கள். யார் இந்[illegible] பெண்? பெண்ணா, ஆணா இது?"

"இவன் ஒரு நபும்சகன். அரண்மனையில் ஆ[illegible] கலைஞர்களுடன் வந்திருக்கிறான். முதுகில் அவனுக்கு ஒரிடத்[illegible] காயம் இருக்கிறது. அதற்கான மருந்துக்கு அழைத்து வந்தே[illegible] இளங்கோன், எனக்கு இன்னொரு விவரம் தெரிய வேண்டும்."

கணேசபட்டர் தன் உடைகளில் பொதிந்திருந்த ஒரு பொரு[illegible] இளங்கோனுக்குக் காண்பிக்க, "இவ்வகை சிற்றம்பு[illegible] செய்கிறவர்கள் நம் அரண்மனையில் இருக்கிறார்களா?"

"புகாரில் தான் ஒருவன் செய்கிறான். அவன் தா[illegible] அரண்மனைக்கும் தருகிறான்."

"இவ்வகை சிற்றம்புகளைப் பயன்படுத்துபவர்கள் யார்?"

எய்படை வீரர்களும், எறிபடை வீரர்களும் பய[illegible] படுத்துவார்கள். ஆனால் இவ்வாறான விடம் தோய்ந்த சிற்றம்பு[illegible] பண்டித சோழத் தெரிந்த வில்லிகள் என்னும் தனிப்பட்[illegible] திறமைமிக்க படையினர் இருக்கின்றனர். அவர்க[illegible] பயன்படுத்துவது."

"அந்தப் படையின் தலைவன் யார்?"

"தண்டநாயகன் ஆதித்தியன் என்பவன் இருக்கிறான்."

"அவரைச் சந்திக்க வேண்டுமே."



"அதற்கு மாதண்ட நாயகனின் அனுமதி தேவைப்படும். உமக்கில்லாத அனுமதியா? கணேசபட்டரே, ஏன் இத்தனை விவரமாக உசாவுகிறீர்?"

"இளங்கோன், என் நண்பன் ஒருவனை தவறாக சதிக்குற்றம் செலுத்தி தேடிக் கொண்டிருக்கிறார்கள்?"

"வசந்தகுமாரன்? காந்தளூர் வசந்தகுமாரன்?"

"ஆம். அவன் காந்தளூர் இல்லை. அவன்மேல் பழி சுமத்துவதில் சிலருக்கு விருப்பம் தெரிகிறது."

கணேசபட்டர் இவ்வாறு பேசிக்கொண்டு, வசந்தகுமாரன் எங்கிருக்கிறான் என்று பார்த்தபோது அவனைக் காணவில்லை.



# 12

"இளங்கோன், என் நண்பன் எங்கே?" என்றார் கணேசபட்டர்.

"அந்தப் பேடியா? அவன் நீங்கள் என்னுடன் அளவளாவிக் கொண்டிருக்கையில் எதிர் மனைக்குச் சென்றான். அங்குள்ள பெண்களிடம் பேசிக் கொண்டிருந்தான்."

"கேடுகாலம்! எதிர்மனையில் யார் இருக்கிறார்கள்?"

"திருத்தப் பேரரையன் உத்தமநம்பி. அவரிடம் நடனம் பயில பதியிலார் சிலர் வந்திருக்கிறார்கள்."

"அரண்மனைப் பெண்டுகளோ?"

"இல்லை. குலப் பொறி வைத்த கோவிற் பெண்டுகள்தான். "ராஜராஜ விஜயம்" எனப்படும் நாடகம் நடத்த பந்தனை நல்லூரிலிருந்து



நட்டுவக்காணி பெறுகிறவர் ஒருவரும் வந்திருக்கிறார். பெயர் ஏதோ சொன்னார்களே..."

"விக்கிரமாதித்த ஆச்சாரியா? அவரை எனக்குத் தெரியும்" என்றார் கணேசபட்டர். "இளங்கோனே, என் நண்பன் அங்கே இருக்கிறானா என்பது தெரிய வேண்டும்."

இருவரும் எதிர் இல்லத்திற்குச் சென்று வினவியதில் "அந்தப் பேடி வேடம் கொண்ட குமாரன் தானே! அவன் அந்தப் பெண்களுடன் புறப்பட்டுச் சென்றுவிட்டானே!"

"எங்கே?" என்றார் கணேசபட்டர் பதைப்புடன்.

"அரண்மனைக்கு. அங்கே நடன அரங்கில் அவர்கள் பயிற்சிக்கு ஆச்சாரியாருடன் சென்றிருக்கிறார்கள்."

"நாசம் ! முழு நாசம்! பேரிழப்பு!" என்றார் கணேசபட்டர்.

"ஏன் பட்டரே?"

"எங்கே செல்லக்கூடாது என்று தடுத்து வேடம் மாற்றிப் பாடுபட்டேனோ அங்கேயே சென்றிருக்கிறான். இவனை எந்த வகையில் சேர்ப்பது? கிறுக்கன் என்றா, சிதடன் என்றா?"

"மாறுவேடமா? பட்டரே! எனக்கு ஓர் ஐயம்."

"ஆம். உம் ஐயம் உண்மைதான். அவன் தான் வசந்தகுமாரன்."

"காந்தளூர் வசந்தகுமாரன்?"

"காந்தளூர் காந்தளூர் என்று எரிச்சலைக் கிளப்பாதீர். காந்தளூருக்கும் அவனுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. ஏன் தான் சேரதேசத்துப் பெயரை சேர்த்துக் கொண்டான் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது."

"சேரநாட்டு ஒற்றன் என்பதாகத்தான் தேடிக் கொண்டிருக்கிறார்கள்."

"இளங்கோன், அவன் பெண் சபலமுள்ளவன்தான். சிதடன் தான். ஆனால் அவன் ஒற்றன் இல்லை. சோழப் பேரரசுக்குத் துரோகம் அவன் ஒருபொழுதும் செய்ய மாட்டான். விளையாட்டுப் புத்தியுள்ள இளைஞன். அவ்வளவே!"

"ஏதோ பட்டரே, எச்சரிக்கையாக இருப்பது நல்லது. சேர நாட்டு ஒற்றனைப் பலரும் தேடிக் கொண்டிருக்கிறார்கள். நான் இப்போது

தஞ்சை அரண்மனைக்குச் சென்றே ஆக வேண்டும். மாதண்ட நாயகன் மூலம் தண்ட நாயகன் ஆதித்தியனைச் சந்திக்க வேண்டும். இந்த விட அம்புகளின் ரகசியத்தைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும். அப்படியே வசந்தகுமாரனையும் தேட வேண்டும்."

"எங்கேயும் போகமாட்டான். இளவரசி அபிமதியின் அந்தப்புரத்துக்குத்தான் போவான். எனக்கு வசந்தகுமாரனைத் தெரியாதா என்ன?"

கணேசபட்டருக்கு பிரம்மதேயத்து முக்கிய அதிகாரி என்பதால் இலச்சினை பொருந்திய அனுமதி இருந்தது. வந்த காரணத்தை அறிந்து எளிதில் அனுமதித்தார்கள். சக்கரவர்த்தி ராஜராஜ சோழர் அரண்மனையில் இருந்ததால் பலவிதமான தடைகள் இருந்தன. பல வாயில்களில் அவர் காத்திருக்க வேண்டியிருந்தது. ஆனால் அரண்மனையில் உள்ள பெரும்பாலான அதிகாரிகளை பட்டருக்குத் தெரியும். அணிதிரல் பணியாளர்கள் பலரையும் தெரியும். குறிப்பாக பட்டோலை என்னும் எழுதப்படும் உத்தரவுகளை வைத்திருக்கும் ஆவணக்காரர் நந்தன் சாம்பன் என்பவர் பட்டருக்கு ஒருவகையில் உறவுக்காரர். அவரை விசாரித்துச் செய்தி அனுப்பியதில் அரண்மனையின் உள்மாளிகைக்கு அனுமதி கிடைத்தது.

எத்தனை முறை பார்த்திருந்தும் இந்த அரண்மனையின் கம்பீரம் கணேசபட்டரை வியப்பில் ஆழ்த்தத் தவறியதில்லை. மௌரியப் பேரரசான பாடலிபுத்திரத்தில் தான் இவ்வாறான அரண்மனைகள் இருந்தனவாம். பெண்பால் சேவையாளர்கள் பலர் இருந்தனர். அங்கங்கே சாமரம் வீசுவோரும், ஆடல் பாடலில் ஈடுபடுவோரும் பெண்களே இருந்தார்கள். அரசு விருந்துகளில் சில சமயம் மூவாயிரம் பெண்கள் முறைபோட்டு வந்து நடனமாடியிருக்கின்றனர். பட்டருக்கு வசந்தகுமாரன் நினைவு வந்து இந்தப் பிள்ளை எங்கிருக்கிறானோ என வயிற்றைக் கலக்கியது.

கணேசபட்டர் சக்கரவர்த்தியின் உட்சபையை அணுக, அணுக, அங்கங்கே வேடிக்கை காட்ட வந்திருக்கும் சித்திரக்குள்ளர்கள் நலம் விசாரித்தனர். அரசின் உள்ளத்தை வேடிக்கைப் பேச்சால் நெகிழ்ச்சியுறச் செய்ய நியமிக்கப்பட்டவர்கள்.

அரசனைச் சுற்றி திருமெய்க்காப்பும் வேளிர் படைஞரும் சூழ்ந்திருக்க, நடுநாயகமான அரியாசனத்தில் வீற்றிருந்த ராஜராஜ



சோழர், மும்முடிச் சோழல, இராச சிகாமணி, ஜனநாதன், நிகரிலிச் சோழன், இராசமார்த்தாண்டன், நித்யவினோதன் போன்ற பல பெயர்கள் படைத்த சக்கரவர்த்தி, சற்றும் கவலையின்றி புன்னகையுடன் உடன் கூட்டமாகப் பணிபுரியும் அமைச்சர்களின் பேச்சை கவனித்துக் கொண்டிருந்தவர், ஓரக்கண்ணில் கணேசபட்டர் வந்ததை நோக்க, அருகில் இருந்த மந்திர ஓலை நாயகப் பணியாளனிடம் மெல்லப் பேசினார். பலர் கணேசபட்டரின் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள்.

கணேசபட்டருக்குச் சக்கரவர்த்தி தன்னை கடைக் கண்ணால் கவனித்ததே பெருமையாக இருந்தது. சற்று நேரம் அந்த மந்திராலோசனையை கவனித்தார். "திரு மந்திர ஓலை எல்லாத் திசைகளிலும் அனுப்பப்பட்டு விட்டன பேரரசே. பாஸ்கர ரவிவர்மன், பாண்டியன் அமரபுசங்கனுக்குத் தூது அனுப்பியதாகவும், இரு மன்னர்களும் சந்தித்துப் பேசப் போவதாகவும் செய்தி வந்திருக்கிறது. புகார் வந்த யவனக் குதிரைகளைக் காணவில்லை. அவைகளை சேர நாட்டு ஒற்றன் காந்தளூர் வசந்தகுமாரன் என்பவன் கவர்ந்து சென்று மறைத்திருக்கிறான். அரச படை காவலதிகாரிகளைக் கொன்று தப்பித்திருக்கிறான். இளவரசி அபிமதி வரும் பாதையில் மறித்திருக்கிறான்."

"பெயரென்ன?"

"காந்தளூர் வசந்தகுமாரன்"

"காந்தளூர் என்பது...?"

"சேரநாட்டுத் துறைமுகம். அவனே, தான் காந்தளூரைச் சேர்ந்தவன் என்று ஒப்புக் கொண்டிருக்கிறான்."

"பிடித்துக் கொன்று தலையைக் கொய்து கோட்டை வாசலில் வைத்துவிடுங்கள்."

கணேசபட்டர் மிடற்றில் உமிழ்நீரை விழுங்கிக் கொண்டார். கணேசபட்டரைப் பேரரசர் பார்த்து, "உம்மை எனக்கு நினைவிருக்கிறது. நான் ஒருமுறை பிரம்மதேயத்துக்கு வந்திருந்தபோது ஒரு மிகச் சிக்கலான நடுவிருக்கை செய்து சங்கடத்திலிருந்து எம்மை மீட்டீர். வாரும். அமரும். உம் பெயர் என்ன?"

"கணேசபட்டர் பிரபோ!"

"பட்டரே, சேதி தெரியுமா? சோணாட்டில் சேர நாட்டு ஒற்றன் தன்னிச்சையாக உலவுகிறான். அவனைப் பிடித்த என் காவலதிகாரிகள் தப்ப விட்டிருக்கின்றனர். இவர்கள் எல்லம் உடன் கூடத்தினர். சுகேந்திரரே! பொழுது சாய்வதற்குள் அவனை என்முன் கொண்டு வந்து நிறுத்தும். அவன் தலையைக் கொய்து கோட்டை வாசலில் தொங்கவிடும்" என்றார்.

"மன்னரே, அவன் பெயர் வசந்தகுமாரன். அவன் ஒற்றனாக இருக்க முடியாது" என்றார் பட்டர்.

"எப்படிச் சொல்கிறீர்?" என்றார் சக்கரவர்த்தி, அவரைச் சுற்றியுள்ளவர்கள் மன்னர் முகத்தையும் கணேசபட்டரின் முகத்தையும் மாறிமாறி, "யார் இந்த பார்ப்பான்? என்ன தைரியம் இவனுக்கு" என்ற ரீதியில் பார்த்தார்கள்.

"மன்னர் மன்னவரே! தங்களுக்குப் பாண்டிய குலாசனி, கேரளாந்தகன் போன்ற பட்டப்பெயர்கள் எல்லாம் விரைவிலேயே வரவிருக்கின்றன. அத்தனை எதிரிகளையும் எதிர்த்து முறியடிக்கக்கூடிய வல்லமை பெற்றவர் தாங்கள். தங்களிடம் தவறான செய்தி கிடைத்திருப்பது தான் மனவருத்தமளிக்கிறது. அந்த வசந்தகுமாரன் என் நண்பன். சோழநாட்டின் மேல் மிகுந்த பற்றுடையவன், என்றும் ராஜத் துரோகம் செய்யமாட்டான்."

"யவனக் குதிரைகள் எங்கே பட்டரே?" என்றார் விடையில் அதிகாரி.

"சக்கரவர்த்தி! அதைக் கண்டு கொள்ளத்தான் சில வினோதமான சம்பவங்களைத் தங்களுக்கு விவரிக்க விரும்புகிறேன். புகார் துறைமுகத்தில் குதிரைகளை விற்றுக் காசாக்க ஒரு யவனன் வந்து என் நண்பனிடம் விலை பேசியிருக்கிறான். என் நண்பன் அவனைப் பதியிலார் மனைக்கு அழைத்துச் சென்றபோது, யவனன் விடம் தடவிய சிற்றம்பால் தாக்கப்பட்டு இறந்து போயிருக்கிறான். அந்தச் சிற்றம்பு ஒரு விசேடமான அம்பு. பண்டித சோழத்தெறிந்த வில்லிகள் படையினிடம் மட்டுமே உள்ளது. அதே சிற்றம்பு என் நண்பனையும் தாக்கியிருக்கிறது...

"யவனனைக் கொன்றது தங்கள் அரண்மனையிலேயே யாரோ ஒருவர் என்பது தான் என் ஐயப்பாடு."

சக்கரவர்த்தி தன் திருமெய்க்காப்பாளனை அழைத்து மாதண்ட நாயகனை அழைத்து வரச் சொன்னார்.



இவ்வாறு அவர் உத்தரவிட்ட சமயத்தில் இளவரசி அபிமதி தன் அறையில் உடைமாற்றிக்கொண்டு, பாதங்களில் படர்ந்திருந்த செம்பஞ்சை நீரிட்டு அழித்துக் கொண்டிருந்தாள். கண்களில் எதிர்காலத்தைப் பற்றிய கவலை படர்ந்திருந்தது. நாழிகை செல்வதற்காக வைத்திருக்கும் தாளத்தின் நீரில் அவள் முகம் பிரதிபலிக்க, அதைப் பார்த்து, "இந்தக் கல்யாணத்துக்கு நான் சம்மதிக்க மாட்டேன்" என்றாள். அவள் முகத்தின் அருகே மற்றொரு முகம் தெரிந்தது. இளவரசி திடுக்கிட்டுத் திரும்ப-

"நான் தான் வசந்தகுமாரன். அடையாளம் தெரியவில்லையா?"

"ஐயோ! இது என்ன வேடம்?"

"இளவரசி, உம்மைப் பார்த்து நன்றி சொல்ல வந்திருக்கிறேன்."

"எதற்கு நன்றி?"

"காப்பாற்றியதற்கு. என்ன பிரதியுபகாரமாக வேண்டும் சொல்லுங்கள். இந்தத் திரைச்சீலையை முழுவதும் கடித்து உண்ணவா? மேலிருந்து குதித்து ஓடிக் காட்டவா? சாளரத்திலிருந்து ஆழ அகழியில் குதித்துக் காட்டவா? காற்றை நிறுத்தவா? கடலைத் தடுக்கவா? இல்லை, அதோ தங்கள் கன்னம் போன்ற இந்த மாதுளையைப் பிளந்து உள்ளே முத்துக்களை ஒவ்வொன்றாக உதிர்த்து உதட்டருகே தரவா? சொல்லுங்கள் அபிமதி!"

"காந்தளூர் வசந்தகுமாரரே, உம்மை சோழப் பேரரசின் அத்தனை காவலதிகாரிகளும் தேடிக் கொண்டிருக்கிறார்கள்."

"அறிவேன். இளவரசியைச் சந்தித்துவிட்டு வந்து விடுகிறேன். அதன்பின் என் தலையைக் கொய்யலாம் என்று சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறேன்."

அபிமதி, இப்போது வேஷம் கலைந்த வசந்தகுமாரனைப் பார்த்தாள். அவன் மெல்லிய குறும்புக் கண்களும் இயல்பான புன்னகையும் துருதுருவென்று அலையும் பார்வையும் அவள் உள்ளத்தில் ஒத்தடம் கொடுத்தன.

"வசந்தகுமாரரே, எனக்கு ஓர் உதவிதான் வேண்டும்."

"என்ன தேவி?"

"என்னை இந்த அரண்மனையிலிருந்து கடத்திக் கொண்டு செல்லும்."



# 13

**வ**சந்தகுமாரன், இளவரசி அபிமதியின் விந்தையான விருப்பத்தைக் கேட்டு சிறிது நேரம் பிரமித்தான்.

'சேர நாட்டு ஒற்றன் என்ற அபாண்டமான பழிச்சொல்லுடன் இளவரசியைக் கடத்திச் சென்றான் என்கிற அவச் சொல்லும் சேர்ந்து பிடிபட்டால் என்ன தண்டனை கிடைக்கும்?'

"என்ன யோசிக்கிறீர்கள் வசந்தகுமாரரே?"

"இந்தக் காரியம் செய்தால் எனக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்று."

அவள் மௌனமாக இருக்க,

"இளவரசி, அப்படி என்ன வருத்தம் உங்களுக்கு? அரண்மனையில் அடிசில் சரியில்லையா? உப்புப் பாண்டம் குறைவா? அப்பம் விட்டு அகுல்லி போன்ற தின்பண்டங்கள் செய்வதில்லையா? இல்லை, மனச் சோர்வா?"



"எனக்குச் சுதந்திரம் இல்லை, அரசவாழ்க்கையில்."

வசந்தகுமாரன் கைகளை பெண்பிள்ளைபோல் கொட்டி, "விந்தை! அருச்சுனன் கண்ணனை விசுவரூபத்தில் பார்த்துச் சொன்னதுபோல் விந்தையிலும் விந்தை!"

"குமாரரே, எனக்குச் சிவிகையில் சென்று அலுத்து விட்டது. பாலும் தேனும் ஆதிரமும் நவநீதமும் கசந்து விட்டன. இசைப்பாடல்களில் உருட்டு வண்ணமும் முடுகு வண்ணமும், பீலிக்குஞ்சுக் குடையும், நாளும் யாழ் நரம்பின் ஓசையும், இசைக்குழுவின் புலம்பலும், பாவைக்கூத்தும், அல்லியமும், எழுவகை நங்கைமார் ஆடும் துடியும் எனக்கு வெறுத்துப் போயின காந்தளூர் வசந்தகுமாரரே!"

"அய்யவோ! நான் காந்தளூரில்லை. சோழ நாட்டவன். பச்சைத் தமிழன்."

"நீர் எந்தஊராயிருப்பினும் சரி. இந்த ஊரிலிருந்து என்னை விடுவித்துச் செல்லும்."

"சென்றால் என்ன தருவீர்கள்?"

அபிமதி அவனை ஒருமுறை உற்றுப் பார்த்தாள். "என்ன தருவீர்?" என்றான் வசந்தகுமாரன்.

"என்ன கொள்வீர்?"

வசந்தகுமாரன் யோசிக்கும் வேளையில் இளவரசி அபிமதி தன் கைவிரலிலிருந்த ஒரு மோதிரத்தை கழற்றிக் கொடுத்தாள். "வழிச்செலவுக்கு."

"இதை வைத்துக்கொண்டு குதிரை ரோமம் கூட வாங்க முடியாது."

"வேறு என்ன வேண்டும் சொல்லும்?"

"முன் பணமாக ஒரு புன்னகை."

அபிமதி வாய்விட்டுச் சிரித்தாள்.

"இது ஒரு திங்களுக்குப் போதும். இளவரசி இங்கிருந்து..." சாளரத்தின் அருகில் சென்றான். வெளியே எட்டிப் பார்த்தான். அகழியில் பச்சையாக நீர் தெரிந்தது.

"முதலைகள் இருக்குமோ?" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாது. நான் இறங்கிப் பார்த்ததில்லை."

வசந்தகுமாரன் அவளை உற்றுப் பார்க்க ''பரிகாசமா?''

''எல்லாம் உங்களிடம் கற்ற எதிர்ப் பேச்சுத்தான்,'' என்றாள்.

அப்போது ஒரு தாதிப்பெண் உள்ளே வர, ''பெண்ணே உன் பெயர் என்ன?''

''இலக்கணை,'' என்றாள்.

''இளவரசி, ஏன் இவள் குரல் பாங்காக இல்லை?''

''இரவின் சீதளம் தான் காரணம். இலக்கணை ஒரு காரியம் செய். அரண்மனைக் குதிரைகளை எங்கே கட்டியிருக்கிறார்கள் என்று சங்கவதிக்குக் காட்டு,'' என்றான் வசந்தகுமாரன்.

''சங்கவதி யார்?''

''நான்தான். என்னைப் பார்த்தால் சங்கவதி போல் தோன்றவில்லையா?''

''நீ ஆணா பெண்ணா?''

''ஆணில்லை. பெண்ணில்லை. அலியுமில்லை.''

''பின் யார் நீ?''

''வீண் பேச்சு பேசாதே. ஆடற்குழுவுடன் வந்திருக்கிறான்.''

''எதற்கு குதிரைப் பந்தியைக் காட்ட வேண்டும்?''

''என் முகத்தில் ஒரு மரு உள்ளது. அதற்கு குதிரை மயிர் கட்ட வேண்டும் என்றான்,'' வசந்தகுமாரன்.

''என்னுடன் வா,'' என்று அந்தப் பெண் சொல்ல, வசந்தகுமாரன் அவளருகே வந்து, ''காஞ்சியா?'' என்றான் அவள் இடையில் இருந்த அணிகலனைத் தொட்டு.

''இல்லை, இதற்குப் பெயர் மேகலை. எழுகோவை. காஞ்சிக்கு எண்கோவை.''

''அப்படியா! இது என்ன?'' என்று அவள் மார்பில் அணிந்திருந்த ஆரத்தைத் தொட்டுக் கேட்டான்.

''இதன் பெயர் கண்டிகை வசந்தகுமாரரே! உங்களுக்கு நகை மேல் தானே ஆர்வம்?'' என்றாள்.

''ஐயமின்றி அதுதான்.''



''பின் ஏன் தொட்டுத் தொட்டுப் பேசுகிறீர்?''

''தங்கமேனிக்கும் தங்க நகைக்கும் வேறுபாடு தெரியவில்லை இளவரசி. மன்னிக்கவேண்டும் இளவரசி. இது என்ன? இங்கிருந்து சாளரத்தின் வழியே குதிக்க இயலுமா தங்களால்? ஏறத்தாழ ஒன்றரை திருப்பாதக்கோல் இருக்கும் உயரம்.''

''குமாரரே! தாங்கள் சொன்னால் எங்கு வேண்டுமானாலும் விழுகிறேன். இந்த அரண்மனையிலிருந்தும் வேண்டாத விவாகத்திலிருந்தும் தப்பித்தால் போதும்.''

''சரி, குதிரை கொண்டு வருகிறேன்.''

அந்தப் பெண்ணின் பின்னால் வசந்தகுமாரன் செல்ல அப்போது அரசகாவலதிகாரி ஒருவர் வந்து ''இளவரசி மன்னிக்கவும் அனுமதி ஓலையின்றி அகத்தே வந்ததற்கு. அந்த சேர நாட்டுச் சதிகாரன் இங்கே வந்து அரண்மனையில் புகுந்திருக்கிறான் என்று செய்தி வந்தது.''

''அப்படியா!'' என்றாள் அபிமதி.

''எதற்கும் எச்சரிக்கையாக இருங்கள். அன்னியர்கள் வந்தால் அனுமதிக்க வேண்டாம்.''

''அப்படியே செய்கிறேன், தண்டநாயகரே!''

''நான் தண்டநாயகன் இல்லை. உபதண்டநாயகனின் திருமெய்க்காப்பு.''

''அப்படியே செய்கிறேன் உபதண்டநாயகனின் திருமெய்க் காப்பரே.''

அவன் ஓரிரு திரைச்சீலைகளைக் கத்தியால் குத்திக் குத்திப் பார்த்துவிட்டுச் சென்றான். இளவரசி அபிமதி தன் மார்பைப் பிடித்துக் கொண்டாள். வசந்தகுமாரன் வேண்டுமென்றே தொட்ட இடம் நினைவுக்கு வந்து நாணம் கன்னத்தில் செக்கரிட்டது.

என்ன ஒரு விந்தையான வாலிபன்.

அப்போது அவளை லோகமாதேவி பட்டத்தரசி அழைப்பதாகச் செய்திவர, ''அவள் சற்று நேரம் பொறுத்து வருகிறேன்'' என்றாள்.

''இளவரசி, கொஞ்சம் விரைவில் வரச் சொன்னார்கள் அரசியார்.''

''பேரரசரும் வந்திருக்கிறார். உங்களுடன் பேச வேண்டுமாம்.''

''சரி வருகிறேன்,'' என்றாள். சாளரத்தின் வெளியே அவள் கண்கள் அலைந்தன. அவளுக்கு இப்போது சக்கரவர்த்தியைப் பார்க்க விருப்பமில்லை. பார்த்தால் எப்படியாவது பேசி அவளை சாளுக்கிய மாமல்லனை மணம் செய்வது பற்றி சம்மதிக்க வைத்துவிடுவார்.

வசந்தகுமாரன் இதனிடையே குதிரைச் சாலைக்குச் சென்று அங்கே இருந்தவரின் காணி விவரங்களைப் பற்றி வினவினான். அங்கே மிக வாளிப்பான குதிரைகள் பல கட்டியிருந்தன. அரசர்க்குரிய பரிகள். இவை வாழை மடலைப்போல் செவியுடையதாய் நான்கு காலும் பிடரும் முகமும் முதுகும் முன்புறமும் வெண்ணிறமுடையதாய் எண்பத்திரண்டு விலை உயர்ந்த குதிரைகள்.

''அருகே செல்லக்கூடாது,'' என்று இளிவுமறவன் சொல்லுமுன் வசந்தகுமாரன் அவனை அருகே இருந்த குறுந்தடியால் மொட்டென்று தலையில் அடிக்க, அவன் திகைத்துப்போய் சரிய, வசந்தகுமாரன் அந்தப் பரியின் மேல் ஏறிக்கொண்டு ''மன்னிக்க வேண்டுகிறேன் என் நண்பனே! எனக்கு ஓர் அவசர காரியத்துக்குப் பரி தேவையாக இருக்கிறது,'' என்று சொன்னது அவனுக்கு மயக்கத்தில் கேட்கவில்லை.

வசந்தகுமாரன் அகழியை அடுத்த குறுகிய பகுதியில் சுவரோடு சுவராக குதிரையைச் செலுத்தினான். இச்சைக்கு ஏற்ப அந்தப் பரி மல்லகதி, மயூரகதியெல்லாம் காட்டியது. மனக்கணக்கில் இளவரசியின் சாளரத்தின் கீழ் கொண்டு வந்து நிறுத்தி, குதிரையின் கல்லணையிலிருந்த சங்கை எடுத்து ஊதினான்.

அபிமதி சாளரத்தில் தெரிந்தவள் சற்றும் தயங்காமல் கைப்பிடியைச் காலால் தாண்டி இந்தப் பக்கச் சுவரில் கட்டப்பட்ட பகுதியில் கால் வைத்து சரசரவென்று ஒரு கொடியைப் பிடித்துக்கொண்டு இறங்கிவிட்டாள். குதிரையின் உயரத்துக்குச் சமானமாக இருக்கும்போது வசந்தகுமாரன் அவளைத் தன்னுடன் அணைத்து வாங்கிக் கொண்டான். காலால் குதிரையை வெருட்ட, அது பாய்ச்சலுடன் சென்றது.

''கதவுகள் அனைத்தும் அடைத்திருக்குமா? கோட்டையின் பிரதான வாயில் எங்கே உள்ளது?''

''இடப்புறம். நாம் செல்லும் பாதைதான் அது.''



''கதவு திறக்குமா?''

''திறந்திருக்கும்.''

''திறந்திருக்கிறது,'' என்றான்.

கோட்டை வாசலில் காவலர்கள் அகழிக்கு, உண்டான மரப்பலகைப் பாலத்தை மெல்ல இயக்கிக் கொண்டிருந்தார்கள்.

''அபிமதி, நீங்கள் பயமற்றவர்தானே''

''ஏன்?''

''சற்று வேகமாகச் செல்லப் போகிறேன். என்னை இறுக்கமாகப் பிடித்துக் கொள்வது நல்லது.''

கோட்டை வாயில் காவலர்கள் சற்றும் எதிர்பாராத நிலையில், தீற்றல்போல் அவர்களை ஏதோ ஒன்று கடந்து சென்றது. அதன் புழுதி அமர்வதற்குள் கண்காட்சியிலிருந்து மறைந்துவிட்டது.

''சாம்பா, அது யார்?''

''யாரேனும் இலச்சினை அதிகாரியாகவிருக்கும். இவர்கள் தாம் இத்துணை வேகத்தில் கடந்து செல்வார்கள். காவலதிகாரி காவலர்களிடம் இலச்சினை காட்ட வேண்டும் என்கிற மரியாதை இல்லாதவர்கள். இவர்களையெல்லாம் யார் கேட்பது?''

''இருவர் சென்றதுபோல் தோன்றுதே?''

''ஒரு குதிரையின் மேலா?''

''ஆம். இருவரும் பெண்கள்''

''தோழப்பரே நேற்று கொஞ்சம் பிழி* அதிகம் கொண்டீரோ இரண்டு பெண்கள் குதிரைமேல் இவ்வாறு வல்லிய கதியில் சென்றார்கள் என்கிறீர்களோ?''

இப்போது மிக விரைவாக நான்கு காவல் அதிகாரிகள் குதிரை மீது வந்து, ''கோட்டை வாயில் வழியே யாரேனும் இலச்சினை காட்டாமல் சென்றார்களா?'' என வினவினர்.

* கள்

''ஆம் அய்யா. மிக வேகமாக''

''வெளியே தடுக்கவில்லை?''

''தடுக்க இயலவில்லை பிரபோ''

போகிறபோக்கில் காவலனை ''மூடனே'' என்று சாட்டையால் அடித்துவிட்டு அவர்கள் நால்வரும், ''துரத்து...'' என்று புறப்பட்டார்கள்.



## 14

இளவரசி அபிமதியை, நாடகமாட பொருட் பெண்டிர்களுடன் வந்த யாரோ ஒருவன் அல்லது ஒருத்தி கடத்திச் சென்றுவிட்ட செய்தியைப் பேரரசரிடம் சொல்வதற்குக் காவலதிகாரிகள் தயங்கினார்கள்.

முதலில் சக்கரவர்த்தியின் தமக்கை குந்தவைக்குத் தான் தெரிவித்தார்கள். குந்தவைப் பிராட்டியாருக்கு அபிமதியின்மேல் இரக்கம் ஏற்பட்டது. என்னதான் ராஜ வம்சத்தில் பிறந்தாலும் பெண்களை இரண்டாம் தரப் பிரஜைகளாகத்தான் அரண்மனையில் நடத்தி வருகிறார்கள் என்பது குந்தவைக்கு நன்றாகவே தெரியும்.

யாக்ஞவல்கியரின் மகள் மைத்ரேயி போலவோ, ஔவையார் போலவோ கல்வி கேள்விகளில் சிறந்த பெண்கள் அந்தக் காலத்தில் அரிதாகத்தான் இருந்தனர். மாறாக அரண்

மனையில் எராளமான பெண்கள் குற்றேவல் புரிந்தும் நடனமாடியும் பணிபுரிந்து வந்தனர். பேரரசருக்கு மெய்க்காப்புக்காக ஆயுதம் தாங்கிய முரட்டுப் பெண்கள் பயன்படுத்தப்பட்டனர். கட்டியம் கூறவும் நடனமாடவும் உணவு படைக்கவும் மூவாயிரம் நடனமாதர்களைச் சோழ மன்னர்கள் பயன்படுத்தி வந்தனர். உள்ளத்திற்கும் உடலுக்கும் அவர்கள் பணியாற்றும் இந்தச் சூழ்நிலையில் அரசகுலப் பெண்கள் அரசியலில் பகடைக்காய்கள் தான். ராஜராஜ சக்கரவர்த்தி, தன் பல்வேறு மக்களையும் இவ்வாறு பயன்படுத்த அரசர் தயங்கவே இல்லை.

சிறிய குந்தவையைச் சாளுக்கிய விமலாதித்த மன்னனுக்கு மணம் புரிந்து கொடுத்து சாளுக்கிய மன்னர்களுடன் சமாதானத்தை விலைக்கு வாங்கியிருந்தார். இதற்கு முக்கியமான காரணம், தெற்கேயிருந்து வந்த அபாயம் தான். சேரமன்னனும் பாண்டிய மன்னனும் ஒன்று சேர்ந்தால் நானா திசைகளிலும் போரிட ராஜராஜர் தயாராக இல்லை.

இப்போது சாளுக்கிய விமலாதித்தன் அபிமதியைப் பெண் கேட்கிறான். உடனே மணம் செய்து கொடுப்பதில் அருண் மொழிவர்மன் தயக்கம் காட்டாதது குந்தவைக்கும் பிடிக்கவில்லைதான்.

தன் மகளைக் கேட்டானோ இல்லை, அபிமதியின் சம்மதம் கேட்டானோ? எதுவுமே இல்லை. பொருட் பெண்டிருக்கும் அரசகுலப் பெண்டிருக்கும் என்ன வேறுபாடு?

''இது நிகழும் என்று ஒரு விதத்தில் நான் எதிர்பார்த்தேன். கடத்தியது யார் பெண்ணே?''

''தேவி, நடனமாட வந்திருந்த ஒரு நபும்சகன், இளவரசியைக் குதிரை மீதேற்றிக் கடத்திச் சென்றுவிட்டான்.''

''குதிரை மீதா? அப்படியானால் நபும்சகன் இல்லை, வேடந்தாங்கிய ஆண்மகன். எந்தப் பெண்ணுக்குக் குதிரையேற்றம் தெரியும் இந்நாட்டில்? திடகாத்திரனாக இருந்தானா?''

''ஆம், தேவி.''

''தெய்வமே சேரநாட்டு ஒற்றனால் கைப்பற்றப்பட்டாளா? அருண்மொழிக்கு இது தெரியுமா?'' என்று கேட்டாள்.



''இல்லை தேவி. இன்னும் சொல்லவில்லை. தயங்குகிறார்கள்.''

''சரி, நான் சொல்கிறேன்.''

அரண்மனையின் உள் மாளிகையில் மந்திராலோசனை செய்து கொண்டிருந்த பேரரசர் அருகே இருந்த கணேசபட்டரை நாசியின் தீர்க்கமும் தலைச்சீலையின் அமோகமும் அவர் முகத்தைத் தெளிவாக நினைவு கொள்ள வைத்தன. கணேசபட்டர் அருகே எறிபடை வீரர்களின் மாதண்டநாயகரும் தண்டநாயகன் ஆதித்யனும் அரசருக்கெதிரே பணிவுடன் நின்று கொண்டிருக்க, ''பேரரசே! மன்னர் மன்னவா! எங்கள் படையில் சிற்றம்புத் தேர்ச்சி பெற்றவர்கள் பண்டித சோழத் தெறிந்த வில்லிகள் பதினெண்மர். அவர்களுக்கு அளிக்கப்படும் சிற்றம்புகளின் எண்ணிக்கை பொற்காசுபோல் கணக்கிடப்பட்டுள்ளது.''

ராஜராஜசோழர் ''என்ன இது சிற்றம்பு?'' என்று வினவினார்.

''நஞ்சு தடவிய சிறிய அம்பு அரசே, முதுகில் தக்க இடத்தில் பாய்ந்த உடன் மரணம். எய்படை வீரர்களும் எறிபடை வீரர்களும்தான் பயன்படுத்துவார்கள். அவர்களில் ஒருவன் தான் யவனக்குதிரை வணிகனைக் கொன்றிருக்கிறான் அரசே. என் நண்பன் வசந்தகுமாரன் மீது அதே வகைச் சிற்றம்பு எய்யப்பட்டது.''

''பட்டரே, என்னதான் சொல்கிறீர்? விளக்கிச் சொல்லுமே!''

''அரசே என் நண்பன் வசந்தகுமாரன்மேல் சதிக்குற்றம் சாட்டுவதில் சிலருக்கு விருப்பமிருக்கிறது.''

தண்டநாயகன் ஆதித்யன், ''வசந்தகுமாரன்! வசந்தகுமாரன் சேரநாட்டு ஒற்றன். இந்தப் பெயரைக் கேட்டிருக்கிறேன்.''

''தப்பி ஓடிவிட்ட சேரநாட்டு ஒற்றன்'' என்றார் ஒரு திருமெய்க்காவல் அதிகாரி.

''அவன் ஒற்றனல்ல அரசே! ஒற்றர்கள் உலவுவதாக செய்தி பரப்பி அதன் நிழலில் அரசவையில் சிலர் பதுங்கிக் கொள்ள விரும்புகிறார்கள்.''

''எப்படிச் சொல்கிறீர் பட்டரே?'' என்றார் மெய்க்காவல் அதிகாரி.

''யவனக் குதிரை வணிகன் கொல்லப்பட்டான். அவ... குதிரைகள் களவு போய்விட்டன. இவைகளைத் தேடிச்சென்ற ... நண்பன் தாக்கப்பட்டு அவன்மேல் மொட்டம்பு பட்டிருக்கிறது.''

''மொட்டம்பு! நல்ல பெயர்'' என்றார் ராஜராஜ சோழர்.

''அரசே, இதில் தீவிரமான ஒரு சதி தெளிவாக... தெரியவில்லையா?''

''சதி என்ன சதி? எதற்குச் சதி?''

''தங்களைக் கொல்வதற்கு.''

சோழேந்திர சிம்மன் ராஜராஜ மகா சக்கரவர்த்தி மாமன்ன... புன்னகை புரிந்தார்.

''கணேசபட்டரே, நான் இப்போது சாவதாக இல்லை. சேர-பாண்டியர்களை வென்றுவிட்டு, சத்தியாஸ்ரயனை வென்றுவிட்டு, சிங்களம், கடாரம் போன்ற எத்தனை வெற்றிகள் மிகுதியுள்ளன. கோயில் ஒன்று கட்டி முடிக்க வேண்டும். மிகப்பெரிய கோயில். அதன் பின் உங்கள் ஊரில் ஒரு பௌத்த விகாரம். முந்நீர் பழந்தீவு பன்னீராயிரமும் கைப்பற்ற வேண்டும். சத்யாஸ்ரயனைத் தலை கொய்ய வேண்டும். நான் இறப்பதா... இல்லை பட்டரே!''

''அரசே, தங்களை எந்த அபாயமும் அணுகாது. அறிவேன் ... இருப்பினும் எச்சரிக்கையாக இருப்பது நன்று.''

ஆதித்யன் அப்போது மிகவும் பணிவுடன் வந்து, ''பட்டரே, உ... பிரம்மதேய விவகாரங்களைச் சரியாகப் பார்த்துக்கொள்ளும். பேரரசரைக் காப்பாற்ற நாங்கள் இருக்கிறோம். அன்னியர் யாரும் அரசர் அருகில் வரவே முடியாது. வசந்தகுமாரன் போன்ற ஒற்றர்களுடன் தங்கள் நட்புதான் எங்களைச் சந்தேகிக்க வைக்கிறது. அவன் தானே சேரநாட்டு ஒற்றன் என்று ஒப்புக் கொண்டிருப்பவன். துர்ப்பாக்கியம், அவன் தப்பித்துவிட்டான். அரசே! இரண்டு நாட்களுக்குள் அவனை இந்த மண்டபத்தில் கொண்டுவந்து நிறுத்துவோம். அப்போது விசாரணையை தொடரலாம்.''

குந்தவைப் பிராட்டி வந்திருப்பதாகத் தகவல் கிடைத்து... ''வரச்சொல்...'' என்றார் சோழச்சக்கரவர்த்தி.



''குந்தவை, இவர் பெயர் கணேசபட்டர். புகாருக்கருகே பிரம்மதேயக்காரர். சேரநாட்டு ஒற்றன் என்று சொல்லப்படும் வசந்தகுமாரன் இவர் நண்பனாம்.''

''அவன், ஒற்றனில்லை மாமன்னரே!''

''அருண்மொழி! சேரநாட்டு ஒற்றர்களைப் பற்றிய கவலையைச் சற்றுத் தள்ளிப்போட வேண்டும் நீ.''

''ஏன்?''

''அபிமதியைக் காணவில்லை. யாரோ கடத்திச் சென்று விட்டார்கள்.''

''என்ன...?'' என்றார் ராஜராஜசோழர், கோபத்துடன்.

''நடனமாட வந்த ஒருவன் அவளை குதிரைமீது வைத்து கோட்டை வாயில் வழியே கடத்திச் சென்று விட்டான்.''

ராஜராஜசோழர் எளிதில் கோபப்படுபவர் அல்ல. ஆனால், ''இப்படி நடக்கும் அரண்மனையில் என்ன பாதுகாப்பு இது?'' என்று அருந்திக் கொண்டிருந்த பொற்கிண்ணத்தை வீசி எறிந்து இருக்கையின் கைப்பிடியை முஷ்டியால் குத்தினார்.

''அரசே, கவலைப்பட வேண்டாம். இன்னும் இரு நாழிகைக்குள் கொண்டுவந்து விடுகிறோம்.''

''எல்லோரும் செத்து மடியுங்கள். குந்தவை, என்ன நடந்தது? விவரமாகச் சொல்.''

''அருண்மொழி, சாளுக்கிய மன்னனை மணம் செய்ய லோகமாதேவி அபிமதியிடம் சொன்னபோதே அவள் மிகவும் மனச்சோர்வாக இருந்தாள்.''

''சோர்வு ஏன்? சாளுக்கியன் விமலாதித்தன் ஆணழகன். அரசன்.''

''அவன் திருமணமானவன். உன் மகளுக்கே அருண்மொழி.''

''அதனால் என்ன?''

''அருண்மொழி, உனக்கு ஒரு பெண்ணின் மென்மனம் புரியாது. அத்தனை காவலில் அவளை எளிதில் யாரும் கடத்திச் செல்ல

முடியாது. அவளாகவே விருப்பப் பட்டுத்தான் புறப்பட்டிருக்க வேண்டும்.''

''நன்றி கெட்ட பெண்கள்.''

''அருண்மொழி, பெண்களைப் பற்றிப் பேசாதே. உனக்குப் பெண்கள் பகடைக்காய்கள்.''

''இப்போது என்ன ஆதித்யதண்ட நாயகரே!''

''அரசே உத்தரவு கொடுங்கள்.''

கணேசபட்டர், ''பிராட்டியாரே, விரிவாகச் சொல்ல இயலுமா, என்ன நிகழ்ந்தது என்று? எப்படி இருந்தான் கடத்திச் சென்றவன்? எங்கே இது நிகழ்ந்தது, கொஞ்சம் சொல்வீர்களா?''

''நபும்சக வடிவத்தில் ஒருவன் வந்து இளவரசி அபிமதியைக் கடத்திச் சென்று குதிரை மீதேறிப் பிரதான வாசல் வழியே தப்பிச் சென்று விட்டான். அபிமதி, லோக மாதேவியாரின் தங்கை மகள். திருவிசலூரிலிருந்து திருமண ஏற்பாட்டுக்கு அழைத்து வந்தோம்.''

''நபும்சகன் என்றா சொன்னீர்கள்?''

''ஆம், ஏன்?''

கணேசபட்டர் மிகவும் ஆயாசத்துடன் தலையை அசைத்து, 'இந்த வசந்தகுமாரனைப்போல மூடன் உண்டா? என்னவென்று சொல்வது? நான் அவனைக் காப்பாற்ற வாதாடிக் கொண்டிருக்கிறேன். இவன் பொறுப்பற்று அரண்மனையில் இளவரசியைக் கடத்தி வந்திருக்கிறான்' என்று தமக்குள் முணுமுணுத்துக் கொண்டார்.

''கவலைப்படாதீர்கள் தேவி. இரவுக்குள் கொண்டு வருகிறோம்.''

''இல்லையேல் தலைகள் உருளும்'' என்றார் மாமன்னர்.

''பட்டரே, எப்படிச் சொல்கிறீர், எனதுயிருக்கு ஆபத்து என்று?''

''சிற்றம்புத் தாக்குதல். அரசே! எனக்கு ஓர் உள்ளுணர்வு உண்டு. அது சொல்கிறது. சில சமயம் தொடர்பில்லாத சம்பவங்களைப் பொருத்திப் பார்த்தால் கிடைக்கும் முடிவுகள் அச்சமாக இருக்கின்றன.

அரசே கேளுங்கள். சோழ நாட்டுக்குக் குதிரை விற்க ஒரு யவன வணிகன் வருகிறான். என் நண்பனிடம் விலை பேசுகிறான்.



இருவரும் சேர்ந்து வாணிபம் செய்வதாக இருந்தார்கள். அப்போது தளிச்சேரிமனை ஒன்றில் அவன் அம்புபட்டு மாள்கிறான்.''

''அவன் உடல் எங்கே?''

''கடற்கரையில் புதைக்கப்பட்டது.''

''புதைத்தது யார்?''

''என் நண்பன் வசந்தகுமாரன்.''

''பட்டரே, என்ன சொல்கிறீர்?''

''தளிச்சேரிப் பெண்களின் அச்சத்தில் புதைத்துவிட்டான். பின்னர், என்னை நாடினான். புகலிடம் கொடுத்து அவனை திருவேட்களத்துக்கு அனுப்பினேன். காரணம் அவனுக்கு சேரநாட்டு ஒற்றன் என்ற குற்றச்சாட்டைச் செய்து சிறையில் அடைப்பதில் பலபேருக்கு ஆர்வமிருப்பதைக் கண்டேன் அரசே!''

''மேலே பகரும்.''

''வசந்தகுமாரன் கடற்கரைக்குச்சென்று பார்த்தபோது குதிரைகள் அனைத்தையும் சிலர் ஓட்டிச் செல்கிறார்கள். வசந்தகுமாரன் முதுகில் சிற்றம்பு பாய்கிறது. சிற்றம்பு, அரண்மனையில் மட்டும் கிடைக்கும். மொட்டம்பு நம் அருமை நண்பர் தண்டல் நாயகன் ஆதித்யரின் எறி படைவீரர்களுக்கு மட்டும் கொடுக்கப்படும். நஞ்சம்பு வசந்தகுமாரனையும் தீண்டியது.''

ஆதித்யன், ''அப்போது, அம்பு செய்தவனைப் பிடிக்க வேண்டும்.''

''இல்லை அரசே! அம்பு செய்தவன் மேல் குற்றமில்லை. எய்தவன் மேல்தான் குற்றம்.''

''என்ன சொல்கிறீர்?''

''அந்த அம்புகளுக்கு புகாரில் அவர்கள் நஞ்சு தோய்ப்பதில்லை. அரண்மனைக்கு வந்தபின் தான் நஞ்சு தடவப்படுகிறது அரசே!''

ராஜராஜ சக்கரவர்த்தியின் முகத்தில் கவலை ரேகை படிவதை கணேசபட்டரும், தண்டல் நாயகன் ஆதித்யனும் ஒரே சமயத்தில் கவனித்தார்கள்.



# 15

கணேசபட்டரை பேரரசர் ராஜராஜ சோழன் தனியே அழைத்துப் பேசினார். ''பட்டரே நீர் சொல்வதைப் பார்க்கின் அந்தச் சிற்றம்புகள் அரண்மனையிலிருந்துதான் சென்றிருக்கின்றனவோ என்கிற ஐயப்பாடு எழுகிறது. நீர் ஏன் அப்படிக் கருதுகிறீர் என்பதைத் தண்டல் நாயகன் ஆதித்யனிடம் கூறும். நான் இப்போது ஆவண அதிகாரிகளுடன் ஆலோசிக்க வேண்டியுள்ளது. சேர, பாண்டியர்களின் எல்லைகளைப் பற்றிய ஐயங்கள் பல உள்ளன. கன்னியாற்றின் கரைவரை நம் சோழப் பேரரசு பரவியுள்ளதென்பதைப் பாஸ்கரரவிவர்மன் மறுத்துப் பேசுகிறான். அவனுக்கு ஒரு தூதுவனை அனுப்பித் தெளிவாக்க வேண்டும்.''

''பேரரசே, போர் வருமா?'' என்றார் கணேசபட்டர்.



''தேவையென்றால் போரிடத்தான் வேண்டும் பட்டரே! அமர புசங்கனும் பாஸ்கரனும் ஒன்று சேர்ந்து என்னைத் தாக்கப் போகிறார்கள் என்பதைப் பற்றி எனக்கு பல செய்திகள் கிடைத்துவிட்டன. அசிரத்தையாக இருந்து விட்டால் சாம்ராஜ்யம் பறிபோய் விடும். மீண்டும் இரு நாழிகைகளில் தங்களைச் சந்திக்கிறேன்'' என்றார்.

தண்டல் நாயகன் ஆதித்யன், ''வாரும் பட்டரே! இல்லாததும் பொல்லாததும் சொல்லி அரசருக்கு மனக் கலக்கம் விளைவிக்கிறீர். என்ன ஆதாரம் உம்மிடம் உள்ளது? எங்கள் படையினரைப் பற்றி ஏதும் அறிவீரா? ஒவ்வொருவரும் முத்து மணிகளையும் ரத்தினங்களையும் சோதிப்பதுபோல் தெரிந்தெடுத்து, பயிற்சியளிக்கப்பட்டவர்கள், தெறித்த வில்லிகள். அந்தப் பயிற்சியில் முக்கிய அங்கம். அவர்களுக்குத் தரப்படும் நஞ்சு தோய் அம்புகளைக் கணக்கில் வைத்திருப்பது, போரல்லாத காலங்களில் பயன்படுத்தவே மாட்டோம். பயிற்சிக்காகக் கூட நஞ்சு தோய்ப்பதில்லை.''

கணேசபட்டர், '' நாம் நின்று கொண்டே பேச வேண்டுமா தண்டல்நாயகரே! அண்மையில் ஏதேனும் அறை உள்ளதா?''

''அதோ அந்த அறையில் போய் இரும். நான் இளவரசியைக் கடத்தியவனைப் பிடிக்க ஏற்பாடுகள் செய்துவிட்டு வருகிறேன்.''

''சரி'' என்று பட்டர் தண்டல்நாயகன் ஆதித்யன் அறைக்குள் நுழைந்தார். நீலப் பட்டில் விதானங்களும் மிகப்பெரிய பனை விசிறிகள் சாய்ந்த சுவர்களும், பட்டு மெத்தை இருக்கைகளும், தரைவிரிக் கம்பளங்களும், தூங்கா விளக்குகளும், கேடயங்களும் கொண்ட அவ்வறையில் பற்பல ஆவணங்கள் பட்டுத் துணியில் சுருட்டி மரப் பெட்டியின் மேல் வைத்திருக்க, கணேசபட்டர் இங்மங்கும்நோக்கினார். தூங்கா விளக்கின் அருகில் காற்றில் பறந்து ஒதுங்கியிருந்த ஒரு பனையோலை கீழே கிடந்தது. கணேசபட்டர் அதை எடுத்துப் படித்தார். ''பெரிய தேவர் எழுந்தருளும் நாளிலே திரு அபிஷேகத்துக்கு உரிய பிள்ளைகளில்...'' ஆளரவம் கேட்டு, அந்த ஓலையை எடுத்துத் தன் இடுப்புத் துணிக்குள் மறைத்துக்கொண்டார்.

''என்ன பட்டரே, என்ன இங்குமங்கும் பார்க்கிறீர்?''

''தண்டல்நாயகரே, ஏதேனும் தின்னப் பழங்கள் இருக்குமோ?''

''அதற்கென்ன! சோழப் பேரரசின் அரண்மனையில் இல்லாத பழங்களா? யாரங்கே?'' கையைத் தட்டினார்.

இருவரும் தரைமட்டத்தில் சற்று உயர்ந்த மேடைகளில், கம்பளங்களில் திண்டு சேர்ந்த இருக்கைகளில் அமர, ''பட்டரே, உங்கள் ஐயம் என்ன?''

''ஐயம் என்றில்லை. சூழ்நிலையைப் பார்க்கும்போது மொட்டம்புகள் அரண்மனையிலிருந்து வெளிவந்திருக்கலாமென்பது தெரிகிறது. உங்களைச் சில வினாக்கள் வினவலாமா?''

''தாராளமாக.''

''உங்கள் தெறித்த வில்லிகள் தனிப்படையினருக்கு இலச்சினைகள் கொடுத்திருக்கிறீர்களா?''

''ஆம். அவர்களுக்கு இலச்சினைகள் முக்கியம், அனுமதிக்கு. ஏன் கேட்கிறீர் பட்டரே?''

''என் நண்பன் வசந்தகுமாரன் யவனனின் குதிரைகளைத் தேடிச் சென்றபோது, புகாரில் ஒரு மனையில் சிலர் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டிருக்கிறான். திரிவுவனாங்குச என்று சிறப்புப் பெயர் பெற்று சந்திரன், விண்மீன், சாமரம் போன்ற அடையாளங்கள் பொறித்த இலச்சினை செய்து தருமாறு ஒருவனுக்குப் பணித்திருந்தார்கள். அவன் சேர நாட்டவன் போலத் தோன்றியது. இலச்சினை செய்து அதைக் காட்டி அரண்மனைக்கு உள்ளே புகுந்து கொள்ளவிருக்கிறார்கள் என்பதும், சதய நாள் விழாவுக்குள் இது நிகழலாம் என்றும் தெரிகிறது.''

தண்டல் நாயகர் சிந்தனை வசப்பட்டு, ''பட்டரே, இந்தச்செய்திக்கு மிக்க வந்தனம். நான் உடனே இலச்சினைகளைக் கணக்கெடுக்கச் சொல்கிறேன். கள்ள இலச்சினைகளைக் கண்டுகொள்வது சுலபம். உங்கள் செய்தியைப் பேரரசரிடம் சொல்ல வேண்டாம். இது நம் அளவில் தீரக்கூடிய விடயம்.''

''ஆதித்யரே! இந்த நாட்டில் அண்மையில் நிகழ்ந்த சம்பவங்கள் எல்லாமென்னை அச்சுறுத்துகின்றன.''

''வசந்தகுமாரன் உம் நண்பனா? காந்தளூர் வசந்தகுமாரன்?''

''காந்தளூர், அவன் ஊர் அல்ல. அவன் புகாரைச் சேர்ந்தவன்.''

''அவன் சேரநாட்டு ஒற்றன் என்பது உமக்குத் தெரியுமல்லவா?''



''இதைப் போன்ற மூடக் கற்பனை இருக்க முடியாது. வசந்தகுமாரன் கேளிக்கை விரும்பும் துடிப்பான இளைஞன். அவ்வளவே!''

''பட்டரே. நீர் எல்லோரையும் நம்பிவிடுவீர் போல. வசந்தகுமாரன் உம்மிடம் இவ்வாறு இலச்சினை பற்றிக் கூறியது பொய்யாக இருக்கலாமென்பதை எப்போதாவது யோசித்தீரா?''

''இல்லை. காரணம் வசந்தகுமாரன் பொய் சொல்லமாட்டான். அவன் விழுந்தது நிசம். முதுகில் சிற்றம்பு பட்டு காயமுற்றிருந்தது நிசம். புகார் மருத்துவர் நரசிம்ம பண்டிதரை விசாரித்துப் பாரும். நான்தான் அவனைக் காப்பாற்ற வைத்தேன்.''

''எனக்கு நம்பிக்கையில்லை. அந்த இளைஞன் ஒற்றன்தான். அவன் நட்பு உமக்கு நல்லதல்ல. நான் என் கடமையைச் செய்யும்போது யுவராஜாவிடம் தெரிவித்தே ஆகவேண்டும். ஒற்றன் என்று தெரிந்தால் பேரரசோ, யுவராஜாவோ தலைகொய்யத் தயங்கமாட்டார்கள். பட்டரே! வசந்தகுமாரன் சகவாசத்தை விடும். இளவரசி அபிமதி அரண்மனையிலிருந்து கடத்தப்பட்டு, அது வேறு சிக்கல்!''

''அது வேறு சிக்கலல்ல, ஆதித்யரே! அதுவும் இந்த வசந்தகுமாரன் செய்த காரியம்தான்'' என்று குரல் கேட்டுத் திரும்பி நோக்கியபோது குந்தவைப் பிராட்டியாரும், லோக மாதேவியும் உள்ளே நுழைய ''பட்டரே, என்ன உம் நண்பன் காரியங்கள் அனைத்தும் இவ்வாறிருக்கிறதே!''

ஆதித்ய தண்டல் நாயகன் குந்தவைப் பிராட்டியை வணங்கி, ''தேவி, தாங்கள் சொல்வது விந்தையாக இருக்கிறது.''

''முகவெட்டிகளிடமிருந்து செய்தி வந்தது. அபிமதியுடன் குதிரை மீது சென்றது ஓர் ஆண் மகனாம். பெண் வேடமணிந்து வந்தானாம். நடன மாந்தருடன் வந்திருந்தவர்களை விசாரித்ததில் பட்டரே, வசந்தகுமாரனைப் பெண் வேடத்தில் நீர்தான் அழைத்து வந்தீராம். விண்ணகர ஆதுர சாலையில் திருமெய்க்காப்பு ஒருவன் சொன்னான் என்பது எனக்கு வந்த செய்தி.''

''பிராட்டியார், அரண்மனையை விட்டு ஓர் அடி எடுத்து வைக்காமல் அத்தனை விவரங்களும் தெரிந்திருக்கிறார்கள் பாரும் பட்டரே!'' என்றான் தண்டல் நாயகன்.

''என்ன செய்வது! அருண்மொழியின் தமக்கை அரண்மனையில் இவ்வகைக் காரியங்களும் செய்ய வேண்டியுள்ளதே! பட்டரே உம் நண்பன் குற்றமற்றவன் என்று நீர் சொல்லும்போது, அவன் நடந்து கொள்ளும் விதம் அவனை அதீதமாகச் சந்தேகிக்க வைக்கிறது. உம் நண்பன் உம்மைத் தேடித்தான் வரவேண்டும். சாலைகள் எங்கும் செய்தி போய் அவர்கள் தஞ்சையை விட்டு அதிக தூரம் செல்லவியலாதவாறு அடைத்துவிட்டோம். உம் நண்பன் சரணடைவது உத்தமம்.''

''தேவி, நான் அவனிடம் சொல்வதில் எவ்விதத் தயக்கமும் இல்லை. அவனை நான் முதலில் கண்டுபிடிக்க வேண்டும்''

தேவி, ''என்னவோ அரசகுலத்துக்கு அவமானம் இது.''

''தேவி கவலையுறாதீர்கள். இன்னும் ஒரு தினத்துக்குள் பிடிபட்டு விடுவான். சோழப் பேரரசின் பரந்துவிரிந்த காவலதிகாரிகள் அவனைச் சத்தியமாகப் பிடித்துவிடுவார்கள்,'' என்றான் ஆதித்யன்.

வசந்தகுமாரன், அப்போது இருள்போர்வையில் இளவரசி அபிமதியுடன் கனவேகமாகப் புகார் பிரதானச் சாலையில் இல்லாமல் செந்தலை மார்க்கமாக இருந்த சிறு பாதையில் சென்று கொண்டிருந்தான். குதிரை துரித நடை தளர்ந்து களைத்துப் போயிருந்தது. ''வசந்தகுமாரரே, சற்று நிறுத்தும்,'' என்றாள் அபி.

ஒரு மண்டபத்தில் நிறுத்தினான். தான் இறங்கிக் கொண்டு அவளை இறக்கிக் கீழே விட்டான்.

அபிமதி அழுது கொண்டிருந்தாள்.

''இளவரசி, ஏன் அழுகை?''

''நான் அரண்மனைக்குத் திரும்பிச் செல்ல வேண்டும். தாயார் கவலைப்படுவார்கள்.''

''இளவரசி, உங்கள் தைரியம் தஞ்சை எல்லை வரை தானா?''

''குமாரரே, என் அன்னையையும், தந்தையையும், பெரிய தாயையும், அத்தையையும், செல்லப் பிராணிகளையும் விட்டு வந்ததில் மனம் சஞ்சலமுறுகிறது.''

''மனச் சஞ்சலத்திற்கு மருந்துகள் உள்ளன,'' என்றான் வசந்தகுமாரன். ''இதயத்தைத் தடவிக் கொடுத்தால் பாதி மனச் சஞ்சலம் சரியாகிவிடும். அதன் பின் மூச்சுப் பிடித்து... சீ... அனுமதி உண்டா?''



''இல்லை,'' என்றாள் தன் நாசியை உள்ளுறிஞ்சிக் கொண்டு.

''என்னை இக்கணம் அரண்மனைக்கு அழைத்துச் சென்றுவிடும்.''

''சற்றுமுன்தான் என்னுடன் உலகின் எல்லைக்கே வருவதாகச் சொன்னீர்கள். அத்தனை அரண்மனை சௌந்தரியங்களையும் விட்டுவிடுவதாகச் சொன்னீர்.''

''எனக்கு அச்சமாக இருக்கிறது வசந்தகுமாரரே! நான் தவறாக உம்முடன் வந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடும்!''

''என் மேல் காதல் இல்லையா? யான் நோக்கின் நிலம் நோக்கினீரே!''

''இல்லை. எனக்கு அச்சம் தான் மிச்சமிருக்கிறது,மனதில்.''

''விமலாதித்த சாளுக்கியனை மணம் செய்து கொள்ளச் சம்மதமா?''

''ஆம். அதுதான் விதியென்றால்!''

''வியர்க்க வியர்க்க குதிரையைச் களவாடி அரண்மனைக் காவலை மீறி இப்படி அழைத்துக் கொண்டு வந்தேனே, என் நிலையைச் சிந்திக்கிறீரா!''

''உம்மை அரண்மனையில் எதும் செய்ய மாட்டார்கள். நான் சொன்னால் சக்கரவர்த்தியே கேட்பார். வசந்தகுமாரரே, என்னை மீண்டும் அரண்மனைக்கு அழைத்துச் செல்லுங்கள், தயைகூர்ந்து.''

வசந்தகுமாரன், ''பெண்கள்!'' என்று பெருமூச்சிட்டான். ''பட்டர் சொல்வார். கொடிய விஷமுள்ள பாம்பையும் நம்பலாம். பெண்களை நம்பாதே'' என்று. உங்களை அரச காவலர் யாரிடமேனும் ஒப்படைத்துவிட்டுத் தப்பித்துச் செல்கிறேன்.''

''இல்லை, வசந்தகுமாரரே! உம்மை யாரும் எதும் செய்ய முடியாது. நான் ஆணையிட்டால் போதும். அவர்கள் நெருங்கமாட்டார்கள்.''

''சரி, என் விதிப்படியே செல்கிறேன்,'' என்று வசந்தகுமாரன் புறப்பட்டபோது அவனை நோக்கி ஓர் எதிபடை வீரன் எறிந்த வேலொன்று பாய்ந்து வந்தது.



# 16

**வ**சந்தகுமாரன் அந்த வேல் தன்மேல் தாக்காமல் தக்க சமயத்தில் பாய்ந்து விலக, கண்மூடித் திறப்பதற்குள் அவனைப் பலர் சூழ்ந்து கொண்டார்கள். அவர்கள் யாவரும் அரசின் சிறப்புப் படையினரான தெறித்த வில்லிகளின் சதய நாள் பிரிவைச் சேர்ந்தவர்கள். குறி தவற மாட்டார்கள். அனைவரும் வசந்தகுமாரனைச் சூழ்ந்து கொண்டு கழுத்தில் வாள் வைத்து மண்டபத்தின் மூலையில் வீழ்த்த அவர்களில் படைத்தலைவன். ''இளவரசி, அச்சம் வேண்டாம். இவனால் உமக்கு இனி அபாயமில்லை.''

அபிமதி, ''விடுங்கள். விட்டு விடுங்கள் அவரை'' என்று கூச்சலிட்டாள்.

வசந்தகுமாரன், ''ஒரு வியக்தியைப் பிடிக்க இத்துணை வீரர்களா? உங்களுக்கு வேறு சோலி இல்லையா?''



வசந்தகுமாரனை, அந்த வாக்கியத்தை முடிக்க விடாமல் முகத்தில் படைத்தலைவன் அடித்தான்.

அபிமதி, ''புடைக்காதீர்கள் அவரை, அழைத்தது நான் தான். அவர் எதுவும் குற்றம் செய்யவில்லை. இளவரசி ஆணையிடுகிறேன்.''

''இளவரசி தங்களுக்குத் தெரியாது. இவன் சேர நாட்டு ஒற்றன். காந்தளூரிலிருந்து குதிரை வாங்க வந்திருக்கிறான்.''

''அய்யா, என்னை முகத்தில் அடித்தவரே, உம் பெயர் தெரியவேண்டும்.''

''எதற்கடா ராஜத் துரோகி! குக்கனே!''

''நான் குக்கனெனில் நீர் ஞமலி, குரைமுகன், எகினம்.''

''அடேய்!'' என்று அவன் குமாரனை மீண்டும் அடிக்க, மூவர் அவனை வலியக் கட்டி மிகுதியாகவே இறுக்கிப் பிடித்து ஒரு குதிரை மீதேற்றுமுன் அவன் உடலெங்கும் சுற்றிப் பிணைத்தார்கள்.

''இளவரசி, தங்களைக் காப்பாற்றியதற்கு எனக்குக் கிட்டும் பரிசைப் பாருங்கள். தானைத் தலைவரே, இத்தனை மூர்க்கம் காட்டுகிறீர். என்னிடம் ஒரு தினம் தனியே அகப்படத்தான் போகிறீர். அதற்குத்தான் பெயர் கேட்டு வைத்தேன். தைரியமிருந்தால் சொல்லும்....'' என்பதற்குள் வசந்தகுமாரன் மீண்டும் வலுவான ஈட்டியின் பிற்பகுதியால் முகத்தில் குத்தப்பட்டு, ''போயின போயின இரண்டு மூன்று பற்கள் போயின,'' என்றான் வசந்தகுமாரன் வலியுடன்.

அபிமதி அதை தாளாமல் கண்ணீர் விட்டுக் கதறி, ''விடுங்கள். அவரை விடுங்கள். நான் இளவரசி ஆணையிடுகிறேன்.''

''மன்னிக்கவும் இளவரசி. இவனை விடுவிக்க எனக்கு அதிகாரம் இல்லை.''

''பேரரசரிடம் சொல்லி அனைவரையும் சிறைக்கு அனுப்புவேன். விடுதலை செய்யுங்கள். அவரை நான் தான் அழைத்து வந்தேன்.''

''இளவரசி. இவன் தங்களைக் கவர்ந்து வந்திருக்கிறான்.''

''இல்லை, இல்லை. நான்தான் இவரை அழைத்தேன்.''

''எப்படியும் ராஜசபையில் இதுபற்றிப் பேசலாம் இவன்.''

''வசந்தகுமாரரே, என்னை மன்னியுங்கள்,'' என்று குதிரை மேல் முரட்டுத்தனமாக ஏற்றப்படுபவனை பரிதாபமாகப் பார்த்தாள் அபிமதி.

''மன்னிப்பது இருக்கட்டும். இத்தனை இறுக்கமாகச் சங்கிலியால் பிணைத்திருக்கிறார்கள். மூச்சுக்காற்றுக்கே தடையாக உள்ளது. சற்றே தளர்த்தச் சொல்லுங்கள்.''

''இளவரசியிடம் என்ன பரிந்துரை, குக்க மகனே!''

''இந்த ஒரு சொல்லைத் தவிர வேறு சொல் இல்லையா? மெல்ல மெல்ல.... கைத்தலம் கைத்தலம்.''

வசந்தகுமாரன் கைத்தலத்தை படைத்தலைவன் முறுக்கியதால் அவன் மிகையாகத் துன்பப்பட்டு கூக்குரலிட்டான்.

அபிமதி, ''வசந்தகுமாரரே, என்னை மன்னித்து விடுங்கள்,'' என்று பதறினாள்.

''இளவரசி, இவனிடம் தாங்கள் மன்னிப்புக் கேட்பதாவது?''

''பேரரசரிடம் கூறி உங்களுக்கெல்லாம் தண்டனை கொடுக்காவிடின் என் பெயர் அபிமதி இல்லை. வசந்தகுமாரரே...''

''எந்தப் பெயரிலும், எந்த வாய்ப்பிலும் தாங்கள் அழகாகத்தான் இருக்கிறீர்கள் இளவரசி. இந்தச் சண்டாளர்கள் என் கரத்தை விடுவித்தால் இப்போது ஒடித்த கையால் உங்களைப் புகழ்ந்து கவிதை எழுதுவேன் இளவரசி!''

வசந்தகுமாரனை மேலும் பேசவிடாமல் அடக்கி விரைவிலேயே அழைத்துச் சென்றார்கள். போகும் வழியில் அவர்களிடம் வசந்தகுமாரன், ''பொற்காசுகள் வேண்டுமா, சொக்கத் தங்கம்.... காஞ்சனம்.''

கேட்கப்பட்ட காவலன், வசந்தகுமாரனை வெறித்து நோக்கி, ''என்னை விலை பேசுகிறாயா? நன்று... நன்று...''

''யவனன் கொண்டு வந்த காசு ஒவ்வொன்றும் எண்பது குன்றிமணிகள் இருக்கும். என்னை விடுவிக்க வேண்டாம். எதுவும் செய்ய வேண்டாம். என்னை துன்புறுத்திய உங்கள் தானைத்தலைவன் பெயர் தெரிவித்தால் போதும்.''



''காசு வேண்டாம். நானே சொல்கிறேன். அக்னிகேசன் என் பெயர். என்ன செய்து விடுவாய்?'' என்றான் தானைத்தலைவன்.

''அக்னிகேசா, புகார்ப் பக்கம் வருவாயல்லவா, அப்போது பார். பேடியில்லையெனில் என்னை விடுவித்துப் பார்.''

அக்னிகேசன் சிரித்து, ''காந்தளூர் வசந்தகுமாரனே! ஒற்றப்பதரே! நீ இன்னும் மூன்று பகல்களைப் பார்க்கப் போவதில்லை. இரவு தீர்ப்பு வழங்கி நாளை உன்னை சிரச்சேதம் செய்வார்கள்.''

''அப்படியா!'' என்று வசந்தகுமாரன் தன் கழுத்தைத் தடவிக் கொண்டு, ''அதிகம் வலிக்குமோ!'' என்றான்.

''சிலசமயம் உன்னைப் பார்த்துச் சிரிப்பதா வியப்பதா எனத் தெரியவில்லை காந்தளூர் ஒற்றனே!''

''விடுவிப்பது உசிதம். தனியே உம்முடன் துவந்த யுத்தம் நடத்த உத்தேசம்.''

வசந்தகுமாரனை, அதற்கு மேல் பேசாதபடி மோசமாகப் புடைத்தார்கள். அவனால் பேச இயலவில்லை.

அதை அபிமதி பார்க்க சந்தர்ப்பமின்றி அவளைத் தனியே சிவிகையில் ஏற்றி, காவலதிகாரிகள் சூழ அரண்மனைக்கு அனுப்பப்பட்டாள்.

வசந்தகுமாரன் அரண்மனையின் வெளிப்புறத்தில் மேற்கு வாசலருகில் இருந்த காராக்கிருகத்தில் சிறை வைக்கப்பட்டான். இருண்ட அந்த இடத்தில் ஈரமாக இருந்தது. கணுக்காலளவு தண்ணீர் இருந்தது. மேலிருந்து வசந்தகுமாரன் தலைமேல் நீர் கொட்டிக் கொண்டே இருக்க, சுவரில் வலுவாக இணைக்கப்பட்டிருந்த சங்கிலியால் அவன் சுவரோடு பிணைக்கப்பட்டான்.

வசந்தகுமாரனை அடைத்து விட்டு அவர்கள் கதவை மூடிய போது அந்தகாரமான இருளில் அவன் ஆழ்ந்தான்.

வசந்தகுமாரன் கொஞ்ச நேரம் வாளாவிருந்தான். அதன்பின் பாடத் துவங்கினான்.

''மலைப் பெருஞ் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பிற் குன்றாச் செய்கையோடு பொருந்திய
பிறப்பிற்குன்றாப் பெருந்தோள் மடந்தை....''

அபிமதி அப்போது குந்தவைப் பிராட்டியாரின் அந்தப்புரத்தில் அழுது கொண்டிருந்தாள்.

"என்ன பெண்ணே, அபி! என் கண்ணின் மணியே! கற்கண்டே! என்ன சோகமம்மா உனக்கு?"

"அத்தை, அந்த இளைஞர் குற்றமறியாதவர். அவரை அழைத்துச் சென்று காராக்கிருகத்தில் அடைத்து விட்டனர். அவரை விடுவிக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும்."

"இதோ பார் அபி! இது ராஜத் துரோகத்தின் பாற் பட்ட செயல். அருண்மொழி என் பேச்சைக் கேட்கவே மாட்டான்."

"நான் கேட்கிறேனே, பேரரசரிடம்."

"உன் பேச்சையும் கேட்கமாட்டான். அவர்கள் தீர விசாரித்துத்தான் தீர்ப்பளிப்பார்கள்.

"தேசத் துரோகக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், உன் நண்பனைக் காப்பாற்றவே முடியாது. தலையைக் கொய்து கோட்டை வாசலில் செருகிவிடுவார்கள். தேசத் துரோகம் பெரிய குற்றம் பெண்ணே!"

"அவர் துரோகியல்ல தேவி. துரோகியல்ல!"

"பின் ஏன் அச்சப்படுகிறாய், அபி?"

"அச்சமில்லை தேவி. ஆதுரம்."

"சோழப் பேரரசின் அருண்மொழியின் ஆட்சியில் அநீதி நிகழாது. அது சரி, அவன் யார்?"

"யாரோ அறியேன். பழையாறை செல்லும் பாதையில் சாலையில் தன் வயமிழந்து கிடந்தார். அதன் பின்..."

"அதன்பின் அரண்மனைக்குப் பெண் வேஷம் பூண்டு வந்தான். அவனைக் கொண்டு தப்பிக்க முயற்சி செய்திருக்கிறாய். ஏன் திரும்ப வந்தீர்கள்? தெறித்த வில்லிகள் நீங்கள் தஞ்சை நோக்கித் திரும்பிவரும்போது தான் பிடித்ததாகச் சொல்கிறார்கள்?"

"ஆம். திரும்பிவிட்டேன். அரண்மனையையும் என் அருமை பெருந்தாயாரையும், அன்னையையும், அத்தையையும், மாதேவடிகளையும் பிரிய மனமில்லாமல், தைரியமில்லாமல். அத்தை, நீங்கள் எப்படியாவது பேரரசரிடம் சொல்லி விடுதலை வாங்கித் தர வேண்டும். அந்த இளைஞருக்கு."



"அப்படி என்னடி அக்கறை அவன்மேல்?"

அப்போது அவ்வழியே கணேசபட்டர் செல்லும்போது, "தேவியைப் பார்க்க அனுமதி உண்டா?" என்று செய்தி அனுப்பி வைத்தார். பட்டர் தண்டல் நாயகரிடம் உசாவியபின் திரும்புகையில் குந்தவைப் பிராட்டியாரின் திருமாளிகைப் பக்கம் போய் விசாரிக்கலாம் என்று வந்திருந்தார்.

"வாரும் பட்டரே! என்ன விசேடம்? மொட்டம்புகளை எய்தவன் யார் என்று தெரிந்து கொண்டீரா?"

"இல்லை தேவி. நான் வந்தது, என் நண்பன் காந்தளூர் வசந்தகுமாரனைப் பற்றிக் கேட்பதற்கு. தேவி, இந்த அழகிய இளம் பெண் யார்?"

"இவள் தான் அபிமதி. லோகமாதேவியின் தங்கை மகள்."

"அப்படியா! என் நண்பன் உங்களைத்தான் தேடி வந்தானா?"

"உம் நண்பன் யார்?

"வசந்தகுமாரன்."

"ஓ!" என்று அபிமதி கணேசபட்டரை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் கன்னத்தில் கண்ணீர் முத்துக்கள் உருள்வதைக் கண்டார்.

"இளவரசி, ஏதாவது துக்கச் செய்தியா? என் நண்பன் உயிருடன்தான் இருக்கிறானா?"

"அவனைச் சிறையில் அடைத்திருக்கிறார்கள். தேசத் துரோகக் குற்றத்திற்கும் இளவரசியைக் கடத்தியதற்கும் விசாரித்துத் தண்டனை தரப்போகிறார்கள்."

பட்டர் பதறிப்போய், "தேவி, என் நண்பன் ஒன்று மறியாதவன். விளையாட்டுப் போக்கில்தான் இத்துணைச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டான்."

"அப்படித்தான் அபிமதியும் சொல்கிறாள்."

"இளவரசி, தேவி, தாங்கள் நினைத்தால் அவனை விடுவிக்க முடியும்."

"அது சாத்தியமில்லை பட்டரே! விசாரணை நடந்தே தீரும்."

கணேசபட்டர், "அப்படியெனில், இந்த விசாரணைக்காவது எனக்கு அனுமதி கிடைத்தால் நல்லது. அதில் நான்

அபிமதி அப்போது குந்தவைப் பிராட்டியாரின் அந்தப்புரத்தில் அழுது கொண்டிருந்தாள்.

''என்ன பெண்ணே, அபி! என் கண்ணின் மணியே! கற்கண்டே! என்ன சோகமம்மா உனக்கு?''

''அத்தை, அந்த இளைஞர் குற்றமறியாதவர். அவரை அழைத்துச் சென்று காராக்கிருகத்தில் அடைத்து விட்டனர். அவரை விடுவிக்க நீங்கள் உதவி செய்ய வேண்டும்.''

''இதோ பார் அபி! இது ராஜத் துரோகத்தின் பாற் பட்ட செயல். அருண்மொழி என் பேச்சைக் கேட்கவே மாட்டான்.''

''நான் கேட்கிறேனே, பேரரசரிடம்.''

''உன் பேச்சையும் கேட்கமாட்டான். அவர்கள் தீர விசாரித்துத்தான் தீர்ப்பளிப்பார்கள்.

''தேசத் துரோகக் குற்றம் நிரூபிக்கப்பட்டால், உன் நண்பனைக் காப்பாற்றவே முடியாது. தலையைக் கொய்து கோட்டை வாசலில் செருகிவிடுவார்கள். தேசத் துரோகம் பெரிய குற்றம் பெண்ணே!''

''அவர் துரோகியல்ல தேவி. துரோகியல்ல!''

''பின் ஏன் அச்சப்படுகிறாய், அபி?''

''அச்சமில்லை தேவி. ஆதுரம்.''

''சோழப் பேரரசின் அருண்மொழியின் ஆட்சியில் அநீதி நிகழாது. அது சரி, அவன் யார்?''

''யாரோ அறியேன். பழையாறை செல்லும் பாதையில் சாலையில் தன் வயமிழந்து கிடந்தார். அதன் பின்...''

''அதன்பின் அரண்மனைக்குப் பெண் வேஷம் பூண்டு வந்தான். அவனைக் கொண்டு தப்பிக்க முயற்சி செய்திருக்கிறாய். ஏன் திரும்ப வந்தீர்கள்? தெறித்த வில்லிகள் நீங்கள் தஞ்சை நோக்கித் திரும்பிவரும்போது தான் பிடித்ததாகச் சொல்கிறார்கள்?''

''ஆம். திரும்பிவிட்டேன். அரண்மனையையும் என் அருமை பெருந்தாயாரையும், அன்னையையும், அத்தையையும், மாதேவடிகளையும் பிரிய மனமில்லாமல், தைரியமில்லாமல். அத்தை, நீங்கள் எப்படியாவது பேரரசரிடம் சொல்லி விடுதலை வாங்கித் தர வேண்டும். அந்த இளைஞருக்கு.''



''அப்படி என்னடி அக்கறை அவன்மேல்?''

அப்போது அவ்வழியே கணேசபட்டர் செல்லும்போது, ''தேவியைப் பார்க்க அனுமதி உண்டா?'' என்று செய்தி அனுப்பி வைத்தார். பட்டர் தண்டல் நாயகரிடம் உசாவியபின் திரும்புகையில் குந்தவைப் பிராட்டியாரின் திருமாளிகைப் பக்கம் போய் விசாரிக்கலாம் என்று வந்திருந்தார்.

''வாரும் பட்டரே! என்ன விசேடம்? மொட்டம்புகளை எய்தவன் யார் என்று தெரிந்து கொண்டீரா?''

''இல்லை தேவி. நான் வந்தது, என் நண்பன் காந்தளூர் வசந்தகுமாரனைப் பற்றிக் கேட்பதற்கு. தேவி, இந்த அழகிய இளம் பெண் யார்?''

''இவள் தான் அபிமதி. லோகமாதேவியின் தங்கை மகள்.''

''அப்படியா! என் நண்பன் உங்களைத்தான் தேடி வந்தானா?''

''உம் நண்பன் யார்?

''வசந்தகுமாரன்.''

''ஓ!'' என்று அபிமதி கணேசபட்டரை நிமிர்ந்து பார்த்தாள்.

அவள் கன்னத்தில் கண்ணீர் முத்துக்கள் உருள்வதைக் கண்டார்.

''இளவரசி, ஏதாவது துக்கச் செய்தியா? என் நண்பன் உயிருடன்தான் இருக்கிறானா?''

''அவனைச் சிறையில் அடைத்திருக்கிறார்கள். தேசத் துரோகக் குற்றத்திற்கும் இளவரசியைக் கடத்தியதற்கும் விசாரித்துத் தண்டனை தரப்போகிறார்கள்.''

பட்டர் பதறிப்போய், ''தேவி, என் நண்பன் ஒன்று மறியாதவன். விளையாட்டுப் போக்கில்தான் இத்துணைச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டான்.''

''அப்படித்தான் அபிமதியும் சொல்கிறாள்.''

''இளவரசி, தேவி, தாங்கள் நினைத்தால் அவனை விடுவிக்க முடியும்.''

''அது சாத்தியமில்லை பட்டரே! விசாரணை நடந்தே தீரும்.''

கணேசபட்டர், ''அப்படியெனில், இந்த விசாரணைக்காவது எனக்கு அனுமதி கிடைத்தால் நல்லது. அதில் நான்

சம்பந்தமுள்ளவர்களிடம் சில வினாக்களை எழுப்ப விழைகிறேன்.''

''அதற்கென்ன! அனுமதிக்கு இலச்சினை ஓலை கொடுக்கிறேன்.''

''தேவி! நான் என் நண்பனைச் சந்திக்க வேண்டும்.''

''சிறையிலா? அது இயலாது.''

''இயலும் இயலும்'' என்றாள் அபிமதி. ''அத்தை, தங்கள் இலச்சினையைக் காட்டினால் அனுமதிக்காதவர்கள் சோழப் பேரரசில் உண்டா?''

''அருண்மொழி கோபிப்பான். இலச்சினையை இஃதற்கெல்லாம் பயன்படுத்தக் கூடாது.''

''அவருக்குத் தெரிய வேண்டாம்.''

குந்தவைப் பிராட்டியார் அபிமதியை ஆதுரத்துடன் தலை வருடிக் கொடுத்து, ''பட்டரே! ஒரு காரியம் செய்யும். இந்தப் பெண் உம் நண்பரை உயிருடன் பார்க்காவிட்டால் உறங்கமாட்டாள் என்று தெரிகிறது. இலச்சினை மடல் தருகிறேன். சிறையில் சந்தித்து ஆறுதல் கூறிவிட்டு வாரும்,'' என்றாள்.

இருளில் காவலன் தீப்பந்தம் பிடித்திருக்க பட்டரும், அபிமதியும் வசந்தகுமாரனைச் சந்திக்க ஈரமும் எலிக் கழிவுகளும் மணக்கும் படிகளில் இறங்கிச் சென்றபோது இருளில் குமாரன் பாடும் சப்தம் கேட்டது.

''அலைநீர் ஆடை மலைமுலை அகத்து
ஆரப் பேரியாற்று மாரிக் கூந்தல்...''

''என்ன பாடுகிறார்?''

''சிலப்பதிகாரம்.''

சிறைக்கதவு முனகலுடன் திறக்க, வசந்தகுமாரன் ''யாரது, தின்ன ஏதேனும் கொண்டு வந்தீர்களா? சுவானங்களே, விலைமகளிர் தோன்றல்களே!'' - கணேசபட்டரை பந்த வெளிச்சத்தில் பார்த்தான் முதலில்.

''ஓ பட்டரா வாரும். நீர் வரவேண்டிய சமயம்தான் இது,'' என்றான். ''உம்மை எதிர்பார்த்தேன்.''



## 17

வசந்தகுமாரனைப் பார்த்த கணேசபட்டர் மிக்க மகிழ்ச்சியுடன், ''குமாரா, உனக்கு மெய்யாகவே ஏதோ ஒரு நல்லூழ்தான். உன்னை சந்திக்க வந்திருப்பது யார் தெரிகிறதா?''

''தெரிகிறதே! பட்டரே, இருளிலேயே தெரிகிறதே! இந்த அழகின் ஒளியும் புனுகுசட்டமும் கஸ்தூரி மணமும் இளவரசி அபிமதி. இந்த பசித்த ஏழை ஒற்றனைச் சந்திக்க வந்ததற்கு நன்றி. இந்த இருண்ட அறையில் எனக்கு ஒரே ஒரு மந்திரம் பொழுதுபோக்கு. அபிமதி என்கிற ஈரசைச் சீர் மட்டுமே. நிரை நிரை, கருவிளம்.''

கணேசபட்டர், ''குமாரா, உன் தலைக்குமேல் ஆபத்து யமலோகத்துக் கத்திபோல் தொங்குகிறது. யாப்பிலக்கணம் பயில்கிறாயா குமாரா?''

''என் செய்வேன் பட்டரே! நான் ஒற்றன் இல்லை என ஆயிரம் முறை மறுத்தும் இந்த குக்க

புத்திரர்கள், சுவானத் தோன்றல்கள் நம்புவது இல்லையெனில் என்ன செய்யலாகும்? சோழப் பேரரசில் எனக்கு நியாயம் கிடைக்காது. அபிமதி, என்னைத் தூக்கிலிடப் போகிறார்களா, இல்லை, தலை கொய்யப் போகிறார்களா? என்பது பற்றி அரசரிடம் விசாரித்துச் சொன்னால் ஆறுதலாக இருக்கும்.''

அபிமதி கண்ணீருடன், ''மன்னிக்க வேண்டும் வசந்தகுமாரரே! என்னால் தான் உமக்கு இத்தனை அல்லல்கள். எப்படியும் உங்களை விடுதலை செய்ய பிரயத்தனிக்கிறேன்.''

கணேசபட்டர், ''குமாரா, நீ இருக்கும் ஆபத்தை முழுவதும் அறியாமல் சிலப்பதிகாரம் பாடிக் கொண்டிருக்கிறாய்.''

''பின் என்ன பட்டரே? தரையில் அமர்ந்து அழச் சொல்கிறீரா? தப்பிக்க முயற்சித்துப் பார்த்தேன். காவலர்கள் காசு வாங்கத் தயங்குகிறார்கள். மேலும் என்னிடம் காசுகளும் இல்லை.''

அபிமதி வசந்தகுமாரனையே வெறித்துப் பார்க்க, தீ வெளிச்சத்தில் அவள் முகம் பொன்னைப்போல் பொலிவுடன் துலங்குவதைக் கண்டு, ''இளவரசி! நான் நாளைக் காலையே சாகத் தயார்.''

அபிமதி அவனை நிமிர்ந்து பார்க்க, ''தங்கள் மதிவதனத்தைப் பார்த்துவிட்டேன். என் ஜென்மம் சாபல்ய மடைந்து விட்டது.''

''குமாரா, நான் சொல்வதை கவனமாகக் கேள். நாளைக் காலை உன் குற்றத்தை சக்கரவர்த்தி விசாரணை செய்யப் போகிறார். அவர்கள் விடுக்கும் வினாக்கள் எதற்கும் விடை பகராதே. நான் வரும்வரை ஏதும் பேசாதே. 'எல்லாவற்றிற்கும் என் நண்பர் கணேசபட்டர் விடை தருவார்' என்று சொல்லிவிடு. காந்தளூர் என்கிற பெயரை எக்காரணம் கொண்டும் உச்சரிக்காதே! விளையாட்டாகச் சொல்லப்போய் எப்படிப்பட்ட சிக்கலில் அகப்பட்டிருக்கிறாய் நீ?''

அபிமதி, ''கணேசபட்டரே...'' என்று விளித்தாள். காவலன் சற்று தூரத்தில் சிலைபோல் நிற்பதைக் கவனித்துத் தாழ்ந்த குரலில், ''இவரை இப்போதே ஓடி விடச் சொல்லலாமா?''

''மூடத்தனம்'' என்றார் கணேசபட்டர். எப்படியும் சோழநாட்டு எல்லையைக் கடப்பதற்குள் பிடிபட்டு விடுவான். குமாரா, உன் தோளில் காயம் எப்படி இருக்கிறது?''

''நெஞ்சில் பட்ட காயத்தில் தோள் காயத்தையே மறந்து விட்டேன்!'' என்று அபிமதியைப் பார்த்துச் சொன்னான் வசந்தகுமாரன். அவள் நாணத்தால் சற்றே தலை குனிந்தாள்.



''பட்டரே, நான் பேரரசிடம் பேசிப் பார்க்கட்டுமா?''

''பயனில்லை தேவி. பேரரசர் தன் உறவு முறைகளை மதியார். அவரைப் போன்ற விருப்பு வெறுப்பற்ற மன்னர் உலகில் இல்லை. குமாரா, நாளை காலை சந்திக்கலாம். காவலனே, இந்த அறைக்கு இளவரசி வருவதால் சிற்சில எண்ணெய் விளக்குகளைக் கொண்டுவரச் சொல். இருளில் இருக்கக் கூடாது தெரிகிறதா?''

''சரி ப்ரபோ!''

இளவரசி அபிமதி, ''இவருக்கு உண்பதற்கு ஏதேனும் கொடுத்தாயா?''

''ஏதும் இல்லை. பசியில் இடது கைக் கட்டை விரலை கடித்து உண்டுவிட்டேன்'' என்று வசந்தகுமாரன் தன் இடதுகை கட்டைவிரலை உள்மடக்கி அபிமதியிடம் காட்ட, அவள் விரல் இல்லாததைக் கண்டு கூக்குரலிட்டாள்.

கணேசபட்டர், ''இளவரசி, பொய் சொல்கிறான். அங்குலி பத்திரமாகத்தான் இருக்கிறது, குமாரா நினைவிருக்கட்டும் என்ன?''

''சரி பட்டரே!''

''என்ன சொன்னேன்?''

''காலை பேரரசர் அவையில் மூச்சுக்கூட விடாமல் இருக்க வேண்டும். அவ்வளவு தானே!''

''ஆம். நான் வந்து பேசுகிறேன் என்ன?''

''சரி, இளவரசி புறப்பட்டீர்களா...''

''அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை
ஆம்பல் நாறும் தேம்பொதி நறுவிரைத்
தாமரைச் செவ்வாய் தன் அறல் கூந்தல்.''

அபிமதியின் கன்னம் குங்குமம்போலச் சிவந்தது. படியேறு முன் ஒருமுறை திரும்பிப் பார்த்தாள்.

''ஐயவோ-

இருநோக்கு இவள் கண் உள்ளது,
ஒரு நோக்கு நோய்
நோக்கு ஒன்று அந்நோய் மருந்து.''

- என்றான். ''காவலனே வா, ஆடுபுலி ஆட்டத்தைத் தொடரலாம்'' என்றான்.

''நீர் எனக்கு எத்தனை மஞ்சாடை தரவேண்டும்?''

காலையிலேயே வசந்தகுமாரன் கொண்டு செல்லப்பட்டான். சோழ மத்திய அரசின் பிரதிநிதியாகத் தண்டல் என்ற அதிகாரியும் ஊருக்கமைந்தபடி என்று குறிப்பிடும் நகர மன்றத்தின் முன்னணித் தலைவர்கள் ஒன்பது பேரும் நியாயத்தார் என்ற நீதி நிர்வாக அதிகாரிகளும் அந்த சபையிலேயே கூடியிருந்தார்கள்.

கணேசபட்டர் வசந்தகுமாரனைக் கொண்டு வருவதற்கு முன்பே காத்திருந்தார். பட்டுச்சால்வை போர்த்தி சந்தனமும் குங்குமமும் பொங்க, அருகே ஆரோக்கியமாக கர்ப்பூர மணம் கமழ, சபையில் அத்தனை பேர் கவனத்தையும் கவரும்படிக்கு அவர் வீற்றிருந்தார். வசந்தகுமாரன் கொண்டுவரப்பட்டபோது அவரை நோக்கிப் புன்னகைக்க, அவர் இவனை வெறித்து நோக்கினார். குற்றம் என்ன என்று வினவினார் தண்டல் அதிகாரி இளங்கீரனார். அவர் தோற்றத்தில் அறுபது ஆண்டுகளின் பொறுப்பும் பொலிவும் தெரிய, நரைத்த மீசை உரோமங்கள் அடர்த்தியாக முகத்தை மறைக்க, காதில் கொத்தாகத் தங்கம் தொங்கியதால் காது மடல் நீண்டிருந்தது. ''பட்டரே, எங்கே இங்கு வந்து சேர்ந்தீர்? அந்த நாடாள்வான் வழக்கில் என்ன தண்டனை அளித்தீர்?''

''ஊர்க்கோயிலுக்கு தொண்ணூற்றாறு ஆடுகளை நிவந்தமாக அளிக்கத்தான் ஆணையிட்டேன், இளங்கீரரே'' என்றார் கணேசபட்டர்.

''இப்போது என்ன?''

''என் ஆப்த நண்பன் வசந்தகுமாரனை ஒற்றன் என்று குற்றம் சாட்டி சிறையிட்டிருக்கிறார்கள்.''

''உமது நண்பனா? விந்தை!''

இதனிடையில் பண்டித சோழத் தெறித்த வில்லிகளின் தண்டல்நாயகர் ஆதித்யன், இளங்கீரரிடம் வந்து மெல்லப் பேசினார்.

கணேசபட்டர், ''நீதிமன்றத்தில் காதில் பேசுவது நியாயமானதல்ல.''

''பட்டரே, எமக்கே நியாயம் பகருகிறீரோ! உம் நண்பன் செய்த குற்றத்தைப் பற்றித் தெரியுமா?''

''செய்யப்பட்டதாகச் சொல்லும் குற்றம்.''



''சரி, செய்யப்பட்டதாகப் பகரும் குற்றம். நண்பர் தான் காந்தளூர் வசந்தகுமாரனோ?''

''வெறும் வசந்தகுமாரன்.''

''காந்தளூர் என்பது...''

''தன் ஊர் காந்தளூர் என்று இவனே பகர்ந்ததற்குச் சாட்சிகள் உள்ளன பிரபோ!''

கணேசபட்டர், ''காந்தளூர் எந்தத் திசையென்றே தெரியாது என் நண்பனுக்கு.''

''பட்டரே, உம் நண்பன் சார்பில் வாதிடப் போகிறீரா?''

''ஆம். தண்டலதிகாரியவர்களே!''

''என்ன சொல்ல விரும்புகிறீர்? சோழப் பேரரசில் குற்றங்கள் அத்துணை கடுமையானவையல்ல. நண்பன் குற்றத்தை ஒப்புக்கொண்டால் ஒரு தூங்காவிளக்குடன் காரியத்தை முடித்துவிடலாம். அதிக சமயமும் விரயமாகாது.''

''நீங்கள் இவ்வாறு கூறுவது வியப்பாக இருக்கிறது.''

''பட்டரே, பேரரசர் இந்த வழக்கில் மனம் நொந்திருக்கிறார். அரசவையில் அவருக்குப் பாதுகாப்பு இல்லையென்று உள் வட்டாரத்தில் கவலை தோன்றியுள்ளது. எப்படை, எறிபடை...'' அப்போது அவையத்து வாயிற்புறத்தில் ஆளரவமும் கொம்பொலியும் கேட்க, மெதுவாகக் கொட்டும் மங்கலவாத்தியங்களுடன் பெண்கள் புடைசூழ குந்தவைப் பிராட்டியாரும், லோகமாதேவியும் செல்ல அவர்களைத் தொடர்ந்து இன்னமும் வாத்திய முழக்கம் ஆரவாரத்துடன் அவ்வழியே சென்றபோது பேரரசர் ராஜராஜசோழர் சபையில் நுழைந்தார்.

அனைவரும் எழுந்து நிற்க, அவர் வசந்தகுமாரனைப் பார்த்தார். அவருடன் திருமெய்க்காவலர்கள் நிழல் போலத் தொடர, ''நீதான் ஒற்றனா? பட்டரே, இந்த இளைஞன் உம் நண்பனாமே!''

''ஆம் பிரபோ!''

''சொல், யார் உன்னை அனுப்பியது அமரபுசங்கனா? பாஸ்கரவர்மனா? எப்படி, என்ன சொல்லி? யவனக் குதிரைகளையும், சோழனின் இளவரசியையும் மாதேவடிகளையும் கவர்ந்து கொண்டு சேரநாட்டுக்கு வந்துவிடு. பின், நாட்டையும் வீட்டையும் பண்டமாற்றுப் பேசலாம்'' என்றானா?

இளைஞனே! என்னைக் கொல்ல அனுப்பினார்களா? எப்படிக் கொல்லப் போகிறாய்? சொல்லிவிடு.''

''பேரரசே, இவன் குற்றமற்றவன், குற்றமற்றவன்.''

''நான் செய்த ஒரே குற்றம், பேராசைப்பட்டு யவனக் குதிரைகளை விலை பேசியது தான். அதன்பின் நிகழ்ந்த சம்பவங்கள் அனைத்திலும் ஒரு ரகசியமும் இலைமறைகாயாக பல விஷயங்கள் நடந்தன அரசே! சக்கரவர்த்தியின் பெயர் பதித்த இலச்சினைகள் கள்ளத்தனமாகச் செய்யப்படுகின்றன.''

''ஏதோ காரியம்... ஸ்ரீபலிக்குள் காரியம் நிறைவேற வேண்டுமென்று புகாரில் `ஓர் இல்லத்தில் சிலர் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டவன் இவன்.''

''என்ன சொல்கிறீர்? இன்றுதான் ஸ்ரீபலி. இன்று தான் விழா. என்ன சொல்கிறீர்?'' என்று ராஜராஜ சக்கரவர்த்தி கணேசபட்டரின் பால் திரும்பினார்.

கணேசபட்டர் விரைவாகப் பேசினார். ''அரசே, இன்றுதான் ஸ்ரீபலியா?''

''ஆம். பெரிய தேவர் எழுந்தருளும்நாள். திருஅபி ஷேகத்துக்கு உரிய பிள்ளைகளில் இருவரில் ஒருவனுக்கு ராஜேந்திரனுக்குப் பொறுப்புகள் சிலவற்றைக் கொடுக்கிறேன். முக்கியப்பொறுப்பு பாஸ்கரவர்மனை முறியடித்து வெல்வது, பாண்டியனை அடக்கிவிட்டு வருவது.''

''பெரிய தேவர்...'' ''திரு அபிஷேகம்'' கணேசபட்டருக்கு இந்த சொற்களை எங்கேயோ கேட்டிருக்கிறோமா! இல்லை, பார்த்திருக்கிறோமா?

''பட்டரே, உம் நண்பனை நீர் சரியாக அறியவில்லை. தண்டல் அதிகாரி என்ன தண்டனை கொடுத்தாலும் தர்மாசனத்தை நிறைவேற்றும் ஏவலாளன் தான் அரசன். என்றாலும் இவன் செய்தது இரட்டைக் குற்றம். அதனால் இந்த இளைஞனுக்கு நானே தண்டனையளிக்கிறேன் கோட்டை வாயிலில் நாளைக் காலை இவனை வைத்து தலையைக் கொய்துவிடுமாறு ஆணை யிடுகிறேன். தண்டல் நாயகரே! ஊருக்கமைந்தபடி நியாயத்தாரே! தங்கள் பொறுப்புக்கு மேற்பட்டது பேரரசனாகிய நான் அளிக்க வேண்டிய தண்டனை இது...''

இவ்வாறு சக்கரவர்த்தி பேசிக்கொண்டிருக்கையில் வசந்தகுமாரன் தன் காவலையும் பிணைப்புக்களையும் மீறி சக்கரவர்த்தி ராஜராஜசோழர் மேல் பாய்ந்தான்.



# 18

அவையத்துள்ளோர் எவரும் சற்றேனும் எதிர்பார்திராதபடி கனவேகத்தில் வசந்தகுமாரன், பேரரசர் ராஜராஜ சோழரின் மேல் பாய்ந்ததைத் திருமெய்க்காப்பு அதிகாரிகளால் தடுக்க முடியவில்லை. பேரரசர் திடுக்கிட்டுத் தடுமாறி விழுந்தார்.

கணேசபட்டர், ''ஐயவோ! என்ன இது? இப்படிப் போய் காரியத்தைக் கெடுத்தாயே வசந்தகுமாரா! உனக்குத் தண்டனையை அரசர் இப்போது தான் அறிவித்திருக்கிறார். எத்தனையோ முறையீடுகளுக்கான வாய்ப்புகள் இருக்கும்போது ! எதற்காக இப்படி அவசரப் பட்டாய் மூடனே. பேதையே'' என்று அரியணையை நோக்கி ஓடினார்.

வசந்தகுமாரன் அரசரை விபரீதமாக எதுவும் செய்து விடவில்லை. அவரை இருக்கையிலிருந்து தள்ளி விட்டதில் வைணவக் கோயில் சடகோபம்

போலஇருந்த அவரது பொற்கிரீடம் கழன்று விழ, அவர் முடி கலைந்தது. வசந்தகுமாரனை மார்பில் குத்த ஆறு வாட்கள் உருவப்பட்டு, பேரரசர் ஆபத்திலிருந்து நீக்கப்பட்ட நிலையில் "கொல்லாதே!" என்று ஆணையிட்டார்.

கணேசபட்டர் கீழே கிடந்த வசந்தகுமாரனை நோக்குகையில், "ஆசானே! என்னை நம்புங்கள். பேரரசரைக் காப்பாற்றத்தான் வந்ததேன்.." என்று அவன் சொல்லி முடிப்பதற்குள் அவனை மயக்கம் சூழ்ந்து கொண்டது.

பேரரசர்தன் உடலை உதறித் துடைத்துக் கொணடு, "இப்போது கொன்றுவிடுங்கள் இவனை. என்னையே தாக்க வந்திருக்கிறான்."

"அதற்குத் தேவையில்லை சக்கரவர்த்தி. அவனே இறந்து போய்க் கொண்டிருக்கிறான்" என்று சொல்லி, கணேசபட்டர் சூழ்ந்தவர்களை விலக்க, வசந்தகுமாரன் கண்கள் முழு மயக்கத்தில் செருகிக் கொள்வதை கணேசபட்டர் கவனித்து, அவனை முதுகுப்புறமாகத் திருப்ப "இப்போது புரிகிறது, பேரரசே! வசந்த குமாரன் உங்களைத் தாக்கவில்லை. காப்பாற்றியிருக்கிறான்."

"என்ன சொல்கிறீர், பட்டரே?"

"இவன் முதுகைப் பாருங்கள் சக்கரவர்த்தி."

வசந்தகுமாரனின் முதுகுப் பகுதியில் இரத்தக் காயம் தென்பட்டு கனிந்திருந்தது. அதில் ஒரு சிற்றம்பு ஆழப் பதிந்திருந்தது. "விடம் தோய்ந்த சிற்றம்பு, அரசே! உங்களுக்காக வந்த அம்பு இது. இவன் இரத்தத்தில் விடம் பரவி இப்போது இறந்து கொண்டிருக்கிறான்."

ராஜராஜ பேரரசர் இடப்புறம் இருந்த அதிகாரியைப் பார்த்து, "என்ன இது? மாதண்ட நாயகரை விளியுங்கள். ஆதித்யா, இது உண்மையா? சோதித்துச் சொல்."

"என்ன சோதிப்பது மகா ப்ரபோ!"

"என்ன சோதிப்பதா? இவ்விளைஞன் என்னைத் தாக்க வந்த சிற்றம்பை வாங்கிக் கொண்டானா என்பதைச் சோதியும். தண்டல் நாயக ஆதித்யரே! உமது தெறித்த வில்லிகள் தெரிந்தே செய்யும் காரியமா இது?"

"மாமன்னரே, இது அபாண்டம். பட்டர் பொய் சொல்கிறார். வசந்தகுமாரன் தங்களைத் தாக்க வந்த போது நான்தான் இவன்மேல் சிற்றம்பு ஏவிடப் பணித்தேன்."



"ஓ! அப்படியும் இருக்கலாம்."

பட்டர், குமாரன் மேல் குனிந்து, "வசந்தகுமாரா, சொல்! வசந்தகுமாரா சொல். பேரரசரைத் தாக்க வந்தது யார்? சொல்..."

வசந்தகுமாரனின் கன்னத்தைத் தட்டித்தட்டி எழுப்ப முயற்சித்தார். வசந்தகுமாரன் ஒருமுறை மிரள விழித்தான். அவன் கண்கள் தன்னைச் சுற்றிலும் கூடியிருந்த முகங்களை நோக்கின. அவன் விரல்கள் யாரையோ சுட்டிக் காட்ட விரும்பி உயர்வதற்குள் கண்கள் மீண்டும் ஆழ்ந்த மயக்கத்துக்குள்ளானான்.

ராஜராஜ சோழரின் முகத்தை அனைவரும் பார்க்க, "பேரரசே! தாங்கள் இவனுக்கு மரண தண்டனையை உச்சரிக்கக் கேட்டதும் இவன் மேல்நிலைத்த கண்ணை நான் எடுக்கவில்லை. இவ்வகையான அபாயம் நிச்சயம் நிகழும் என்று எனக்கு ஓர் ஐயப்பாடு மனத்துள் உறுத்தியது. சேரநாட்டு ஒற்றன் உங்கள் மேல் பாய, உடனே செயல்பட்டு அம்பெய்யப் பணித்தேன்."

"யார் வீசியது?"

"திருமெய்க்காப்பாளர்களில் எங்கள் தெறித்த வில்லிகளில் ஒருவனும் உண்டு. பேரரசே, அவன் பெயரைத் தனியே சொல்கிறேன்."

"நன்று ஆதித்யா நன்று. என்னை அந்தரங்கமாய் வந்து பார். உன் கடமை உணர்வை மெச்சுகிறேன். பட்டரே, நீர் சொல்வது சரியென்றால், சதிகாரன் இத்துணை அருகில் வந்திருக்கிறான். எனக்கு எறியப்பட்ட அம்பை உம் நண்பன் தடுத்திருக்கிறான் என்கிறீரா?"

"ஆம் அரசே! இவனை விரைவில் அரண்மனை ஆதுர சாலை மருத்துவரிடம் அழைத்துச் செல்வோம். இவனை உயிர் பிழைக்க வைத்து இவனை அனுப்பியவர் யார் என்று வினவுவது முக்கியம்."

"சரி."

ஆதித்யன், "தெறித்த வில்லிகளிடமே மாற்று மருந்தும் உண்டு. அரசே, இவனை நான் கண்காணித்துக் கொள்கிறேன். இவ்விளைஞனை நாங்கள் எடுத்துச் சென்று உயிர் பிழைப்பித்துக் கொண்டு சேர்க்கிறோம்."

வசந்தகுமாரன் மயக்கத்திலிருந்ததால் இதெல்லாம் செவியில் கேட்கவில்லை. அவனை நான்கு பேர் கால் வாட்டிலும் தலைப்பக்கத்திலும் உயர்த்தி அறைக்கு வெளியே எடுத்துப் போக, கணேசபட்டரும் அவர்களைப் பின் தொடர்ந்தார்.

அப்போது குந்தவைப் பிராட்டியார் சேதி கேட்டு விரைந்து வந்து, "அருண்மொழி என்ன ஆயிற்று? யாரோ எய்படை உன்மேல் தாக்கியதாக சன்னிதிக்குச் செய்தி வந்தது. இந்த சேர நாட்டு ஒற்றன் எங்கே போனான்?"

"ஆம். குந்தவையக்கா. சேர நாட்டு ஒற்றன் என்னைத் தாக்கினான். இந்த அவையகத்திலேயே கண்முன்னாலேயே நிகழ்ந்திருக்கிறது. என்னைச் சுற்றியிருந்த திருமெய்க்காப்பு ஒருவன் என்னைக் காப்பாற்றினான்."

"அப்படியா? நான் கேட்டது, மெய்க்காப்பாளன் உன்னைத் தாக்க வரும்போது வசந்தகுமாரன் என்னும் இளைஞன் தான் உன்னைக் காப்பாற்றியதாக. அருண்மொழி, எனக்குக் கவலையாக இருக்கிறது. நீ மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும்."

"என்னைக் கொல்வது சுலபமல்ல தேவி."

பேரரசர் ராஜராஜசோழர் தன்மேல் ஒரு கொலை முயற்சி நிகழ்ந்ததைப் பாராட்டாமல் குந்தவையுடன் அளவளாவிக் கொண்டிருந்தது வியப்பாக இருந்தது. அப்போது அபிமதியும் மாதேவடிகளும், லோகமாதேவியும், பஞ்சவன் மாதேவியும், அபிமானவல்லியும், வில்லவன் மாதேவியும் வந்து சூழ்ந்து கொள்ள.

"எதற்காக இத்தனை தேவியரும் வந்திருக்கிறீர்கள்? நான் இன்னமும் சாகவில்லை. என்னைக் கொல்வது அத்தனை எளிதல்ல" என்று அருகிலிருந்த முழவை இடக்கையால் தட்டிச் சப்தித்து, "அபிமானவல்லி, இந்த மதலிகை[1] உன் மதிவதனத்திற்கு ஏற்றதாக உள்ளது. யார் தந்தது?"

"தாங்கள் தான் பேரரசே! என் ஜன்ம தினப் பரிசாகத் தந்தீர்."

"அப்படியா!"

அபிமதியைப் பார்த்துப் புன்னகைத்த பேரரசர், "பெண்ணே! நீ சாளுக்கிய விமலாதித்தனைச் சந்தித்துப் பேசினாயோ? துடிப்பான இளைஞன். உனக்குப் பொருத்தமான கணவன்."

"பெரிய தந்தையே, எனக்கு இந்த வதுவையில் சம்மதமில்லை என்று சொல்லிவிட்டேன்."

பேரரசர் நகைத்து, "அப்படியா? ஆனால் சாளுக்கியனுக்குச் சம்மதமாயிற்றே!"

---

1. ஓர் ஆபரணம்



சக்கரவர்த்தி அதைப்பற்றி மேலே ஏதும் சொல்லாமல் தன் உடன் கட்ட அதிகாரியிடம், "செம்பொன் மாரி. சேர நாட்டு ஒற்றன் வசந்தகுமாரன் பிழைத்ததும் என்னிடம் அழைத்து வரச் சொல்."

"வசந்தகுமாரனுக்கு, என்ன?" என்றாள் அபிமதி கவலையுடன்.

"தெரியாதா உனக்கு? கொல்லும் நிமித்தமாக என்னைத்தாக்க என்பால் ஓடி வந்தான். திருமெய்க்காப்பு அதிகாரியால் தடுக்கப்பட்டு சிற்றம்பு பட்டு விழுந்திருக்கிறான். அர்த்தசாமத்துக்குள் இறந்து போவான். அதற்குள் அவனைப் பணித்தது யார் என்கிற செய்தி வெளிப்பட வேண்டும்."

அபிமதி துணுக்குற்றாள். "இப்போது அவரை எங்கே கொண்டு சென்றிருக்கிறார்கள்.?"

"ஓர் ஒற்றனின் மேல் உனக்கு ஏன் இத்தனை அக்கறை?"

"அவர் ஒற்றனில்லை, பெரிய தந்தையாரே!"

"எப்படித் தெரியும் என் இனிய மகளே அபிமதி. சாளுக்கியன் மனைவியாக நீ கொடுத்து வைத்திருக்கிறாய். உன்னை பொன்னால் இழைப்பார்கள், ஆந்திரர்கள்."

"பெரிய தந்தையே, வசந்தகுமாரர் குற்றமற்றவர்."

"என்ன இது? நான் சாளுக்கியன் என்கிறேன். நீ வசந்தகுமாரன் என்கிறாய். அபிமதி, தெளிவாக செவி சாய்த்துக் கேள். இந்த இளைஞன், என்னைச் சபையில் தாக்க வந்தவன். இவன் இன்னும் சில நாழிகைக்கு மேல் உயிர் தரிக்கமாட்டான். தரிக்க வொட்டோம். அதற்குள் சோணாட்டில் ஊடுருவிப் பாய்ந்துள்ள மற்ற ஒற்றர்களின் விவரம் தேவை.

"பட்டரே! உம் நண்பனிடம் இந்தச் செய்தியைக் கிரகிக்க வேண்டியது உம் கடமை" என்ற பேரரசர் தம்மைச் சந்திக்கக் காத்திருக்கும் மற்ற மண்டல அதிகாரிகளைக் காணச் சென்றபோது மீண்டும் கொம்பொலி பகர்ந்தது.

கணேசபட்டரை அபிமதி கண்ணீருடன் பார்த்து, "பட்டரே, அவர் சொல்வது மெய்யா?" என்றாள்.

பட்டத்து ராணி புறப்பட, மற்ற மனைவியரும் லோகமாதேவியாரின் பின்செல்ல, குந்தவைப் பிராட்டியார் மட்டும் தயங்க, "பட்டரே, என்ன நிகழ்ந்தது சொல்லும்?" என்றாள்.

''தேவி, நான் கண்கூடாகப் பார்த்தேன். பண்டித சோழத் தெறித்த வில்லிகளில் ஒருவனோ வேறு யாரோ, பேரரசரின் மேல் அம்பு செலுத்தப் போய் அதைத் தடுக்க வசந்தகுமாரன் பாய்ந்து சென்று பேரரசரைக் காப்பாற்றியதில் அவன் மேல் அம்பு பட்டிருக்கிறது. இதைத் தான் நான் பார்த்தேன். ஆனால் தெறித்தவில்லிகளின் படைத்தலைவன் ஆதித்யன், வசந்தகுமாரன் தான் தாக்க வந்ததாகவும், அவர்கள் சடுதியில் அவனைத் தடுக்க அவன் மேல் அம்பெய்ததாகவும் சொல்கிறார்கள்.''

''இதில் யார் பேச்சை நம்புவது?'' என்றார் குந்தவை.

''தேவி, என் நண்பன் வசந்தகுமாரனை முழுதும் அறிவேன். அவன் இவ்வகை சதிக்காரியங்கள் செய்யவே மாட்டான். பாரத்வாஜ முனிவரிடமிருந்து பிறந்த என் முன்னோர் அனைவரின் மேல் ஆணை வைத்துச் செல்கிறேன். குமாரன் துரோகியல்ல. நீங்கள் தான் அருண்மொழித்தேவரிடம் சொல்லிக் காப்பாற்ற இயலும்.''

''உம் நண்பன் இப்போது எங்கிருக்கிறான்?''

''விட முறிவுக்கு மருந்தளிக்க அரண்மனை ஆதுர சாலைக்கு அழைத்துச் சென்றிருக்கிறார்கள்.''

''விடமுறிவுக்கா?''

''அவனைப் பிழைக்க வைத்து அவனிடம் விவரங்கள் கேட்ட பின்...'' கணேசபட்டரின் முகம் சுருங்கியது.



## 19

கணேசபட்டர் தொடர்ந்து... ''அவனைப் பிழைக்க வைத்து அவனிடம் விவரங்கள் கேட்டபின்னர் தான் தண்டனை அளிப்பார்கள்,'' என்றார்.

அபிமதி, ''குந்தவையத்தை! குந்தவையத்தை!'' என்று பரிதாபமாக கரத்தைப் பற்றிப் பிடித்து கெஞ்சத் துவங்கினாள்.

''பட்டரே, எனக்கு மிகுந்த குழப்பமாக இருக்கிறது.''

''எனக்குத் தெளிவாக இருக்கிறது குந்தவைப் பிராட்டியாரே!''

''என்ன தெளிவு?''

''சேரநாட்டு ஒற்றன், சதிகாரன் அரண்மனைக்குள் தான் இருக்கிறான். ஆனால் அது வசந்தகுமாரனில்லை.''

''பின் யார்?''

''வசந்தகுமாரன் பிழைத்தால் தெரிந்துவிடும் குந்தவைப் பிராட்டியாரே, அவன் மின்னல்போல் செயல் பட்டான். எங்கோ தளிச்சேரிப் பெண்கள் பக்கம் நோக்கிக் கொண்டிருந்தவன், எங்கிருந்தோ தான் அந்த அம்பு பாய்ந்திருக்க வேண்டும். அதைக் கவனித்து உடனே அரசரின் மேல் பாய்ந்து தடுத்திருக்கிறான்.''

''பட்டரே, எய்தது யார் என்று அவனுக்குத் தெரிந்திருக்கையில், உம் வசந்தகுமாரனைப் பிழைக்க வைப்பார்களா? சாக வைப்பார்களா?''

கணேசபட்டரின் முகம் சுருங்கியது. ''ஆம் தேவி! இப்படி ஓர் அபாயம் உள்ளதே! ஆதுர சாலையில் அவர்கள் குமாரனைப் பிழைக்க வைக்க மாட்டார்கள். கொன்று விடுவார்கள்.''

''அதற்குமுன் நீர் செல்ல வேண்டும்.''

கணேசபட்டருக்கு இப்போது வசந்தகுமாரனைப் பற்றிய கவலை அதிகரித்துவிட்டது. ''என்ன ஒரு மூடத்தனமான காரியம்செய்துவிட்டோம். வசந்தகுமாரனை அவர்கள் விட முறிவுக்கு அழைத்துச் செல்ல அனுமதித்தது தப்பு. வசந்தகுமாரன் உயிருடன் இருப்பதில் பலருக்கு ஆபத்து இருக்கிறது. இந்த எளிய உண்மை புரியாமல் இருந்து விட்டேனே! மூர்க்கன் நான்!'' என்று தன்னைத் தானே கடிந்து கொண்டார் பட்டர்.

குந்தவைப் பிராட்டியாரிடம் ''தேவி, அரண்மனை ஆதுர சாலை எங்கிருக்கிறது? நான் விரைவில் செல்ல வேண்டும்.'' பட்டோலை அதிகாரியை விளித்து, ''பட்டருக்கு ஆதுரசாலைக்கு மார்க்கம் சொல்,'' என்றார்.

''நேர்முகமாகச் சென்று அத்தாணி மண்டபத்தையும் பட்டி மண்டபத்தையும் கடந்து, கலாசாலையைக் கடந்து...''

''இரும், இரும். பட்டோலை என்னுடன் வந்து அடையாளம் காட்டும். நீர் சொல்லும் வழி குழப்பமாக உள்ளது,'' என்றார் பட்டர்.

பட்டோலை அதிகாரியுடன் கணேசபட்டர் செல்லும் போது பின்னே இருவர் தொடர்வதைக் கண்டார்.

குந்தவைப் பிராட்டியாரின் திருமாளிகையை விட்டுப் படிகளில் இறங்கும்போது உடன் தொடர்ந்த இருவரை, தெறித்தவில்லிகளின் குழுவில் பார்த்த நினைவு வந்தது பட்டருக்கு. ''ஆதுர சாலைதானே



செல்ல வேண்டும். நாங்கள் அழைத்துச் செல்கிறோம் பட்டோலை,'' என்றனர்.

அரண்மனையின் உள் சாலையில் பலர் பட்டரை கண்டு வணங்கினர். வித்துவாம்சர்களின் இருக்கைகளைக் கடக்கும்போது, ''பட்டரே, மாலை வந்து சேரும்,'' என்று விளித்தனர். அவர்களின் இல்லங்களில் குழலும், சலங்கையும் ஒலித்தன. பட்டருக்கு அதையெல்லாம் கவனிக்க நேரமில்லை. அவர்கள் ஆதுர சாலையை அடைந்தபோது அந்த இல்லத்தில் யாரும் இல்லை.

வாயிற்காவலன், ''பணி முடிந்து அவர்கள் உணவுக்குச் சென்றிருக்கிறார்கள்,'' என்றான்.

''இங்கே வசந்தகுமாரன் என்று ஓர் இளைஞனை விட முறிவுக்காக அழைத்து வந்தார்களா?''

''அய்யா, யான் ஏதும் அறியேன், கேவலம் ஒரு காவலன் யான்.''

''உள்ளே யாரும் படுத்திருக்கிறார்களா?''

''ஆம். அடுக்களைப் பூனை மட்டும்,'' என்று சொல்லிச் சிரித்தான்.

கணேசபட்டர் கவலையுடன் வெளியே வந்து, ''அருகே வேறு ஏதேனும் ஆதுர சாலை உள்ளதா?''

''உள்ளது. அரண்மனை வளாகத்துக்கு வெளியே சுந்தரசோழ விண்ணகர ஆதுரசாலை நகரப்புறத்து தளிச்சேரி அருகில்.''

''தெரியும்'', என்றார் பட்டர். ''அங்கே கொண்டு சென்றிருந்தால் அவன் இந்நேரம் இறந்திருப்பான்,'' என்றார்.

''எவன்?''

''எம் நண்பன் வசந்தகுமாரன்.''

''பட்டரே, நான் பிராட்டியாரிடம் என்ன சொல்வது?''

''பட்டரின் நண்பன் ஆதுர சாலையில் இல்லை என்றும், மிகவும் கவலைப்படுவதாகவும் சொல். இளவரசி அபிமதிக்கும் செய்தி அனுப்பிவிடு,'' என்றார்.

கோயிலுக்கு உண்டான கற்களை மெல்ல மெல்ல எருது பூட்டிய வண்டிகளில் எடுத்து வந்து கொண்டிருந்தார்கள். ''எப்போது கல் உருட்டி எப்போது கோயில் கட்டி முடியுமோ?'' என்று ஒருவன்

அங்கலாய்த்துக் கொண்டிருந்தான். அவன் பெயர் குணநிதி.

''பட்டரே, நலம் தானே? எங்கே இவ்வழி வந்தீர்?''

''ஏன் கேட்கிறாய் குணா? என் நண்பன் வசந்தகுமாரனைத் தேடிக் கொண்டிருக்கிறேன். அவனை மரணத்தின் பிடியில் இருந்து மீட்க வேண்டும்.''

''பட்டரே, எங்களை மரணத்தின் பிடியிலிருந்து யார் மீட்பார்?'' என்றான் குணநிதி. அவன், ஒட்டிய கன்னமும் குழிவிழுந்த கண்களுமாக உடல் மெலிந்திருந்தான்'' ஆனால் கண்களில் ஒரு பிரகாசம் தெரிந்தது.

''என்ன சொல்கிறாய் குணா?''

''பேரரசரிடம் தாங்கள் இதைச் சொல்லியாக வேண்டும். கோவில் கட்டுகிறேன் என்று இந்த நாட்டில் நடக்கும் அக்கிரமங்கள் பற்றி அறிவீரா பட்டரே? பெரிய கோயில் பணிகள் நடைபெற முப்பத்தைந்து கிராமங்களை சர்வமானியமாக்கி விட்டதில் நாங்கள் எல்லாம் இழந்து விட்டோம் பட்டரே இப்போது கூலிக்குக் கல் உருட்டிக் கொண்டிருக்கிறோம்.''

கணேசபட்டர், ''இதோ பார் நான் பிரம்மதேயக்காரன். உன் வெள்ளான் வகை எழுவித்துண்ணும் நிலங்களைப் பற்றி எனக்கு ஏதும் தெரியாது.''

''பட்டரே, இதைப் பேரரசரின் காதில் போட்டு வையுங்கள். கோவில் பணியில் நடக்கும் அக்கிரமங்களை அவர் அறியவேண்டும். புஞ்சை நிலத்தை வெள்ளான் வகையாகக் கொடுத்து நாங்கள் காடு, கழனி திருத்தி நஞ்சையாக்கும்போது அவைகளை நிமந்தப் படிக்கும், தீபாராதனைப் படிக்கும் கோயில் காணியாக எடுத்துக்கொண்டு விடுகிறார்கள். பெரிய கோயில் கட்டி முடிப்பதற்குள் இன்னும் எத்தனை ஏழைகள் நிலமிழக்கப் போகிறார்களோ! பட்டரே, இதைப் பேரரசரின் காதில் போட்டு வையும். பொறுமையை விரைவில் இழந்து கொண்டிருக்கிறோம் என்று.''

கணேசபட்டர் ''நான் பேரரசரை அடுத்த முறை தரிசிக்கும்போது சொல்கிறேன் குணநிதி. இப்போது என் கவலையெல்லாம் வசந்தகுமாரன் மீது.''

குணநிதி அவர் சொன்னதைக் கவனிக்காமல் தொடர்ந்து, ''பேரரசரிடம் சொல்லும். இவ்வாறு நிலைமை தொடர்ந்தால் அது எங்கு சென்று எதில் முடியும் என்று.''



பட்டர் இப்போது அவனை உற்றுப் பார்த்து, ''குணநிதி, நீ என்ன அரசை அச்சுறுத்துகிறாயா?''

''உழவர்கள் அனைவரும் பதற்ற நிலையில் இருக்கிறார்கள். கோயில் கட்டுவதில் பலருக்கு இன்னல்கள் அதிகம். பேரரசரின்பால் எங்களுக்கும் மரியாதையும் மதிப்பும் அதிகம்தான் பட்டரே! தன் முன்னோர் மேல் மிக்க மதிப்புள்ளவர்தான். அருங்குணங்கள் அமையப்பட்டவர்தான். திருப்பதிகங்களை விண்ணப்பம் செய்கிறார். கடவுளருக்கும் முன்னோருக்கும் கைங்கர்யங்கள் பலதும் செய்கிறார். எம்போன்ற ஏழை மக்களையும் கொஞ்சம் கனிவுடன் நோக்கச் சொல்லும்.''

''குணநிதி, இதையெல்லாம் நீ உங்கள் ஊர் மன்ற நடுவிருக்கைகளிடம் முறையிட வேண்டியதுதானே?''

''ஏன் கேட்கிறீர், நடுவிருக்கையும் கிராமத்து வாரிய உறுப்பினர். அனைவரும் மூலப் பரிசையருடன் இணைந்து கிராமத்தைக் கெடுத்து விடுகிறார்கள். பிடாரியூருக்குப் போகும் வழியில் கீழ்பாகம் கொடுத்தோம். பரஞ்சரா வள்ளி நிலத்தைப் புஞ்செய் நீக்கி நஞ்செயாய்க் கொடுத்தோம். போர் வீரருக்கு ஊதியமெல்லாம் கோவில் வருமானத்திலிருந்து தரப்படுகிறது. கோயில் வருமானமெல்லாம் எங்கள் நிலங்களை - கிராமத்தைப் பறித்துக் கொடுக்கப்படுகிறது. பட்டரே, நிலைமை சீர் கெட்டுக் கொண்டிருக்கிறது.''

''நான் இதை மற்றொரு வாய்ப்பு வரும்போது பேரரசரிடம் சொல்கிறேன்.''

அவன் தன் எருது வண்டியைத் தொடர்ந்து செல்ல, கணேசபட்டருக்கும் குணநிதியின் பேச்சு அச்சமளித்தது. ஏதோ மௌனமாக ஏழை மக்களிடம் ஒரு குறை இருக்கிறது போலத் தோன்றியது. பேரரசரின் கவனத்திற்கு இதைக் கொண்டு வரவேண்டும்.

இப்போது ''பட்டரே...'' என்று தெரிந்த குரல் கேட்க, திடுக்கிட்டுத் திரும்ப-

வசந்தகுமாரனை ஒரு குதிரையின்மேல் பிணைத்து நடத்தி அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள்.

''வசந்தகுமாரா, பிழைத்து விட்டாயா?''

''விடமுறிவு கொடுத்து பிழைக்க வைத்தோம். விடம் அதிகம் உட்புகவில்லை,'' என்றான் காவலன்.

கணேசபட்டர் அவனுடன் நடந்தார்.

''பிழைத்தேன் பட்டரே, என்ன ஊரெல்லாம் சுற்றி வருகிறீர் மேதிபோல. என்னைப் பிழைக்க வைத்ததும் பற்பல வினாக்கள் கேட்டார் தண்டலதிகாரி.''

''என்ன சொன்னாய்?''

''உண்மையை''

''உண்மை என்ன?''

''நான் சேரநாட்டு ஒற்றன் என்பதே உண்மை பட்டரே!''

''குமாரா, என்ன சொல்கிறாய்?''

வசந்தகுமாரன் யாரும் பாராத போது கணேசபட்டரின் கையில் ஒரு பொருளை வைத்தான்.

அபிமதிக்கு உறக்கம் வரவில்லை. சின்னக் குந்தவையும், சாளுக்கிய விமலாதித்தனும் அவளைப் பார்க்க வருவதாகச் செய்தி அனுப்பி இருந்தார்கள். அபிமதிக்கு வியப்பாக இருந்தது.

''சாளுக்கியன் உன்னைச் சந்திக்க வருகிறான் அபிமதி. அலங்காரங்கள் செய்து கொள். அணிகலன்கள் ஏதும் வேண்டுமா, சொல்,'' என்றார் பிராட்டியாரான லோகமாதேவியார்.

அபிமதி, ''தாயே, நான் என்ன பாவம் செய்தேன்? எப்படி என் விருப்பமின்றிக் கல்யாணம் செய்விப்பீர்?''

''உன் விருப்பம் ஏதும் இதில் தேவையில்லை அபிமதி. உன் நலன் எங்களுக்குத் தெரியும். பெரிய தாயாரையே பார்! பிரான் மகள் சோழ மாதேவியாரைத் தான் மணந்திருந்தார் பேரரசர். என்னைக் கண்டதுமே மணம் புரிய விரும்பினார். அதைவிட பாக்கியம் இருக்கமுடியாது என்று நான் சம்மதித்தேன்.''

''சாளுக்கிய மன்னனை மணப்பதில் எனக்கு விருப்பமில்லை, அவ்வளவே!''

''சேரநாட்டு ஒற்றனை மணக்க விரும்புகிறாயா துரோகிப் பெண்ணே!'' என்றார் லோகமாதேவி.



# 20

''நீ அந்தச் சேரநாட்டு ஒற்றனை மணக்க விரும்புகிறாயா?'' என்று லோகமாதேவியார் கேட்க-

''நான் அப்படிச் சொல்லவில்லை.''

''அவனை இந்நேரம் கொலைக்களத்துக்கு அழைத்துச் சென்றிருப்பார்கள்.''

இவள் சொல்லி முடிப்பதற்குள் சின்னக் குந்தவையும் சாளுக்கிய விமலாதித்தனும் அவ்வறைக்குள் வந்து லோகமாதேவியை வணங்கினார்கள்.

''தேவி யாவும் நலமா?'' என்றான் சாளுக்கிய விமலாதித்தன்.

''விமலா, உன்னை மணம் புரிய அபிமதி தயங்குகிறாள்.''

சிறிய குந்தவை அபிமதியை வெறித்துப் பார்த்தாள்.



# 23

சோழப் பேரரசர் அருண்மொழித் தேவர் ராசகேசரி ராஜராஜசோழர் தன்னைத் தேடி காராக்கிருகத்துக்கு வந்திருக்கிறார் என்பதை வசந்தகுமாரனால் நம்ப முடியவில்லை.

''பேரரசே, திருமகள் போல பெருநிலச் செல்வம் முழுதும் தனக்கே உரிமை பூண்ட தாங்கள் இந்த ஏழை ஒற்றனை...''

''சம்பிரதாய வார்த்தைகளுக்கெல்லாம் எனக்கு நேரமில்லை. உன் பெயர் என்ன சொன்னாய்?''

''வசந்தகுமாரன்.''

''வசந்தகுமாரா, நீ ஒற்றனில்லை. எனக்குத் தெரியும். நான் ஒன்றும் அத்தனை மூர்க்கனில்லை. தொண்ணூறு புண்களை மார்பில் கொண்ட விஜயாலயரின் காலத்திலிருந்து பரந்து விரிந்திருக்கும் சோழ வளநாட்டை ஆள்பவனுக்கு கொஞ்சம் விவேகமும் வேண்டும் அல்லவா?



என்னைக் கொல்ல ஒரு சதி நிகழ்கிறது என்பது உண்மை தான். சதிகாரருக்குச் சற்றேனும் ஐயம் ஏற்படாதவாறு பழியை உன்மேல் திசைதிருப்பி உனக்குத் தண்டனை அறிவித்துவிட்டு அவர்கள் திட்டத்தை சற்றே காலந் தாழ்த்தியுள்ளேன். வசந்தகுமாரா, என் பேரவையில் உள்ள அத்தனை அதிகாரிகளில் மாதண்ட நாயகர் நீலவண்ணனைப் போய் நீ பழி சுமத்துவது எனக்கு வியப்பாக இருக்கிறது. சரியாகப் பார்த்தாயா? என்ன பார்த்தாய் சொல்?'' என்றார்.

வசந்தகுமாரன் உற்சாகமடைந்து, ''பேரரசே எனக்கு நிகழ்ந்த அத்தனை சம்பவங்களையும் சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். தயைகூர்ந்து கேளுங்கள். பத்து மஞ்சாடிக்கு ஒரு குதிரைவீதம் என்னிடம் ஒரு யவனன் பரி விற்க வந்தான். பேராசைப்பட்டு அவனைத் தளிச்சேரிப் பெண்டுகளிடம் கொண்டு சென்றேன். குதிரைகள் மரக்கலத்தில் இருந்தன. யவனன் அந்தப் பதியிலார் இல்லத்தில் உயிர் நீத்தான். முதுகில் சிற்றம்பு தாக்கியிருந்தது. தங்களுடைய எய்படை, எறிபடை வீரர்களின் தனிப்பட்ட ஆயுதங்களில் ஒன்று இந்த மொட்டம்பு. நான் அச்சமுற்று கணேசபட்டர் சொற்படி ஸ்தலத்தைவிட்டு விரைவில் நீங்க, அதாவது ஓடிப்போக, கடற்கரையில் மரக்கலத்தில் யவனனின் குதிரைகளைத் திருட்டுத்தனமாக இறக்கிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன்.

''யார் என்று தெரிந்ததா?'' எனக் கேட்ட பேரரசரின் முகத்தில் கவலை பிரதிபலித்தது.

''இல்லை பேரரசே! அதைக் கண்டு கொள்ளத்தான் முயன்றேன். புகாரில் ஒரு செல்வந்தரின் இல்லம்போல் தோன்றியது. அங்கே 'ஸ்ரீபலிக்குள் காரியத்தை முடித்துவிடு' என்று ஓர் இலச்சினையைப் பற்றிப் பேசிக்கொண்டார்கள். அரண்மனை உள்சுற்றில் அனுமதி பெற 'திரிபுவனாங்குச' என்கிற தங்கள் மெய்க்கீர்த்தி அமைந்த இலச்சினையைப் படியெடுக்க ஒருவன் பணிக்கப்பட்டான். அவன் சேரநாட்டுக்குத் தப்பிவிட குதிரையும் வழிச்செலவும் கூலியாகக் கேட்டான். அவர்களிடம் அகப்பட்டுத்தப்பித்து ஓடும்போது மீண்டும் என் முதுகில் விடஅம்பு பாய்ந்து மயங்கி விழுந்தேன் அதன்பின் பல்வேறு குழப்பங்கள் ஏற்பட்டு இறுதியில் சேரநாட்டு ஒற்றன் என்னும் பழி என் தலைமீதே விழுந்து, நான் தங்கள் முன் கொண்டுவரப்பட்டபோது அன்று புகாரில் கண்ட ஒருவனின் சதிமுகத்தைத் தங்கள் தெறித்த வில்லி திருமெய்க்காப்பாளர் படையில் பார்த்தேன். அவன் தங்கள் மேல் அம்பெய்யப்

பிரயத்தனப்பட நான் குறுக்கே பாய்ந்து தடுத்து வி முயற்சித்தேன். அம்பு என் முதுகில் பட்டது. ஆனால், தங்கள் நான் தாக்க வந்ததாகவும் என்னைத் தடுக்க என்மேல் அம்பெய்யப் பட்டதாகவும் சாமர்த்தியமான கதையைத் திரித்து விட்டார் தங்கள் மாதண்ட நாயகர்.''

''அதை நான் நம்பவில்லை வசந்தகுமாரா. ஆனால், அந்த சபையில் நம்புவதாக நாடகமாடினேன். எனக்கு, நீலவண்ண மாதண்ட நாயகரை அந்தப் புகார் சதிக் கூட்டத்தில் பார்த்தாய என்பது தெளிவாகத் தெரிய வேண்டும், சொல்.''

''அத்தனைத் தெளிவாக நினைவில்லை. என் ஆசான் இதுபற்றி தெளிவாக இருக்கிறார். அவரிடம் ஏதோ சான்றுகள் உள்ளன.''

''உன் ஆசானையும் கேட்கிறேன். கவலைப்படாதே!''

''பேரரசே, என் மரண தண்டனை?''

''உனக்கு மரணமில்லை. விடுவிக்கப்படுவாய். ஆனால் சில தினங்களுக்கு தலைமறைவாய் இரு. உனக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டு விட்டதாக எண்ணம் எழுமாறு செய்கிறேன். அரண்மனையில் உனக்கென்று தனி அறை ஒன்று தருகிறேன். மறைவிடம் தருகிறேன். தக்க தருணத்தில் சதிகாரர்களைக் கட்டிக்காட்ட உன் உதவி எனக்குத் தேவைப்படும்.''

''அரசே செழியரைத் தேசு கொண்ட கேசரிவர்மகோவி ராஜகேசரி வர்மன் தாங்கள், மலைநாட்டு சேரமானையும் அறிந்திருக்கிறீர்கள். தங்கள்பால் அண்டை நாட்டு மன்னர்கள் பல அழுக்காறும் விரோதமும் கொண்டுள்ளார்கள். தாங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியது இன்றியமை யாதது, நான் தங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.''

''வசந்தகுமாரா, உன்போல் இளைஞர்கள் என்னைச் சுற்றிலும் இருக்கையில் எனக்குக் கவலையில்லை. கேள், உனக்கு யாரையாவது சந்திக்க வேண்டுமா? உம் ஆசான் பட்டரை?''

''தங்கள் ராஜசபையில் அபிமதி என்ற மூதாட்டி யாரேனும் உள்ளனரா?''

''ஆம். மாதேவியின் தங்கை மகள். அவள் மூதாட்டி இல்லையே!''

''அவர்களிடம் என் பொருள் ஒன்று அகப்பட்டுக் கொண்டுள்ளது. அவகாசம் கிடைத்தால் அவர்களைத் தரிசிக்க.''



''அவள் இளம்பெண். மேலைச் சாளுக்கிய மன்னன் விமலாதித்தனை மணம் புரியப் போகிறாள்.''

''வாழ்க!''

''அவளை நீ நபும்சக வேடமணிந்து கடத்தியதாகக் கேள்விப்பட்டேன்!''

''அப்படி மற்றொரு அபாண்டப்பழி சுமந்து கொண்டிருக்கிறேன் மாமன்னவா. ஓர் ஆடவன் எத்தனை பழிதான் சுமக்க முடியும்?''

''இளைஞனே, அபிமதியைச் சந்திக்க ஏற்பாடு செய்கிறேன். சற்று நேரத்தில் காவலர்கள் உன்னை விடுவிப்பார்கள்'' என்று பேரரசர் விடைபெற்றுச் சென்றபோது அவருடன் வந்த மெய்க்காப்பாளர்களில் ஒருவன் ''உனக்கு கிடைத்தது நல்லூழ் வசந்தகுமாரா!'' என்றான்.

''ஓ! நல்லூழ் என்றதும் நினைவு வருகிறது. போகிற போக்கில் நெடுகூழ் என்கிற அமுதபானம் அரண்மனையில் செய்கிறார்கள். பலவும் நறவும் சற்றே புளிக்க வைத்த கள்ளும் ஈயலும் கலந்து ஒரு மாதிரி ஆளை வீழ்த்தும். அது ஒரு சிறு கலயத்தில் கொண்டு வருமாறு பேரரசர் பணித்ததாகச் சொல்லப்பா மகனே, உன் பெயர் என்ன இலகுளீசனா!''

''இல்லை. நல்லான்.''

''பார்த்தால் இலகுளீசன் போல இருக்கிறாய். பிழி நினைவிருக்கட்டும்.''

பேரரசர் சென்ற அதே நேரத்தில் தஞ்சை நகரில் மற்றொரு பகுதியில் மாதண்ட நாயகர் நீலவண்ணர் நித்ய நாதர் இல்லத்தில் இருவர் முகத்திரை மறைத்து இங்குமங்கும் நோக்கிக் கொண்டு உட்சென்றனர். அவர்கள் திருமெய்க்காப்பாளர்களின் தெறித்த வில்லிப்படைகளைச் சார்ந்தவர்கள்.

உட்சென்றதும் போர்வைகளை விலக்கிவிட்டு தலைமுடியை சரிசெய்து கொண்டு நீலவண்ணர் வரக் காத்திருந்தனர். அவர்கள் பேசிக்கொள்ளவில்லை. மாதண்டநாயகர் வந்த உடனே சாளரங்களையெல்லாம் மூடிவிட்டு, ''என்ன வசந்தகுமாரன் தலை கொய்யப்பட்டதா?''

''பிரபோ, நம் தலைக்கே ஆபத்து.''

''என்ன சொல்கிறாய்? தண்டனை அளிக்கப்பட்டு விட்டது இன்னேரம் பரலோகம் போயிருப்பானே!''

''சதிகாரன் அவனில்லை என்று பேரரசருக்குத் தெரிந்து விட்டது. அவனை விடுதலை செய்து மறைவிடத்தில் வைக்கப் பணித்திருக்கிறார்.''

''அப்படியா! இது எவ்வாறு நிகழ்ந்தது?''

''பேரரசரின் புத்திவன்மையை நாம் சரியாக மதிப்பிடவில்லை. இப்போது நாம் நம் அனைத்துச் செயல்களையும் நிறுத்திவிட்டு சில தினங்கள் நல்லபிள்ளைபோல வேடமெடுத்துக் கொள்வதுதான் உத்தமம். இல்லையேல் அழிவோம்.''

நீலவண்ணர் அந்த உபதேசத்தை கேட்பவர்போலத் தோன்றவில்லை. அவர் சிந்தனையில் நெற்றி நரம்புகள் புரண்டன. நாசி துடித்தது. கண்களில் குரோதமும் வெற்றியின் மிக அருகே வந்து தோற்றவனின் ஆதுரமும் தெரிந்தன.

''மற்றொரு ஸ்ரீபலிக்குக் காத்திராமல் காரியத்தை உடன் முடித்து விடுவது மற்றொரு சாத்தியம் அல்லவா?''

''என்ன சொல்கிறீர் பிரபோ, நீலவண்ணரே?''

''பேரரசர் இன்று சாளுக்கிய மன்னனுடன் திருமணம் பேச வருகிறார். அந்தத் தருணத்தில்.''

மாதண்ட நாயகன் தன் இடுப்பு வஸ்திரத்தில் செருகியிருந்த குறும்பிடியை அருகாமையில் உள்ள திரைச்சீலையின்மேல் எறிந்தார். அந்தச் சிறு வாள் திரையைக் கிழித்துக்கொண்டு பாய்ந்தது.

''இன்றே காரியத்தை முடித்து விட வேண்டும். இனி தாமதித்துப் பயனில்லை. உடன் பாஸ்கரவர்மனுக்கும் பாண்டிய மன்னனுக்கும் இரகசியம் அனுப்பிவிடு'' என்றார்.

வசந்தகுமாரன் சற்று தள்ளாட்டத்துடன் அந்த அரண்மனைக்குக் கொண்டு வரப்பட்டான். இளவரசி அபிமதிக்கு மகிழ்வூட்ட அரசவை இசைக்கலைஞர்கள் மிடற்றுக் கருவியும் நம்புக்கருவியும் இழைய சாதிக்கிரியை செந்துறை என்கிற இசைப்பாவை நரம்பை அகமும் புறமுமாக உராய்ந்து சுட்டுவிரலாலும் பெருவிரலாலும் செய்த ஜாலமெல்லாம் அபிமதிக்கு ஏற்கவில்லை. அவள் துன்பம் தான் அதிகரித்தது. வசந்தகுமாரனுக்காக அவள் கண்களின் ஓரத்தில்



ஒரு கண்ணீர்த்துளி புறப்பட்டு பெரிதாகத் திரண்டு இயல்பாகக் கன்னங்களில் உருண்டு மார்பில் பட்டுத் தெறித்தது.

''இளவரசி, தங்களைப் பார்க்க ஒருவர் வந்திருக்கிறார்'' என அங்கமாலை சொல்ல-

''யாராக இருக்கும்! பாழாய்ப்போன சாளுக்கிய மன்னனாகத்தான் இருக்கும்'' என்று திரும்பியதில்-

''யார் இவன்?''

''இளவரசி! நான்தான் வசந்தகுமாரன். தேவலோகத்திலிருந்து அனுமதி பெற்று தங்களைக் காண வந்திருக்கிறேன்!''

அபிமதி அவனை அணைத்துக் கொள்ள ஓடோடிவந்து பாதியில் நின்றுவிட்டாள்.

வசந்தகுமாரனுக்கு அருகில் சாளுக்கிய விமலாதித்தனும் உடன் வந்திருந்தான்.



# 24

வசந்தகுமாரன் தனக்குப் பின்னால் சாளுக்கிய விமலாதித்தன் வந்து கொண்டிருந்ததை கவனிக்கவில்லை. அபிமதியைக் கண்ட உற்சாகத்தில் அவனுக்கு சூழ்நிலை முழுவதும் மறந்து போய்விட்டது. ''இளவரசி அபிமதி, நான் இன்னும் இறவாமல் உயிருடன் உள்ளேன் எனில் தங்களை அடைவோம் என்கிற நம்பிக்கையே! மணக்கும் கொடியைக் கொண்டு முகிலைக் கடிக்க விழையும், மூங்கிலைக் கொண்டு நிலவை வருட நினைக்கும் கடுவன் போல யான்! தங்களை அடைய முடியுமா? சாளுக்கிய மன்னனை மணக்கப் போகிறீர்களாமே! வாழ்த்துக்கள். எனினும் மன்னருக்கு இதுவரை மூன்று திருமணமாகியுள்ளதாம். என் போன்ற இளைஞர்கள் ஒரு திருமணத்திற்கே....''

அபிமதியின் கண்கள் அவன் அருகில் இருந்த சாளுக்கிய விமலாதித்தனைச் சுட்டிக் காட்ட,



வசந்தகுமாரன் திரும்பி அவனைப் பார்த்து, ''ஓ! தாங்களா! எப்படி... என்ன காரியமாக இங்கு வந்தீர்?''

''உன்னைக் கொல்வது ஒன்றுதான் இன்று காலை என் முதல் காரியம். அபிமதி, இவன் மரணதண்டனை விதிக்கப்பட்ட ஒற்றன், எப்படி இங்கே வந்தான்?''

''எனக்கு என்ன தெரியும்?'' என்றாள் அபி.

''உனக்குத் தெரியும். நீ தான் இவனை விடுவித்து அழைத்து வரச் சொல்லியிருக்கிறாய்!''

''சாளுக்கியரே, யோசித்துப் பாரும். தாங்கள் வரும் சமயத்தில் இது நிகழுமா?''

''புரியவில்லை. நிகழுமா எனில்?''

''முதலில் தமிழ் ஒழுங்காகக் கற்று வாரும், தமிழ்ப் பெண்ணை மணக்குமுன்!''

சாளுக்கிய விமலாதித்தன் மேலும் தயங்காமல் தன் வாளை உருவி வசந்குமாரனை நோக்கி வீச, குமாரன் ஒதுங்கிக் கொண்டு ''இதுதான் உங்கள் தெலுங்கு தேச நியாயமோ? நிராயுதபாணியை வாள் வீசிக் கொல்வது?''

''ஒற்றனைக் கொல்லலாம்.''

''இதையேதான் நேற்றும் சொன்னீர்.''

விமலாதித்தன் கடும் கோபம் கொண்டு, ''இவன் ஏன்இன்னும் உயிருடன் இருக்கிறான்? இவனுக்கு மரண தண்டனையல்லவோ அளிக்கப்பட்டது? காலையே நிறைவேறியிருக்க வேண்டுமே! எங்கே மாதண்ட நாயகர்?''

''மாமன்னர் உத்தரவு மகப்பிரபோ'' என்றான் காவலதிகாரி ஒருவன்.

மாமன்னரின் பெயரைக் கேட்டதும் சாளுக்கியன் சற்றுத் தயங்கி, ''எங்கே உத்தரவைக் காட்டும்?''

இலச்சினை பதித்த அந்த ஓலையை அந்த அதிகாரி காட்ட, ''விந்தையாக உள்ளது! உங்கள் சோழ நாட்டில் ஒரு நாள் சிறை, ஒரு நாள் மரண தண்டனை, ஒரு நாள் விடுதலை.. என்ன ஒரு நீர்க் கோல மனம்!''

''சாளுக்கியனுக்கு என்று தீர்மானித்துவிட்ட நிலையில் அவனுக்கு பரிசளிக்கப்பட்ட பொருளை அவன் கவர்ந்து செல்கிறான். தெலுங்கு மன்னர்களின் முரட்டு நியாயம்!''

''என்ன சொல்கிறீர் பட்டரே! பெண், ஒரு பரிசுப் பொருளா?''

''அரசியலில் அவள் அப்படித்தான்.

''கவலைப்படாதே! மாமன்னர் இந்தச் சிறுபிள்ளைக் காரியத்துக்கு சாளுக்கியனைக் கடிந்து இளவரசியை மீட்பார்.''

''அபிமதியை எங்கே கொண்டு போயிருப்பார்கள்? விசாரணை செய்து பாருமே!''

''சாளுக்கியன் தாமதிக்கும் விடுதிக்குத்தான். இல்லை, அவன் நாட்டுக்கே கொண்டு செல்லலாம்.''

அவர்களை நோக்கி குதிரைவீரன் ஒருவன் வந்து இறங்கி, பட்டரை வணங்கினான். அவன் ஒரு திருவாய்க்கேள்வி.

''மாமன்னர், கணேசபட்டரையும் வசந்தகுமாரரையும் உடனுக்குடன் அந்தரங்க சபைக்கு அழைத்துள்ளார்.''

வசந்தகுமாரன், ''அவர்கள் வர மறுத்துவிட்டார்கள் என்று மன்னரிடம் போய்ச் சொல்லும்'' என்றான்.



## 26

கணேசபட்டர் கலக்கமுற்று, ''வசந்தகுமாரா, என்ன பேச்சு பேசுகிறாய்? பேரரசர் கூப்பிட்டனுப்பினால் செல்ல வேண்டியது நம் கடமை. வா'' என்றார்.

''பின் என்ன? கண்ணுக்கு முன் இளவரசியைக் கடத்திச் செல்கிறார்கள். மீட்க எதுவும் செய்யாமல் என்ன இது அநியாயம்?''

''அதையும் பேரரசரிடம் சொல்லலாமே! அவர் விளிக்க நாம் செல்ல மறுப்பது ராஜகுற்றம்.''

''அநியாயம் அநியாயம்! அன்பரே, திருவாய்க் கேள்வியாரே! தங்கள் பாதுகாப்பில் பெண்களை வவ்விச் செல்வார்களா?''

''வவ்வி என்றால்?''

''கவ்வி. நீரென்ன திண்ணைப் பள்ளிக்கும் சென்றதில்லையோ? நெல்லில் ஏதாவது எழுதிப் பழக்கமுண்டோ?''

திருவாய்க்கேள்வி குமாரன் என்ன பேசுகிறான் என்பது புரியாததால் கோபப்படவில்லை. அதற்குள் கணேசபட்டர் அதட்டலாக அழைத்துச் சென்றார்.

சோழப் பேரரசர் தன் பாட்டனாகிய அரிஞ்சயரையும் பெரிய பாட்டியாகிய செம்பியன் மாதேவியையும் நினைவுகூறும் வகையில் மேற்பாடியிலும் திருமுக்கூடலிலும் மண்டபம் கட்டுவிப்பதைப் பற்றி ஆலோசனை நடத்திக் கொண்டிருந்தார். ''வாரும் பட்டரே! வா வசந்தகுமாரனே! உனக்கு ஒரு பொறுப்பளிக்க விரும்புகிறேன்.''

''அதற்குமுன்...''

''குமாரா, வாளாவிரு.''

''பட்டர் சொன்னாரா? உனக்குப் புதிய பொறுப்பு...''

''பொறுப்பாவது நெருப்பாவது! மாமன்னரே, தங்கள் அரண்மனையின் அந்தப்புரத்தில் நிகழ்ந்தது தங்களுக்குத் தெரியுமா?''

''அபிமதியைச் சாளுக்கியன் அழைத்துச் சென்றதைத் தானே சொல்கிறாய்.''

''அழைத்துச் சென்றானா! பலவந்தமாக மூன்று சாளுக்கிய சுவான புத்திரர்கள் கட்டிப்பிடித்துக் கடத்திச்...!''

''வசந்தகுமாரா, சக்கரவர்த்திமுன் எப்படிப் பேசுவது என்கிற ஒழுங்கு தெரியாமல்...'' என்று பட்டர் அழுத்தமாகச் சொன்னார்.

''சுவான புத்திரர்கள்! நன்று.'' என்று மாமன்னர் நகைத்தார். ''பட்டரே, உம் நண்பனை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. தக்க முறையில் சினத்தை வெளிப்படுத்துகிறான்.''

''பேரரசே, இளவரசி அபிமதியை மீட்க ஏதும் முயற்சிகள் எடுக்கப்பட்டனவா? எத்திசையில் சென்றிருக்கிறார்கள் எனத் தெரிந்தால் நான் போய் மீட்டு வருவேன்.''

''என்ன விந்தை! அவள் சாளுக்கியன் மனைவி. அவனை அழைத்துச் சென்றிருக்கிறான்.''

''பலவந்தமாக....!''

''இதெல்லாம் அரசர்களிடையே இயல்பான காரியம் இளைஞனே!''



வசந்தகுமாரன் வியப்புடன் நோக்க, பேரரசர் அருகிலிருந்த அதிகாரியிடம் ''கொல்லி மழவன் ஒற்றியூரன் பிருதி கண்ட வர்மன் கப்பம் செலுத்தினானா?'' என்றார். அவர் அபிமதியை மறந்து விட்டதாகத் தோன்றியது.

''இம்முறை செலுத்தவில்லை மகாசக்கரவர்த்தி. கொங்கு நாட்டிற்குப் படைகளை அனுப்ப உத்தரவு வேண்டும்.''

ராஜராஜ சக்கரவர்த்தி, கணேசபட்டரை நோக்கி ''என்ன பட்டரே, அனுப்பி விடுவோமா. பிருதிகண்டவர்மனை உமக்குத் தெரியுமா?''

பட்டர், ''பேரரசே, கொல்லி மழவன் தங்கள் தந்தை சுந்தர சோழருக்கு ஈழத்தில் போர் புரிந்து உயிர் துறந்தவர் என்பது தங்களுக்கு நினைவிருக்கிறது என எண்ணுகிறேன். அவர்கள் சோழப் பேரரசர்கட்கு உண்மையன்புடையவர்கள்.''

''பட்டர் சொல்வதும் உண்மையே. பட்டரே, உம் நினைவாற்றலை வியக்கிறேன். இந்த இளைஞனின் வருத்தம் என்ன, சொல்லும்? சேரநாட்டுக்குத் தூதுவனாவதில் எத்துணைப் பெருமை என்பதைச் சொல்லும்'' என்றார் சக்கரவர்த்தி.

''பேரரசே, சாளுக்கிய விமலாதித்தர் அபிமதியை அழைத்துச் சென்ற முறை இவ்விளைஞனுக்குப் பிடிக்கவில்லை.''

''அப்படியா!'' என்றார் புன்னகையுடன்.

அருகில் இருந்த தண்டலதிகாரி, ''சாளுக்கியர் மிகுந்த சினத்திலிருக்கிறார், பேரரசே! இளவரசி அவரை அவமதித்துப் பேசிய கோபம். தன் படை மெய்க்காப்பு வீரர்கள் நால்வருடன் இளவரசியை சற்று வன்மையாகத் தான் அழைத்துச் சென்றிருக்கிறார்.''

''அப்படியா! சாளுக்கியன் அப்படிச் செய்யமாட்டானே?''

''சோழப் பேரரசின் தலைநகரில், சோழப் பேரரசின் அரண்மனையில், சோழ வீரர்களின் கண்முன் இந்தக் காரியம் நிகழ்ந்திருக்கிறது,'' என்றான் வசந்தகுமாரன். ''நான் பின்பற்றிச் சென்றேன். மறைந்து விட்டார்கள்.''

''பதற்றப்படாதே! அவன் சினத்துக்குக் காரணமுள்ளது. இந்தப் பெண் வாய்த் துடுக்குள்ளவள். திருமணத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதிலிருந்தே அவள் பேச்சும் பாவனையும் சரியில்லை. அதற்குத்தான் தக்க தண்டனையாக சாளுக்கியன்... எதற்கும் ஒரு

காரியம் செய்யும் பட்டரே, நான் கட்டப் போகும் பெரிய கோயிலில் தேவரை எழுந்தருளப் பண்ண அரசூரின் பல்லவரையன் வந்திருக்கிறான். அவனைச் சந்தித்து வழிபாட்டுக்கு நிவந்தங்கள் அளிப்பதாகச் சொன்னது என்ன ஆயிற்று என்பதை...''

''பேரரசே, இளவரசியை விடுவிக்க வேண்டாமா?'' என்றான் வசந்தகுமாரன் ஆச்சரியத்துடன்.

''ஓ! இளவரசி! நான் ஒரு திருவோலை தருகிறேன். அதைக் கொண்டு சாளுக்கியனிடம் காட்டும்!''

''சாளுக்கியர் எங்கிருக்கிறார்?''

''சாளுக்கியன் எங்கே தாமதிக்கிறான்?'' என்று அருகில் விசாரித்தார்.

அப்போது ஒரு திருமெய்க்காப்பு அதிகாரி, பேரரசரின் அருகே வினயமாக, ஆனால் தாழ்ந்த குரலில் சொன்னதைக் கேட்டு, ''அப்படியா! திருபுவன மாதேவியாரிடம் இவனுக்கு என்ன பேச்சு?''

''அங்குதான் இளவரசர் ராசேந்திரருடன் உரையாடச் சென்றிருக்கிறாராம்.''

''அபிமதி எங்கிருக்கிறாளாம்?''

''சாளுக்கிய தேசத்துக்கு அழைத்துச் சென்று விட்டார்களாம்!''

''என்ன?'' பேரரசரின் முகம் சுருங்கியது. ''உடனே விமலாதித்தரை அழைத்து வரச் சொல். இது சற்று அதிகம்தான். மணமாவதன் முன் அரசகுலப் பெண்ணை எப்படி அழைத்துச் செல்லப் போகும்? இப்போது புரிகிறது. என் மகன் மதுராந்தகனிடம் போய் முறையிடச் சென்றிருக்கிறான்.''

கணேசபட்டர், ''எவ்வகையிலும் இது முறையான செயலல்ல, பேரரசே!'' என்றார்.

''இந்தப் பெண்களால் எத்துணை இன்னல்கள்!'' என்றார் சக்கரவர்த்தி.

''எங்கே கொண்டு செல்வான்? புலநாடு, பாகி நாடு என்று வடக்கே நெல்லூருக்கருகில் இவன் மாளிகை உள்ளது. அங்கேதான் முதலில் செல்வார்கள். பட்டரே, உமக்குப் பரமன் மழபாடியானைத் தெரியுமா?''



''அறிவேன் பேரரசே! தஞ்சைக் கூற்றத்து காருகரையைச் சார்ந்தவர்.''

''அவனுக்கு வடபாதைகள் எல்லாம் மிகவும் பழக்கம்.''

''நானும் உடன் செல்கிறேன்,'' என்றான் வசந்தகுமாரன் ஆவேசத்துடன்.

''இரு இளைஞனே. முதலில் சாளுக்கியனைச் சமாதானமாகக் கேட்டுப் பார்க்கிறேன். இதோ என்னை நோக்கி ஒரு படையெடுப்பே வருகிறதே!''

அப்போது சக்கரவர்த்தியைச் சந்திக்க இளவரசரும் சாளுக்கிய விமலாதித்தனும் வந்து வணங்கினர். ''தந்தையே நலமா?'' என்று இளவரசர் வினவ, ''வா மதுராந்தகா*!'' என்றார்.

''பட்டரே, என் மகன் இளவரசனைப் பாரும். நெற்றிக் கண் காணாத மற்றொரு காமவேள் போல உள்ளான். என் தந்தை சுந்தர சோழரின் சாயல் அப்படியே உள்ளது. பரகேசரி இராசேந்திரன் என்று அபிடேகப் பெயர் வைக்கப் போகிறேன். என் அன்பு மகன், இவன் உலகை வெல்லப் போகிறான்!''

சக்கரவர்த்தி சொன்னதற்கு ஈடாக இளவரசர் மிகவும் வனப்புடன் காணப்பட்டார். நீண்டு முடியப்பட்ட குடுமியும், வலுவான தோள்களும் கண்களில் பெண்களுக்குரிய அழகும் ஆணின் புருவ அடர்த்தியும் வசந்தகுமாரனுக்கு அண்மையில் பார்த்த யவன குதிரை வணிகனின் நாசியின் நீர்க்கம் நினைவுக்கு வந்தது. பட்டுப் போர்வை அணிந்து கம்பீர வீர நடையுடன் அனுகி தந்தையை வணங்கி ''தந்தையே, சாளுக்கியன் கோபத்தில் உள்ளான்.''

''விமலாதித்தா, என்ன கோபம் உனக்கு.''

''அபிமதி பேசிய பேச்சால், ஓ! இந்த ஒற்ற துரோகியும் உள்ளானா சபையில்?''

மாமன்னர் புன்னகையுடன், ''என்ன இது! கடிமணம் புரிவதற்கு முன் என் பெண்ணைக் கைப்பற்றிச் சென்று விட்டாயாமே, இது முறையல்ல விமலா.''

''அவள் என்னைப் பேசிய பேச்சும் முறையல்ல சக்கரவர்த்தி.''

''தந்தையே, இந்தத் தருணத்தில் நாம் சாளுக்கிய விமலாதித்தன் விருப்பத்துக்கு ஈடு கொடுப்பது தான் உத்தமம் என்று

* இராசேந்திர சோழருக்கு முதலில் மதுராந்தகன் என்று பெயரிட்டிருந்ததை திருவாலங்காட்டு செப்பேடு கூறுகிறது. S.I.I. Vol. III No. 205 Verse 65)

தோன்றுகிறது,'' என்று அருகில் வந்து சொல்லிவிட்டுத் திரும்பிப் பார்த்து, ''இந்த இளைஞன் தான் வசந்தகுமாரனோ!''

''ஆம். அவனைச் சேர நாட்டுக்கு அனுப்புகிறேன்.''

''மன்னித்துத் திரும்ப அனுப்புகிறோமா?''

''இவன் ஒற்றனில்லை என்பது தெரிந்து போய் விட்டது. இவன் மிகுந்த சாதுர்யமும் பராக்கிரமும் கொண்ட துடிப்புள்ள இளைஞன்.''

''கேள்விப்பட்டேன். ஒருமுறை இவனுடன்நானே வாட்போர் புரிந்தாக வேண்டும்,'' என்றார் இளவரசர். ''என்ன சொல்கிறாய் வசந்தகுமாரா?''

''வாட்போரா! விளங்கவில்லை இளவரசே.''

''இவனுக்கு அபிமதியை விடுவிக்க வேண்டுமாம். காதலாம்!''

இளவரசர், வசந்தகுமாரன் அருகில் வந்து, ''அரச குலத்தைச் சார்ந்த பெண்ணைக் காதல் செய்யக் குடிமகனான உனக்கு உரிமை இல்லை.''

''காதலுக்கு அரசகுலம் என்பது ஏதும் இல்லை இளவரசே! சோழேந்திர சிம்மரே, தாங்கள் முக்கோக்கிழானடிகள் என்கிற பெண்ணைக் கணக்கிடுவது....''

பட்டர் குறுக்கிட்டு ''குமாரா, போதும். பேச்சை நிறுத்து.'' என்று அதட்டினார்.

இளவரசர், ''இவனுடன் போரிட்டே ஆகவேண்டும்?'' என்றார்.

''எனக்கும் விருப்பமாகத் தான் இருக்கிறது. ஆனால் யான் தங்களுக்கு ஈடல்லேன்.''

''வசந்தகுமாரா, எப்போது நீ சேரநாட்டுக்குப் பிரயாணப்பட ஆயத்தமாய் இருப்பாய்?''

வசந்தகுமாரன், ''இளவரசி அபிமதியை விடுவித்த பிறகு நான் சேர நாட்டுக்கென்ன, ஈழ நாட்டிலுள்ள நோரோகண நாட்டுக்கு வேண்டுமெனினும் சென்று வருகிறேன்,'' என்றான்.

சபையில் அமைதி நிலவியது. எல்லோரும் பேரரசரின் முகத்தை நோக்கினார்கள்.



# 27

எல்லோரும் பேரரசரின் முகத்தைப் பார்ப்பதை உணர்ந்து வசந்தகுமாரன் சற்றே அச்சப்பட்டு மெல்ல கணேசபட்டரிடம், ''என்ன பட்டரே, ஏதேனும் தவறாகப் பிதற்றி விட்டேனோ?''

''ஆம். பேரரசர் சத்தியமாகச் சினங்கொள்ளப் போகிறார்?''

அதற்கேற்ப ராஜராஜ சக்கரவர்த்தி மெல்ல வசந்த குமாரனை அணுகி, ''உன் அந்தஸ்துக்கும் வயதிற்கும் கொஞ்சம் அதிகமான... அதையென்ன சொல்வது மதுராந்தகா, துணிச்சலா?''

''பேதைமை'' என்றார் இளவரசர். ''இவனுடன் நேரத்தை வீணாக்குவதில் பயனில்லை தந்தையே!''

''மன்னிக்க வேண்டுகிறேன். நான் ஏதாவது தவறாகப் பேசிவிட்டேனா?'' என்றான் வசந்த குமாரன்.

"அபிமதி என்கிற பெயரை உச்சரிக்கவே உனக்கு உரிமை இல்லாதபோது எப்படி நீ அவளை விடுவிக்கச் சொல்வாய்?" என்றான் விமலாதித்தன்.

இளவரசர், "தந்தையே, இவனுக்கு முக்கியப் பொறுப்பளிக்கக் கூடாது. நாட்டைவிட்டு வெருட்டுங்கள்!"

"இரு, இரு. பதற்றப்படாதே.. என் அருமைப் புத்திரனே!"

கணேசபட்டர், "பேரரசே, வசந்தகுமாரன் பேச்சில் ஏதும் தவறோ விகற்பமோ இருந்தால் அவனுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். அவன் ராஜ விசுவாசத்தைப் பற்றி எள்ளளவும் ஐயமில்லை."

வசந்தகுமாரன், "பட்டரே, நான் ஏதும் தவறாகப் பேசியதாக எண்ணவில்லை. எனக்காக ஏன் தாங்கள் மன்னிப்புக் கேட்க வேண்டும்?"

"பார்த்தீர்களா?" என்றான் விமலாதித்தன். "தவறாக ஏதும் பேசவில்லையாம்!"

"விமலா, அதிருக்கட்டும். எதற்காக அந்தப் பெண்ணை பலவந்தமாகக் கவர்ந்து சென்றாய் என்பது எனக்குத் தெரியவேண்டும்."

"அவள் எனக்கென்று தீர்மானித்து நிச்சயமானவள் அல்லவா!"

"ஆம். ஆனால் இன்னமும் திருமணமாகவில்லை."

இளவரசர் ராசேந்திரன், "தந்தையே, தனக்கென வாக்களிக்கப்பட்ட பெண்ணை சாளுக்கியன் அழைத்துச்செல்வதில் தவறிருப்பதாகத் தோன்றவில்லை."

"அழைத்துச் செல்லவில்லை. காவலர்களைக் கொண்டு கட்டிப்பிடித்து கடத்திச் சென்றார்."

"அந்தப் பெண் வர மறுத்துவிட்டாள். அதனால் அவ்வாறு செய்யச் சொன்னேன்" என்றான் சாளுக்கியன்.

"நீ செய்தது தவறு விமலா! அந்தப் பெண்ணை எங்கே கொண்டு சென்றிருக்கிறாய்?"

"இன்னேரம் நெல்லூர் போய்ச் சேர்ந்திருப்பாள்."

வசந்தகுமாரன் அதைக் கேட்டு மிகவும் கலங்கிப்போய் "பட்டரே, நெல்லூருக்கு மார்க்கம் தெரியுமா தங்களுக்கு? எனக்கு ஒரு புரவி வேண்டும். நான் செல்கிறேன்."



"இரு இரு. பதற்றப்படாதே!"

பேரரசர் மிகவும் நிதானத்துடன், "சாளுக்கியா, நீ செய்த காரியம் தவறானது. காலை முதல் ஜாமத்துக்குள் அந்தப் பெண்ணை என்முன் கொண்டுவந்து நிறுத்த வேண்டும். அதற்கான செய்தி அனுப்பிவிடு."

"காலைக்குள் அவள் வரவில்லையேல்?"

பேரரசரின் கண்கள் குறுகின. "தஞ்சைப் பேரரசின் படைபலத்தைப் பற்றி பட்டரே, சாளுக்கியனுக்குக் கொஞ்சம் சொல்லும்" என்றார்.

கணேசபட்டர், "பேரரசின் படை இருவகைப்பட்டது. நிலப்படை, கடற்படை , யானைப் படை, தரைப்படை, தேர்ப்படை என்று பல பிரிவுகளாக உள்ளது. அந்தனம் பூண்ட வீரர் படையுண்டு. குஞ்சரமல்லர் அல்லது அத்திமல்லர், இவுளி மறவர். கடாரத்திலிருந்து ஈழம்வரை வெற்றி பெற்ற படைகள். சோழரின் நிலைப்படைகள் அத்தனை நாடுகளிலும் உள்ளன. எய்படை, எறிபடை, குத்துப்படை, வெட்டுப்படை, அடிபடை, தடுபடை என்று பண்டித சோழத் தெறித்த வில்லிகளும், வாள்பெற்ற கைக்கோளரும்..."

சாளுக்கியன், "இதையெல்லாம் என்னிடம் எதற்குக் கூறுகிறீர்?"

இளவரசர், "விமலாதித்தரே, இவையெல்லம் உமக்கு எச்சரிக்கை. அபிமதியைக் காலைக்குள் கொண்டு சேர்க்கவில்லையெனில் உமக்கு எதிராக ஏவிவிடப்படும் என்று அச்சுறுத்த! அதற்கெல்லாம் தேவையில்லை தந்தையே! விமலாதித்தன் நம் நண்பன். சோழ குடும்பத்தில் பெண்ணெடுத்தவன். சொந்த மருமகனுடன் நாம் போரிடுவோமா?"

"பேரரசர், என்னை அச்சுறுத்துகிறாரா! நான் இதற்கெல்லாம் அஞ்சபவனில்லை."

பேரரசர் புன்னகை மாறாமல், "பெண்ணை நீ காலைக்குள் கொண்டுவந்து சேர்க்கிறாயா?"

"அதைப்பற்றி நான் சிந்திக்க வேண்டும்?" என்றான்.

"சிந்தி, தீவரமாகச் சிந்தி, ஆனால் கொண்டுவந்து விடு."

'தங்கள் படைபலத்துக்கு அஞ்சி நான் சம்மதிக்கிறேன் என்று சொல்லக்கூடாது.''

''அப்படி நாங்கள் எண்ணவில்லை. உன் படைபலமும் மிகுந்ததே!''

சாளுக்கிய விமலாதித்தன் கோபத்தால் முகம் சிவந்து புறப்பட்டுச் செல்ல-

''தந்தையே! அவனை அவமானப்படுத்த தேவையில்லை. நல்லபடியாகச் சொல்லி நான் அபிமதியை மீட்டு வந்திருப்பேன். இவ்வகையிலான சிறு காரியங்களுக்கெல்லாம் தங்கள் நேரத்தை வீணாக்க வேண்டாம்.''

''பட்டரே, இந்த இளைஞனை பெரும்படை முதலிசேனா திராயனிடம் அழைத்துச் செல்லும். சேரநாட்டுக்கு உடன் புறப்பட வேண்டும். இவனை ஆதுரச் சாலைக்கு அழைத்துச் சென்று காயங்களுக்கு மருந்திடச் சொல்லும். இளைஞனே, பட்டருடன் செல்வாய்.''

தொடர்ந்து ராஜகாரியங்களில் பேரரசர் ஈடுபட்டார். அவருக்குக் கோயில் கட்டுவதுதான் மனம் முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது.

''மதுரா, ஆராயிரவன் பல்லவரையன், பாம்புணிக்கூற்றத்து அரகுரின்கண் உள்ளான். பெரிய கோயிலில் சண்டேசுவரரை எழுந்தருளப் பண்ண ஒப்புக் கொண்டிருக்கிறான்.''

''தந்தையே, கோயில் கட்டுவதில் பல சிக்கல்கள் உள்ளன. தங்களுக்குத் தெரியுமல்லவா? முதலில் நன்செய் புன்செய் நிலங்களையும் காடுகளையும் தெளிவாகப் புலப்படுத்தி விளைநிலங்களுக்கு மாத்திரம் வரிவிதிக்க வேண்டும். கண்டமேனிக்கு இறையிலியாக நல்ல நிலங்கள் அளிக்கப்படுகின்றன. மக்கள் வெறுப்புற்றிருக்கிறார்கள்.''

''உலகளந்தானிடம் பேசிப்பார். அவன்தான் விளைநிலங்களை கவனித்துக் கொள்கிறான். இறையிலி நிலங்களாகக் கோயிலுக்குத்தானே அளிக்கிறேன்! அதை மக்கள் பாக்கியமாகவல்லவா கருத வேண்டும். எப்படி எதிர்ப்பார்கள்?''

''எதிர்க்கிறார்கள் தந்தையே! இந்தக் கோயில் அவசியம்தானா? எத்தனை கோயில்கள்... மேற்படி அரிஞ்சயேச்சுரம், திருமுக்கூடல் செம்பியன் மாதேவிப் பெருமண்டபம்.''



''இந்தக் கோயில் எல்லாவற்றையும் விடப் பெரியது. சிவபெருமானின் வடிவம் போல!''

கணேசபட்டரும் வசந்தகுமாரனும் மந்திராலோசனை அறையைவிட்டு வெளிவந்தனர். ''பட்டரே, மன்னர் என்ன சொல்லியிருக்கிறார்? எனக்கு விளங்கவில்லை.''

''எதைப்பற்றி-''

''அபிமதியைப் பற்றி.''

''அபிமதி... அபிமதி.. பித்துப்பிடித்து அலையாதே''

''அந்தப் பெண்ணைப் பார்க்காமல் நான் சேரநாட்டுக்குச் செல்ல மாட்டேன் என்பது மன்னருக்குத் தெரிந்ததோ இல்லையோ?''

''மன்னரிடமெல்லாம் அவ்வாறு நிபந்தனைகள் கொடுக்க முடியாது. குமாரா, எத்துணை முறை சொல்வது?''

''பின் எப்படி நான் அபிமதியை...?''

''இன்னொரு முறை அபிமதி பேச்சு வந்தால் நான் பொல்லாதவனாகி விடுவேன், குமாரா! மரணத்தின் பிடியிலிருந்து தப்பித்திருக்கிறாய். அதற்காக இறைவனுக்கும் பேரரசருக்கும் நன்றி செலுத்துவதைவிட்டு ஏன் பெண் பித்துப்பிடித்து அலைகிறாய்?''

''இதென்ன? தூதுவன் என்பவன் யார்?''

கணேசபட்டர், அருகில் உள்ள இருக்கையில் வசந்தகுமாரனை அமரச் செய்தார். ''தூத லட்சணம் பற்றிய நூல்கள் பல உள்ளன. குறிப்பாக மனுஸ்மிருதியில் உள்ளது. நற்குடியில் பிறந்தவனாகவும், சகல சாஸ்திரம் அறிந்தவனாகவும், கண் சிமிட்டுதல் போல் சாடைகளை அறிந்தவனாகவும், சகலரையும் சினேகிக்க வேண்டும். தேசகாலங்கள் அறிய வேண்டும். வேற்றரசர் இடம் பேசும் போது காரியங்களைத் தொகுத்துச் சொல்லி, ஆகாத காரியங்களை அறிவிக்கும் இடத்து கொடும் சொற்களை நீக்கி நகை விளைவிக்கும் சொற்களைக்கூறி, எடுத்த காரியத்தை பகைவரை மனங்கொளச் செய்தல் வேண்டும். அவர் கோபித்தாலும், அஞ்சாது பகையரசனது அமைச்சர்களைத் தம் வசமாக்க வேண்டும்.''

''இத்தனை சாமர்த்தியங்கள் எனக்கு உள்ளனவா பட்டரே? நீர்தான் அதற்குத் தகுதி!''

''அரசர் தீர்மானித்துத் தேர்ந்தெடுத்திருக்கிறார். நீ என்னவோ அபிமதி, அபிமதி என்று அபிமதி பாராயணம் செய்கிறாய்.''



## 29

கணேசபட்டர் கலவரப்பட்டதற்குக் காரணம் அந்த சபையில் தெரிந்த சில வேற்று முகங்கள் தாம். மத்தியஸ்தன், கரணத்தான், பாடி காப்பான், தண்டுவான், அடிக்கீழ் நிற்பான் போன்றவர்கள் தாம். மேடையின் அருகில் அவரவர் தகுதிக்கேற்ப நின்று கொண்டோ வீற்றிருந்தோ பணிபுரிவார்கள். அவர்கள் யாரையும் காணவில்லை. சுற்றி யுள்ளவர்கள் அனைவரும் கிராமத்தைச் சேர்ந்தவர்களாகத் தோன்றவில்லை. அவர்கள் பார்க்கும்விதமே சரியில்லை. மேலும் கூட்டத்தின் விளிம்பில் வெளிக்கூட்டத்தில் மக்கள் வந்து கூடுவதையும் அவர்கள் தமக்குள் பட்டரைக் காட்டிப் பேசிக் கொள்வதையும் கவனித்தார்.

''வசந்தகுமாரா, அரண்மனையில் ஏதோ சூது நிகழவிருக்கிறது எனத் தோன்றுகிறது. இன்று தானே ஸ்ரீபலி? உன்னிடம் புரவி ஏதேனு முள்ளதா?''



''அதற்கென்ன?'' என்று வசந்தகுமாரன் தான் விட்டு வைத்த புரவியிடம் சென்றபோது அந்தச் சிறுவன் அழுது கொண்டிருந்தான். புரவியைக் காணவில்லை.

''குதிரை எங்கே சிதடா?''

''அவன் காட்டிய திசையில் அதை ஒருவன் வேலால் குத்திக் கொண்டிருந்தான். அது இங்குமங்கும் போராடித் துடித்துக் கொண்டிருக்க - ஈனமாகக் கனைத்துக் கொண்டு முன்னங்கால்களை அவன் மேல் தூக்கி பூமியில் அடித்துத் துடித்தது.

வசந்தகுமாரன் ஓடிப்போய், ''மூடனே, சுவானமே, குக்கனே, எதற்காக துன்புறுத்துகிறாய்?'' என்று அவன் எறிந்த வேலினைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு திரும்ப எறிந்தான். அவன் சிரித்துக்கொண்டே மற்றொரு பக்கம் செல்ல அந்த ஆரவாரம் வசந்தகுமாரனுக்குப் புரியவில்லை.

''பட்டரே, என்ன இது குழப்பம்?''

''குமாரா, புரியவில்லையா? அரசுக்கு எதிராகக் கிளர்ச்சி.''

இவர்கள் ஆரவாரம் அரண்மனை நோக்கியது. ''கொல்...'' என்று கூக்குரல் கேட்க, ''இவர்கள் பேரரசரைத் தாக்கச் செல்கிறார்கள்.''

''இவர்கள் அனைவரும் நிலமிழந்தவர்கள் போலத் தோன்றவில்லை. சேரநாட்டு ஒற்றர்கள் ஊடுருவிச் சேர்ந்து கொண்டிருக்கிறார்கள்.''

வசந்தகுமாரன் குதிரையை ஒதுக்குப்புறமாகக் கொண்டு வந்து ''உய்யக் கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்தின் குறுக்கு வழியாக அரண்மனைக்குப் போய்விடலாம்,'' என்றான். ''பட்டரே வாரும். இருவரும் இதே குதிரையில் செல்லாம். பளு தாங்கும்.''

அவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் வெள்ளம் போல இருமருங்கிலும் ''ஒல்'' லென்று ஆரவாரத்துடன் மக்கள் கூட்டம்.

குதிரைவீரர்கள் பின்னே வேல் கம்புகளுடன் ஓடிச்செல்ல, ''கொல்...கொல்....'' என்று சப்தம்கேட்க ''வசந்தகுமாரா, குதிரைகளைப் பார்த்தாயா? எத்தனை வனப்பாக உள்ளன.''

''பட்டரே, அத்தனையும் யவனக் குதிரைகள். நான் வாணிபம் செய்யத் தவற விட்டவை. பட்டரே, இது ஏது குழப்பம்?

விவரமாகச் சொல்லும். இவர்கள் அரண்மனை முற்றுகைக்குச் செல்கிறார்களா?''

''பேரரசரிடம் நியாயம் கேட்கச் செல்கிறார்கள் இவர்கள். காணிவரிக் கொடுமையை எதிர்த்த கிளர்ச்சியிது. இவர்கள் மகேந்திர மங்கலத்தைச் சேர்ந்தவர்கள். ஆனால் வந்தது பேரரசரிடம் முறையிட்டுக்கு மட்டுமே. அதில் ஒற்றர்களும் கலந்திருக்கிறார்கள். அது தான் எனக்குக் கவலையாக இருக்கிறது.''

வசந்தகுமாரன் குதிரையைச் செலுத்தி விரைவில் சிறிய சிறிய அகலக்குறைவான சந்துகளிலெல்லாம் விரைந்து அரண்மனை வாயிலுக்கு வந்தபோது படைஞர்கள் அரண்மனை வாயிலை மூட முயன்று அங்கிருந்த மக்கள் வெள்ளத்தினால் தடுக்கப்பட்டு அந்தப் பெரிய கோட்டைக் கதவை திறப்பதா? மூடுவதா என்று தீர்மானிக்க இயலாமல் தவித்துக் கொண்டிருந்தனர்.

இருதரப்புக்கும் இடையில் போராட்டம் நிகழ்ந்து கொண்டிருக்க கணேசபட்டர் அந்தக் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வாயிற்காப்போரை மக்கள் கூட்டத்தின் தலை மகன் போல இருந்த ஒருவன் நரம்பு புடைக்க இரைந்து பேசிக் கொண்டிருந்தான்.

''பேரரசரைப் பார்க்க வேண்டும். பேரரசரைப் பார்க்க வேண்டும்.''

''அதற்கு இது சமயமல்ல. அவர் மக்களைச் சந்திக்கவென்று தனி நேரம் ஒதுக்கியிருக்கிறார். உங்களுக்கு எந்தப் பிரச்சினை இருந்தாலும் பார்க்கவென்று... வாரும் பட்டரே...''

கணேசபட்டர் குறுக்கிட்டு, ''எதற்காக மன்னரைக் காணவேண்டும்?''

''பட்டரே, காணிவரிக் கொடுமை தாங்கவில்லை. படைஞர்கள் நீரில் அழுத்தியும் வெயிலில் நிற்க வைத்தும் வரிப்பணம் பெறுகிறார்கள். வரி கொடுக்காதவரைத் துன்புறுத்துகிறார்கள். அதனால் அங்கிருந்து தூதுக்குழு வந்திருக்கிறோம்.''

''எத்தனை பேர் வந்திருக்கிறீர்கள்?''

''நாங்கள் முப்பதின்மர்.''

''இங்கே நூற்றுக்கணக்கானவர்கள் கூடியிருக்கிறார்களே, இவர்கள் எல்லம் யாவர்?''



''இவர்கள் வேற்றூரார். செல்லும் பாதையில் எங்களுடன் சேர்ந்து கொண்டார்கள்.''

''எவன் விழியும் சரியில்லை,'' என்றான் குமாரன்.

''வாயிலைத்திற, வாயிலைத் திற...'' என்று கூட்டம் ஆரவாரிக்க காவலர்களால் அந்த மக்களைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக இருந்தது. அலைமோதுவது போல் அவர்கள் கூவ, அணுக மறவர் படையும், வாளாளர்களும் பெருநரும் அவர்கள் சாதாரண மக்கள் என்பதால் தம் கோபங்களைக் கட்டுப்படுத்திக் கொண்டு அவர்களைப் பின்தள்ளும் முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள்.

பட்டர் அங்கிருந்த மேடை போன்ற உயர்விடத்தில் ஏறி நின்று கொண்டு, ''கொஞ்சம் செவிசாய்த்து நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களில் மன்னரைச் சந்திக்க விரும்பும் குழுத் தலைவர் யாரையேனும் குறிப்பிட்டுச் சொல்லுங்கள். நானும் என் நண்பன் வசந்தகுமாரனும் அவரை உள்ளே அழைத்துச் செல்கிறோம். மன்னரைச் சந்திக்க வழி வகுக்கிறோம். யாரேனும் ஒருவர் வரட்டும்.''

''முடியாது. நாங்கள் எல்லோரும் உள்ளே செல்ல வேண்டும். எல்லோரும் எல்லோரும்..''

வசந்தகுமாரன், ''இந்தக் கூட்டத்தில் சோழ தேசத்தவர்கள் மட்டும் இருக்கிறார்களா?'' என்று துவங்கியவனை கணேசபட்டர் தடுத்து நிறுத்தி, ''குமாரா, சற்று நேரம் வாளாவிரு.''

பட்டரின் காதருகில் ''சேரநாட்டு ஒற்றர்கள் நிச்சயம் உள்ளனர் பட்டரே, அன்று நான் புகாரில் பார்த்த அதே வியக்தி!''

''தெரியும். சொல்லிவிட்டாய். அவனை அடையாளம் காட்ட வேண்டும். அவன் மேல் வைத்த கண்ணை எடுக்காதே. எங்கே உள்ளான் அவன்?''

வசந்தகுமாரன் சுற்றுமுற்றும் பார்த்து, ''காணவில்லை. பார்வையிலிருந்து நழுவிவிட்டான்.''

''என்ன! தூர்த்தனே! இழுதையே! அவனைத் தவற விட்டுவிட்டாயா?''

அரண்மனை முன் வாலுக்கும் முன் மண்டபத்துக்கும் இடைவெளியில் ஒருசிலர் ஓடிச் செல்வதும், அவர்களைக்

காவலர்கள் பின்பற்றிப் பிடிப்பதும் கணேசபட்டருக்குக் கோட்டை வாசல் வழியே தெரிந்தது.

இதனிடையே மற்றொரு ஆரவாரம் அவர்களை அணுக. முழவும் சிறுபறையும் தமலியும் ஒலிக்க, மாமன்னர் ராஜராஜேச்சுவரர் குறுவாள் சிறுவாள் கொடுவாள் சுழல் படை தாங்கிய வீரர்களுடன் மல்லகதியில் பிடரும் முதுகும் முகமும் வெண்ணிறமுமுடையதான குதிரையில் கம்பீரமாய் வந்தார். "பேரரசர்... "பேரரசர்..." என்கிற ஆரவாரம் கூட்டத்தில் எழுந்து அந்த இடத்தில் மெல்ல மெல்ல அமைதி நிலவி சப்தம் அடங்கியது.

கணேசபட்டரைக் கண்டதும் பேரரசர், "பட்டரே, என்ன இது அலம்பல்?"

"மாமன்னரே, இவர்கள் தங்களைச் சந்தித்து தங்கள் குறைகளைத் தெரிவிக்க விரும்புகிறார்கள்."

"காணிக் கடன்தானே!"

"ஆம் மன்னவா."

"கோயிலின் பெருமையை எடுத்துரைத்தீரா பட்டரே?"

"உரைத்தோம். அடிப்படையில் ஒரு தவறு நிகழ்ந்திருக்கிறது, மாமன்னரே. இவர்கள் நிலத்தையும் பறிக்கிறோம். இறையும் அதிகம் கேட்கிறோம். இது சரியில்லை. சாத்வீகமாகத்தான் கேட்கிறார்கள். தூதுக்குழுவை சபாவில் தீர்மானித்து தங்களிடம் அனுப்பியுள்ளார்கள். அவர்களைத் தாங்கள் சந்திப்பது நல்லது."

"வரிவிதிப்புகளை ஊர் மன்றங்களில் இயற்றுகிறார்கள். இது தங்களுக்குத் தெரியாதா பட்டரே!"

பட்டர் பேசிக் கொண்டிருக்கும்போது வசந்தகுமாரன் மீண்டும் அவனைப் பார்த்தான்.

பேரரசருக்கு மிக மிக அருகில் குறுவாறுடன் அணுகிக் கொண்டிருந்தான்.



## 30

பேரரசரை நோக்கி வந்தவனை வசந்த குமாரன் கவனிக்குமுன்னரே கணேசபட்டரும் கவனித்து, "கொல்லாதே, கொல்லாதே..." என்று கூக்குரலிட அதற்குள் வசந்தகுமாரன் அவனை வீழ்த்தி அவன் நெஞ்சில் கத்திபாய்ச்ச முயற்சிக்கையில், கணேசபட்டர், "அவனை உயிருடன் பிடிக்க வேண்டும்" என்று அவனை நோக்கி விரைந்தார். திமிர்த ஒலியில் கூட்டத்தினரிடம் பேரரசரைக் கொல்ல வந்தவன் அலைக்கழிக்கப்பட்டு கண்களில் அளவிலாத அச்சம் பரவ, கணேசபட்டரின் உச்சக்குரல் கட்டளைகளைக் கவனிக்காமல் அவன், கூட்டத்தினரால் சின்னாபின்னப்படுத்தப்பட்டு சற்று நேரத்தில் மூச்சிழந்தான்.

பேரரசர் சற்றும் கலங்காமல், "பட்டரே, மக்களுக்குள் இத்தனை கோபமா? கோயில் கட்டுவது தவறா? என் உயிரை நீக்க இரண்டாம்

முயற்சி இது. என்னதான் செய்கிறார்கள் என் திருமெய்க்காப்பாளர்களும் தெறித்த வில்லிகளும்?'' வசந்தகுமாரனை அருகில் அழைத்து, ''நன்று வசந்தகுமாரனே! என் உயிரினை மீண்டும் காப்பாற்றி, நான் உனக்கு மேலும் நன்றிக்கடன் படுமாறு செய்துவிட்டாய். உனக்கு என்ன வேண்டும் கேள்.''

''சென்ற முறையே அதை நான் தெரிவித்துவிட்டேன், பேரரசே!''

''அபிமதி! நினைவிருக்கிறது. சாளுக்கியனுக்கு வாக்களித்ததை மீற முடியாத நிலையில் இருக்கிறேன் வசந்தகுமாரா! வேறு ஏதேனும் கேள்.''

''இவன் செய்த மூடக்காரியத்துக்கு அவனுக்கு ஏதும் பரிசளிக்காதீர்கள், வேந்தே,''

''ஏன் பட்டரே, அப்படி என்ன தவறு செய்தான்?''

''தங்களைத் தாக்க வந்தவனைக் கொன்றது போன்ற மூர்க்கமும் மூடத்தனமும் வேறேதுமில்லை.''

''பட்டரே! இது வேளாண் மக்களின் கிளர்ச்சியா அல்லது சேர மன்னனின் சதியா.''

''அதை நாம் இப்போது தெரிந்து கொள்ள இயலாது. மாமன்னரே, தங்களைக் கொல்ல வந்தவனின் நிலைமையைப் பாருங்கள்.''

அரசர் நோக்கிய திசையில், மக்களிடம் அவன் அகப்பட்டதால் அவன் உடலின் பாகங்கள் துண்டிக்கப்பட்டும், நீக்கப்பட்டும் கிழிக்கப்பட்டும் அவன் தலைமட்டும் வெட்டப்பட்டு ஒருவன் கப்பணம் என்னும் கைவேல் முனையில் அந்தத் தலையைச் செருகி இளித்துக்கொண்டும் ஆடிக்கொண்டும், மக்கள் மத்தியில் குதித்துக்கொண்டுமிருந்தது, அந்தச் சிரம். ''திருமங்கலத்து வேளாண் மக்களிடம் இத்துணை கொலை வெறியா?''

''இவர்கள் கோபம் தங்களைத் தாக்கினதால் ஏற்பட்டது வேந்தே! ஆனால் தங்களைக் கொல்ல முயன்றது இவர்களல்ல மன்னா! தங்களைத் தாக்க வந்தவன் சேர நாட்டு ஒற்றனா இல்லை வேளாண் மக்களில் நிலமிழந்தவரில் ஒருவனா? மக்களின் கிளர்ச்சியின் விளைவா? இல்லை பாண்டியநாட்டுச் சதியா? எதும் அறிய முடியாமல் அவனை மக்கள்பால் ஒப்படைத்து விட்டதில் அவர்கள் உருத்தெரியாது செய்து விட்டார்கள். சதித்திட்டம் கரைந்துபோய் மறைந்து விட்டது!''



''ஆம். ஆனால் வேறு என்ன செய்திருக்கவேண்டும்?''

''எளிய முறையில் வர்மக் கலையின் படி அவனை நரம்பின் ஓரிடத்தில் தொட்டிருந்தால் அங்கேயே ஸ்தம்பித்திருப்பான். ஆரவாரமில்லாமல் அழைத்துச் சென்று அவனைக் கேள்விக்கணைகளால் துளைத்திருக்க வேண்டும். இப்போது சதிகாரர்கள் அனைவரும் தப்பித்து விட்டார்கள். எப்படிக் கண்டுபிடிக்க முடியும்?''

''பட்டரே! முதலில் இந்த காணிக்கடன் விவகாரத்தை முடித்து வையும்.''

''பேரரசே, தாங்கள் இவர்கள் மேல் சினங்கொள்ள வேண்டாம். வேளாண் மக்கள் அனைவரும் அமைதியாகத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கத்தான் வந்தார்கள். அவர்களூடே சதிகாரர்கள் புகுந்திருக்க வேண்டும்.''

அனைவரையும் தனிப்படுத்தி, காவலர்கள் புடைசூழ மந்தையாக அழைத்துச் செல்வதைப் பார்த்த கணேசபட்டர், ''பேரரசே! இவர்கள் வருத்தங்களைத் தெரிவிக்க வந்தவர்கள்!''

''பட்டரே, மிகுந்த குழப்பம்! உம்மிடம் இந்தக் காரியத்தை ஒப்படைக்கிறேன். என்னைக் கொல்ல சதி இருப்பது தெரிகிறது. ஆனால், அதன் ஆழம் தெரியவில்லை. காரணகர்த்தா தெரியவில்லை. நீலவண்ணர் நித்யநாதர் மேல் ஐயப்பாடு இருப்பினும் எச்சரிக்கையாகவே இருக்கிறேன். அதற்கான உள்படை அதிகாரிகளை விதைத்திருக்கிறேன். இதுவரை அவர் ஐயத்துக்கு இடம் தரும் வகையில் ஏதும் செய்யவில்லை.''

''பதுங்கிப் பாய்கிறவர்களாக இருக்கலாம், அரசே''

''இருக்கலாம். இன்னும் ஒரு வாரத்துக்குள் இதைத் நீர ஆராய்ந்து எனக்குச் சொல்ல வேண்டும். வந்தகுமாரனை நாளை சோழ நாட்டின் தூதுவர் குழுவில் சேர்த்து சபையில் அதற்கான கரிகையும் பத்திரமும் அளிக்கிறோம். அவனையும் எச்சரிக்கையாக இருக்கச் சொல்லும்.''

''பேரரசர் வாழ்க!'' என்ற வாழ்த்தொலி வானை முட்ட, செங்குடையும் பீலிக்குஞ்சக்குடையும் பின்தொடர, சல்லரியும் துந்துபியும் முழவும் முழங்க பேரரசர் புறப்பட்டுச் சென்றதும் கணேசபட்டரும் வசந்தகுமாரனும் தனியாக அந்த வனாகத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.

''அபிமதி எங்கே என கேட்கத் தவறிவிட்டேன்'' என்றான் வசந்தகுமாரன்.

''அபிமதியை மறந்து சேரநாட்டுக்குப் புறப்பட்டுச் செல்வதுதான் உன் தேககக்த்துக்கு நல்லது குமாரா. ராஜ காரியங்களில் குறுக்கிடாதே! சாளுக்கியனோடு சமரசம் இப்போது பேரரசருக்கு முக்கியமாக உள்ளது. இல்லையேல் இவ்வாறு அந்தப் பெண்ணை வன்முறையில் கடத்திச் சென்றதை அங்கீகரித்திருக்க மாட்டார் பேரரசர்.

''வசந்தகுமாரா, நீ புகாரில் பாாத்தவனை மீண்டும் இந்தக் கூட்டத்தில் கண்டாய் என்பது நிச்சயம் தானே?''

''ஆம்'' என்றான் சற்றே தயக்கத்துடன்.

''மாதண்ட நாயகர் நீலவண்ணர் நித்யநாதரா?''

''அவரல்ல. அவர் முகத்தை என்னால் மறக்க முடியாது. எத்துணை கடுமையாக வாட்போர் புரிந்திருக்கிறேன் அந்த குக்க புத்திரருடன். பட்டரே, எனக்கு ஒரு முகம் புகாரில் பார்த்த முகம்போலத் தோற்றமளிக்கவில்லை.''

''பின்?''

''எங்கேயோ பார்த்த முகம். எங்கே பார்த்தேன்? அரசசபையில்? இல்லை. அங்காடியிலா? எங்கோ மறக்க இயலாத முகம்.''

''மறந்திருக்கிறாய். இல்லையேல் அடையாளம் காட்டுவாயே!''

''ஏதோ ஒருவகையில் அந்த முகம் மறைக்கப்பட்டிருந்தது. முகத்திரையோ, திரைச்சீலையோ அல்லது முகத்தை மறைத்த ரோமங்களினாலோ!''

''இவையெல்லாம் கவைக்குதவாத அடையாளங்கள். ஏதாவது வெட்டுக் காயத்தழும்பு அல்லது உடல்வண்ணம்... உயரம்..''

''ஆ...'' என்று விடைகண்டு கொண்டதுபோல் வசந்தகுமாரன் சற்றே பிரகாசமாகி, ''இல்லை... இல்லை.. இருக்காது. இருக்க முடியாது'' என்றான். ''கண்கள்'' என்றான்.

வசந்தகுமாரன், ''எப்படியேனும் சேரநாட்டுக்குச் செல்வதற்குள் அபிமதியைச் சந்தித்துவிட்டுத்தான் செல்ல வேண்டும் என்றதை கவனிக்காமல் கணேசபட்டர், முதலில் தேவதான நிலங்களில் விளைநிலங்களுக்குக் கோயிலுக்கு அளிக்க



வேண்டிய காணிப் பட்டத்தைத் தீர்மானிக்கும் அதிகாரியைச் சந்திக்கச் சென்றார்.

அவர் பெயர் புத்திசாகரர். ''பட்டரே, பல ஊர்களை முழுவதுமே கோயிலுக்குச் சொந்தமாக்கி விளைநிலங்களுக்கு இறைகட்டியதை காணிக்கடன் என்று பத்தாக உயர்த்தியது அவர்களுக்குப் பொறுக்கவில்லை. பட்டரே, வேறு என்ன செய்வது? பெரிய கோயிலைக் கட்டுமாறு பணித்துள்ளார். வேறு வழியே இல்லை. ஒரு கோயில் என்றால் எத்தனை பேரை நியமிக்க வேண்டியுள்ளது. தளிச்சேரி, நட்டுவம், பாட்டுக்காரர், அரையன், பாடவியம், ஆரியம் பாடுவோன், காந்தர்வன், சங்கு ஊதுபவன், வலங்கை வேலைக்காரர் என்று எத்தனை பேர்.''

''தச்சன், பாணன், சாக்கைக் கூத்தன்'' என்றார் அருகில் இருந்த உதவி அதிகாரி.

''ஒவ்வொருவருக்கும் ஆண்டு ஊதியம் நூறு கலமாவது அளிக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள். எங்கிருந்து வரும் இந்த ஊதியம்?''

''இவர்கள் கோரிக்கையில் நியாயமில்லையா பின்?''

''இல்லை. காரணம், பாலையூர், ஈரன் தேவன்குடி போன்ற இறைநிலங்களில் நெல் வருமானம் பன்னீராயிரம் கலத்துக்குமேல் கிடைக்கும். இதனுடன் காசு வருமானம் இருநூறு கழஞ்சு, நான்கு மஞ்சாடி இப்படி வரும். நாங்கள் கேட்பது அதில் ஒரு மிகச்சிறு பகுதியே. கோரிக்கையில் நியாயமே இல்லை'' என்றார் அவர்.

''கோயிலுக்கு மொத்த வருவாய் எத்தனை வேண்டுமாம் என்று கணக்கிட்டிருக்கிறீரா?''

''இறை கட்டின நிலம் முப்பத்தொன்றரையே மூன்று மாக்காணி. அரைக்காணிக் கீழ் முக்காலே நான்கு மா. முக்காணிக்கீழ் முக்காலே ஒரு மா, பொன்காணி...''

''விளங்கவில்லை.''.

''இத்தனை நுட்பமாகக் கணக்கிட்டிருக்கிறோம் என்று சொல்ல வருகிறேன். பெரிய கோயில்கட்ட மக்கள் சிறிதளவேனும் தியாகம் செய்ய வேண்டாமா பட்டரே?''

''யோசிக்க வேண்டிய விஷயம்தான்.''

''மங்கலத்தார் பேரரசரைத் தாக்க வந்தார்களாமே. என்ன அநியாயம்?''

''தாக்க வந்தவர் வேளாண் மக்களல்லர்.''

மறுதினம் காலை ஓர் எளிய விழாவில் வசந்தகுமாரனுக்குப் பேரரசரின் கரத்தால் உடைவாள் அணிவிக்கப்பட்டது. ''உடையார் ஸ்ரீராஜராஜீச்சுரம் உடைய தேவர்க்கு மெய்க்காப்பு மெய்க்காவல் செய்ய இராஜராஜ தேவர் நியமித்த நாப்பத்தெண்மரில் நிலையான ஊதியம் பெற்று ராஜசேவை செய்ய வசந்தகுமார தேவரை சக்கரவர்த்தி மனமுவந்து பணிக்கிறார்'' என்று சொன்னபோது துந்துபி மட்டும் அந்த மௌனத்திடையே ஊதியது.

வசந்தகுமாரன் உணர்ச்சிவசப்பட மாட்டான். ஆனால், அத்தனை பெரிய சபையில் அத்துணை நிச்சலனத்தில் பேரரசால் தனிப்பட்டு ஆக்கினையிடப்பட்டதை அவன் ஒரு பெரும்பேறாகவே கருதி கண்களில் சற்றே நீல்மல்க, ''ராஜராஜேச்சுரம் உடைய தேவர்க்கு என் உதிரத்தின் இறுதித்துளி இருக்கும்வரை விசுவாசத்துடன் இருந்து சோழ நாட்டின் பெயரைக் காப்பேன்'' என்று சத்தியம் செய்து கொடுத்தான்.

வசந்தகுமாரன் அருகே இருந்த பட்டரை அழைத்து, ''பட்டரே, ஒரு நம்ப இயலாத விஷயம் நடந்திருக்கிறது'' என்றான்.



# 31

வசந்தகுமாரன் பேரரசரிடமிருந்து அடையாளமாக அந்த வாளைப் பெற்றதும் கணேசபட்டரிடம் தன் ஐயப்பாட்டை எடுத்துரைத்த சந்தர்ப்பம் சரியில்லை என்று பட்டருக்குத் தோன்றியது. ஆனால் வசந்தகுமாரன் அப்படிப்பட்டவன். காலதேச வர்த்தமானம் எதையும் கருதாது உள்ளத்தில் உள்ளதைச் சொல்லிவிடுவான். ''பட்டரே, கோட்டை வாசல் கலகத்தில் நான் பார்த்த முகம் யாருடையது என்பது இப்போது தெளிவாகி விட்டது.''

''யாருடைய முகம்?''

''சாளுக்கிய விமலாதித்தன்.''

பட்டர் நகைத்து, ''பிதற்றலுக்கும் அளவு உண்டு.'', என்றார்.

''சத்தியமாக, என் தாய் மேல் ஆணையாக.''

அவர்கள் தங்கள் உரையாடலைத் தொடர்வதற்கு முன் மாமன்னர் புறப்படுவதைக் கட்டியங்காரன் கூவ, சபையில் மௌனம் நிலவ, பேரரசர் போகும்போது வசந்தகுமாரன் அருகில்வந்து தோளைத் தொட்டு, ''இளம் குமரனே, ராஜ விசுவாசத்தோடு இரு. உனக்கு சீரும் சிறப்பும் உண்டாகும். என்ன பட்டரே?''

''இவன் விசுவாசம் பழுதில்லாதது மாமன்னவா!''

''தூதுவர் ஒழுக்கம் பற்றி கொஞ்சமே தெரியுமா உனக்கு?''

வசந்தகுமாரன் ''தெரியாது'' என்று தலையசைக்க-

''பட்டரே, கற்றுக்கொடும்,'' என்று சொல்லிவிட்டு மன்னர் புறப்பட்டார்.

துந்துபிகள் மீண்டும் முழங்க துந்துபி முழங்கிய வாத்தியக்காரனை வசந்தகுமாரன், ''உனக்கு எத்தனை கலம் நெல்?'' என்று கேட்க அவன் ''எத்தனை கலமாயிருந்தால் உமக்கென்ன?'' என்று பதிலளிக்க?

''நான் இன்றிலிருந்து அரசு அதிகாரி,'' என்றான்.

அவன் பயந்து, ''இரண்டுபங்கு! இருநூறு கலம்'' என்றான்.

பட்டர், ''குமாரா, இவர்களுக்கெல்லாம் விடையில் அதிகாரி உண்டு. அணி நிரல் பணியாளர்கள். நீ சொல்ல வந்ததை மறந்து விட்டாயே.''

''இல்லை ஆசானே. சாளுக்கிய மாமல்லனின் முகத்தை நான் மறக்க இயலாது. அந்தக் கலகக் கூட்டத்தில் அவன் முகத்தைப் பார்த்தேன். முகத்தைத் தலைச் சீலையால் மறைத்தாலும் அந்தக் கண்களும் ஆந்திர நுதலும் காட்டிக் கொடுத்து விட்டன.''

''குமாரா, நீ சொல்வது எத்துணை அபத்தம் அறிவாயா?''

''அறிவேன் ஆசானே. என் உள்ளுணர்வு சொல்வதை அறிவு அபத்தம் என்கிறது. ஆனால் என் உள்ளுணர்வு எப்போதும் தப்பாகச் சொன்னதில்லை.''

''அப்படியா! வேறு என்ன சொல்கிறது உன் உள்ளுணர்வு?''

''அபிமதி என்னைக் காதலிக்கிறாள் என்று.''

''மீண்டும் அதே பேச்சு! வேண்டாம் குமாரா. நீ சேர நாட்டுக்கு அதிகாரபூர்வமாக செல்லப் போகும் தூதுவன். மற்றதெல்லாம் மறக்க வேண்டும்.''



''அபிமதியைத் தவிர, அன்ன ஆகாரங்களையும் மறக்க சித்தமாக உள்ளேன்''

''அபிமதி! அபிமதி!''

''புறப்படுமுன் அவளைக் காணப்போகிறேன் என்று சகோரப் பட்சி சொல்கிறது.''

''குமாரா, நீ உருப்படமாட்டாய். வா என்னுடன் தூதுவர் ஒழுக்கம் பற்றிச் சொல்கிறேன்.''

வசந்தகுமாரன் சொன்னது ஒருவிதத்தில் பட்டருக்கு விந்தையாகத் தான் இருந்தது. இது எப்படிச் சாத்தியம்? சாளுக்கிய மாமல்லன் அந்தக் கூட்டத்திலா? இலைமறை காய்மறையாக ஏதோ சதி. சரி. மகேந்திர மங்கலத்தார் வேளாண் மக்களுடன் சதிகாரர்களும் கலந்து கொண்டு பேரரசரைக் கொல்ல மற்றொரு முயற்சி செய்தனர் என்பது தெளிவானதே. ஆனால் அந்த ஒற்றர்கள் யார்? சேரரா, பாண்டியரா? வசந்தகுமாரன் சொன்னபடி சாளுக்கியரா? யவனின் குதிரைகளை மீண்டும் அந்தக் கூட்டத்தில் பார்த்திருக்கிறான். எதையும் எதையும் முடிச்சுப் போடுவது? இது ஒரு மகா சதியா? சாளுக்கியன், சேரன், பாண்டியன் மூவரும் சேர்ந்ததா? சாளுக்கியனை எப்படி இதில் சேர்க்க இயலும்? பெண்ணைக் கொடுத்து திருமணம் மூலம் சமாதானத்தை விலைக்கு வாங்கி, வடக்கே படை எடுக்காத சுமுகமான உறவல்லவா அது! அல்லது சாளுக்கியனுக்கும் விஸ்தரிப்புப் பேராசை வந்துவிட்டதா!

இவ்வாறு எண்ணங்களுடன் அவர் குந்தவைப் பேரங்காடியின் ஊடே செல்கையில் வசந்தகுமாரனிடம் தூதருக்கு உரிய இலக்கணங்களும் பகர்ந்தார்.

''பிறருடைய இங்கிதம், ஆகாரம் செயல்களை அறிதல், மறவி இன்மை, ஒரு யானையின் ஞாபக சக்தி வேண்டும். காலம் இடம் அறிந்து செய்தல், சந்தி விக்ரம் முதலிய ஆறு குணங்களையும் ஆராய்ந்து அறிதல், சொல்வன்மை,அஞ்சாமை எல்லாம் வேண்டும். சுக்கிர நீதி என்ற நூலை கொஞ்சம் ஓதி விடு.''

''நான் அங்கே சென்று என்ன செய்ய வேண்டும்?. சுருக்கமாக மூன்று சொற்களில் கூறும்.''

''போரைத் தவிர்க்க வேண்டும்.''

''எப்படியேனும்?''

''எப்படியேனும்.''

அதை குமாரன் கவனித்தானோ தெரியவில்லை. கவனம் மாறி ''ஆசானே, அதோ'' என்றான் வியப்புடன்.

அவன் காட்டிய திசையில் ஒருவன் குதிரைக்குத் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தான்.

''மேற்கூறிய குதிரைகளில் ஒன்று யவனன் விற்க விழைந்தது.''

இவர்களைக் கண்டதும் அந்தக் குதிரைக்காரன் விரைவாக குதிரையின் பிடரியைப் பற்றிக் கொண்டு புறப்பட, வசந்தகுமாரன் ஓடிச்சென்று குதிரை கடுகிச் செல்வதன் முன்னரே அதைப் பிடித்து அவனையும் பிடித்து தொடுவர் முறையின்படி அவன் கெண்டைத் தசையின் நடுவில் இருவிரல்களால் ஓரிடத்தை அழுத்த, அவன் அப்படியே வேதனையில் நடக்க இயலாதவனாக நொண்டிக் கொண்டு கீழே விழுந்தான்.

''பின் மத்திமத்தில் தொட்டிருந்தால் பேச்சும் போயிருக்கும். ஆனால் ஆசானே இவன் பேச வேண்டும்.''

''அடேய் உன் பெயர் என்ன? சொல். இல்லையேல் மர்மஸ்தானத்தில் ஒரு வர்மத்தொடுகை உள்ளது. பயன் படுத்தினால் ஒரு திங்களுக்கு சிறுநீர் கடத்த முடியாது.''

''அடிக்காதீர்கள். அடிக்காதீர்கள். என் கால், என் கால்!'' என்றான்.

''உன் காலை விடுவிக்கும் முன் இந்தக் குதிரை யாருடையது சொல்.''

''என்னுடையது.''

''பொய் சொல்கிறாய்.''

''கள்ளமில்லை.''

''கள்ளம்! சேரநாட்டுச் சொல்!'' என்றார் பட்டர்.

''எய் பதரே! குக்கா! சுவானத் தோன்றலே! நீ யார்? எங்கிருந்து வந்தாய்?''

''ஐயா விட்டு விடும். பறைகிறேன். என் முட்டியை மட்டும் பூட்டுப் போட்டதைத் கழற்றிவிட்டால் போதும்.''

''சொல்''

''இந்தக் குதிரைகள் காந்தளூர் செல்கின்றன.''



''குதிரைகள்? ஒரு குதிரை தான் உள்ளது.''

''மற்றவை நந்தி மண்டபம் கட்டும் ஸ்தலத்தின் அருகில் உள்ளன.''

''யார் அவைகளை விலைகொடுத்து வாங்கினார்கள்?''

''அறியேன்.''

''காந்தளூரில் என்ன?''

''ஐயா. நான் அறியேன். என் கடமை குதிரையை அங்கே கொண்டு சேர்ப்பது. சேர்த்தபின் கழஞ்சு பெறுவது!''

''என்னை அங்கே அழைத்துச் செல்வாயா?''

''எங்கே?''

''மற்ற குதிரைகள் உள்ள மண்டபத்திற்கு.''

''என் முழங்காலை விடுவித்தால் இயலும். வேதனையில் இப்போது நடக்க இயலவில்லை. ஒருபகுதி மரத்துவிட்டது.''

''நல்ல காலம். வேறு ஸ்தானத்தை நிறுத்தாமல் விட்டேன்.''

வசந்தகுமாரன் தொடுவர்மம் பிரயோகித்த இடத்தை விடுவிக்கும் மும்முரத்தில் இருக்க, பட்டர் சுற்றிலும் பார்த்தார். தூரத்தில் ஒரு குதிரை வீரன் அவர்களை நோக்கி வருவது தெரிந்தது. வசந்தகுமாரன் அந்த யவனப் பரியின் மேல் ஏறிக்கொள்ள, ''குமாரா, நம்மை அணுகுவது யார்?'' என்றார்.

அவர்களை நோக்கி வந்த வீரன் அருகில் வர, ஒரு சிறுவன் போல இருந்தான். பரிச்சயமில்லாத குதிரை என்று தெரிந்தது. அதைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் அவனுக்கு இருந்தது. அருகே அருகே வர அவன் வதனத்தில் பதற்றம் தெரிந்தது. ''யார் இவன்? எங்கோ பார்த்திருக்கிறேன் இவனை?'' என்று பட்டர் வியப்படைய வசந்தகுமாரனின் முகம் பளிச்சென்று பிரகாசமாகியது.

''அபிமதி!''



## 32

வசந்தகுமாரன் அந்தக் குதிரைக்காரனை ஒரு மண்டபத் தூணில் பிணைத்துவிட்டு அந்த 'இளைஞனை' நோக்கிச் சென்றான். மென்மையா அங்கங்களும் முகத்தில் ரோமமின்மையும் இடுப்பின் வளைவும் அவன் பெண் என்பதைக் காட்டிக் கொடுத்து விட்டன. அவன் குதிரை மீதிருந்து இறங்குவதற்கே சற்று சிரமப்பட்டான். வசந்தகுமாரன் மனமுவந்து அவளை அணைத்து இறக்கிப் பேச முற்பட்டபோது அவள் தடுத்து நிறுத்தி தாழ்ந்தகுரலில் ''எங்கேனும் தனியிடம் தேடிச் செல்வோம்'' என்றாள்.

கணேசபட்டர் கவலையுடன் ''இளவரசி, தப்பித்து வந்து விட்டீர்களா?''

''ஆம்'' என்று தலையசைத்தாள். மூவரும் அருகிலுள்ள மண்டபத்தை அடுத்த பொய்கைப் பொழிலில் செல்வதை ஒரு சிலர் எட்டிப் பார்த்தாலும் அபிமதியின் ஆண் உடைகளால்



தீவிரமான ஐயத்தை எழுப்பவில்லை. கூந்தால் தான் சற்றுப் பொருத்தமின்றி உறுத்தியிருக்க வேண்டும்.

''ஆசானே, நான் சொன்னேனல்லவா? சகோரப்பட்சி எனக்குச் சொன்னது, இன்று அபிமதியைச் சந்திக்கப் போகின்றேன் என்று.''

பட்டர் அதைக் கவனிக்காமல் ''இளவரசி தங்களை சாளுக்கிய மன்னர் தேட மாட்டாரா?''

''தேடட்டும். நான் அவர்களுக்குக் கட்டுப்பட்டவள் இல்லை. என்னை அவர்கள் விலை கொடுத்து வாங்கவில்லை.''

''எப்படித் தப்பித்தீர்கள்?''

''அது ஒரு பெரிய கதை. அதில் கண்ணீர் இருக்கிறது பிறகு சொல்கிறேன்'' என்றாள்.

''தேவையில்லை. தாங்கள் தப்பித்து வந்து விட்டீர்கள். இனி உங்களைக் காக்க வேண்டியது என் பொறுப்பு'' பட்டர் அவளை வெறித்துப் பார்த்து ''எங்கள் பொறுப்பு.''

''நான் இனி அரண்மனைக்குச் செல்ல மாட்டேன். சிறிய குடிலில் ஒருவேளை சோறுதான் கிடைக்கும் என்றாலும் சுதந்திரமான வாழ்வுதான் எனக்கு வேண்டும். அரச போகங்கள் அல்ல.''

வசந்தகுமாரனின் கரங்களை அபிமதி பற்றிக்கொண்டாள்.

''குமாரரே, என்னைக் காப்பாற்றுவீர்களா?''

''என் இறுதி மூச்சுக்கு அடுத்த மூச்சுவரை.''

''வசந்தகுமாரா நீ அரசுத் தூதுவன் பொறுப்பேற்றிருக்கிறாய். இன்று மாலையே நீ சேர நாட்டிற்குப் புறப்பட வேண்டும்.

''இளவரசியையும் அழைத்துச் செல்கிறேன்.''

''நன்று'' என்றார் சினத்துடன். ''நீ செல்லப் போவது போர்க் காலச் சூழ்நிலையில்.''

வசந்தகுமாரன் தன் கூற்றின் வினோதத்தை உணர்ந்து, ''நான் திரும்ப வரும்வரை ஆசானே, தாங்கள் இந்தப் பெண்ணுக்கு புகல் தந்து..''

"இயலாத காரியம். பேச்சே வேண்டாம். ராஜ கோபத்துக்கு நான் உட்படத் தயாரில்லை. இளவரசியை மீண்டும் அரசரிடம் ஒப்படைப்பது தான் உத்தமம்."

"நான் அங்கு திரும்பச் செல்ல விரும்பவில்லை. உங்கள் இருவருக்கும் எனக்குப் புகல்தர விருப்பமில்லையெனில் நான் வேறு மார்க்கம் தேடுகிறேன். இல்லை, என் உயிரை மாய்த்துக்கொள்வேன்."

"நான் அதை அனுமதிக்க மாட்டேன். ஆசானே என் இதயத்தின் இறுதித் துடிப்புள்ளவரை.."

"சரி, சரி, இந்த வீண் பேச்செல்லாம் வேண்டாம்."

"ஆசானே என்ன நேர்ந்துவிட்டது தங்களுக்கு? எங்கே அந்த மேதா விலாசம்? எங்கே அந்த பட்டறிவு? மனோதிடம் இல்லையா? இந்தப் பெண்ணை புகாருக்கு அழைத்துச் சென்று அங்கே நம் திணைக்களத்தார் இல்லத்தில் மறைத்து வைத்திருக்க முடியாதா?"

"எத்தனை தினங்களுக்கு?"

"நான் திரும்ப வரும்வரை."

"வசந்தகுமாரா, நீ திரும்ப பல தினங்கள் ஆகலாம். அங்கே சேர நாட்டில் விரோதமும் சதியும் எந்த அளவில் உள்ளதோ? தேவி, இவன் தங்களையே எண்ணித் தன் கடமைகளை மறக்கிறான். பேரரசர் இவனைச் சேர நாட்டுக்குத் தூதுவனாக அண்மையில் தான் நியமித்திருக்கிறார். அரசியலில் பெருங் குழப்பங்கள் விளைந்துள்ளன. பாண்டியரும் சேரரும் தென்பகுதியிலிருந்து தாக்கவுள்ளனர். சாளுக்கியரும் சரியில்லை. இடையில் பெரிய கோயில் கட்டுவதற்கு வேளாண் மக்களிடமிருந்தும் இடங்கையரிடமிருந்தும் வலுவான எதிர்ப்புகள் உள்ளன. இந்தச் சூழ்நிலையில் வசந்தகுமாரனிடம் ஒரு முக்கியமான பணி ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இப்போது தங்களையும் சேர நாட்டுக்கு இவனுடன்அழைத்துச் செல்வது இயலாத காரியம்."

"நான் தங்களுக்குப் பணிப்பெண்ணாகவும் இருக்கச் சித்தம்."

"என்ன வார்த்தை சொல்கிறீர்கள் இளவரசி. அப்படிச் செய்தால் ஆசானே, எப்படிப்பட்ட நரகம் நமக்குக் கிட்டும்?"

"பிரியாவர்த்தனகம் என்னும் நரகம்."



"தரையில் உறங்குகிறேன். வாவியில்* நீராடுகிறேன். பூப்பறிக்கிறேன். பூசை செய்கிறேன். அரண்மனை வாழ்வைத் தவிர வேறு எந்த வாழ்வும் சம்மதமே. நெல்வயலில் சென்று அறுவடைக்கும் உதவுகிறேன்."

"இளவரசி, தங்களுக்குப் புகல் தந்து பாதுகாப்பதில் எங்களுக்குத் தயக்கம் இல்லை. ஆனால் தாங்கள் இருப்பதை பேரரசருக்குச் செய்தி சொல்லவில்லையெனில் அது ராஜகுற்றமாகும்."

"நான்தான் நான் என்று உங்களுக்குத் தெரியாதே. 'ஏதோ ஒரு அன்றாட நங்கை. அடைக்கலம் கேட்டாள். அளித்தோம்.' என்று சொல்லி விடலாமே."

பட்டர் யோசித்து "இல்லை, அது அபாயமானது."

"ஆசானே, வேறு ஏதாவது யோசனை செய்யுங்கள். உம் அறிவுத் திறனுக்கு அப்பாற்பட்டது ஏதும் உண்டா?"

"தேன் தடவுகிறான். சரி அப்படி வீற்றிருங்கள். உபாயம் யோசிக்கிறேன். வசந்தகுமாரா, நீ குதிரைக்காரனைப் போய் விசாரணை செய்துவிட்டு வா."

"அதுவரை இளவரசியைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வீர்களா ஆசானே?"

"இளவரசி இல்லை, என் பெயர் அபிமதியும் இல்லை."

"பின்?"

"வசந்தகுமாரி" என்றாள் இளவரசி.

"எனக்கு விண்ணில் பறப்பது போல இருக்கிறதே" என்றான்.

"நிச்சயம் பறந்து விண்ணில் விழப் போகிறாய். போ" என்றார் பட்டர்.

"வசந்தகுமாரன், மண்டபத்தினருகில் நடுநடுங்கிக் கொண்டு காத்திருந்தவனிடம் சென்று, "வா, என் அருமை நண்பனே. இன்று நான் இன்பமான மனநிலையில் இருப்பதால் உன்னைச் சிறிதளவே துன்புறுத்துவேன். மற்ற குதிரைகளை எங்கே மறைத்து வைத்திருக்கிறீர்கள். சொல்லிவிடு. உன்னை உயிருடன் விடுகிறேன்."

* வாவி - கிணறு

''காட்டுகிறேன், என்னுடன் வந்தால் காட்டுகிறேன். வர்மத் தொடுகை மட்டும் வேண்டாம்.''

''வா, செல்வோம்.''

''அந்தப் பெண் யார்? அரச குலத்துப் பெண் போலத் தோன்றுகிறதே?''

''நண்பனே, உன் பெயர் என்னவோ சொன்னாயே, இலகுளீசனா? உன்னை உயிரோடுவிட்டு வைத்திருப்பதே பாக்கியம். இப்போது அரசகுலம், சரசகுலம் என்று தப்பான செய்திகளையெல்லாம் பரப்பினால் உன்னை நேர் வழியில் மலமுத்ர சிலேத்மாதிகள் நிறைந்த நரகத்துக்கு அனுப்பி விடுவேன்.''

அவன் அதற்கு ''தாங்கள் அனுப்பக் கூடியவர்தான்'' என்று அப்பால் வாய் பேசாமல் வந்தான். வசந்தகுமாரனை, யவனக் குதிரைகளை மறைத்து வைத்திருக்கும் இடத்தை அடையாளம் காட்ட அழைத்துச் சென்றபோது ஸ்ரீகோயிலுக்கான குளங்களையும் ஊடறுத்துப்போன வாய்க்கால்களையும் கடந்து, சுந்தர சோழ விண்ணகர ஆதுர சாலையைக் கடந்து சென்று ஊருக்கு வெளியே வந்து, தெற்கே செல்லும் சாலையில் நின்று ஒரு காலி மண்டபத்தைக் காட்டினான். ''இங்குதான்'' என்றான்.

''இங்குதான் என்ன?''

''அந்தக் குதிரைகளை மறைத்து வைத்திருந்தோம் அசுவபதி என்பவனிடம்.''

''பொருத்தமான பெயர்.'' மண்டபத்தில் யாரும் இல்லை! ஆனால் பல குதிரைகள் கட்டியிருந்ததற்கு அடையாளமாக சேணமும் சாணமும் சிறுநீர் மணமும் விரவியிருக்க, ''குதிரைகள் எங்கே?''

சோலையிலிருந்து ஓடிவந்த ஒருவன் ''காசு கொண்டு வந்தீர்களா?'' என்றான்.

''காசா, அவர்கள் தரவில்லை?''

''பாவிகள் காசு கொடுக்காமலே சென்று விட்டார்கள்?''

''யார்?''

''சேரநாட்டவர்கள். அனைத்துக் குதிரைகளையும் கடத்திச் சென்று விட்டனர். என் மகனை வாளால் தாக்க, வெட்டுப்பட்டான்.



சேரநாட்டவரை நம்பாதே என்று என் தந்தை பன்னிப் பன்னிச் சொல்வார்.''

''அவர்கள் சென்று எத்தனை நேரமாயிருக்கும்.''

''மூன்று நாழிகை.''

''எவ்வழிச் சென்றனர்?''

''தெற்குப் பாதையில் தான்.''

வசந்தகுமாரன் தன்னுடன் வந்தவனிடம் ''இந்தக் குதிரை யவனக் குதிரைதானே?''

''ஆம். ஆனால்...''

''இது இன்னும் பழக்கப்படாத முரட்டுக் குதிரை'' என்று சொல்வதற்குள் அவன் அந்தக் குதிரை மேல் இவர்ந்து கடுகிப் புறப்பட்டு விட்டான்.



# 33

பழக்கமில்லாத அந்தக் குதிரையின் மீது பாய்ந்து ஏறிக் கொண்டு விட்டாலும் அதைக் கட்டுப்படுத்தும் வித்தைகள் விளங்குவதற்குள் துரகம், முழவோட்டமாக புலித கதியில்செல்ல முற்பட, வசந்தகுமாரனுக்கு விலா எலும்புகள் நோக, வேகத்தைக் கட்டுப்படுத்த முற்பட்டான்.

கொள்ளிக்கால், வெள்ளிக் கண், சுடலை முகம், காள கண்டம்போன்ற குற்றங்கள் ஏதும் இல்லாத வனப்பான குதிரை அது. வேற்று நாட்டிலிருந்து கடல் மார்க்கத்தில் வந்து முற்றிலும் புதிய சூழ்நிலையில் சற்று மிரண்டிருந்ததால் அதன் கதியில் துரிதமும் பதற்றமும் சீரின்மையும் இருந்ததையறிந்து வசந்தகுமாரன் அதன் சிரத்தில் இருந்த இரண்டு சுழிகளைத் தடவிக் கொடுத்து அதன் காதருகில்,

''யவனக் குதிரையே, உனக்கு குங்குமச் சோரன் என்றெல்லாம் பெயர் வைக்கிறேன். சொன்ன



பேச்சு கேள். கேரள புத்திரர்களின் நாட்டில் உனக்குத் தின்பண்டங்கள் அளிக்கிறேன்.''

குமாரனை எப்படியேனும் தன் முதுகிலிருந்து உதிர்த்து விட வேண்டும் என்கிற பிரயாசையில் அந்தப் புரவி சுற்றிச் சுற்றி வந்தது. வசந்தகுமாரன் அதைத் துன்புறுத்த விரும்பவில்லை. ''ஏய் கந்தமே, குரகதமே, இவுளியே, ஏன் என்னை இப்படித் துன்புறுத்துகிறாய்?'' என்று கேட்க அது கடல் போலவும் முழவு போலவும் சப்திக்க, ''நல்ல சாதிக் குதிரைதான் நீ. ஆனால் ஏன் இப்படிப் பிடிவாதம் செய்கிறாய். உனக்கென்று கோளிகை என்னும்பெட்டைக் குதிரை வரவழைத்துத் தருகிறேன். என் செல்லமல்லவா'' என்றான்.

ஆனால் அதன் முதுகிலிருந்து இறங்காமல் அதைத் தன் கால்களால் அரசி சுவரிதக நடைக்குக் கொண்டு வந்து மெல்ல மெல்ல அதைத் துரிதப்படுத்த, இரு கால்களையும் தூக்கி வல்கிதம் பயின்றது.

வசந்தகுமாரன் விழுந்து விடாமல் பிடித்துக் கொண்டான் ஒருவாறு அவனை உதிர்ப்பது கடினம் என்று அந்தக் குதிரைக்குத் தோன்றிவிட, அவன் தன் கழுத்திலும் தோள்களிலும் தட்டிக் கொடுப்பதை விரும்புவதாக இருக்கிறது என்று தீர்மானித்த அந்த யவன அசுவம் இறுதியில் வசந்தகுமாரனுக்குப் பணிந்து போய்க் கட்டுப்பாட்டிற்கு வந்தது. இப்போது அதன் மேல் படர்ந்து செல்வது மகிழ்ச்சிக்குரியதாக இருந்தது. வசந்தகுமாரன் மெல்ல மெல்ல அதன் வேகத்தை அதிகரிக்க, சில கணங்களில் அது மின்னல் தீற்றல்போல பாதைப் புழுதி மேகம் வால்போல் தொடர, இதயம் போல திடுக்கிடும் சப்தங்கள் கேட்க, அதிகாரமாக விரைவாகச் சென்று கொண்டிருந்தது. ஓரிடத்தில் வந்ததும் தயங்கி நின்று திரும்ப முற்பட்டது.

ஒருக்கால் தாகமாக இருக்குமோ என வசந்தகுமாரன் அருகே நீர்த் தொட்டியை தேடப் போந்து வடிகயிற்றைத் தளர்த்திய போது குதிரைகள் கனைக்கும் ஓசை கேட்க, ஒரு மண்டபத்தருகே அத்தனை யவனக் குதிரைகளும் பந்தியாக இருப்பதைக் கண்டான். அவைகளை ஓட்டி வந்தவர்கள் இளைப்பாறிக் கொண்டிருக்க, வசந்தகுமாரன் தன் புரவியைத் தட்டிக் கொடுத்து ''நன்று குங்குமச் சோரா, நன்று. நான் சேர வேண்டிய இடத்தில் சேர்த்து விட்டாய்.''

வசந்தகுமாரன் சற்றுத் தூரத்திலேயே இறங்கி அவர்களை நோக்கி நடந்தான்.

''ஏன் இத்தனை நேரம், வா உனக்காகத்தான் காத்திருந்தோம்'' என்றான் அந்தப் பந்தியை பாதுகாத்தவன். மாவலர் மூவர் இருந்தனர்.

''இவனா?'' என்று சற்றே ஐயத்துடன் ஒருவன் கேட்க, வசந்தகுமாரனுக்குத் தன்னை வேறு யாரோ என்று அவர்கள் எண்ணிக் கொண்டிருப்பது தெரிந்தது.

''இவனையா விட்டு வந்தோம்? முகம் வேறு வகையில் தோன்றுகிறதே? அடேய், உன் பெயர் என்ன?''

''வாதூலன்'' என்றான் வசந்தகுமாரன்.

''அவன் வேறேதோ பேர் சொன்னதாக நினைவு.''

''சின்னசாம்பனைத் தானே சொல்கிறீர்? அவன் எவ்விடம் இந்த அசுவத்தை ஒப்படைத்து விட்டான். அவனுக்கு உடல் நலமில்லை.''

''சரிசரி புறப்படு. காந்தளூர் செல்ல பல நூறு காதங்கள் உள்ளன.'' விடியும்முன் சேர வேண்டும்.

வசந்தகுமாரன் ''இருளில் தான் நாம் பயணம் செய்வது ஏத்தமல்லவா'' என்றான்.

''ஏன்?''

''சோழ நிலைப் படையொன்று சாலையில் மறைந்து காத்திருக்கிறதாம். கேரளாரந்தகத் தெரிந்த படையாம். மாற்றுப் பாதையில் செல்லச் சொன்னான்.''

''யார்?''

''நம் ஒற்றன்.''

''பெயர்?''

''மன்னிக்கவும். பெயர் சொல்ல இயலாது.'' அவர்களுக்குள் விவாதம் ஏற்பட, அதை வசந்தகுமாரன் எவ்வித உணர்ச்சியும் முகத்தில் காட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

''வேறு பாதை அறிவாயோ?''

''அதனால் தான் நான் அனுப்பப்பட்டேன். சாம்பன் வரவில்லை, என்னை அனுப்பினான்.''

''அப்படியெனில் எங்களை அழைத்துச் செல். முன்னால் செல்'' என்றான்.



குதிரைப் பந்தியை வசந்தகுமாரன் கவனித்தான். [illegible] வாங்காமல் விட்டுச் சென்ற யவனக் குதிரைகளைச் சேர நாட்டு வணிகர் வாங்கி விட்டனராம். இரவோடு இரவாக கடத்த இருந்தவர்களைத் தான் திசை திருப்பியிருக்கிறான். சற்றே ஐயத்துடன்தான் பார்த்தார்கள். ''நீ ஏதும் ஒற்றனல்லவே?''

''நான் ஒரு சாதாரண இவுளி மறவன். சேர நாட்டுக்கு மாற்றுப் பாதை தெரிந்ததால் அனுப்பப்பட்டேன்.''

''பொய் என்று தெரிந்தால் எங்களிடம் அஸ்திர சாஸ்திரங்கள் உள்ளன. மர்ம ஸ்தானத்தில் குறிவைத்து அடிப்போம்.''

''அறிவேன். மிக்க வேதனையாக இருக்கும். அறிவேன். அதெல்லாம் எதற்கு? என் கடன் வழி காட்டுவதே. வாருங்கள். இருண்டவுடன் புறப்படலாம்'' என்றான்.

வசந்தகுமாரன் இவ்வாறாக யவனக் குதிரைகளைத் தந்திரமாக வழி மறித்து மீண்டும் சோழ நாட்டை நோக்கித் திசை திருப்பும்வேளையில் இளவரசி அபிமதியைக் கணேசபட்டர் ராஜராஜேச்சுரத்தில் ஆதுர சாலைக்கருகில் உள்ள குமரிலர் இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

''காலை, புகாருக்கு புறப்பட்டுப் போவதுதான் தங்களுக்கு நல்லது இளவரசி.''

''இளவரசி என்று என்னை விளிக்காதீர். என்னை ஒரு பணிப்பெண்ணாகக் கொள்ளுங்கள்.''

''தங்களைப் போய் பணிப்பெண் என்றால் யாரும் நம்பப்போவதில்லை.''

''அதற்காக உடை மாற்றிக் கொள்கிறேன். முகத்தில் கரி பூசிக் கொள்கிறேன்.''

''இருளால் நிலவை மறைக்க முடியாது இளவரசி. தங்களுக்குத் தஞ்சம் அளிப்பதில் நான் செய்வது ராஜகுற்றம். அதைத் தாங்கள் அறிய வேண்டும். நான் சோழ அரசின் விசுவாசி. பேரரசருக்கு முன்பாக மிச்சை பகர்வது மிகப் பெரிய குற்றம்.''

''பேரரசரிடம் சொல்லாதீர்கள்.'' அபிமதி கண்ணீருடன் ''பட்டரே, தாங்கள் புகல் தராவிடில் எனக்கு இறந்து போவதைத் தவிர வேறு மார்க்கமில்லை.''

''இருக்கிறது இளவரசி.''

''சாளுக்கிய மார்க்கம் எனக்குச் சம்மதமில்லை.''

''விருப்பத்திற்கு மாறாக தங்களை மணமுடிக்க யாராலும் இயலாது இளவரசி.''

''இயலும் பட்டரே. தங்களுக்கு ராஜ பரம்பரையின் தர்மம் தெரியாது. பெண்கள் அனைவரும் அடிமைகள். பொருட் பெண்டிரையும் பதியிலாரையும் விடக் கேவலமானவர்கள் அரச குலத்துப் பெண்கள். நாங்கள் போர் விளையாட்டில் பகடைக் காய்கள். வேலால் வெல்ல முடியவில்லையென்றால் வேல் விழியால் வெல் என்பதுதான் வழக்கம்.''

''இல்லை இளவரசி. பேரரசர் அத்துணை கொடுமைக்காரர் அல்ல.''

''இப்போது என்னை அழைத்துச் சென்று தஞ்சம்அளிக்கப் போகிறீரா? இல்லையா?''

''என் தலைக்கு வரும் ஆபத்து இருந்தும் செய்கிறேன். முதற்கண் தங்கள் அபரிமிதமான கூந்தலைக் குறைக்க வேண்டி வரும்.''

''கூந்தலைக் குறைக்கிறேன், ஆபரணங்கள் அத்தனையும் துறக்கிறேன். கட்டாந்தரையில் படுக்கிறேன். என்னை அரண்மனைக்கு அனுப்பாமலிருந்தால் சரி.''

''விநோதமான பெண் தாங்கள்.''

அந்த இல்லத்துக்குச் சொந்தக்காரர், கணேசபட்டரின் தாய்மாமன் குமரில பட்டர். மூத்த குடிமகன். அவர் மெல்ல அவர்கள் உரையாடிக் கொண்டிருந்த கூட்டத்துக்கு வந்து ''கணேசா, என்ன இது? யார் இந்தப் பையன். பார்த்தால் பெதும்பைப் பெண் போலத் தோற்றமளிக்கிறான்.''

''மாதுலரே, கண் பார்வை சரியில்லாமல் பிதற்றாதீர். இது ஆண் மகன் தான்.''

''எனக்கா பார்வை சரியில்லை. மாலை இருளில் அகல் விளக்கின்றி சுவடிகளைப் படிக்கிறேன். அறிவாயோ கணேசா?''

''அப்படியா?'' என்றாள் அபிமதி.

''அதெல்லாம் மனப் பாடத்தில். கிழவரை நம்பாதீர்'' என்றார் கணேசபட்டர், சற்றே தாழ்ந்த குரலில்.



''கணேசா, விடையில் அதிகாரி உன்னைத் தேடி வந்திருந்தார். உடனே வரச் சொன்னார். இளவரசி அபிமதி தப்பித்து வந்து விட்டாராம். சாளுக்கியர்கள் மிகுந்த சினத்தில் கொதித்துக் கொண்டிருக்கிறார்களாம். பேரரசரும் கொதித்துப் போயிருக்கிறார் என்பது தெரிகிறது.''



# 34

கணேசபட்டர் தர்மசங்கடம் என்பதை இப்போது தான் முழுமையாக அறியத் துவங்கினார். எத்தனையோ சிக்கல்களைச் சந்தித்திருந்தாலும் அனைத்தும் அவருடைய சொந்த வாழ்வைப் பாதித்திருக்கவில்லை. ஆனால் இந்த நெருக்கடி? அபிமதிக்குத் தஞ்சம் கொடுத்து அவளை மறைப்பதனால் ராஜகோபத்துக்குப் பாத்திரராகிறார். அவளைக் காட்டிக் கொடுத்தால் அவருடைய ஆப்த நண்பன் வசந்தகுமாரன் அவரை மன்னிக்கவே மாட்டான். அவன் திரும்பும் வரையிலாவது அவளைக் காக்க வேண்டும்.

இருவரையும் திருப்திப்படுத்தும் வகையில் ஏதாவது தீர்வு உள்ளதா என்று யோசித்தார். முதற்கண், இந்தப் பெண்ணை தஞ்சையிலிருந்து இடம் மாற்ற வேண்டும். இல்லையேல் நிச்சயமாக அண்டை அயலார் சங்கைப்பட்டு விரைவிலேயே அரண்மனைக்குச் செய்தி



போய்விடும். அதனால் புகாருக்கு இருட்டியதும் புறப்படலாம் என்று தீர்மானித்து, அபிமதியிடம் "தாங்கள் வெளியில் தலை காட்டாமல் மாமனுடன் பேசிக் கொண்டு இருங்கள். யாரேனும் கதவைத் தட்டினால் பட்டரே திறக்கட்டும்."

குமரில பட்டர், "கணேசா, ஏதாவது வம்பு தும்பில் என்னை சிக்க வைக்கப் போகிறாயா, என்ன இது? யார் இந்தச் சிறுவன்?"

"மாலை பகர்கிறேன்" என்று சொல்லி பட்டர் விரைவில் விடையில் அதிகாரியைப் பார்க்கச் சென்றார். அங்கே "பட்டரே, நீலவண்ணர் நித்யநாதர் தங்களை உடனே சந்திக்க விரும்புகிறார்."

பட்டர், மாதண்ட நாயகர் நீலவண்ணர் நித்யநாதரின் இல்லத்துக்குச் சென்றபோது, "வாரும் பட்டரே" என்று பரிகாசத்துடன் விளித்தார் நீலவண்ணர். "இளவரசி அபிமதியை எங்கே மறைத்து வைத்திருக்கிறீர்?"

பட்டர் முகத்தில் மாற்றம் காட்டாமல் "சாளுக்கிய மன்னரைப் போய்க் கேளும்" என்றார்.

"உமக்கு அதன்பின் நிகழ்ந்தது தெரியாதா?"

"தெரியாது."

"இளவரசி சாளுக்கியரிடமிருந்து தப்பித்துத் தஞ்சை வந்திருப்பதாகச் செய்தி."

"அவ்வாறெனில் பேரரசரின் அரண்மனையில் அல்லது குந்தவைப் பிராட்டியின் மாளிகையில், இல்லை பழையாறையில் இருப்பார்."

"அங்கு எங்கும் செல்லவில்லை. பேரரசர் மிகுந்த சினத்தில் மாதண்டநாயகனான எனக்கு ஒரு தினம் அவகாசம் கொடுத்துள்ளார். அந்தப் பெண் இருப்பிடத்தைக் கண்டு கொண்டு வர. பட்டரே, தாங்கள் ஏதும் புகலளிக்க வில்லையே?"

"இல்லை."

"இருந்தால் சொல்லிவிடும். மிகப் பெரிய குற்றம். உங்களுக்கு சொல்லித் தெரிய வேண்டுவதில்லை."

"இல்லை."

"தற்சமயம் தாங்கள் எங்கிருந்து வருகிறீர்கள்?"

"என் மாமன் குமரில பட்டரின் இல்லத்திலிருந்து. அங்கே விடையில் அதிகாரியின் ஆட்கள் முழுவதும் சோதனை செய்தார்கள். எதற்கு என்று சொல்லவில்லை."

"இதற்குத்தான்."

"தாராளமாகத் தாங்களும் சோதனை செய்யலாம். அங்கே என் தாய் மாமன் குமரில பட்டரும் சில ஓலைச் சுவடிகளும் அகப்படும்."

நீலவண்ணர், "பட்டரே, பேரரசர் உம்மைக் கேட்டாரா?"

"என்ன?"

"என்னைப்பற்றி? என்மேல் ஏதும் அனுமானம் உண்டா அவருக்கு."

"இல்லை. மாறாகத் தங்கள் விசுவாசத்தைப் பொதுச் சபையில் பாராட்டியிருக்கிறார்."

நீலவண்ணரின் முகம் இறுகி, "பின் ஏன் அந்தத் துரோகி சேரநாட்டு ஒற்றன் என்று தீர்மானிக்கப்பட்ட வசந்தகுமாரனை சிறைக்குச் சென்று விடுவிக்க வேண்டும் பட்டரே?"

"எனக்கு அதுபற்றி எந்தவிதத் தெளிவுமில்லை."

"பிரம்மதேயத்துக்காரர்கள் சூழ்ச்சி மிகுந்தவர்கள் என்று சொன்னபோது நான் நம்பவில்லை. ஆனால் இது கணேசபட்டரின் சூழ்ச்சி என்பதில் ஐயமில்லை. ஏதும் அறியாதது போல் பாவனை செய்யாதீர். வசந்தகுமாரன் விடுவிக்கப்பட்டு சேரநாட்டுக்குத் தூதுவனாக நியமனமாகியிருக்கிறான். இதைக்காட்டிலும் நகைப்புக்குரியது இருக்க முடியுமா பட்டரே!"

"இருக்கலாம். நான் விடை பெறலாமா?"

"எதற்கும் எச்சரிக்கையாகவே இரும்" என்று சொன்னதை கணேசபட்டர் நீலவண்ணரின் இல்லத்தை விட்டு வெளியே வரும்போது கேட்டார்.

நேராக குமரில பட்டரின் மனைக்குச் செல்லாமல் புகாருக்குப் புறப்பட்டுச் செல்ல ஒரு வண்டியும் வழிச் செலவும் ஏற்படுத்த நாளங்காடிப் பக்கம் சென்றார். அதனிடையில் நீலவண்ணர் விடையில் அதிகாரிக்கு ஓர் ஓலையில் இவ்வாறு எழுதி அனுப்பினார்.



"குமரில பட்டரின் இல்லத்தில் தங்கள் அதிகாரிகள் சோதித்து அங்கே இளவரசி வரவில்லை என்று அறிந்து கொண்டது உண்மையா?"

இந்தச் செய்தி விடையில் அதிகாரியிடம் போய்ச் சேர்ந்தபோது, கணேசபட்டர் நாளங்காடியில், புகாருக்குப் பிரயாணம் செய்ய சாகாடு ஒன்றை சித்தப்படுத்தச் செல்வதன் முன் யோசித்தார்.

"என்ன இருந்தாலும் தான் செய்வது அரச குற்றம். தான் பேரரசரைச் சந்தித்துப் பேசிப் பார்க்கலாமே" என்று தோன்றியது.

ராஜதரிசனத்துக்குக் காத்திருக்கலாம் என்று அரண்மனையை நோக்கி நடந்தார். பெரிய கோயில் கட்டுமான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. மக்கள் வெள்ளம், தேனீக்கள் கூடு கட்டுவது போல் சாரங்கள் அமைத்து கற்களை அவர்கள் முதுகு பளபளக்க உருட்டிக் கொண்டிருந்தனர்.

தனிக்குளம் என்று சுண்ணமும் செங்கல்லுமாக காணப்பட்ட கோயில், கற்றளியாக மாறிக் கொண்டிருந்தது. திருச்சுற்றில் வைக்கப் போகும் நந்தியே இரண்டு கோல் உயரம் இருக்கப் போகிறது என்று பேசிக் கொண்டார்கள். நடு விமானம் இருபது கோலாவது இருக்கிறது என்றும் ஒரே கருங்கல்லை உச்சியில் ஏற்றப் போகிறார்கள் என்றும் பேசிக் கொண்டார்கள். தெய்வச்சிலைகளும் சாசனங்களும் அங்கங்கே வெட்டிக் கொண்டிருக்க, பிருகதீசுவரர் என்னும் மூலத் தெய்வம் எப்படி அமைக்கப்போகிறார்கள் என்று வியந்து பட்டர் அந்த மகா இயக்கத்தை மெய்மறந்து பார்த்துக் கொண்டே செல்ல, இடையே மகேந்திர மங்கலத்தாரைச் சந்தித்தார்.

"என்ன இது, பேரரசர் முன் இத்தனை கலகம் செய்து விட்டீர்கள்."

"பட்டரே உம்மை ஒரு கேள்வி கேட்கலாமா? தாங்கள் பேரரசருக்கு நெருக்கமானவர் என்கிறார்கள்."

"கேளும். நான் ஏதும் அத்துணை சேண்மையுள்ளவன் அல்ல."

"இந்தக் கோயில் யாருக்கு?"

"பிருகதீசுவரருக்கு."

''இல்லை. பேரரசரின் வெற்றிகளையும் பெருமையையும் சோழ நாட்டின் கீர்த்திகளையும், அரச குடும்பத்தின் பக்தியையும் உலகத்திற்கு எடுத்துரைக்கத்தான் கட்டப்படுகிறது.''

''அதனால் என்ன? நல்லது தானே!''

''எழுநூற்றுக்கும் மேற்பட்ட நிரந்தர ஊழியர்கள் பயன்படுத்தப்படுவார்களாம். வாத்திமார், உடுக்கைக்காரன், கணக்கு, கீழ்க்கணக்கு, கீழ்க்குடை, உவைச்சர் சகடை கொட்டி, திருப்பணித் தாங்கல் என்று கடைசி மானுடன் வரை. இவர்களுக்கெல்லாம் ஊதியம் தரப்போவது யார்?''

''பேரரசர் தான்.''

''இல்லை பட்டரே, நாங்கள் வேளாண் மக்கள். இவர்களுக்கு ஊதியம் அளிக்க சபை-ஊர்-நகரங்களைப் பொறுப்பாக்க ஆக்கினை இட்டிருக்கிறார்கள்.''

''நீர் என்ன சொல்ல வருகிறீர்? கோயில் வேண்டாமா?''

''தேவதானம் என்று முழுக் கிராமங்களையே இறைக் காவலாகக் கொடுப்பிக்கும்போது இத்தனை பெரிய கோயில்! பட்டரே, காணிக்கடன் கொடுத்து எங்களால் மாளாது. இது அதிகரித்தால் என்ன நிகழும் தெரியுமா?''

''என்ன?''

''இடம் பெயர்ந்து வேறிடம் சென்றுவிடுவோம்!''

''அதற்குத் தேவையிருக்காது நண்பரே!''

''இதைப்போய் உம் பேரரசரிடம் பகரும்'' என்று அவர் விலகிச் செல்ல, பட்டருக்குக் குழப்பமாக இருந்தது. யார் பக்கம் பேசுவது? கோயில் சோழ நாட்டுக்கே பெருமை தரும். இருந்தும் இத்தனை பெரிய கோயில் தேவையா என்பதற்கு அவருக்கு விடை கிடைக்கவில்லை. ஆயிரக்கணக்கான வேளாண் மக்களின் விரோதம் விரும்பத் தக்கதா?

பேரரசரின் தரிசனத்துக்காக அரசவைக்குச் சென்று காத்திருந்தபோது, மங்கல முரசொலிக்க மன்னர் வந்த போது, அவர் வதனத்தில் சற்றே சினம் தென்பட்டதை பட்டர் அறிந்து கொண்டார்.

திருவாய்க் கேள்வி, திருமந்திர ஓலை நாயகம், விடையில் அதிகாரி, ஆணத்தி, நாடு காவலதிகாரி அனைவரும் அருகில் இருக்கிறார்கள். ஏதோ விசேடம் அல்லது விபரீதம் என்று தீர்மானித்தார்.



முதன் முறையாக கணேசபட்டரை கண்ணுற்ற மன்னர் ''பட்டரே வாரும். உம்மைத் தான் எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். இப்படிச் செய்வீர் என்று நான் சற்றும் எண்ணவில்லை'' என்றார்.



## 35

பேரரசருக்கு விஷயம் தெரிந்துவிட்டது. இனிமேலும் மறைத்து வைப்பதில் அர்த்த மில்லை என்று அபிமதியைப் பற்றி பேசுவதற்கு ஆயத்தமாகுமுன் பேரரசர், ''பட்டரே, தாங்கள் மகேந்திர மங்கலத்துக் கலகக்காரருக்கு உதவுகிறீராமே?''

''இல்லையே பேரரசே, யார் அவ்வாறு தங்களிடம் சொன்னது?''

''நீலவண்ணர் தான். இந்த மக்களுக்கு என்னதான் வேண்டுமாம்? அதைச் சொல்லும்?''

''பேரரசே! கோயில் கட்டுவதன் சுமை, சில தரத்து மக்கள்பால் மிக அதிகமாக இருப்பதை உணர்ந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.''

''என்ன சுமை''

''மிகுதியான காணிக்கடனும், விளை நிலங்களை அவர்களிடமிருந்து பறித்துக்



கோயிலுக்குக் கொடுத்ததும் தான் அவர்கள் கொதிப்புக்குக் காரணம்.''

வேறேதெனும் மார்க்கமிருக்கிறதா பட்டரே?''

''இருக்கிறது. இத்துணை பெரிய கோயில் கட்டாமல் இருப்பது ஒன்று.'' மன்னரின் தீர்க்கமான நாசித்துவாரங்கள் சற்றே விரியத் துவங்கின.

''பட்டரே! நீரா அப்படிக் கேட்கிறீர்? உமக்கு தெய்வ பக்தி இல்லையா?''

''யான் அல்ல. சில மக்கள். அவர்கள் குறைகளைத் தங்களிடம் கொண்டுவந்து சொல்லும் தூதுவன் நான்.''

''பட்டரே இதில் தங்கள் கருத்து என்ன என்பதைச் சொல்ல இயலுமா?''

பட்டர் சற்று நேரம் யோசித்து ''இந்தக் கோயிலினால் தங்கள் புகழ், கீர்த்தி எதிர்காலத்தில் நிலைக்கும். மக்களின் எதிர்ப்பு மறக்கப்படும்.''

''இது உம் கருத்தல்ல பட்டரே!''

''கருத்துத் தெரிவிப்பதற்கு எனக்கு முதற்கண் உரிமை இல்லை மாமன்னரே! மேலும் தாங்கள் இந்த விஷயத்தில் எங்கள் கருத்தைக் கேட்டுச் செயல்படப் போவதில்லை. தங்கள் மனத்தில் இந்தக் கோயிலைக் கட்டியே தீருவது என்று தீர்மானித்து விட்டீர்கள்.''

''ஆம் பட்டரே! எத்தனை செலவிட்டாலும், எத்தனை பேர் கஷ்டப்பட்டாலும் சரி, கட்டித் தீருவேன். கட்டி முடித்ததும் இதை எதிர்த்த அத்தனை மக்களும் என் இந்தக் காரியத்தைச் சிலாகிக்கப் போகிறார்கள்.''

''அதில் எள்ளளவும் ஐயமில்லை பேரரசே!''

''அபிமதியைக் காணவில்லை, தங்களுக்கு சேதி தெரியுமோ! தங்கள் நண்பன் வசந்தகுமாரன்அவளை ஏதாவது விபரீதமான நீசச் செயலாகக் கடத்தி வந்துள்ளானா, அறிய வேண்டும்.''

கணேசபட்டருக்குச் சங்கடமாகத் தான் இருந்தது. மன்னரிடம் நேரடியாகப் பொய் சொல்ல வேண்டிய தருணம் வந்துவிட்டது.

''வசந்தகுமாரன் யவன குதிரைகளை மீட்டுவரச் சென்றிருக்கிறான்.''

''யவன குதிரைகள் சேரநாட்டுக்கு எப்போதோ கடந்துவிட்டன என்று எனக்குச் செய்தி வந்தது.''

''இல்லை. அவைகளை வழிமறித்து விடுவிக்கத்தான் வசந்தகுமாரன் சென்றிருக்கிறான்.''

''அப்படியா! வியப்பாக உள்ளது, உம் நண்பனின் தீரம்! எதற்கும் அஞ்சமாட்டான்! அபிமதி அவனிடம் செல்லவில்லை என்கிறீர். அந்தப் பேய் பெண்ணின் போக்கு விசித்திரமாக உள்ளது. இவளுக்கு சாளுக்கியனை மணப்பதில் என்ன தயக்கம்? சாளுக்கிய விமலாதித்தனுக்கு என்ன குறை?''

''பேரரசே! தங்களிடம் இதைக் கூறுவதற்கு எனக்கு அச்சமாக இருக்கிறது. அபிமதி போன்ற சுயசிந்தனையும் புத்திகூர்மையுமுள்ள கல்வி கேள்விகளில் சிறந்த அரசகுலப் பெண்ணுக்கென்று ஒரு தனி விருப்பம் இருக்கலாம் என்று தாங்கள் யோசித்ததுண்டா?''

''இருக்கலாம். அதற்கென்ன?''

''அந்த விருப்பம், தனக்கேற்ற மணாளனைத் தேர்ந்தெடுக்க! பேரரசே, தங்கள் தமக்கையார் தனக்கேற்ற மணாளராக வந்தியத் தேவரைத் தேர்ந்தெடுக்க தாங்கள் சம்மதிக்கவில்லையா?''

''அது என் தந்தை சுந்தரசோழரின் பிரச்சினையாக இருந்தது...''

''இது தங்கள் பிரச்சினை. அபிமதி தங்கள் மகள் போலத் தானே!''

''நீர் என்ன சொல்லுகிறீர் பட்டரே?''

''அபிமதிக்குச் சாளுக்கியரை மணக்க விருப்பமே இல்லை!''

''பின் யாரை மணக்க விரும்புகிறாளாம், அந்த வசந்தகுமாரனையா?''

''ஆம். வசந்தகுமாரனை.''

பேரரசரின் புருவங்கள் நெருங்கி நாசி சற்றே துடித்தது.

''சாளுக்கியன் மிகவும் கோபப்படுவான்.''

''பேரரசே! நான் அபிமதியை உடனே வசந்தகுமாரனுக்கு மணம் முடிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. வசந்தகுமாரனை அண்மையில்தான் தூதுவனாக நியமனம் செய்திருக்கிறீர்கள். அவன் சேரநாட்டுக்குச் சென்று தன் பணியை சிறப்பாகச் செய்து போர் உண்டாகும் சூழ்நிலையைத் தடுத்து நிறுத்தினால் பரிசாக



அபிமதியின் கரம் கிடைக்கும் என தாங்கள் அறிவித்தால் தங்கள் பெருந்தன்மை வெளிப்படும். இளவரசி அபிமதியும் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள். வசந்தகுமாரனும் முழு முனைப்புடன் தன் தூதுவப் பணியில் ஈடுபடுவான்.''

''பட்டரே, நல்ல யோசனைதான். ஆனால் சாளுக்கியன் தான் கொதித்தெழுவான்.''

''உண்மைதான். ஆனால் சாளுக்கியருக்கு தங்கள் மகள் சிறிய குந்தவையை மணம் முடித்துக் கொடுத்தது போதும் என்பது என் கருத்து.''

''சாளுக்கியன் சினந்து வடக்கேயிருந்து படையெடுத்தால்?''

''அந்த அபாயம் உள்ளது.''

''அவன் போருக்கு அஞ்சமாட்டான் பட்டரே, எத்தனைதான் போரிடுவது. வேங்கை நாடு, கங்கபாடி, நுளங்கபாடி, குடமலைநாடு, கொல்லம், சிங்களர் ஈழம் என்று!''

''அதனால் தான் சாளுக்கியப் படையெடுப்பைப் பற்றி அச்சம் தேவையில்லை என்கிறேன். பேரரசே, ஒரே ஒரு வேண்டுகோள்! தங்கள் வெற்றிகள் அத்தனையும் ஒரு மெய்க்கீர்த்தியாக அகவற்பாவில் வடித்துள்ளேன். அதைக் கல்லெழுத்தில் பொறிக்க விரும்புகிறேன்.''

பேரரசர் மகிழ்ந்து, ''நான் செயல்படுத்த வேண்டியது எண்ணற்றது பட்டரே!'' என்றார்.

அப்போது நீலவண்ணரின் ஆட்கள் பணிவுடன் வேந்தருக்கு அருகில் வந்து திருவோலை ஒன்றை அவர்பால் தர, அவர் அதைப் படித்துவிட்டு ''வரச் சொல்'' என்றார்.

நீலவண்ணர் நித்யநாதர் அகத்தே வந்து கணேசபட்டரைப் பார்த்து ''நீரிங்கிருக்கிறீரோ? பேரரசே! இந்த கணேசபட்டர்தான் இளவரசிக்குத் தஞ்சம் கொடுத்திருக்கிறார்.''

''அப்படியா? பட்டரே இதை நீர் என்னிடம் சொல்லவில்லையே.''

''தாங்கள் அதைக் கேட்கவில்லையே.''

''எப்படிச் சொல்வார் பேரரசே. இது ராஜகுற்றம். அந்த இளைஞன் வசந்தகுமாரனைச் சிறையினின்று விடுவித்தது தவறு.

அவனைச் சேரநாட்டுத் தூதுவனாக நியமித்தது மிகப் பெரும் தவறு. இப்போது அவர்கள் செய்யும் ராஜ குற்றத்தை எப்படி...''

''அபி எங்கே?''

''கணேசபட்டருடைய மாமன் குமரில பட்டர் என்பவரின் இல்லத்தில் இருக்கிறார், ஆண் வேடத்தில்!''

''ஆண் வேடத்திலா! என்ன இது பட்டரே?!

ராஜராஜ சக்கரவர்த்தி, ''பெண்கள் இந்த நாட்களில் என்னவெல்லாம் தைரியம் பெற்றுவிட்டார்கள்'' என்று வியந்தார்.

''அவளை நான் ஆண் உடையில் பார்க்கவேண்டும்.''

''சிறப்பாகத் தம் அடையாளங்களை மறைக்க முயன் றிருக்கிறார். அழகு காட்டிக் கொடுத்து விடுகிறது! காதல் எத்துணை பெரிய சக்தி?''

''இது காதல்அல்ல, சாளுக்கியனுடன் விவாஹத்தின் மேல் வெறுப்பு.''

''காதலும் உள்ளது பேரரசே!''

''காதல் என்பதே உள்ளதா பட்டரே?''

''பேரரசே! தங்களுக்குத் தெரியாததா?''

''போர்க்களங்களிலும் கோயில் கட்டுவதிலும் சிரத்தையாக இருந்ததால் இந்த மென்மையான உணர்ச்சிகளுக்கெல்லாம் மனதில் இடமின்றிப் போய்விட்டது.''

''குந்தவைப் பிராட்டியாரைக் கேட்டால் விளக்கமாகச் சொல்வார். அவர் காதலித்தவர்தான்.''

''இப்போது அபிமதியை அழைத்து வாரும். நான் அவளுடன் பேசுகிறேன். திருமணம் தற்போது வேண்டாம் என்று சாளுக்கியனிடம் சொல்லி விடுகிறேன்.''

இதைக் கேட்டுக் கொண்டிருந்த நீலவண்ணர் நித்ய நாதரின் முகம் சுருங்குவதைப் பேரரசர் கவனித்தார்.

''நித்யநாதரே, ஏன் என் தீர்ப்பில் சம்மதமில்லையா?''

அவர் உடனே முகம் மலர்ந்து, ''அப்படியெல்லாம் இல்லை. சாளுக்கியருடன் மிகுந்த விரோதம் வரும் இதனால்! சதிக்குற்றம்



சாட்டப்பட்ட வசந்தகுமாரனை பேரரசர் இப்படி போற்றிப் பாதுகாப்பது நல்லதல்ல.''

''நீலவண்ணரே, உம் மேலேயே சதிக்குற்றம் உள்ளது என்னைக் கொல்ல. இதுவரை மூன்று முயற்சிகள் தோல்வியடைந்துள்ளன. அவைகளில் தாங்களும் சம்பந்தப்பட்டுள்ளீர்கள் என்று நம்ப ஆதாரங்கள் உள்ளன. நீலவண்ணரே! பாசாங்கு வேண்டாம். போதுமான சான்றுகள் இல்லாததால் உம்மைவிட்டு வைத்திருக்கிறேன். தக்க சான்றுகள் கிடைத்துவிட்டால் உம்மைச் சிரச்சேதம் செய்யவும் தயங்கமாட்டேன். எனக்கு மிகுந்த கருணையும் உண்டு; கோபமும், உண்டு.''

நீலவண்ணரின் முகம் பேயறைந்தாற்போல ஆகிவிட, அவர் நாசியும் உதடுகளும் துடிக்க, சற்று அவசரமாக சபாத் தியாகம் செய்தார்.

கணேசபட்டர் ''பேரரசருக்குத் தெரியாதது ஏதும் இல்லை'' என்றார்.

''நீலவண்ணன் என்னிடமிருந்து தப்பித்துவிட முடியாது. அவன் இல்லத்தின் மடைப்பள்ளியில்கூட என் உளவுப்படையைச் சேர்ந்தவன் உள்ளான்.''

அப்போது அரண்மனைக்கு வெளியே ஆரவாரங்கள் கேட்க, இருவரும் சாளரத்தின்று வெளியே எட்டிப் பார்த்தபோது உள்சுற்றில் ஓர் அதிசயமான காட்சியைக் கண்டனர்.



# 36

வசந்தகுமாரன் ஒரு யவனக் குதிரைமேல் அமர்ந்து வர, ஏறத்தாழ நூறு யவனக் குதிரைகளின் பந்தி தொடர்ந்து வர, அந்தக் காட்சி விந்தையாக இருந்தது.

உப்பரிகையிலிருந்து பேரரசர் கவனிக்க, அவரின் சாளரத்தின் கீழ் வந்து வணங்கி, "பேரரசே, தாங்கள் பணித்தபடி சேரநாட்டுக்குத் தூது செல்லுமுன் தங்களுக்கு ஒரு சிறிய பரிசு, இந்த யவனப் பரிகள்" என்றான்.

ராஜராஜசோழர் சக்கரவர்த்தியின் வதனத்தில் ஆச்சரியத்தை கவனித்தார் பட்டர்.

"கணேசபட்டரே, உம் நண்பன் நம்பத் தக்கதாக சாதனை செய்திருக்கிறான். சரியான தேர்வுதான்."

சாளரத்திலிருந்து வசந்தகுமாரனை நோக்கிக் கை கொட்டி, "நன்று நன்று வசந்தகுமாரனே! எங்கே கண்டெடுத்தாய் இந்தக் குதிரைகளை?"



"யவனக் குதிரைகளில் ஒன்றை ஒரு கேரளத்துக் காரன் தண்ணீர் காட்டிக் கொண்டிருந்தான். மற்ற குதிரைகளை ஒரு நந்தி மண்டபத்தின் அருகில் மறைத்து வைத்திருந்தார்கள். அவர்களைத் தந்திரமாக சோழ நாட்டிற்குள் திரும்ப அழைத்து வந்துவிட்டேன்."

"நன்று நன்று."

பேரரசர் கை விரலிலிருந்து ஒரு மோதிரத்தைக் கழற்றி வசந்தகுமாரன்பால் வீசி எறிந்தார்.

"பட்டரே, தூதுவனுக்குத் தகுதியான இளைஞன் தான் இவன். இவனைப் போய் சிறைப்படுத்தி அனுமானப்பட்டதற்கு வருத்தமாகவிருக்கிறது."

"பேரரசே அதனால் என்ன?" என்ற வசந்தகுமாரன், கீழே விழுந்த அந்த மோதிரத்தை எடுத்து "மன்னிக்கவும். எனக்குத் தங்கம் வேண்டாம், தங்கள் தயை இருந்தால் போதும். தங்களுடைய அன்புக்கும் ஆதரவுக்கும் பாத்திரமான பின்பே தங்களிடம் பரிசு பெற விரும்புகிறேன். இதை நான் தங்களுக்குத் திரும்ப அளித்திடவே விரும்புகிறேன்."

கணேசபட்டர் சினத்துடன் "குமாரா, என்ன பேச்சுப் பேசுகிறாய்? அரசர் தந்த பரிசு அது!"

பேரரசர் புன்னகையுடன் பட்டரை சைகையால் அமர்த்த,

"குமாரா, நீ என்ன கேட்க விரும்புகிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ கேட்டது கிடைக்கச் செய்கிறேன்."

"சேர நாட்டுக்குச் சென்று இட்ட பணியை நிறைவேற்றிவிட்டு வந்து சேரு. நீ விரும்பியது கிடைக்கும்." என்றார் பட்டர்.

"நான் விரும்பியது சாளுக்கிய தேசத்துக்குக் கடத்தப்பட்டுவிட்டது மகாப்ரபோ."

"நீ விரும்பியது தஞ்சையில் தான் இருக்கிறது, அறிவேன்."

வசந்தகுமாரன், அருகில் இருந்த பட்டரைப் பார்த்து "ஆசானே, என்ன இது சொல்லிவிட்டீரா?"

"பேரரசரே தெரிந்து கொண்டு விட்டார். அவருக்குத் தெரியாமல் இந்த நாட்டில் எந்தக் காரியமும் செய்ய முடியாது."

"பேரரசே, தங்களைக் கொல்லும் சூழ்ச்சி பற்றித் தெரியவேண்டும் தங்களுக்கு."

''அதுவும் அவருக்குத் தெரியும்.''

''இளைஞனே, உன் அஞ்சா நெஞ்சத்தையும் காதல் நெஞ்சத்தையும் ஒருசேரப் பாராட்டுகிறேன். என் சொந்தக் கருத்தைக் கேட்டால் காதல் என்பதே நேர விரயம். பெண்களைத் தகுந்த இடத்தில் வைக்க வேண்டும். அதிகம் சேண்மை கூடாது.''

''பேரரசே, காதலைக் குறை சொல்வதன்முன் காதல் என்பதைத் தாங்கள் அனுபவித்தால் தான் தெரியும்.''

''நான் காதலிப்பது வேறு விடயங்களை. இந்தக் கோயிலைக் காதலிக்கிறேன். சோழநாட்டைக் காதலிக்கிறேன். என் வெற்றிகளைக் காதலிக்கிறேன். என் மகன்களை, என் மண்ணை, என் மனைவியரை.''

வசந்தகுமாரன் பணிந்து விலக, பேரரசர் அந்தரங்க மண்டபத்துக்கு உள் பரிவாரங்கள் சூழப் புறப்பட்டுச் செல்ல, வசந்தகுமாரன் கணேசபட்டரை முன்றில் வளாகத்தில் சந்தித்தான்.

''என்ன பட்டரே, அபிமதியைப் பற்றிப் பேரரசரிடம் சொல்லி விட்டீரே!''

''அவரிடம் ஒளித்துவைத்து ராஜகோபத்துக்கு ஆளாவதைவிட சொல்லிப்பார்த்தால் என்ன என்று தோன்றியது.''

''என்ன சொன்னார்?''

''சேரநாட்டில் கொடுத்த காரியத்தை நீ நிறைவேற்றிப் போர் தடுத்தாயெனில் அபிமதியின் கரம் உனக்காம்.''

''அப்படியா, நன்று! அதற்குமுன் அபிமதியைப் பற்றி அவ்வப்போது எண்ணலாமல்லவா!''

''எண்ணங்களைத் தடை செய்ய இயலாது, ஆனால் அவளையே எண்ணி கொண்ட கடமை தவறக் கூடாது.''

''தெளிவு தெளிவு. இரண்டு வார்த்தையில் சொன்னால் போர் நின்றால் ராஜகுமாரி.''

''மூன்று வார்த்தை'' என்று புன்னகைத்தார் கணேசபட்டர்.

இருவரும் மீண்டும் குமரில பட்டரின் இல்லத்துக்குச் சென்றபோது அபிமதி உள்ளறையில் உறங்கிக் கொண்டிருந்தாள். வசந்தகுமாரன் அதிகம் ஆரவாரமின்றி மெல்ல மிக மெல்ல உள்ளே வந்து அவளை மயிற்பீலியால் முகத்தில் லேசாக வருடினான்.



அவள் தூக்கத்தில் புன்னகைத்தாள்.

''எழுப்பாதே! இரவு முழுவதும் பிரயாணப்பட்டிருக்கிறாள்'' என்றார் குமரிலபட்டர்.

''இவனுடன் பேசினேன். அசாத்திய துணிச்சல் உள்ளவன் என்பது தெரிகிறது. சாளுக்கியன் சிறையிலிருந்து தப்பி வந்திருக்கிறான் என்பதே பெரிய சாதனை. கணேசா, எதற்காக இந்த இளைஞனை அழைத்து வந்தாய்?'' வசந்தகுமாரனைப் பார்த்து ''உன் பெயர் என்ன சிறுவா?''

வசந்தகுமாரன், ''என்னை நினைவில்லையா மூதாளரே!''

''ஓ! நீயா? உன்னிடம் தான் கழஞ்சுப் பொன் சூதாடித் தோற்றுப் போனேன்.''

''இவரையுமா'' என்று கணேசபட்டர் முறைத்துப் பார்க்க,

''தப்பாக ஆடினீர், அதற்கு நான் என்ன செய்ய இயலும்.''

''அதில்லை. என் வாழ்நாளிலேயே சூதாடினதில்லை. என்னை ஆசை காட்டி ஆடவைத்து விட்டாய்.''

''அதுவே பெரிய சாதனையில்லையா?''

அபிமதி சற்றே திரும்பிப் படுக்க, ''மெல்லப் பேசுவோம். இளவரசியின் கனவுகளைப் கலைக்காதிருப்போம்'' என்றான் வசந்தகுமாரன்.

உறங்கிக் கொண்டிருப்பவளை கண்கொட்டாமல் பார்த்தான். ''இந்த ரத்தினத்திற்காக, இந்தப் பெண்ணிற்காக, பட்டரேஅது என்ன பாடல்? யாயும் ஞாயும் யாராகியரோ.. நற்றிணைதானே?''

''குறுந்தொகை.''

குமரில பட்டர் ''இங்கே படுத்திருப்பது பெண்ணா!''

கணேசபட்டர் ''ஆம்'' என்றார்.

''இன்னுமா தெரியவில்லை, பார்வையில் குற்றமா?''

''கணேசா, பார்த்தால் அரசகுலம் போல இரு.. இவள்தான் காணாமற் போன இளவரசி அபிமதியோ?''

''ஆம்.''

''கணேசா, இது என்ன சூழ்ச்சி? அரசகுலப் பெண்களை யெல்லாம் மறைத்து வைத்ததால் சிரச்சேதம் செய்து விடுவார்கள்.''

"கவலையுறாமலிரும். அரசருக்கு விவரம்சொல்லி விட்டோம்!"

"விந்தை விந்தை, மகா விந்தை!"

"உம் போன்றக் கிழக் குரவர்கள் உயிரோடு இருப்பது தான் மகா விந்தை. உமக்கு என்ன வயசு நூற்றிருபதா? அது என்ன படிக்கிறீர் தொல்காப்பியமா? அதை மனப்பாடம் செய்து கொண்டிரும். போகிற லோகத்துக்குப் புண்ணியம்?"

"தொல்காப்பியம் இலக்கண நூல்."

"நான் மறுக்கவில்லை."

இடையே அபிமதி விழித்தெழுந்துவிட, அவள் வசந்தகுமாரனைப் பார்த்ததும் "குமாரரே, வந்துவிட்டீர்களா?"

"ஆம் வந்துவிட்டேன். இளரவசி! சோர்ந்திருக்கிறீர்களே, பால் பழம் ஏதாவது."

"தாங்கள் ஏதாவது உண்டீர்களா?"

"இல்லை. ஆனால் தங்களைப் பார்த்தே பசியாறி விட்டேன்."

கணேசபட்டர் தலையில் தட்டிக்கொண்டு "சங்க காலத்திலிருந்து இந்த முறை மாறவில்லை. காதலர்கள் இவ்வகையில்தான்பேசிக் கொண்டிருப்பார்கள்!" என்றார் மாமனிடம்.

வசந்தகுமாரனையும் அபிமதியையும் அகத்தே விட்டு விட்டு இருவரும் வெளியே வர, வாயிலில் நீலவண்ணர் நித்யநாதர் காத்திருந்தார்.

"பட்டரே, பேரரசர் என்னைப் பற்றி என்ன பகர்ந்தார்?"

"ஏதும் இல்லையே?"

"என்னைத் துரோகி என்று சந்தேகிக்கிறாரோ?"

"பேரரசரைத் தாங்களே கேட்கலாமே, நித்யநாதரே!"

"கேட்டேனே. என்னிடம் எதுவும் சொல்லவில்லையே!"

"நித்யநாதரே, தங்கள் மேல் ராஜகடாட்சம் விலகி விட்டது. விரைவிலேயே தங்களைப் பதவி நீக்கம் செய்து ஏரி வாரியம், தோட்ட வாரியம், பொன் வாரியம் என்று ஏதேனும் கண்காணிப்புப் பணிக்கு மாற்றிவிடப் போகிறார். நீலவண்ணரே! நீர் உயிர் பிழைத்ததே அதிசயம். உம்மேல் போதுமான சான்றுகள் இல்லாததால் தான் பேரரசர் உம்மை விட்டு வைத்திருக்கிறார்."



நித்யநாதர், சற்றும் எதிர்பாராதபடி பட்டரின் கரங்களைப் பற்றிக் கொண்டு கோவென்று கதறியழுதார். "இருபது ஆண்டுகள் சோழப் பேரரசுக்கு விசுவாசமாக உழைத்ததற்கு..."

"அதனாற்றான் விட்டு வைத்திருக்கிறார். ஸ்ரீபலிக்குள் உங்கள் காரியம் முடியவில்லை. துடும் என்று நல்லவராகிவிட்டீர். நித்யநாதரே, அரசருக்கு எல்லாம் தெரியும்."

"என்ன செய்ய வேண்டும், சொல்லும். செய்கிறேன். அரசரின் காலில் விழுந்து பற்றிக் கொள்ளவா? கண்ணீரால் அலம்பவா? சிலை எடுக்கவா? கோயிலுக்கு நிலமளிக்கவா?"

"அதற்கெல்லம் அவர் மனம் மாறமாட்டார். நீல வண்ணரே, தங்களுக்கு நான் சொல்ல விரும்புவது இது தான்: கொஞ்ச காலத்துக்குத் தலைமறைவாயிரும். தடவழி வாரியத்துக்கு உம்மைப் பேரரசர் அனுப்பினால் கூட மகிழ்வுடன் ஒப்புக் கொண்டு வயல்களையும் ஓர் வழிச் சாலைகளையும் கவனித்துக் கொண்டு ஓரிரு ஆண்டுகள் வாளாவிரும். அதுதான் உங்கள் தலை பத்திரத்துக்கு நல்லது. தற்போது பேரரசர் பல்வேறு குழப்பங்களில் உள்ளார். கோயில் கட்டுவதில் சிரமங்கள், பிரச்சினைகள் உள்ளன. சேரனும் பாண்டியனும் சேர்ந்து படையெடுக்கத் திட்டமிட்டுள்ளனர். சாளுக்கிய சினேகம் மகளைக் கொடுத்தும் நீரெழுத்துப் போல உள்ளது. இடையில் பேரரசரின் உயிரின்மேல் இரண்டு தாக்குதல்கள் நிகழ்ந்து விட்டன. எய்படை, எறிபடை, திருமெய்க்காப்புப் பிரிவில் எவரையும் நம்ப இயலவில்லை. பெரும்பாலும் அவர் அத்தனை பேரையும் நீக்கி விடுவார் எனத் தான் எண்ணுகிறேன்."

"எனக்கும் சதிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை."

"வையகத்தில் உள்ள அத்தனை சதிகாரர்களும் சொல்லும் வாசகம் இது, நித்யநாதரே!"

அப்போது வசந்தகுமாரன் வெளியே வந்துவிட "நித்யநாதரே இங்கு ஏன் வந்தீர்? நாங்கள் எல்லாம் தங்கள் விரோதிகள் அல்லவா?"

அவனைக் கண்டதும் நித்யநாதர் விடை பெற்றுச் சென்றார்.

''ஆசானே, ஏன் இவர் சூட்டுக்கோல் தொட்ட பூனைபோல் விரைகிறார்?''

''குற்றமுள்ள நெஞ்சு.''

வசந்தகுமாரனைத் தொடர்ந்து அபிமதி வந்தாள். அவள் இப்போது உடைமாறி முகம் திருத்தியிருந்தாலும் கண்களில் களைப்பும் தூக்கமும் தெரிந்தன.

''வாரும் இளவரசி! தாங்கள் அரண்மனைக்குத் திரும்பச் செல்லலாம்.''

''அது ஏதும் சதிபேதமில்லையே பட்டரே!''

''இல்லை. வசந்தகுமாரனிடம் பேரரசர் வாக்களித்திருக்கிறார். சேரநாட்டுக்குச் சென்று திரும்பியதும் தங்கள் கரத்தைப் பெறலாம் என்று.''

''இதனால் குந்தவையக்காவின் கணவர் சாளுக்கியர் வெகுண்டு போருக்குப் புறப்பட்டால்....''

''அப்படிச் செய்யமாட்டார். சாளுக்கியர்கள் சோழர்களை எதிர்க்கும் நிலையிலில்லை. குந்தவையைத் திருமணம் முடித்ததே அதைச் சொல்கிறது.''

''நானும் வசந்தகுமாரருடன் சேர நாட்டுக்குச் செல்கிறேனே?''

''அது இயலாது இளவரசி. இவன் செல்வது போர் நிறுத்தம் தொடர்பான அரசியல் பணிக்குத்தான்.''

''சேர நாடு நாங்கள் சேரா நாடு என்று சொல்லும்!''

''தாங்கள் அருகே இருந்தால் இவன் பணியை ஒழுங்கான முறையில் செயல்படுத்த மாட்டான்!''

''அப்படியா வசந்தகுமாரரே?''

''இல்லை, தாங்கள் அருகிலிருப்பதால் இன்னும் உற்சாகமாகச் செய்வேன்.''

பட்டர் அழுத்தமாக ''இல்லை! கூடாது'' என்றார்.

அவர் பார்த்திராத தருணத்தில் வந்தகுமாரனும் அபிமதியும் சமிக்ஞைகள் மூலம் பேசிக்கொண்டனர்.

''நீ கவலைப்படாதே, நான் அழைத்துச் செல்கிறேன்'' என்று சொன்னாள்.



# 37

**வ**சந்தகுமாரன் சேரநாட்டுக்கு தூதுவனாகச் செல்வதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டன. சோழப் பேரரசின் இணையாகச் செயலாண்மையை நிர்வகிக்கும் இளவரசர் ராஜேந்திர சோழரை முதலில் சென்று சந்திக்க ஏற்பாடாயிற்று. அவருக்கும் திருவாய்க்கேள்வி, திருமந்திர ஓலை போன்ற அதிகாரிகள் இருப்பதைக் கவனித்தான். தன் தந்தையுடன் பல போர்களில் ஈடுபட்டுப் பெரும் வெற்றிகளைக் கண்டவர், மதுராந்தகன் என்ற இயற்பெயர் கொண்டாலும் அபிடேகநாமம் ராஜேந்திரன் என்று தீர்மானிக்கப்பட்டிருந்தது. தந்தையுடன் கூட்டாக அரசு செலுத்தி வந்தாலும் இளவரசருடைய தனித்தன்மையும் தணியா ஆர்வமும் வசந்தகுமாரனுக்குப் பார்த்த மாத்திரத்தில் புலப்பட்டன.

''உன் பெயர் வசந்தகுமாரன். நீ அபிமதியை விரும்பியதால் நேரிட்ட குழப்பங்களைப் பற்றி

அறிவாயோ? சாளுக்கியன் போருக்குப் புறப்பட்டால் என்ன செய்வது? எத்தனை பேருடன்தான் மாமன்னர் - என் தந்தையார் போரிடுவார்? மேலைச்சாளுக்கியர், கீழைச்சாளுக்கியரின் வேங்கி நாட்டை இப்போதுதான் அடக்கிக்கொண்டு வந்துள்ளோம்.''

வசந்தகுமாரன் பொறுமையுடன் கேட்டிருந்துவிட்டு, ''கோப்பரகேசரியான இளைய சோழ தேவருக்கு ஒரு விண்ணப்பம். தாங்கள் போரைக் கண்டு அஞ்சுபவர் என்று என்னால் நம்ப இயலவில்லை. தங்கள் கீர்த்தி இப்போதே சோழ தேசம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. தாங்கள் தான் அடுத்த சக்கரவர்த்தி. தங்களுக்குப் பட்டமளிக்க இப்போதே பேரரசர் தீர்மானித்துவிட்டார். நமக்குப் போர் மேலைச்சாளுக்கிய மன்னர்களுடன் தான் இளவேந்தே!''

''விக்கிரமாதித்தனின் தம்பி ஜெயசிங்கன் என்பவன் நம் சோழ நாட்டின் சிலபகுதிகளைத் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டிருக்கிறான். அவனை வெல்ல கீழைச்சாளுக்கியரின் ஒத்துழைப்பு வேண்டும். இந்த நேரத்தில் அவன் விரும்பிய பெண்ணைக் கடத்தி வந்து விட்டாய்.''

''இல்லை இளவரசே! அபிமதி தன்னிச்சையாகத் தான் தப்பித்து வந்திருக்கிறார்.''

''பெண்களால் எப்படிப்பட்ட இன்னல்கள்! ஆனால் வசந்தகுமாரனே, எனக்கு இதனால் சாளுக்கியனிடம் அச்சமென்று எண்ணிக்கொள்ளாதே. இவன் சோழப் பேரரசின் மருமகன்; இவனுடன் ஏன் போரிட வேண்டும் என்று எண்ணினேன். போர் வந்தால் அதை நேர்கொள்வோம். அச்சப்படாதே.''

''அச்சமில்லை இளவரசே! தங்கள் எண்ணத்தில் இருக்கும் வெற்றிகளைப் பெற்றி சோழ தேசமே பேசிக் கொள்கிறது. பேரரசர் எட்டடி பாய்ந்தால் இளவரசர் பதினாறடி பாயப்போகிறார். தாங்கள் சக்கரக் கோட்டம், ஒட்டர தேயம், தண்டபுத்தி என்று வடக்கே கங்கை நதிவரை திக் விஜயம் செல்லப் போவதாகப் பேசிக் கொள்கிறார்கள்.''

''ஆம். என் ஆசைகள் மிகப் பரந்தவை. வடக்கே கங்கை, தெற்கே கடாரம், வங்கக் கடலை சோழ நாட்டின் ஏரியாக ஆக்க வேண்டும். ஈழ மண்டலத்தையும் வெல்ல வேண்டும். எத்தனையோ உள்ளது. உன்போல் காதலுக்கெல்லாம் நேரமில்லை எனக்கு.''



வசந்தகுமாரன் ''எனக்கும் கடமைதான் முக்கியம். சேரநாட்டுக்குச் சென்று அவர்களுடன் போர் மூளாதிருக்க அவர்களுக்குப் புத்தி சொல்கிறேன்.''

''போர் மூளட்டும். சேரன் பாஸ்கரவர்மனிடம்போய்ச் சொல். இளவரசன் ராஜேந்திரன் வருகிறான். சோழேந்திரசிம்மன் என்று அவனை எல்லோரும் கூறுகிறார்கள். சமாதானமாகப் போகவில்லையென்றால் சேரநாட்டுக்கு வழிவழி வந்த மணிமுடியையும் நவரத்தின மாலையையும் கைப்பற்றுவேன் என்று கூறு. அவர்கள் பழந்தீவையும், சாந்திமத் தீவில் வைக்கப்பட்ட செம்பொன் முடியையும் கவர்ந்து விடுவேன் என்று சொல். அவனுக்கு முதலில் தேவை அச்சம். அடக்கம். பாண்டியர்களுடன் சேர்ந்து கொண்டாலும் ஏன் சாளுக்கியர், சிங்களவர்கள் என்று பல முனைகளில் தாக்குதல் ஏற்பட்டாலும் சோழப் பேரரசை அசைக்க முடியாது என்று சொல்.''

''அப்படியே சொல்கிறேன் இளவரசே!''

வசந்தகுமாரன் இளவரசைச் சந்தித்துவிட்டுத் திரும்பும்போது சற்று கலக்கமாகத்தான் இருந்தான். ''ஆசானே, இளவரசர் போரைத்தான் விரும்புகிறார். போர் நிறுத்தத்தையல்ல.''

பட்டர், ''இருந்தும் குமாரா! போர் நிறுத்த முயற்சி தான் உன் முக்கியப் பணி. ஒரு போர் மூள்வதால் வெற்றிகள் கிடைக்கும். ஆனால் பெயரறியா வீரர்கள் ஆயிரக் கணக்கில் உயிரிழக்கிறார்கள். கிராமங்கள் எரிந்து போகும். மனைவியர் கற்பிழப்பார்கள். சோழப்படை, வெற்றியில் மிகவும் மூர்க்கம் காட்டக்கூடியது. உன் தன்மானத்தை இழக்காமல் சோழப் பேரரசை எந்த விதத்திலும் தாழ்த்தாமல் உறுதியாகச் சொல்லிப்பார். பாஸ்கரவர்மனிடம் சற்று எச்சரிக்கையாகவே இரு. அவர்கள் சூழ்ச்சிக்காரர்கள். தூதனை எப்படி உபசரிக்க வேண்டும் என்ற மரபிலிருந்து ஓர் இம்மியும் அவர்கள் விலகினாலும் நீ நியாயம் கேட்கலாம். உனக்காக உரிமைகள் பல உள்ளன. உன்னை அவர்கள் சிறைப்படுத்த முடியாது. கொடுமைப் படுத்தக்கூடாது. தேவைகளுக்கேற்ற உணவும், காற்றோடும் மாளிகையும் அளிக்க வேண்டும். அரசவையில் இருக்கை தரவேண்டும்.''

அங்கிருந்து அவர்கள் இருவரும் குறுநில மன்னர்களின் தனி அலுவலகச் செயலகத்துக்குச் சென்றபோது சேரநாடன் சரித்திரத்தையே அங்கிருந்த அதிகாரி ஒருவர் விவரித்தார்.

அறிவாரோ? சாளுக்கியன் போருக்குப் புறப்பட்டால் என்ன செய்வது? எத்தனை பேருடன்தான் மாமன்னர் - என் தந்தையார் போரிடுவார்? மேலைச்சாளுக்கியர், கீழைச்சாளுக்கியரின் வேங்கி நாட்டை இப்போதுதான் அடக்கிக்கொண்டு வந்துள்ளோம்.''

வசந்தகுமாரன் பொறுமையுடன் கேட்டிருந்துவிட்டு, ''கோப்பரகேசரியான இளைய சோழ தேவருக்கு ஒரு விண்ணப்பம். தாங்கள் போரைக் கண்டு அஞ்சுபவர் என்று என்னால் நம்ப இயலவில்லை. தங்கள் கீர்த்தி இப்போதே சோழ தேசம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. தாங்கள் தான் அடுத்த சக்கரவர்த்தி. தங்களுக்குப் பட்டமளிக்க இப்போதே பேரரசர் தீர்மானித்துவிட்டார். நமக்குப் போர் மேலைச்சாளுக்கிய மன்னர்களுடன் தான் இளவேந்தே!''

''விக்கிரமாதித்தனின் தம்பி ஜெயசிங்கன் என்பவன் நம் சோழ நாட்டின் சிலபகுதிகளைத் தன் நாட்டுடன் இணைத்துக் கொண்டிருக்கிறான். அவனை வெல்ல கீழைச்சாளுக்கியரின் ஒத்துழைப்பு வேண்டும். இந்த நேரத்தில் அவன் விரும்பிய பெண்ணைக் கடத்தி வந்து விட்டாய்.''

''இல்லை இளவரசே! அபிமதி தன்னிச்சையாகத் தான் தப்பித்து வந்திருக்கிறார்.''

''பெண்களால் எப்படிப்பட்ட இன்னல்கள்! ஆனால் வசந்தகுமாரனே, எனக்கு இதனால் சாளுக்கியனிடம் அச்சமென்று எண்ணிக்கொள்ளாதே. இவன் சோழப் பேரரசின் மருமகன்; இவனுடன் ஏன் போரிட வேண்டும் என்று எண்ணினேன். போர் வந்தால் அதை நேர்கொள்வோம். அச்சப்படாதே.''

''அச்சமில்லை இளவரசே! தங்கள் எண்ணத்தில் இருக்கும் வெற்றிகளைப் பெற்றி சோழ தேசமே பேசிக் கொள்கிறது. பேரரசர் எட்டடி பாய்ந்தால் இளவரசர் பதினாறடி பாயப்போகிறார். தாங்கள் சக்கரக் கோட்டம், ஒட்டர தேயம், தண்டபுத்தி என்று வடக்கே கங்கை நதிவரை திக் விஜயம் செல்லப் போவதாகப் பேசிக் கொள்கிறார்கள்.''

''ஆம். என் ஆசைகள் மிகப் பரந்தவை. வடக்கே கங்கை, தெற்கே கடாரம், வங்கக் கடலை சோழ நாட்டின் ஏரியாக ஆக்க வேண்டும். ஈழ மண்டலத்தையும் வெல்ல வேண்டும். எத்தனையோ உள்ளது. உன்போல் காதலுக்கெல்லாம் நேரமில்லை எனக்கு.''



வசந்தகுமாரன் ''எனக்கும் கடமைதான் முக்கியம். சேரநாட்டுக்குச் சென்று அவர்களுடன் போர் மூளாதிருக்க அவர்களுக்குப் புத்தி சொல்கிறேன்.''

''போர் மூளட்டும். சேரன் பாஸ்கரவர்மனிடம்போய்ச் சொல். இளவரசன் ராஜேந்திரன் வருகிறான். சோழேந்திரசிம்மன் என்று அவனை எல்லோரும் கூறுகிறார்கள். சமாதானமாகப் போகவில்லையென்றால் சேரநாட்டுக்கு வழிவழி வந்த மணிமுடியையும் நவரத்தின மாலையையும் கைப்பற்றுவேன் என்று கூறு. அவர்கள் பழந்தீவையும், சாந்திமத் தீவில் வைக்கப்பட்ட செம்பொன் முடியையும் கவர்ந்து விடுவேன் என்று சொல். அவனுக்கு முதலில் தேவை அச்சம். அடக்கம். பாண்டியர்களுடன் சேர்ந்து கொண்டாலும் ஏன் சாளுக்கியர், சிங்களவர்கள் என்று பல முனைகளில் தாக்குதல் ஏற்பட்டாலும் சோழப் பேரரசை அசைக்க முடியாது என்று சொல்.''

''அப்படியே சொல்கிறேன் இளவரசே!''

வசந்தகுமாரன் இளவரசைச் சந்தித்துவிட்டுத் திரும்பும்போது சற்று கலக்கமாகத்தான் இருந்தான். ''ஆசானே, இளவரசர் போரைத்தான் விரும்புகிறார். போர் நிறுத்தத்தையல்ல.''

பட்டர், ''இருந்தும் குமாரா! போர் நிறுத்த முயற்சி தான் உன் முக்கியப் பணி. ஒரு போர் மூள்வதால் வெற்றிகள் கிடைக்கும். ஆனால் பெயரறியா வீரர்கள் ஆயிரக் கணக்கில் உயிரிழக்கிறார்கள். கிராமங்கள் எரிந்து போகும். மனைவியர் கற்பிழப்பார்கள். சோழப்படை, வெற்றியில் மிகவும் மூர்க்கம் காட்டக்கூடியது. உன் தன்மானத்தை இழக்காமல் சோழப் பேரரசை எந்த விதத்திலும் தாழ்த்தாமல் உறுதியாகச் சொல்லிப்பார். பாஸ்கரவர்மனிடம் சற்று எச்சரிக்கையாகவே இரு. அவர்கள் சூழ்ச்சிக்காரர்கள். தூதனை எப்படி உபசரிக்க வேண்டும் என்ற மரபிலிருந்து ஓர் இம்மியும் அவர்கள் விலகினாலும் நீ நியாயம் கேட்கலாம். உனக்காக உரிமைகள் பல உள்ளன. உன்னை அவர்கள் சிறைப்படுத்த முடியாது. கொடுமைப் படுத்தக்கூடாது. தேவைகளுக்கேற்ற உணவும், காற்றோடும் மாளிகையும் அளிக்க வேண்டும். அரசவையில் இருக்கை தரவேண்டும்.''

அங்கிருந்து அவர்கள் இருவரும் குறுநில மன்னர்களின் தனி அலுவலகச் செயலகத்துக்குச் சென்றபோது சேரநாடன் சித்திரத்தையே அங்கிருந்த அதிகாரி இரகுகுணர் விவரித்தார்.

"இவர்கள் வம்சம் சந்திரவம்சத்து சகுஷன் புத்திரனாகிய யயாதியின் சந்ததியில் ஆச்ரதன் என்பவனது புத்திரர் மூவரில் ஒருவனால் உண்டானது என்று கூறுவார்கள். இவனுக்கு பனை மாலை. இவன் குதிரை, பாடலம் கொடி, விற்கொடி."

கணேசபட்டர் "இரகுகுணரே, பூர்வீகமெல்லாம் வேண்டாம். பாஸ்கரவர்மனைப் பற்றிச் சொல்லும், அதிகம் அவகாசம் இல்லை, வசந்தகுமாரனுக்கு, பாண்டியரும், சேரரும், சிங்களவரும் நமக்கு..."

"எதிரிகள். சேரன் பாஸ்கரவர்மன் திருவடி இன்னும் போருக்குத் தீர்மானிக்கவில்லை. பாண்டிய அமரபுஜங்கனை சேரன் அரண்மனையிலேயே சந்தித்தால் ஆச்சரியப்படாதே. அவனையும் குசலம் விசாரி. அவர்கள் பேச்சு வார்த்தைகளின் நோக்கமென்ன என்று தெரிந்துகொள். விழிஞ்சத்தில் ஒரு பெரிய கோட்டை இருக்கிறது. அதே போல் சாலையிலும் உள்ளது. மலை நாட்டையும் கொள்ள வேண்டும். உதகைக் கோட்டையை முற்றுகையிடவும் ஒரு தீர்மானம் உள்ளது. இவையெல்லாம் ராஜ ரகசியங்கள். இந்தக் கோட்டைகளைப் பற்றிய அனைத்துச் செய்திகளையும் சேகரித்து எங்களுக்கு ஓலை அனுப்புதல் வேண்டும். குடமலை நாடு யார் வசம் உள்ளது? அதையும் வெல்ல வேண்டும் என்று திட்டம் உள்ளது."

வசந்தகுமாரன் "சரி" என்று தலையசைக்க "என்ன ஏதாவது உனக்குப் புரிந்ததா இளைஞனே."

வசந்தகுமாரன் "புரிந்தது. பாஸ்கர ரவிவர்மன் பாண்டியன் அமரபுசங்கனைப் பற்றிய விவரங்கள், விழிஞ்சம், சாலை, உதகை கோட்டைகளைப் பற்றிய செய்திகள். குடமலை நாடு பற்றிய சங்கதிகள், சேர-பாண்டிய கூட்டு எந்த அளவில் உள்ளது; இவையனைத்தும் திரட்ட வேண்டும்."

"நன்று. நல்ல நினைவாற்றல்! உனக்கு நல்ல எதிர்காலம் உள்ளது."

"ஆசானே, நாளை அதிகாலையில் நான் புறப்பட விருக்கிறேன். அதற்குள் இளவரசி அபிமதியைச் சந்தித்து விட்டு, பிரியாவிடை பெற்று வருகிறேன். அவர்கள் இப்போது எங்கிருக்கிறார்கள்?"

"அரண்மனைக் குந்தவைப் பிராட்டியின் மாளிகையில் கொண்டுவிடச் சொல்லியிருக்கிறேன்."



"அங்கே செல்ல சம்மதித்தார்களா?"

"பேரரசரே திருவோலை அனுப்பிவைத்தார். 'பெண்ணே அச்சப்படாதே! சாளுக்கியனுக்கு உன்னை மணமுடிக்க மாட்டேன்' என்று விகிதம்."

"வசந்தகுமாரன் என்பவனுக்கு மணமுடிக்கிறேன் என்று ஒரு வார்த்தை இருந்ததா விகிதத்தில்?"

"இல்லை."

"ஆசானே!"

"வசந்தகுமாரா! அப்படி நேரடியாக வாக்களிக்க இயலாது பேரரசரால். நீ போய்த் திரும்பும்வரை என்னவெல்லாம் மாற்றங்கள் நிகழுமோ...?"

"அதற்குத்தான் அபிமதியையும்..."

"அபிமதியையும்?"

வந்தகுமாரன் தயங்க, "என்ன சொல்? அந்தப் பெண்ணையும் உடன் போக்காக அழைத்துச் செல்வாயா? சொல்!"

"அப்படி எண்ணமில்லை."

"அவ்வித எண்ணங்கள் ஏதேனும் இருந்தால் உடனடியாக மறந்துவிடு. பேரரசர் இம்முறை மன்னிக்கவே மாட்டார். அரச குடும்பத்து ஆசாரங்களில் நீ எடுத்துக் கொண்ட சலுகைகளே மன்னிக்க முடியாதவை."

"ஆசானே, அவ்வாறான எண்ணம் ஏதும் இருந்தால் நான் தங்களிடம் சொல்லாமல் இருப்பேனா?"

வசந்தகுமாரன் அபிமதியை சந்திக்கும் நோக்கத்துடன் அரண் மனைக்குச் சென்றபோது அங்கே சாளுக்கிய விமலாதித்தனின் தேரைக் கண்டான்.

''இந்தக் கணம் இவன் தலையை நான் கொய்துவிட முடியும்.''

''உண்மை, உண்மை.''

''என்ன சொல்கிறான்? சம்மதிக்கிறானா?''

''எதற்கு?''

''அபிமதியை மறந்து விட்டுத்தான் சேரநாட்டுக்குச் செல்ல முடியும் என்று சொல்.''

''மணந்து விட்டுத்தான் செல்ல விரும்புகிறேன்...''

''மணந்து அல்ல மறந்து.''

''நான் சேரநாட்டுக்குச் செல்வதின் காரணமே அபிமதி தான். வெற்றிகரமாகத் தூது முடித்து விட்டு வந்தால் அந்தப் பெண்ணின் கரத்தை எனக்கு வாக்களித்துள்ளார் பேரரசர்.''

''பேரரசர் எனக்கும் அவள் கரத்தை வாக்களித்துள்ளார்.''

''தங்களுக்கு அளித்த வாக்கு சற்று காலத்தால் முற்பட்டது!''

சாளுக்கியன் மிகுந்த சினம் கொண்டு தன் உடை வாளை உருவி ''இந்தக் கணமே வாட்போர் புரியலாம் வா!'' என்றான்.

''எனக்கு ஒரு வாள் கிடைத்தால் நான் உடனே வருகிறேன்.''

சாளுக்கிய விமலாதித்தனின் திருமெய்க்காப்பு அவன் காதில் இரகசியமாக ஏதோ சொல்ல, விமலாதித்தன் ''ஆ! இவன் ஓர் உரோமத்துக்குச் சமானம்'' என்று அவன் பால் ஒரு வாளைத் தேர்ந்தெடுத்து வீசினான். சுரிகை உடை வாளாகும் அது. வசந்தகுமாரன் நிமிர்ந்து ''இந்த வாள் எனக்குப் பழக்கமில்லை'' என்றான்.

''நீலவண்ணர் நித்யநாதர் உன்னை அன்று கொல்லாமல் விட்டது தவறு. இப்போது பேரரசரின் ஆதரவு பெற்று அரசகுலப் பெண்டிரையே விரும்பும் அளவுக்குத் தைரியம் பெற்றுவிட்டாய். வா! குமாரனே! அபிமதி அத்தனை எளிதில் கிடைக்கமாட்டாள். சாளுக்கியனை வென்றபின் கிடைப்பாள்!''

வசந்தகுமாரன் பால் விமலாதித்தன் தன் உடைவாளுடன் பாய்ந்து வர, வசந்தகுமாரன் அவன் முதல் வாள் வீச்சை சமாளித்துத் தப்பித்து, ''வாட் பயிற்சி இல்லாதவனிடம் வாட்போர் புரிவதுதான் வேங்கி நாட்டு நியாயமா?''

''எந்த ஆயுதம் வேண்டும் கேள். அதில் போரிடலாம்!''



## 38

வசந்தகுமாரனுக்கு மீண்டும் சாளுக்கிய விமலாதித்தனை சந்திப்பதில் விருப்பமில்லை. திருவோலைக் கேள்வி மூலம் மகா தண்டநாயகரைச் சந்திக்க வேண்டும் என்ற செய்தி அவனுக்குக் கிடைத்திருந்தது. அவர் பெயர் பஞ்சவன் மாராயன். அவரை எளிதில் பார்க்க இயலாது என்று தெரிந்திருந்தான்.

சாளுக்கிய விமலாதித்தன் மிகுந்த சீற்றத்தில் இருந்தது, அவன் மண்டபத்துக்குள் புகுந்தபோதே வசந்தகுமாரனுக்குத் தெரிந்து விட்டது. வந்தவனை ஏறிட்டும் பார்க்காமல் ''அடேய் உலகளந்தான்! இந்த இளைஞனிடம் சொல், விமலாதித்தன் எப்படிப்பட்டவன் என்று?''

வசந்தகுமாரன், ''அதை, நான் தெளிவாகவே அறிவேன் சாளுக்கிய மன்னரே!''

''அதற்குமுன் தங்களிடம் அந்தரங்கமாகப் பேச வேண்டும்'' என்ற குரல் கேட்டு இருவரும் திரும்பி நோக்க, கணேசபட்டர் அவசரமாக முகத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டு, ''குமாரா! உன்னை இளவரசர் தேடிக் கொண்டிருக்க இங்கு என்ன சோலி உனக்கு?''

''சாளுக்கிய மன்னர் நான் சேர நாட்டுக்குச் செல்லுமுன் ஒரு வழியாக சுவர்க்கத்திற்கு அனுப்ப விழைகிறார்.''

கணேசபட்டர், ''உன்னைப் பேரரசர் தூதுவனாக நியமித்திருப்பதை அறியாரோ?''

''அறிவார். இருந்தும் அவருக்கு என்மேற் பகைமை. வாட்போர் புரிந்துவிட்டுத்தான் செல்ல வேண்டுமாம்.''

கணேசபட்டர் சாளுக்கிய விமலாதித்தனின் அருகில் வந்து இரகசியமாக ஏதோ சொன்னார். அதைக் கேட்ட விமலாதித்தன் சற்று நேரம் சிந்தனை வயப்பட்டு ''அப்படியா சொல்கிறீர்?''

''ஆம்! பேரரசரே என்னிடம் அதைச் சொன்னார். இந்தத் தருணத்தில் தாங்கள் சேரநாட்டுத் தூதுவனாக நியமித்திருப்பவனைத் தாக்கினால் அனுமானம் ஏற்படும். மேலும் இளவரசர் ராஜேந்திரர் இவனை உடன் சந்திக்க விரும்புகிறார். என்னை அழைத்து வரச் செய்தி அனுப்பியுள்ளார். வசந்தகுமாரனைத் தற்போது மன்னித்துவிடும்.''

''அப்படியா சொல்கிறீர்?''

''ஆம் மன்னரே! அதுதான் இந்தச் சூழ்நிலையில் எல்லோர்க்கும் நல்லது.''

''நான் யாருக்கும் அஞ்சவில்லை பட்டரே, அறிவீரா?''

''அறிவேன்.''

''சாளுக்கியன் யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை. வேங்கி, சோழ நாட்டைவிட விரிவானது. ஏதோ சோழரிடம் பெண் எடுத்த நன்றிக்கு இந்தப் பெண்ணையும் மணம் செய்து கொள்வீரா என்று சக்கரவர்த்தி கேட்டுக் கொண்டதற்குச் சம்மதித்தேன். எனக்குப் பெண் கொடுக்க ஏராளமானவர்கள் காத்திருக்கிறார்கள்.''

''அறிவேன். அதனால்தான் தங்கள் புத்தி சாதுர்யத்தை வியக்கிறேன். சோழ நாட்டுடன் விரோதம் பார்த்துப் போராடுவதற்குத் தகுதியான விடயமல்ல இது!''



''ஆம். ஒரு பெண்! அத்தனை அழகான பெண்ணும் அல்ல. குந்தவை இவளைவிட அழகானவள்.''

''உண்மையே. இந்த வசந்தகுமாரன் அவளிடம் என்ன கண்டான் என்று வியப்பாகவே இருக்கிறது.''

''சரி, நீர் செல்லும்.''

வசந்தகுமாரனுடன் அரண்மனையை விட்டு வெளி வந்தபோது, ''ஆசானே, ஏன் இவ்வாறு சாளுக்கியனை உச்சி குளிர வைத்தீர்? அவனும் சதயநாள் சதியில் பங்கு கொண்டுள்ளான் என்ற ஐயம் உள்ளது.''

''எல்லாம் உன் நலனுக்காகத்தான். உன் காதல் சோழ நாட்டின் பத்திரத்தையே பாதிக்கிறது. முதற் செயலாக சேர நாட்டுக்கு அனுப்ப வேண்டியது என் கடமை. இளவரசர் மதுராந்தகர் உன்னை மீண்டும் சந்திக்க விரும்புகிறார். சில செய்திகள் தேவைப்படுமாம். தானைத்தலைவராக சேர, பாண்டிய நாட்டின் மீது அவரே படையெடுக்கப் போகிறார் என்ற பேச்சு தீவிரமாக உள்ளது. உன்னை வரவழைத்ததும் அதே காரணத்துக்காக இருக்கலாம்.''

''பஞ்சவன் மாராயன் என்பவரை என்னைச் சந்திக்கச் சொன்னார்கள்.''

இளவரசரின் மாளிகைக்கு மீண்டும் சென்று அவரைச் சந்திக்க அவகாசம் கிட்ட, பொழுது பிற்பகல் வரை நீண்டு விட்டது. இளவரசர் ராசேந்திர சோழ தேவர் வசந்தகுமாரனைத் தீர்க்கமாகப் பார்த்தார். தம் தந்தையுடன் இரு போர்க்களங்களில் ஈடுபட்ட களைப்பு அவர் நெற்றிக் கோடுகளில் தெரிந்தது.

''உன்னை எதற்காக என் தந்தையார் தூதுவனாகத் தேர்ந்தெடுத்தார் என்று வியப்பாக உள்ளது. காதல் தவிர வேறு ஏதும்பொருத்தமாக செய்தறியாதவன் என்கிற கருத்துத் தான் உன்னைப் பற்றி மேலோங்குகிறது. தானைத் தலைவன் என்னும் முறையில் உனக்குச் சில பணிகள் தர விரும்புகிறேன்.

''பட்டரே! சாளுக்கியன் சமாதானமாகிவிட்டானல்லவா? அபிமதி சங்கதி முடிந்துவிட்டதல்லவா?''

''சமாதானமாகிவிட்டார் இளவரசே!''

''வசந்தகுமாரா? நீ காட்டு மார்க்கமாக சேரநாட்டுக்குச் செல்லுமுன் உதகை என்னும் இடத்தில் உள்ள அந்தக் கோட்டை பற்றிய விவரங்கள் வேண்டும். அரண்வகை வீரர்கள் எவ்வகை

வீரர்கள்? சேர நாட்டுக்குச் செல்ல குடமலை நாட்டை வெல்ல வேண்டும்.''

வசந்தகுமாரன் பட்டரை ஐயப்பாட்டுடன் பார்த்து ''இளவரசே! பேரரசர் சொன்னபடி நான் செல்ல வேண்டியது. ஒற்றனாக அல்ல, போரைத் தவிர்க்கச் செல்ல வேண்டும் என்றார்கள் ; மூட்ட அல்லா?''

இளவரசர் நகைத்து, ''தந்தையார் கனவு காண்கிறார். சேர, பாண்டியப் போர் தவிர்க்க இயலாதது. இருவரும் சோழ நாட்டில் ஒற்றர்களை அனுப்பி சதயநாளில் மன்னரைக் கொல்ல முயன்றிருக்கிறார்கள். நான் சதய நாள் பிறந்த விழாவை சேரநாட்டில் கொண்டாட விரும்புகிறேன். பாஸ்கர ரவிவர்மன் திருவடியையும் அமரபுசங்கனையும் அந்த விழாவில் பேரரசரின் மெய்கீர்த்தியைப் பாட வைக்கிறேன். வசந்தகுமாரா! தெளிவாக இருக்கட்டும். நீ செல்வது சமாதானத்துக்கு அல்ல! போருக்கு. தூதுவனென்று சென்று கேரளத்துப் பெண்கள் அழகில் மயங்கி அங்கொரு திருமணம் ஏற்பாடு செய்து கொள்ளாதே.''

வசந்தகுமாரன் இளவரசரைப் புண்பட்ட பார்வையால் பார்த்தான். ''இளவரசே, என்னைப் பற்றி தாங்கள் தப்பபிப்பிராயம் கொண்டுள்ளீர்கள்.''

''அதைத் திருத்த, காதலைத் தவிர வேறேதும் செய்!''

''விழிஞம் துறைமுகத்தின் விவரங்கள் எனக்கு வேண்டும்.''

''காந்தளூர் சாலை என்பதும் ஒரு துறைமுகம் தான். துறைமுகப்பட்டினம். கேரள மன்னனின் துறைமுகம்; வாணிகக் களம்; அவர்கள் கடற்படையின் மூலதனம். அதை நாம் வீழ்த்த வேண்டும்.''

''அதன் முழு ஆற்றலையும் அழிக்க நிலப்படை போதுமா இளவரசே?''

''போதாது. கடற்படையும் வேண்டும். சேரர்கள் கடற்படை பிரசித்தமானது. பண்டை நாட்களில் கடற் கடம்பரை வேரறுத்தவர்கள். அவர்களை எளிதில் வெல்ல இயலாது. வென்றாலும் நீடித்து ஆட்சி செய்ய முடியாது. இந்த நிலையான ஆற்றலை இம்முறை அழிக்க விருப்பம். அதற்கான கருவியாகச் சென்று வா.''



வசந்தகுமாரனை தட்டி, ''விளையாட்டுக்காகத்தான் உன் காதலைப் பற்றிப் பேசினேன். காதல் புரி. அமைதிக் காலத்தில் காதல் புரி. இது போர்க் காலம். காதல் என்கிற பேச்சையெல்லாம் மறந்து நின் தேயத்திற்காகச் செயல்படு.''

''அவ்வண்ணமே இளவரசே.''

''போய் வா. அபிமதியை நான் பத்திரமாகப் பாதுகாக்கிறேன். நீ வரும்வரை அவள் யாழும் குழலும் மீட்டிக் கொண்டு பெரியன்னை குந்தவைப் பிராட்டியுடன் பழையாறையில் பூசையில் ஈடுபட்டிருக்கச் செய்கிறேன்.''

வசந்தகுமாரன் இளவரசரின் பார்வையைத் தவிர்க்கக் காரணம், அவன் சேரநாட்டுக்கு அபிமதியையும்அழைத்துச் செல்ல தீர்மானித்திருந்ததுதான்.



# 39

வசந்தகுமாரன் சேரநாட்டுக்குத் தூதுவனாகப் புறப்படுவதற்கான ஆயத்தங்கள் மிக விரைவில் நிகழ்ந்து கொண்டிருந்தன. அவனுக்கு முதற்கண் வழிச்செலவுக்கான காசு பணங்கள் கொடுக்கப் பட்டன. தூதுவனாகச் செல்வதால் அவனுக்குப் பல சாதுர்யங்கள் தேவையாக இருந்தன. அவைகளை கணேசபட்டர் மனப்பாடமாகும் அளவுக்குத் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தார்.

"செல்லும் காலம், சென்ற காலம், செல்லும் இடம் அறிந்து கூறப்போகும் விடயத்தை முன்பே விசாரித்து உரைக்க வேண்டும். பகைவனது அமைச்சர்களைத் தன் வசமாக்கும் வன்மை வேண்டும் உனக்கு."

"ஆசானே சரி. நன்று. உத்தமம். சிறப்பு."



"பலவித உபாதைகளுக்கும் கண்டங்கத்திரி வேர். சிறு ...துணை வேர், சிறுமல்லி வேர், வெறுமல்லி வேர், நெருஞ்சுபுளி, ...ம், பெருங்குமிழ்."

"ஆசானே, நான் செல்லப் போவது தூதுவனாக." ஆதுரசாலை ...மைக்கவல்ல. எனக்கு ஏதும் வராது. காற்றைச் சாடுபவன் நான்."

"உடன் அரசகுலத்துப் பெண்களையும் நாடுகிறாய். அது ...டம்புக்கு நல்லதல்ல. குமாரா எங்கே புறப்பட்டாய்?"

"எனக்கு ஒரு முக்கியமானவரைச் சந்திக்க வேண்டும்."

"ஆண்பாலா? பெண்பாலா?"

வசந்தகுமாரன் அதற்குப் பதிலிறுக்காமல் புறப்பட்ட போது, "குமாரா நீ செய்வது சரியல்ல. அபிமதியைச் சந்திக்க முயலாதே. அன்பு, அறிவுத் தேற்றம், அவாவின்மை இவை மூன்றும் இப்போது உனக்கு முதற்கண் தேவை."

"ஆசானே, நான் அபிமதியைச் சந்திக்கப் போகிறேன் என்று யார் சொன்னது?"

"எனக்குத் தெரியும். நீ இவ்வாறான பித்துப் பிடித்த கருமங்கள் எல்லாம் செய்வாய் என்று, குமாரா!"

"ஆசானே, அச்சப்படாதீர்கள்! நான் புறப்படுமுன் தங்களைச் சந்தித்துவிட்டுத்தான் செல்வேன்!"

"குமாரா!"

அவர் விளித்தது காற்றில் கரைந்துபோக, வசந்தகுமாரன் மண்டபத்துக்குச் சென்று யவனக் குதிரைகள் இரண்டு தேர்ந்தெடுத்து வைத்ததை பற்றிக் கொள்ளச் சென்றான்.

"வசந்தகுமாரரே, இரண்டு குதிரை எதற்கு?"

"எனக்கு ஒரு திருமெய்க்காப்பு உண்டு, அரசர் பணித்திருக்கிறார். அவனுக்கும் சேர்த்து இரண்டு பரிகள்."

"நான் தானே அந்த திருமெய்க்காப்பு."

வசந்தகுமாரன் அவனை முதன் முறையாகத் தீர்க்கமாகப் பார்த்து "நீயா? உன் பெயர் என்ன?"

"கவேதன்"

"கவேதா, காற்றில் பறந்து போவது போல் இருக்கிறாய். உன் மெய்யையே காப்பாற்றிக் கொள்வாயோ என்பதே அனுமானம்.

என்னை என்ன காப்பாற்றப் போகிறாய்? இந்தக் குதிரைமேல் முதலில் ஏறிப்பார்'' என்று அந்த வாளிப்பான குதிரையை முதுகில் தட்டிக் கொடுத்தான்.

அதன்மேல் ஏறிக்கொள்ள சுவேதன் என்பவன் முயற்சி செய்ய அந்தஅசுவம் பிடிவாதமாக அவனைத் தன் முதுகிலிருந்து உதிர்க்கப் பிரயத்தனப்பட்டது. சற்று நேரத்தில் சுவேதன் கீழே விழுந்தான்.

''வசந்தகுமாரரே, நம் ஊர் குதிரைகள் எதுவும் இல்லையா?''

''என்னைப் பெயர் சொல்லி அழைக்காதே. நீ என் மெய்க்காவலனுக்குத் தகுதியானவன் அல்ல. சேரநாட்டுக்கு என்னுடன் வரும் அடிசிற் பணியாளர்களுடன் சேர்ந்து கொள்.''

''அவ்வண்ணமே வசந்... மன்னிக்கவும் தலைவனே!''

வசந்தகுமாரன் அந்த யவனக் குதிரைமீது அமர்ந்த போது அது ஒரு நண்பனைப் போல் உணர்ந்து அவன் பாதங்களின் லேசான தூண்டுதல்களுக்கு ஏற்பத் தன் கதியைச் சமனப்படுத்திக் கொண்டு மந்த கதியில் சற்றே பெருமிதத்துடன் சென்றதை சாலையில் உள்ளவர்கள் கவனித்து வியந்தார்கள்.

சிவகங்கைச்சிறுகோட்டைப் பக்கம் சென்றான். முதற்கோபுரம் மெல்ல எழுந்து கொண்டிருந்தது. நூற்றுக் கணக்கான கற்தச்சர்களின் தட்டும் ஓசை சீராகக் கேட்டுக் கொண்டிருக்க, அவர்கள் முதுகில் உழைப்பின் வியர்வை பளபளத்தது. தூபித்தறியில் வைக்கக் கொடுத்த செப்புக் குடம் ஒன்று பக்கத்தில் வைக்கப்பட்டிருந்தது. அதை வசந்தகுமாரனால் நின்று கவனித்து வியக்காமல் இருக்க இயலவில்லை. அருகே நின்றிருந்த உதவித் தச்சரிடம் வசந்தகுமாரன் பேச்சுக் கொடுத்தான். ''மூவாயிரம் பலத்துக்கு சுருக்கின தகடு. பல பொன் ஆடவல்லான் என்னும் கல்லால் நிறை மூவாயிரம் கழஞ்சு'' என்றான் அவன்.

வசந்தகுமாரன் கோயிலின் பிரம்மாண்டத்தை வியந்து,

''எங்கிருந்து இந்தக் கல் வருகிறது? ராஜராஜசோழ வளநாட்டில் இத்துணை பெரிய கல் கிடைக்காதே?''

''அது நித்த விநோதவள நாட்டிலிருந்து வந்தது. மற்ற கற்கள் அரிசிலுக்கும் காவிரிக்கும் நடுவான உய்யக் கொண்டார் வளநாட்டிலிருந்து வருகின்றன.''

''உமக்குக் கூலி எவ்வளவு?''

''ஒன்றரை வேலி. இவன் பொற்கொல்லர்களை மேற்பார்வை இடுகிறான். விநோதா, உனக்கு என்ன கூலி?''



''ஒரு வேலி.''

''கூலி கொடுப்பவர் யார்?''

விநோதன் எனப்பட்ட அந்தப் பொற்கொல்லன் ''மக்கள் தான்!''

''எத்தனை பொன், வெள்ளிப் பண்டங்கள்?''

''அறிவீரா, கலசம் ஒட்டுவட்டில், குடம், தட்டம், குறுமடல், கிடாரம், காளங்கள் போன்ற ஊது கருவிகள்; திருப்பள்ளித் தொங்கல், திருக்கொற்றக்குடை அத்தனையும் பொன்னாலே!''

''எப்படி இத்தனை பொன் கிடைக்கிறது? சேரநாட்டிலும் ஈழத்திலும் கவர்ந்து வரத்தான் திட்டமிட்டிருக்கிறார் போலும் பேரரசர்!''

''அதற்காகத்தான் போர். அந்தப் போரில் மரணமடையப் போவது யார்? மக்கள்!''

''உன் அந்தஸ்துக்கு மேல் பேசுகிறாய். கருத்துக்களே சரியில்லையே கலைஞரே?''

''எங்களுக்கெல்லாம் கருத்து இல்லை. எங்களுக்கெல்லாம் வாயில்லை. எத்தனை ரத்தினவகை தெரியுமா? பிருஷ்ட கண்டிகை, கண்ட நாண், பாசமாலை, வாகுவலயம் என்று நாற்பது ஆபரணங்கள் செய்ய வேண்டியுள்ளது. அனைத்தும் நியாயங்கள் செலுத்தி போர்களில் கவர்ந்த நிதியங்களைச் சேமிப்பாக வைத்திருக்கிறார்கள். திருக்காய்வடம், முத்தின் சூடகம் என்று அனைத்தும் பெரிய மனிதர்கள் அளித்த நன்கொடைகள் மட்டுமே கணக்கிடப்படுகின்றன.''

வசந்தகுமாரன் ''என்னைக் குழப்பாதீர். நான் சேர நாட்டுக்குச் சென்று கொண்டிருக்கிறேன்.''

''சென்று வாரும். வென்று வாரும். ஏராளமான தங்கம் தேவைப்படுகிறது. தலைகளைக் களைந்து கிரீடங்களைக் கவர்ந்து வாரும்.''

வசந்தகுமாரன் அவ்விடத்தைவிட்டு விலகும்போது பொதுவாகவே அத்தனை பெரிய கோவில் கட்டுவதில் ஓர் அதிருப்தியும் உற்சாகக் குறைவும் இருப்பதை கவனித்தான்.

அரண்மனைக்குச் சென்று கேட்டதில், அபிமதி அங்கில்லை; பழையாறைக்குக் குந்தவையுடன் புறப்பட்டுச் சென்றுவிட்டாள் என்று தெரிந்து வசந்தகுமாரன் தன் தாமதத்தை உணர்ந்து பதற்றப்பட்டான்.

சேரநாட்டுக்குச் செல்வதன் முன் இளவரசியை எவ்வாறேனும் சந்தித்தபின் போக வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தவனுக்கு அது ஏமாற்றமாக இருந்தது. அவனுக்கு ஏராளமான பணிகள் மிஞ்சியிருந்தன. அவைகளைப் புறக்கணித்துவிட்டு பழையாறைச் சாலையில் தன் குதிரையைத் திசை திருப்பிக் கடுகிப் புறப்பட்டான்.

பழையாறைச் செல்லும் பாதையில் பாதி வழியில் ராஜ கோஷ்டியைப் பிடித்துவிட்டான். பல்லக்குகள் மண்டபத்தருகில் இளைப்பாறிக் கொண்டிருக்க, கடுமையான காவலுடன் விதானம் அமைத்து குந்தவைப் பிராட்டியும் அபிமதியும் இளம்பானமருந்திக் கொண்டிருக்க, அருகே பணிப்பெண் கோட்டயாழை நீவிக் கொண்டிருக்க, ஆடற்கேற்ற செந்துறைப்பாட்டில் அருகே ஒரு பெண் மெல்ல நடனமிட, பெண்களின் சிரிப்பொலி அருகே ஓடையின் சலசலப்பை வெல்ல முயன்றது.

வசந்தகுமாரன் வருவதை அவ்விடத்துக் காவலதிகாரி கவனித்துக் "குமாரரே, இங்கு எப்படி வரப்போந்தீர்? தாங்கள் சேர நாடு சென்று விட்டதாகவல்லவா பேச்சு?"

"இன்னும் செல்லவில்லை. செல்வதன் முன் குந்தவைப் பிராட்டியாரைச் சந்திக்க விருப்பம். பேரரசர் அனுப்பி யிருக்கிறார்."

"திருவோலை உள்ளதா?"

"உள்ளது. இல்லத்தில் உள்ளது. வரும் சடுதியில் மறவி."

"திருவோலை இன்றி யாருக்கும் அனுமதி இல்லை. மன்னிக்கவும், வசந்தகுமாரரே."

"தங்கள் கடமை உணர்வைப் பாராட்டுகிறேன். பேரரசரிடம் போய்ச் சொல்கிறேன். முக்கியமான பணியின் போது ஒரு மூன்றாம் மட்ட திருமெய்க்காப்பின் கடமை உணர்வால் தடுக்கப்பட்டேன் என்று. அரசர் பாராட்டி தக்க சன்மானங்கள் அளிப்பார். போய் வருகிறேன்."

"இரும். இரும். நீர் எம்மைவிட உயர் அதிகாரி. சேர நாட்டுத் தூதுவர். அதனால் அனுமதிக்கிறேன். பேரரசரிடம் என்னைப் பற்றிச் சொல்லுங்கள். என்னைத் திருமெய்க்காப்பிலிருந்து எரிவாரியத்துக்கு மாற்றும்படி!"



"சொல்கிறேனே, அங்கேதான் வருமானம் அதிகமல்லவா?"

"அதெல்லாம் இல்லை. மக்களுக்குப் பணிபுரிய அவகாசங்கள் அதிகம்!"

"நன்று நன்று"

விதானத்தின் திரைச்சீலையை விலக்கி உள்ளே சென்றபோது நடனம் இன்னும் நிகழ்ந்து கொண்டிருக்க குந்தவைப் பிராட்டியாரும், அபிமதியும் ஒரே சமயம் வசந்தகுமாரனை நோக்க ஒரு நோக்கில் வியப்பு, மற்றொன்றில் நிம்மதி.

"மன்னிக்கவும், தங்களது சகோதரர் பேரரசர் தங்களிடம் அனுப்பியுள்ளார். என் பெயர் வசந்தகுமாரன். என்னை நினைவிருக்கும் என எண்ணுகிறேன்!"

"வசந்தகுமாரரே, என்னைச் சந்திக்க வந்தீரா, இந்தப் பெண்ணையா?"

"தங்களைத் தான் அரசி"

"சேரநாட்டுத் தூதுவனாகச் செல்வதனால் தங்களிடம் சில சங்கதிகள் சொல்லுமாறு பேரரசர் என்னைப் பணித்துள்ளார்."

"என்ன செய்திகள்?"

வசந்தகுமாரன் சுற்றுமுற்றும் பார்த்துத் "தங்களிடம் அதுபற்றித் தனியாகப் பேச வேண்டும்!"

"பேசும்"

அபிமதியைப் பார்த்து "இவர் இருப்பதும் நல்லதல்ல. தாங்கள் சற்று வெளியே செல்கிறீர்களா?"

அபிமதி அவனைக் கரிய விழிகளால் பார்த்துவிட்டு "நீ செய்வதெல்லாம் பாசாங்கு என்பது எனக்குத் தெரியாதா என்ன?" என்கிற அர்த்தத்தில் ஒருமுறை பார்த்துவிட்டு மண்டபத்தை விட்டு வெளிச்செல்ல, வசந்தகுமாரன் மிக விரைவில் சிந்தித்து "பேரரசர் தங்களை பழையாறை சென்று விரைவில் திரும்புமாறு பணித்தார்."

"ஏன்?"

"சேர-பாண்டியர்களுடன் போர் நிகழும் அபாயமுள்ளது. அப்போது அரசகுலப்பெண்டிர் அனைவரும் அரண்மனையில் பாதுகாப்பாக இருப்பது நல்லது. பழையாறை போன்ற நகரங்களில் போதுமான காவல் தருவது கடினம் என்றார்."

''அப்படியா சொன்னான் அருண்மொழி?''

''அப்படித்தான் சொன்னார். அதை ஒரு திருவோலைக் கேள்வியின் மூலமே அனுப்பியிருக்கலாமே என்று தாங்கள் கேட்கலாம். பேரரசரைச் சுற்றியுள்ள அனைவரும் அனுமானத்திற்குரியவர்களாக இருக்கிறார்கள். எவரிடமும் இந்த வேளை பேரரசருக்கு நம்பிக்கை இல்லை. அவரை மாய்க்க மூன்று முயற்சிகள் நிகழ்ந்ததைத் தாங்கள் அறிவீர்.''

''அருண்மொழியை யாரும் கொல்ல முடியாது. சிவபெருமானுக்கு அவன் செய்ய வேண்டியது ஏராளம் எஞ்சியுள்ளது.''

''அப்படி நாம் எண்ணிக்கொண்டு, தோடுடைய செவியனை நம்பிக்கொண்டு அசிரத்தையாக இருக்க முடியாது இளவரசி!''

''சரி. நான் விரைவில் தஞ்சை திரும்புகிறேன். அபிமதி வெளியே இருக்கிறாள். அவளை வரச் சொல்லும்.''

அபிமதியை வெளியே சந்தித்தபோது வசந்தகுமாரன் ''தங்களை விளிக்கிறார் இளவரசி, அதற்குமுன் பெரிய கல், பாறைக்கல், சிவிகையில் பாறைக்கல் மண்டபத்தில் ஒரு குதிரை பின்பக்கலில்'' என்றான்.

அபிமதி அவனை விநோதமாகப் பார்த்து அவன் தந்த செய்தியைப் புரிந்து கொள்வதன் முன் ''அபி'' என்று குந்தவைப் பிராட்டியாரின் குரல் கேட்க, உள்ளே சென்றாள்.

வசந்தகுமாரன் மரியாதையுடன் சற்று தூரத்தில் நிற்க ''இளவரசி பழையாறை சென்றதும் அரசருக்குச் செய்தி அனுப்பச் சொன்னார்கள்.''

வசந்தகுமாரன் வெளிவந்தபோது அந்த இரு பல்லக்குகளையும் பார்த்தான். குந்தவைப் பிராட்டியாரின் பல்லக்கில் பழையாறை அரண்மனைச் சின்னமும் சோழ அரசின் இலச்சினையும் இருப்பதைக் கவனித்தான். மெல்ல மெல்ல அதை அணுகி இரண்டாம் பல்லக்கைத் தேர்ந்தெடுத்து அருகே இருந்த கனமான பெரிய கல்லைச் சடுதியில் தூக்கி அதனுள் வைத்தான். சற்று தூரத்தில் மண்டபத்திலிருந்து பார்த்துக் கொண்டிருந்தான்.

சற்று நேரம் காத்திருந்தபின், குந்தவையும், அபிமதியும் இருப்பிடத்தைத் துறந்து புறப்பட, குந்தவை பல்லக்கில் அமர, மெல்ல அதை எடுத்துப் புறப்பட, அபிமதி தன் பல்லக்கின் திரையை விலக்கி உள்ளே இருக்கும் கல்லைக் கண்டு பிரமித்து சட்டென்று வசந்தகுமாரனின் செய்தி புரிந்துபோய் பல்லக்கின்



எதிர்ச்சீலையை விலக்கி மண்டபத்தைப் பார்க்க அங்கிருந்து வசந்தகுமாரன் இருகரங்களையும் அசைத்தான்.

அபிமதி பல்லக்கில் நுழைவது போல் நுழைந்து எதிர்ப்பக்கலில் வெளிப்பட்டாள். அதைக் கவனிக்காத பல்லக்குத் தூக்கிகள் இயந்திரகதியில் பல்லக்கை எடுத்துத் தோளில் பொருத்திக் கொள்ள, அபிமதி சலசலப்பில்லாமல் அருகே புதரில் மறைந்து கொண்டாள். அவர்கள் சென்றதும் வெளிப்பட்டாள்.

வசந்தகுமாரன் ''நன்று! தங்களுக்கும் யூக சக்தி இருக்கிறது!''

''நான் ஒன்றும் அப்படிப்பட்ட பேதையல்ல!''

''தேவி, தாங்கள் அழகாக இருப்பது மட்டும் இந்த உலகுக்குப் போதும் என்று எண்ணினேன். அறிவும் இருப்பது ஒரு அதிகப்படியான பாக்கியம்.''

வசந்தகுமாரன் அபிமதியைத் தன் குதிரைமேல் இடது கையால் வளைத்துப் பிடித்து ஏற்றிக்கொள்ள ''நாம் எங்கே போகிறோம்?'' என்றாள். ''சேரநாட்டுக்கு.''

''இந்த உடையிலா?''

''இல்லை அபிமதி. தாங்கள்தான் சேரநாட்டுத் தூதுவனான எனக்குத் திருமெய்க்காப்பாளர். மீண்டும் ஆண்வேடம்'' என்றான்.

''வசந்தகுமாரரே, ஏன் என் மனம் அபாயத்தை நாடுகிறது? ஏன் என் மனம் அத்தனை உறவினர்களையும் விரோதித்துக் கொள்கிறது?''

''இதற்குக் காரணம் காதல் என்கிற ஒரு வஸ்து இளவரசி.''

''அது எப்படி இருக்கும்?''

''அதைத் தொட்டுப் பார்க்க முடியாது, ஆனால் பிரியவே முடியாது. இம்மைப் பிறப்பில் பிரியலாம் என்றால் கண்ணீர் வரும், மறுமையில் பிரிந்து விடுவோமோ என்று. அபிமதி, தங்களைப் பிரிய இயலாமல்தான் எங்கு சென்றாலும் அழைத்துச் செல்ல விரும்புகிறேன். சேர நாட்டுத் தூதுவனாகச் செல்கிறேன், ராஜகாரியத்துக்காக. கணேசபட்டரிடம் சொன்னால் 'இதைப்போல் பித்துப் பிடித்த காரியம் ஏதும் இல்லை' என்பார். என்ன செய்வது? தங்களைக் கண்டதும் எனக்குப் பித்துப்பிடித்து விடுகிறது. மற்ற அபாயங்கள் ஏதும் ஒரு பொருட்டாகவில்லை. நீங்கள் என்னை நினைத்தீர்களா அபிமதி?''

''நினைத்தேன்.''

"நினைக்க வேண்டிய அவசியம் என்ன? அபிமதி எதற்காக மறந்தீர் என்னை?"

வசந்தகுமாரன் இந்த இருளில் பரியின்மேல் அவள் பின்னால் தொட்டுக் கொண்டு தன் முகத்தை அவள் கூந்தலில் புதைத்துக் கொண்டு இருகரங்களையும் அவள் தோளைச் சுற்றி மாலையாகப் போட்டுக் கொண்டு "இந்திரலோகம் தந்தாலும் இதை நான் துறக்க மாட்டேன்" என்று சொல்ல அந்தக் குதிரை புலித நடைக்கு மாறியது.

"எதை?"

"தங்கள் கூந்தலின் ஒரு கற்றையின் நிரடலை."

"வசந்த குமாரரே எனக்கு அச்சமாகவிருக்கிறது" என்றாள்.

"ஏன் இளவரசி?"

"இந்த இன்பம் தாங்காது, நாம் பிரிந்துவிடுவோம் என்று"



# 40

கணேசபட்டர் வசந்தகுமாரனை வழியனுப்ப வந்தபோது சற்று உணர்ச்சிவசப்பட்டு அவன் கைகளைப் பற்றிக்கொண்டு,

"குமாரா சென்றுவா, வென்றுவா."

"தங்கள் ஆசீர்வாதமும் வாழ்த்துக்களும் உள்ளவரை எனக்குக் கவலையில்லை ஆசானே."

"வசந்தகுமாரா, ஒரு தூதுவனுக்கு நினம் தினம் செய்திகள் அனுப்ப வேண்டியது மூச்சுக்காற்றை விட முக்கியம். குமாரா, உன்னைப் பற்றி எனக்குக் கவலை அதிகமாகவே உள்ளது. குறிப்பாக உன் பெண் சபலங்கள். கேரள நாட்டில் பெண்கள் சற்றுத் தெளிவாகவே தென்படுவார்கள். அவர்களில்..."

"ஆசானே, நான் பழைய வசந்தகுமாரனல்ல; அபிமதியைக் கண்டதும் மற்ற பெண்களை ஏறெடுத்தும் பார்க்காத மனோநிடம்

கொண்டவன். அப்படித்தானே?'' என்று தன் குதிரையைக் கேட்க அது தலையசைத்தது.

''அபிமதியைச் சந்திக்க முடிந்ததா?''

''அதை ஏன் கேட்கிறீர்கள். பழையாறை செல்லும் பாதையில் மிகவேகமாகச் சென்று சந்தித்து...''

''சந்தித்து!''

வசந்தகுமாரன் தயங்கி, ''பிரியாவிடை பெற்று வந்து விட்டேன்.''

''வேறு ஏதும் பித்துப் பிடித்த காரியங்கள் செய்யவில்லை தானே?''

''அப்படியென்றால்!''

''அவளைக் கடத்திக் கொண்டு மறைத்துவைத்து... இம்மாதிரி காரியங்கள் எல்லாம் செய்திருக்க மாட்டாய். எனக்குத் தெரியும்.''

''அப்படியெல்லாம் செய்வேன் என்று நம்புகிறீர்களா ஆசானே?''

''நீ எதுவும் செய்யக்கூடியவன் வசந்தகுமாரா! அந்தப் பெண்ணை மறைத்து வைத்து உடன் அழைத்துச் செல்லும் எண்ணம் இருந்தால் உடனே கைவிட்டு விடு. பாதை மிகக் கடுமையானது. பிரயாணத்தின் கடுமையை அவள் தாங்கமாட்டாள். முதல் தினமே மயங்கி விழுவாள்.''

வசந்தகுமாரன் பட்டரின் நேர்ப்பார்வையைத் தவிர்த்தான்.

''எவ்வழி செல்லப்போகிறாய்? மார்க்கம் என்ன?''

''நாகைசென்று கடலோரமாகச் செல்லலாம். அதுதான் துரிதப்பாதை. செம்பொன்மாரி வழியாக வேநாட்டில் நுழைந்து விழிஞம், கோட்டாறு மார்க்கமாக மகோதயபுரம் சாலைக்குச் செல்வதாக உத்தேசம். இடையே குடமலை நாட்டில் உள்ள உதகைக் கோட்டையைப் பற்றியும் செய்தி சேர்க்க வேண்டும்.''

''அதற்கு கொல்லம் மார்க்கமாக வடக்கே வேறு திசையில் செல்லவேண்டுமே?''

''உதகைக் கோட்டை எங்கிருக்கிறது என்பது பற்றியே எனக்குப் பலரும் பல சொல்கிறார்கள். தூதுவன் என்கிற போர்வையில் எல்லா ஸ்தலங்கக்கும் சென்று செய்தி திரட்டப் போகிறேன். அகப்பட்டால் செத்தேன்.''



''அகப்பட்டால் உன்னைத் திரும்ப சோழ நாட்டுக்குத் தான் அனுப்புவார்கள். வேறு ஏதும்செய்யமுடியாது!''

''ஏதா தாங்கள் கற்றுக் கொடுத்த அத்தனை வித்தைகளும் பயன்படப் போகின்றன.''

''பொய் சொல்ல நான் உனக்குக் கற்றுத் தரவில்லையே!''

''அது இயற்கையாகவே உள்ள ஆற்றல்.''

''பாவம் அந்தப்பெண் அபிமதி! இப்போது பழையாறை அரண்மனையில் உன்னையே எண்ணிக் கொண்டு ஏங்கியிருப்பாள். அவளுக்குத் துரோகமிழைக்கும் வகையில் ஏதும் செய்யாதே. பாஸ்கர ரவிவர்மனுக்கு உன் புலவீனங்கள் அத்தனையும் பற்றி செய்தி போயிருக்கும். அதைப் பயன்படுத்தத் தயங்கமாட்டான்.''

''என் பலவீனம் என்ன ஆசானே?''

''பிழி, பெண்கள்.''

''இரண்டையுமே பலங்களாகத்தான் பயன்படுத்தப் போகிறேன். மேலும், என்னைக் காப்பாற்ற தேவி சக்தி எப்போதும் என்னுடன் வருவதால் எனக்கு எவ்வித ஆபத்துமில்லை ஆசானே.''

''எப்போதிலிருந்து இந்த தேவி உபாசனை?''

''அண்மையிலிருந்து தான்.''

புறப்படுகையில் பட்டர், ''குமாரா, நான் சொன்ன முப்பால் குறள் எப்போதும் உனக்கு வழிகாட்டியாக இருக்கவேண்டும்.''

''நான் அதை மறக்கவில்லை ஆசானே. 'இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு உறுதி பயப்பதாம் இது.'

வசந்தகுமாரனின் தூதுக்குழு புறப்பட்டது. குமாரனுக்கு இலக்குகள் குழப்பமாகத் தான் இருந்தன. ஒன்று, சேர பாண்டியப் போரைத் தவிர்க்க முயல வேண்டும் எனும் ஆசானின் இலக்கு. சக்கரவர்த்தியின் இச்சையும் அஃதே. இளவரசரின் இச்சை, சேர-பாண்டியரை வென்று சதயநாள் விழாவை காந்தளூரில் கொண்டாட வேண்டும் என்பது.

விழிஞம் எங்கிருக்கிறது. காந்தளூர் எங்கிருக்கிறது. உதகைக் கோட்டை எங்கிருக்கிறது! அனைத்தையும் பற்றி, சேரர்களின் மகத்தான கடற்படைத் தகுதிகளைப் பற்றியும் விவரங்கள் அனுப்ப வேண்டும்.

வசந்தகுமாரன் புறப்பட்ட முதல்நாளே அபிமதியை உடன் அழைத்து வந்ததன் தவறை உணர்ந்தான். மென்மையான அரண்மனைச் சூழலில் வளர்ந்தவள் இவளுக்கு புழுதி படிந்த சாலையில் உடல் மறைக்கும் அங்கியில் குதிரைமேல் பயணமாக பல காதங்கள் சென்றதால் உடல் நலம் குறைந்து கழுத்தைத் தொட்டுப் பார்த்ததில் உஷ்ணத்தை உணர்ந்தான்.

இரண்டாவது தினமே அவனுக்குச் செம்பொன்மாரி சென்று அங்கே நானாதேசியர் என்னும் வணிகர் குழுவைச் சந்தித்துச் சில ராணுவ முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளைப் பெற்றுச் கொண்டு மேற்பிராயணம் செய்ய வேண்டும்.

அபிமதியின் முகம் முழுவதும் சிவந்து வசந்தகுமாரனோடு ஒட்டிக் கொண்டு படுத்திருந்தாள். இரவு மண்டபத்தில் வசந்தகுமாரன் அவளைப் பார்த்தபோது முழுப் பிரயாணமும் தாங்கமாட்டாள் என்பது தெளிவாயிற்று. எத்தனை மூர்க்கன் நான். மூடமதி! நான் இவளை அழைத்து வந்தது மிகமிகத் தவறு. இப்போது என்ன செய்வது!

இரவு அவளுக்கு சுரம் அதிகமாகிவிட, அருகே இருந்த கிராமத்திலிருந்து அவனுடைய மெய்க்காப்புகளில் ஒருவன் வைத்தியனை அழைத்து வந்தான். அவன் நாடி பிடித்துப் பார்த்து,

''உன் பெயர் என்ன மகனே?''

''அபிமதி'' என்றாள் ஈன ஸ்வரத்தில்.

''பெண்பெயர் போலவல்லவா உள்ளது?''

''பெயரா முக்கியம், சீக்கிரம் குணப்படுத்தும்!''

''உதான வாயு வாதபித்த சிலேஷ்மங்களை மேல் நோக்கப் பண்ணுவதால் உண்டாவது. அபிமதி, எங்கேயோ கேட்ட பெயராக உள்ளதே! வாயில் எச்சில் ஊறுகிறதா?''

''ஆம்.''

''உப்புக்கரிக்கிறதா?''

''ஆம்.''

''வாந்தி எடுத்தாயா?''

''ஆம்.''

மருத்துவர் பட்டுத்துணியால் அவள் கையைப் பற்றி ''திரிதோஷ வாந்தி'' என்றார்.



''மருந்து என்ன சொல்லும்.''

''ஏலக்காய்த்தோல், விளாமிச்சை, வேர்க் கஷாயம், இஞ்சி ரசாயனம், குங்குமப்பூ இவைகளால் குணமாகும்.''

''குணப்படுத்தும்.''

''கை என்ன மென்மையாக உள்ளது. பெண்ணின் கை போல. எங்கே நாக்கை நீட்டிடு மகனே.''

அபிமதி நாக்கைக் காட்டும்போது அவள் போர்வை விலக,

வைத்தியர் ''இப்போதெல்லாம் ஆண்களுக்கும் பெண்களைப் போல...'' எனத் துவங்கியவர்,

வசந்தகுமாரன் தன் வாளை உருவி ''அதிகம் பேசுகிறீர் வைத்தியரே, உம் பேச்சை சிலேஷ்ம வாந்திகளோடு நிறுத்திக் கொள்ளும். இல்லை, உமக்கும் ஐந்து வகை வாந்தி வருமாறு செய்துவிடுவேன்.''

''எனக்கென்ன, ஆணாயிருந்தால் என்ன பெண்ணாயிருந்தால் என்ன! ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா அலியுமல்லன் என்று ஆழ்வார் பாடியுள்ளபடி...''

அவர் கஷாயத்தை அரைத்துக் கொடுக்க அபிமதி அதை உண்டபோது உறங்கிவிட்டாள்.

வைத்தியர் தன் பட்டுத் துணிகளையும் மூலிகைகளையும் கவர்ந்துகொண்டு காசு பெற்றுக் கொண்டு புறப்பட, வசந்தகுமாரன், ''நாளை காலைக்குள் இந்த வியக்திக்கு உடல் நலமாகிவிடும். உடல் நலமாகவில்லையெனில்...''

''தஞ்சையில் உள்ள ஆதுர சாலையில் தான் இதற்கு மருந்து கிடைக்கும்!''

''மருத்துவரே, ஆணா பெண்ணா என்கிற அனுமானங்கள் எல்லாம் இந்தத் திண்ணையை விட்டு வெளியே செல்லக் கூடாது. சென்றால் உமக்கே வைத்தியம் பார்க்குமாறு ஏற்பாடு செய்யப்படும். ரத்த காயத்திற்கு!''

''புரிகிறது. இந்தப் பெண் யாராயிருந்தால் எனக்கென்ன!''

காலை எழுந்து அபிமதியின் நெற்றியைத் தொட்டுப் பார்த்தபோது இன்னமும் சுரம் தணியவில்லை.



# 41

அபிமதியின் சோர்வுற்ற முகத்தைப் பார்த்து வசந்தகுமாரன் தன் தவறை உணர்ந்து வருத்தப் பட்டான். அவள் மிகவும் பிரயத்தனத்துடன் அவனைப் பார்த்து புன்னகைக்க முயன்றாலும் சுர வேகத்தில் உதடுகள் வறண்டு முகம் ரத்தமிழந்து காணப்பட்டது. வசந்தகுமாரன் இன்னேரம் சோழ நாட்டை விட்டு கிழக்கே வந்து கடற்கரையோடு தெற்கே சென்று ஏறத்தாழ சேரநாட்டின் எல்லை வரை சென்றிருக்க வேண்டியவன். தஞ்சையின் வெளி வட்டத்தைக் கடக்குமுன்னமேயே இந்தக் கலக்கம். இதனிடையில் அபிமதியைக் காணவில்லை என்று குந்தவைப் பிராட்டியாரின் காவலர்கள் கண்டுகொள்ள நேரமாகாது. பேரரசருக்குச் செய்தி போய் அவர் பெரும் படையை அனுப்பி அபிமதியை மீட்டு, வசந்தகுமாரனைத் திரும்ப அழைத்து, எத்தனைக் குழப்பங்கள் நேரவிருக்கின்றன. திரும்பத் திரும்ப



ஆசான் சொல்வார், விபரீதத்தின் மறுபெயர் வசந்தகுமாரன் என்று.

சாலையை நோக்கிய வண்ணமே அவன் தன் மெய்க்காப்பு ஒருவனை அழைத்து "இந்த கஷாய மருத்துவனை தவிர வேறு யாரும் உங்களுக்கு அகப்பட வில்லையா? ஒன்று செய். தஞ்சை ஆதுர சாலைக்குச் சென்று தேர்ந்த வைத்தியன் நரசிம்ம பண்டிதரை அழைத்துவா. அவர் தான் எனக்கு விடமுறிவு செய்து பிழைக்க வைத்தவர். படை வீரர்கள் நம்மைத் தொடர்வதற்குள் இந்த யவனக் குதிரையை எடுத்துச் செல். துன்புறுத்தாதே, கவிழ்த்துவிடும்."

இயற்கையாகவே படுவேகமாகச் செல்லும் அந்த வசந்த குமாரனின் மெய்க்காப்புப் பணிக்காக அமைந்த வீரன் மீண்டும் எதற்காகத் தஞ்சைக்கு வருகிறோம் என்கிற வியப்பு இருந்தாலும் அதை வசந்தகுமாரனிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத் தைரியமின்றி புறப்பட்டு தஞ்சையில் சுந்தர சோழ விண்ணகர ஆதுரசாலைக்குச் சென்றபோது அங்கே காரியமாக வந்திருந்த கணேசபட்டரைப் பார்த்தான்.

பட்டர் அவனை அடையாளம் கண்டு கொள்ள "உன் பெயர் என்ன?"

"ஆதனுங்கன்."

"நீ வசந்தகுமாரனின் மெய்க்காப்புக்கு சேர நாட்டுக்குச் சென்றாயே?"

"ஆம். புறப்பட்டோம். வரும் வழியில் "எங்கள் குழுவைச் சேர்ந்த ஒருவனுக்கு உடல் நலம் குறைந்து ஆதுர சாலைக்குச் சென்று பண்டிதரை அழைத்துவர அனுப்பியுள்ளார்."

"குழு எங்குள்ளது?"

"ஆனை மங்கலத்தில் ஒரு புத்தவிகாரத்தில் ராத்தங்கல். இப்போதுதான் தஞ்சை எல்லையைக் கடந்திருக்கிறோம்."

கணேசபட்டர் யோசித்து உறுதியாக "ஏதோ சிக்கல் உள்ளது" எனத் தீர்மானித்தார்.

குழுவில் யாரேனும் உடல் நலமில்லையெனில் அங்கே அவர்களைப் புறக்கணித்துவிட்டு மேலே செல்லவேண்யது தானே. இந்த வேகத்தில் அவன் எப்போது சேர நாட்டுக்குச் சென்று, எப்போது தூது பகர்ந்து...

பட்டர் "இரு நானும் வருகிறேன்."

"தாங்கள் யார்?"

"வசந்தகுமாரனின் ஆசான், கணேசபட்டர். பிரம்மதேயத்துக் காரர்."

"இந்த குதிரை தங்களையும் தாங்காது."

"இல்லை. நான் வேறு மார்க்கமாக வருகிறேன். நீ வைத்தியரை அழைத்துச் செல்."

நரசிம்ம பண்டிதர் "யாரப்பா" என்று வெளிய வந்த போது "பட்டரே, நீர் எங்கே இந்தப் பக்கம்? கேள்விப்பட்டேன். தங்கள் சீடன் வசந்தகுமாரன்இப்போது பேரரசரிடம் பெரு மதிப்புப் பெற்றுவிட்டானாமே?"

"ஆம். அவன் அழைக்கத்தான் போகிறீர் இப்போது. யவனக் குதிரைமீது அமர்ந்து பழக்கமுண்டா?"

"தஞ்சைப் பரிகளே பழக்கமில்லை, யவனமாவது!"

பண்டிதருக்குப் பழக்கமில்லாததால் எருது இழுக்கும் வண்டியில் அழைத்துச் செல்ல இராநாழிகை மூவேழாகி விட்டது. வசந்தகுமாரன் பதற்றத்துடன் காத்திருக்க பண்டிதரை வரவேற்று "வாரும், ஏன் இத்துணை தாமதம்? ஆசானே! தாங்கள் எப்போது வந்தீர்கள்? ஏன் வந்தீர்கள்?"

"நீ கண்ணும் கருத்துமாகக் கவனிக்கும் நோயாளி யார் என்று தெரிய ஆவல்."

"குழுவில் ஒரு முக்கியஸ்தருக்கு விஷஜுரம் போல வந்து விட்டது."

"அப்படியா? குழுவின் பிரயாணத்தையே நிறுத்தும் அளவுக்கு யார் முக்கியஸ்தர் என்று தெரிந்து கொள்ளத் தான் வந்தேன்."

நரசிம்ம பண்டிதர் நாடி பிடித்துப் பார்த்தார். "நாடி மிகப் பலவீனமாக உள்ளது. சற்று தாமதமாகியிருந்தால் இந்தப் பெண் இறந்திருப்பாள். நல்லகாலம்."

"பெண்ணா!" என்றார் பட்டர்.

"ஆம்! பெண்தான். ஏன், சந்தேகமா? இவள் பெண்ணில்லையெனில் நான் பண்டிதனில்லை. உன் பெயர் என்ன பெண்ணே?"



"அபிமதி" என்றார் கணேசபட்டர், வசந்தகுமாரனை கூர்மையான குற்றச்சாட்டுப் பார்வையால் துளைத்துக் கொண்டு "நான் உன்னிடம் என்ன சொன்னேன். நீ என்ன செய்கிறாய்?"

"ஆசானே உண்மைக் காதலை..."

"உண்மைக் காதல் பொய்க் காதல் இவையெல்லாம் நாட்டு அரசர் பணித்த காரியங்களை முடித்தபின்தான் என்று எத்தனை முறை... இப்போது இந்தப் பெண்ணைக் கடத்திவந்து மீண்டும் ராஜகோபத்துக்கு உள்ளாகி, வசந்தகுமாரா! ஏன் இப்படி சிம்மத்தின் வாயில் தலை நுழைக்கும் பித்துக் காரியம் செய்கிறாய்? உனக்கு மதியூகம் என்பதே இல்லையா? எப்படி இந்தப் பெண்ணை நீ அழைத்து வரக் கூடும் சேரநாட்டில்?"

வசந்தகுமாரன் சற்றே கவலையுடன் பட்டரைப் பார்த்து,

"தப்புத்தான் ஆசானே, மன்னித்துவிடுங்கள்."

"பண்டிதரே! எப்படி?"

"இந்தப் பெண்ணை ஆதுரசாலைக்கு உடன் நீக்கி அங்கே மற்ற வைத்தியர்களுடன்கலந்தாலோசித்து சிகித்ஸை செய்ய வேண்டும். உடன் வண்டிக்கு ஏற்பாடு செய்யுங்கள். அப்போது தான் இவள் உயிரைக் காப்பாற்ற ஏலும். அபிமதி! அபிமதி.."

மூச்சு விழுந்து கொண்டிருக்கிறது. மேம்போக்கான காற்று...

வசந்தகுமாரன் "மன்னிக்கவும். இந்தப் பெண்ணின் உயிருக்குப் பொறுப்பு என்னுடையது. ஆதுர சாலைக்கு யானும் உடன் வருவேன். இப்படி விட்டுச் செல்ல எனக்கு விருப்பமில்லை."

"சேரநாட்டுத் தூதுவன், ஒரு பொறுப்புள்ள அரசு அதிகாரி சொல்லும் பேச்சா இது?"

"ஆசானே, எனக்கு வாழ்வில் மூன்று விடயங்கள் முக்கியமானவை. அவைகளில் முதல் இரண்டும் இந்தப்பெண் மேல் உள்ள காதல், அன்பு. பின்னர் தான் சேர நாட்டுத் தூதும், படையும். என்னால் இவளைப் பிரிந்து ஒரு கணமும் வரமுடியாது! பேரரசரே எதிராக ஒன்றுபட்டாலும் இவளைப் பிரிய ஒட்டேன்!"

கணேசபட்டர் அவனைக் கடும் ஆயாசத்துடன் பார்த்து "நரசிம்ம பண்டிதரே! இந்தப் பெண்ணை இங்கேயே குணப்படுத்த ஏதாவது மூலிகைகள் வைத்துள்ளீரா?"

''முயல்கிறேன். ஆனால் உத்தரவாதமளிக்க இயலாது. பிழைக்கலாம்; பிழைக்காமலும் போகலாம். விடிந்தால் சொல்ல முடியும்.''

கணேசபட்டர் தீர்மானித்து ''விலகும். நான் பார்க்கிறேன்'' என்றார். வசந்தகுமாரன் வியப்புடன் கவனிக்க, கணேசபட்டர் அபிமதியின் நெஞ்செலும்புகளைத் தொட்டுப் பார்த்தார். கைப்பிடித்துப் பார்த்தார். மார்பின் மேல் காது வைத்துக் கேட்டார். சிரசிலும்நெற்றிப் பொட்டிலும் விரல்களால் தொட்டுப் பார்த்தார்.

''கெட்ட ரத்தத்தை நீக்கினால் சுகமாகிவிடும். முறிந்த பால் சேர்ந்த அன்னத்தை உண்டிருக்கலாம், அல்லது பசு முகர்ந்த அன்னத்தை.''

கணேசபட்டர், பண்டிதர் சொல்வதைக் கவனிக்காமல் தீவிரமாக அபிமதியின் நாடி நரம்புகளைச் சோதித்துக் கொண்டிருந்தார்.

''சிர ரோகம் போலத் தெரிகிறது. நீரில் நனைந்தாளா அல்லது உஷ்ணமான வாசனைகள் எதையும் முகர்ந்தாளா?''

''என்னுடன் குதிரை மேல் வந்தாள்.''

''அதுதான் காரணம். கீழ்க் காற்றின் வேகத்தில் கடுமையான சிலேஷ்மசிரஸ்தாப ரோகம். இவளைத் தஞ்சைக்கு அழைத்துச் செல்லும் பிரயாணம் கூட ஆபத்தானது. தாங்க இயலாள். இந்த விகாரத்தில் உள்ள புத்த பிக்குகளுடன் நான் பேசி இவளைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்ளச் சொல்கிறேன். வசந்தகுமாரா! நீ உன் பயணத்தைத் தொடர்வாய்.''

''ஆசானே, அது இயலாது!''

கணேசபட்டர் தாங்க இயலாத சினத்தின் வயப்பட்டு ''நீ இனி என் நண்பனில்லை.''

''இவளுக்காகத் தங்கள் நட்பையும் நான் இழக்கத் சித்தமாயுள்ளேன்.''

''எக்கேடும் கெட்டுப்போ! இந்த வேர்கள் எல்லாம் முதலில் வேண்டும். எங்கிருந்து கொணருவாயோ அறியேன். கொண்டு வந்தால் இவள் பிழைக்க ஏலும். காட்டுக்குள் கிடைக்கும்!''

அப்போது அங்கே வந்து சேர்ந்த புத்த பிக்குகளை கணேசபட்டர் முன்பே புகாரில் சந்தித்திருக்கிறார். அவர்கள் பெயர்கள் நாக புத்தர், புத்தகமித்திரர். அந்த விகாரத்தின் தலைவரிடம் ''சுவாமி தங்கள் விகாரத்தில் இந்த மடந்தையைக் கொண்டு வந்ததற்கு என் நண்பனுக்காக மன்னிப்புக் கேட்கிறேன். இவளுக்குக் கொஞ்சம் பெருங் குழவேரும், தழதூழை வேரும், பாதரி வேரும் அரைத்துக் கொடுக்க வேண்டும். தங்களிடம் உள்ளதா?''



''தசமூலமும் உள்ளது இந்த விகாரத்தில்'' என்றார் நந்தி.

வசந்தகுமாரன் மகிழ்ச்சியுடன் அவரை அணைத்துக் கொள்ளாத குறையாக ''புத்தநந்தி வாழ்க'' என்று உரக்கப் பகர அவர் ''நந்த புத்தர்'' என்று திருத்தினார்.

''அதிகாலைக்குள் தங்கள் பௌத்த மதத்தைப் பற்றி அறிய ஆவலாயுள்ளேன்.''

காலைப் புட்கள் சிலம்பும் வேளையில் கணேசபட்டரின் மேற்பார்வையில் புத்த விகாரத்தில் கிட்டிய சிகிச்சையின் உதவியால் அபிமதி சற்றுத் தேர்ந்து தெளிவாகி வீற்றிருக்க, வசந்த குமாரன் புத்தமித்திரருடன் ஞானபிடகம், விசுவ பிடகம் என்றெல்லாம் தன் தூக்கத்தைத் தவிர்த்துக் கேட்டுக் கொண்டிருக்க ''குமாரா இப்போதாவது புறப்படுகிறாயா?''

''அபிமதி எப்போது தயாரோ அப்போது ஆசானே! எனக்கு ஒரு ஆச்சரியம் என்னவெனில் இதுநாள் வரை குந்தவைப் பிராட்டியாரின் காவலர்கள் என்னைத் தேடி வரவில்லையே? இன்னும் பல்லக்கில் கல்லையே சுமந்து கொண்டு செல்கிறார்களா?''

பட்டர் ''அவ்வாறு இருக்காது. குந்தவைப் பிராட்டியார் உன் காதலை அங்கீகரிக்கிறார் என்று தான் இதற்குப் பொருள்'' என்றார். ''பிடிவாதமாக நீ இவளை அழைத்துச் செல்வதெனில் ஒரு காரியம் செய்ய வேண்டும். இவளை மணம் செய்து கொள்ள வேண்டும்'' என்றார்.



## 42

**வ**சந்தகுமாரன் வியப்புடன் கணேசபட்டரைப் பார்த்தான்.

''திருமணமா ஆசானே? என்ன சொல்கிறீர்கள், காந்தருவ மணமா?''

''இல்லை ராட்சஷ விவாகம் இது. ஆனால் வேறு மார்க்கமில்லை. தூதுவனாகச் செல்லும் போது ஒரு கன்னிப் பெண்ணை அழைத்துச் சென்றால் சேரநாட்டில் ஆட்சேபிக்கலாம். மனைவியுடன் செல்வதென்பது தூது சாஸ்திரத்திலேயே அங்கீகாரம் பெற்ற விடயம்.''

''முதலில் இந்தப் பெண் பிழைத்து எழுந்திருக்கட்டும். அதுவரை பொறுத்திருப் போம்.''

அபிமதிக்கு இரவு முழுவதும் காய்ச்சல் இருந்தது. வசந்தகுமாரன் தூங்காவிளக்கின் அருகில் உறங்காமல் காத்திருந்தான். அவள் காதில்



இன்ப வார்த்தைகள் சொல்லிக்கொண்டே இருந்தான். காலை எழுந்தபோது தெளிவாகியிருந்தாள்.

வசந்தகுமாரன் படுக்கையருகில் அமர்ந்து அவள் கரத்தைப் பிடித்து ''அபிமதி, என் காதலி! உன்னை நான் இன்றே மணக்க விரும்புகிறேன்.''

அவள் அவனை சுரத்தில்லாமல் பார்த்தாலும் கண்களில் ஒருவிதப் பிரகாசம், அங்கீகாரம், சந்தோஷம் தெரிந்தது.

''எப்போது திருமணம்?'' என்றாள்.

அவளருகில் சென்று காதை வைத்து, ''என்ன சொல்கிறாய்?''

''எப்போது திருமணம்?'' என்றாள்.

''இன்று மாலை. கணேசபட்டர் அதைத்தான் யோசனை சொல்கிறார். திருமணம் செய்யாமல் சென்றால் சேர நாட்டில் சிக்கல்கள் வருமாம்.''

''சரி, கல்யாணம் செய்து கொள்வோம்.''

''எங்கு?''

''இங்கு.''

''இந்த புத்த விகாரத்திலா?''

''எந்த விகாரமாக இருந்தால் என்ன! காந்தருவ விவாகத்துக்கு எம்மதமும் சம்மதே என்று சாத்திரங்கள் கூறுகின்றன.''

கணேசபட்டர் ''இது காந்தருவ விவாகமில்லை. ராட்சஷ விவாகம்'' என்றார்.

''ஆசானே.''

''பலவந்தமாக ஒரு பெண்ணைக் கடத்திவந்து மணம் முடிப்பது ராட்சஷ விவாகமல்லாமல் என்னவாம்?''

''ஆசானே, பலவந்தம் என்கிற சொல்தான் எனக்கு விருப்பமில்லை. சம்மதித்து வந்தவளை எப்படிப் பலவந்தமாகக் கொண்டு வந்தேன் என்று சொல்ல ஏற்கும்?''

''ஒரு பெண்ணை அவள் பெற்றோர் உற்றாரிடமிருந்து காதல் ஆசைகாட்டிக் கொண்டு வந்து அனைத்தையும் துறக்கச் செய்து அழைத்து வருவதும் ஒரு வகையில் பலவந்தம் தான் குமாரா.''

''இப்போது அதைப் பற்றி என்ன பேச்சு.''

''அபிமதி கொஞ்சம் எழுந்திரு. உன்னைச் சுற்றிலும் தூசும் மாசுமாக இருக்கிறது. அவைகளைக் கூட்டிப் பெருக்குவோம்.''

அபிமதி ''நான் செய்கிறேன்'' என்று சேதனியை எடுத்து அந்த அறையை சுத்தம் செய்யத் துவங்கினாள்.

வசந்தகுமாரன் அவளைத் தடுக்க, கணேசபட்டர் ''அரண்மனையின் அரச போகங்களில் வாழ்ந்த இந்தப் பெண் இப்படி புத்த விகாரத்தில் வாருகோலைக் கையில் எடுத்துப் பெருக்குகிறாளே, என்ன விந்தை!'' என்றார்.

''அதுதான் காதல்! அபிமதி என்னிடம் துடைப்பத்தைக் கொடு, நான் பெருக்குகிறேனே'' என்றான்.

அபிமதி சோர்வுற்று உட்கார, கணேசபட்டர் அவளை நாடி பிடித்துப் பார்த்து ''மாலைக்குள் சரியாகி விடும்.''

''எல்லாம் தாங்கள் கொடுத்த மருந்தை அருந்தியதன் பயன்'' என்றான் வசந்தகுமாரன்.

''இந்த விவாகத்தை, ஆலோசனை தந்த தாங்களே தான் நடத்தி வைக்கவும். முடிந்தால் உயிருள்ளளவும் மறக்கமாட்டோம்.'' என்றாள் அபிமதி.

அபிமதிக்கும் வசந்தகுமாரனுக்கும் மிக எளியமுறையில் திருமணம் நடந்தது. கொடுப்பாரும் கேட்பாரும் இன்றி இருவரும் தனியிடத்தில் மாலைமாற்றிக் கொள்ள, அருகாமைக் காட்டுச் சுள்ளிகளிலிருந்து அக்னித் தீ வளர்த்து, புத்த விகாரத்தில் கிடைத்த மஞ்சள் கயிற்றில் ஒரு ஏழைக் கல்பதக்கம் தொங்க விட்டுக் குங்குமம், மஞ்சள், பழம், தேங்காய், தாம்பூலம், புஷ்பம் இவைகளை விரைவில் சேர்த்து, பந்துக்களாக புத்த பிட்சுக்களை வீற்றிருக்க வைத்து, மணப்பிள்ளைக்குச் சமைத்ததை கிராமபிதுர் தேவதைகளுக்குப் பட்டரே நிவேதனம் செய்தார். வசந்தகுமாரனையும் புத்தாடைகள் தரிக்கவைத்து பெண்ணுக்கு மஞ்சள் குங்குமங்கள் தீட்டி மங்கல தீபம் காட்ட, மங்கல வாத்தியம் முழங்க கணேசபட்டரே வேதம் ஓத ''வசந்தகுமாரனாகிய நான் என்னுடைய தேக ரட்சணைக்கும் சந்ததி விருத்திக்கும் உன்னை மணக்கிறேன்'' என்கிற மந்திரத்தை ஓதி மங்கல நாணை வசந்தகுமாரன் அபிமதியின் கழுத்தில் கட்டினான்.

மொத்தம் ஒன்பது புத்த பிக்குகளும் கணேசபட்டரும் கிராமத்துப் பெண்கள் இருவரும்அந்த விவாகத்தில் பங்கு கொண்டிருந்தார்கள். ஒரு பசுங்கன்றும் பார்த்துக் கொண்டிருந்தது.



''அக்னி சாட்சியாக இனி இவள் உன் மனைவி. அதற்குப் பூமியில் சாட்சியாக இந்த புத்த பிக்குகள். என்ன பிக்கு அவர்களே, பேரரசர் வந்து கேட்டால் இந்தத் திருமணம் பார்த்ததாகச் சாட்சி சொல்வீர்கள் அல்லவா?''

''அதற்கென்ன, இந்த புத்த விகாரத்தில் முதல் திருமணம் இது. நாங்கள் அனைவரும் துறவிகள். இதை மறுக்க மாட்டோம்.''

''வசந்தகுமாரனும் அபிமதியும் புதுமண நினைவில் ஒருவரை ஒருவர் மருவிய நோக்கிலேயே கவனமாக இருக்க, கணேசபட்டர் ''குமாரா, உன்னை மீண்டும் வழி அனுப்பும் நேரம் வந்துவிட்டது. இப்போது தூது செல்வதன் முன் சேரநாட்டுக்கு முன் செய்தி அனுப்பிவிடு. 'ராஜராஜ சக்கரவர்த்தியின் நாட்டுத் தூதுவனான யான் என்னுடைய தர்ம பத்தினியுடன் வருகிறேன்' என்று. துவக்கத்திலேயே குழப்பத்தை நிவர்த்திப்பது நல்லது. ஒரு விதத்தில் உனக்கு இது விரும்பத்தக்கதே! சேர நாட்டில் உன்னைத் தனியாக அனுப்புவதில் ஸ்திரீகள் தொடர்பான அபாயங்கள் உள்ளன. அவைகள் நேராமல் உன் மனைவி பார்த்துக் கொள்வாள். அபிமதி பேதைப் பெண். உன்னை நம்பி தன் வாழ்வை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறாள். அவளை கௌரவமாகவும் சந்தோஷத்துடனும் நடத்த வேண்டியது உன் பொறுப்பு.''

''இன்பமான பொறுப்பு ஆசானே. இவளை மகிழ்விப்பது மிகச் சுலபம்.''

வசந்தகுமாரனின் தூதுக்குழு மீண்டும் சேரநாட்டை நோக்கிப் புறப்பட, கணேசபட்டர் இரவு நேரத்தில் தான் புகாருக்குத் திரும்பினார். தஞ்சைக்குச் செல்ல விருப்பமில்லை. அரசவையிலிருந்தும் அரண்மனையிலிருந்தும் விலகியிருப்பதே இப்போதைக்கு நல்லது என்று தீர்மானித்தார்.

புகாரில் இளமரக் காவைக் கடந்து நாவாய்கள் பிணிக்கும் பக்கத்திற்குச் சென்றபோது கணேசபட்டரை ஒருவன் அணுகி ''பட்டரே உங்களிடம் ஒரு முக்கியமான செய்தி சொல்ல வேண்டும். தங்கள் இல்லத்தை அடைந்த போது வாயிலில் ஒருவன் காத்திருந்தான். பட்டரே அவசரம். எங்கே போயிருந்தீர்? தங்கள் சீடப் பிள்ளை வசந்தகுமாரன் யாண்டுளன்?''

''ஏன், என்ன விடயம்?''

''அவனை சேரநாட்டு எல்லையிலேயே கொன்று விட ஒரு சதி இருப்பதாகச் சேரநாட்டிலிருந்து செய்தி வந்துள்து. அரசவைக்கு

அதைத் திருவோலைக் கேள்வி மூலம் சொல்லி உங்களுக்குச் செய்தி கொடுக்கச் சொல்லியுள்ளார்கள்.''

''அவன் சேரநாட்டுக்குப் புறப்பட்டுச் சென்றுவிட்டான். தஞ்சையில் அவனை சிறப்பாக வழியனுப்பியதை மக்களே கண்டுகளித்தார்களே''

''நான் அண்மையில் தஞ்சையில் இல்லை.''

''பின் எங்கு சென்றிருந்தாய்?''

''சேரநாட்டிற்கு. அங்கிருந்து கிட்டிய தகவல் எனக்குக் கவலை தருகிறது. வசந்தகுமாரன் தூது செல்வதில் ஏதும் பயனுள்ளதாகத் தெரியவில்லை.''

''ஏன்?''

''போர் நிச்சயம் மூளப்போகிறது. அவர்கள் கடற்படையை வலுப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். பாண்டியன் பெரும்பாலும் சேரநாட்டில்தான் உள்ளான். இருவரும் ஒன்றிணைந்து எப்போது படையெடுக்கலாமென்று தருணம் யோசிக்கிறார்கள்.''

''இந்த நிலைமையைத் தவிர்க்கத்தான் வசந்தகுமாரன் அனுப்பப் பட்டிருக்கிறான்.''

''அவனை அவர்கள் எப்படி பயன்படுத்தப் போகிறார்கள் என்று உமக்குத் தெரிந்தால் அதிர்ச்சியாக இருக்கும். வசந்தகுமாரனைக் கொன்றுவிடப் போகிறார்கள். தூதுவனைக் கொன்றால் பேரரசருக்குக் கோபம் தாங்காது. அதைப் பொறுக்க முடியாமல் போர் மூளும். அதற்குத் தான் அவர்கள்...''

''முதலில் தாங்கள் யாரோ...? அதைச் சொல்லும்.''

''நான் அவ்வப்போது செய்தி சொன்னால் கூலி கிடைக்கும். ஏழை மகன். என் பெயர் திண்டுச் சாம்பன்.''

''என்ன பெயரோ!''

''பட்டரே, எனக்குக் காசு கொடுத்தால் புறப்பட்டுச் சாளுக்கிய மன்னரைப் பார்த்துவிட்டு வீடு செல்ல வேண்டும். கீழைச் சாளுக்கியர்களிடமிருந்து கிடைத்த ஒரு சேதியை அவரிடம் பகர வேண்டும். இன்று என் மனையாளின் ஜன்ம தினம். இருட்டுவதற்குள் வீட்டுக்குள் அடியெடுத்து வைக்காவிடில் அங்கு பிரளயம் ஏற்பட்டு, ஊழிக்காற்று வீசும். எடும் காசை.''



''காசா?''

''ஆம். உனக்கு அத்துணை முக்கியமான தகவல் தந்திருக்கிறேனே!''

கணேசபட்டர் அவன் சொல்வதில் உண்மை உள்ளதோ இல்லையோ? அவனுக்குக் காசு கொடுத்து அனுப்பிவிட்டு யோசித்துப் பார்த்தார். வசந்தகுமாரன் மேல் சற்றுக் கவலை ஏற்பட்டது. புதுமணப் பெண்ணுடன் சேரநாட்டில் நுழைந்து அங்கு தற்போதுள்ள போரருகாமைச் சூழ்நிலையில் சிக்கிக் கொண்டு பெருமன்னர்களின் போர் விளையாட்டில், சூழ்ச்சியில் பகடைக் காயாகிச் சிக்கிக் கொண்டு தன் உயிரை இழக்கும் அபாயம். அதைப்பற்றி எண்ண எண்ண கவலை பெரிதாகிக் கொண்டே வந்தது.

கணேசபட்டர் தீர்மானித்து விட்டார். ''மோகதி!'' என்று தன் பணிப் பெண்ணை விளித்தார். ''நான் சில தினங்களுக்கு சேரநாட்டில் உள்ள வைணவத் தலங்களை தரிசிக்கச் செல்கிறேன். பிரம்மதேயத்துப் பணிக்காக வருபவர்களை திருவேட்களத்திலிருந்து வரும் என் நண்பன் உலகநாதனிடம் அனுப்பிவிடு. நான் திரும்பி வர சில மாதங்கள் ஆகுமென்று சொல்லிவிடு. நீயும் சில தினங்களில் நம் இரண்டு பசுக்களையும் ஓட்டிக்கொண்டு சதுர்வேதிமங்கலத்துக்குச் சென்றுவிடு.''

''பிரபு, தாங்கள் எப்போது திரும்பி வருவீர்கள்?'' என்று கேட்ட மோகதியின் கண்களில் நீர் நிரம்பியது.

''நாராயணன் சித்தமிருந்தால் அடுத்த சதயநாள் விழாவுக்கு நீ என்னைப் பார்க்க சேரநாட்டுக்கு வருமாறு இருக்கும்'' என்று சொன்ன பட்டரின் பதில் மோகதிக்கு முழுவதும் விளங்கவில்லை.

முற்றும்.





# காந்தளூர் வசந்தகுமாரன் கதை

சுஜாதா எழுதிய
இரண்டாவது சரித்திர நாவல்.
ரத்தம் ஒரே நிறம்
நாவலை அவர் 14ம்
நூற்றாண்டுச் சிப்பாய் கலகத்தின்
பின்னணியில் எழுதினார்.
இது சோழப் பேரரசர்களின்
காலத்தைச் சார்ந்தது.
இதில் வரும் கணேசபட்டரும்
வசந்தகுமாரனும் சுஜாதாவ
பிரபல நவீன பாத்திரங்களா
கணேஷ்-வசந்த் சாயலில்
இருப்பதை சிலர் கவனித்து
குறிப்பிட்டுள்ளனர். இது
முழுமையாக ஆராயப்பட்ட
சரித்திர சம்பவங்களைச்
சார்ந்து எழுதப்பட்ட
சுவையான நாவல்.



– பதிப்பகத்தார்